பாரத ஜன சபை

காங்கிரஸ் மகாசபையின் சரித்திரம்

இரண்டாம் பாகம்



சென்னை
சுதேசமித்திரன் பிராஞ்சு அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது
1920

All Rights Reserved.] [விலை ரூபாய் 1.



ஜனசபையின் சரித்திரம்.

பதினென்றும் அத்தியாயம்.

11-ஆம் ஜன ஸபையின் கூட்டம்.

பேஷ்வாக்களின் ராஜதானி யாகிய புனு நகரத்தில் ஜன ஸபையின் பதினென்று கூட்டம் 1895- டிஸம்பர் 27, 28, 30-தேதிகளில் நடந்தது. 29-ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை யாதலால் அன்று ஸபை கூடை பெற வில்லை. 1584 பிரதிநிதி கள் வந்திருந்தனர். மற்ற ஸாமான்ய ஜனங்களும் பெருங் கூட்ட மாகத் திரண்டனர்.

உபசார கணத் தலைவ ராகிய ராவ் பகதூர் V. M. பிடே என்பவர் மிகவும் வ்ருத்த தசை அடைந்து விட்ட படியால் அவருடைய ப்ரஸங்கத்தை அவர் ஸ்தானத்தில் கோபால க்ருஷ்ண கோகலே வாசித்தார். பாரத ஜாதி ஜன நென்பதை நிலை நிறுத்துவதே ஜன ஸபையின் லக்ஷ்யம் என்று பிடே சொன்னார்.

பிறகு ஸ்ரீமான் ஸுரேந்த்ர நாத பானர்ஜி ஜன ஸபை யின் அக்ராஸன பதியாக வீற் றிருந்தார்.

ஸபா நாயகர் ப்ரசங்கத்தின் ஸாரம்.

அப்போது ஸ்ரீ ஸுரேந்த்ர நாத பானர்ஜி சொல்லு கிறார்: —

ஸஹோதர ப்ரதிநிதிகளே, சிமாட்டிகளே, கனவான் களே,

என்னை ஜனஸபையின் தலைவன் ஆக்கினீர்கள். இதனி லும் உயர்ந்த பதவி வேறில்லை. ஆத்மாவைத் திருப்தி செய் வதற் கடுத்த கடமை ஸவ தேசத்தாரைத் திருப்தி செய்தல். இந்த ஸ்தானத்திற்கு என்னை நியமித்தது குறித்து உங்களுக்கு நன்றி சாற்றுகிறேன். ஆனால் பதவி எத்தனைக் கெத்தனை உயர்ந்ததோ அத்தனைக் கத்தனை கடமையும் பெரி தாகும்.

உங்களுடைய ஸபா நாயகன் எத்தனை பல ஹீனமாக இருந்த போதிலும், அவனையும் இந்த ஜன ஸபையையும் ஒரு பெரிய சக்தி பின்னே நின்று காப்பாற்றுகிறது. அந்த சக்தி யாதெனிலோ நாடு முழுதிலும் கல்வி கற்ற மக்கள் அனைவரும் நமது ஸபையின் விஷயத்தில் செலுத்தும் நல் லெண்ணமே யாம்.

வங்காளத்தில் சில ஸ்திரீகள் ஜன ஸபையை ஒரு தெய் வமாகக் கொண்டு வணங்குகிறார்கள் என்ற செய்தியை ஓராங்கி லப் பத்திரிகையில் படித்தேன். இதனால் நம்முடைய ஜனங் கள் மூட பக்தி மிகுந்தவர்க ளென்றும், ஆதலால் பிரதிநிதி யாட்சிக்குத் தக்கவர்களில்லை யென்றும் அப் பத்ராதிபர் சொல்லுகிறார்.

நமது தேசத்தில் பெண்களுக்கும் பாமர ஜனங்களுக்கும் வாக்குச் சீட்டு ரிமை கொடுக்க வேண்டு மென்று நாம் கேட்க வில்லை. (மொழி பெயர்த்தவரின். குறிப்பு :—இங்ஙனம் ஸுரேந்த்ர நாத பானர்ஜி 1895-ல் சொன்னார். இப்போது அவரே இங்ஙனம் சொல்ல மாட்டா ரென்று நம்புகிறோம். இங்கிலீஷ் படித்தவர்களில் சிலருக்கு மாத்திரம் ப்ரதிநிதி யுரிமை கொடுத்தால் போது மென்பது அக் காலத்து நினைப்பு. இப்போது ஆண், பெண், கற்றோர், கல்லாதோர், ஏழைகள், செல்வர் எல்லாருக்கும் ப்ரதிநிதி யாட்சி கிடைக்கவேண்டு மென்பதே நமது தேசத் தலைவர்களின் நோக்கம்).

மேலே ஸுரேந்த்ர நாத பானர்ஜி சொல்லுகிறார் :—

நமது ஜன ஸபையின் ஆரம்பத்தில் கஷ்டங்களும் விப த்துக்களும் அதிகப்பட் டிருந்த ஸமயத்தில் நம்மவருள்ளே ஒற்றுமை வலியுற்று நிற்றல் அவசிய மாயிற்று. இப்போது பாலாரிஷ்டங்கள் நீங்கி நாம் சற்றே ஸௌக்ய நிலைமையை அடைந் திருக்கிறோம். இத்தருணத்தில் ஒற்றுமைத் தளைகள் நெகிழ்வது ஸஹஜம். ஆனால் அவை அங்ஙனம் நெகிழ்ச்சி பெறுதபடி நாம் ஜாக்ரதையாக கவனித்துக் கொள்ள வேண் டும்.

ஆசாரத் திருத்தம்.

ஆசாரத் திருத்த ஸம்பந்தமான சண்டைகளுக்கும் ஜன ஸபையின் நோக்கங்களுக்கும் யாதொரு தொந்தமும் கிடை யாது. இவ்வருஷத்தில் புனாவில் இதைக் குறித்து நடந்த குழப்பங்க ளெல்லாம் நீதி—மஹாதேவ கோவிந்த ரானடே

யின் செய்கையால் தணிந்து விட்டது பற்றி அவருக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

MADRAS

ஸட்ட ஸபைத் திருத்தம்.

சட்ட ஸபையைச் சற்றே விஸ்தாரப் படுத்தி யிருக்கிறார்கள். ஆனல் அதில் அதிகப் பயன் விளைய வில்லை. ப்ரித்தானிய ஐயர்லாந்து தீவுகளில் 4 கோடி ஜனங்களின் வ்யவஹாரங்களை கவனிக்க 670 ப்ரதிநிதிகள் இருக்கிறார்கள். வங்காளத்திலோ 7 கோடி ஜனத் தொகைக்கு 7 ப்ரதிநிதிகள்! ராஜாங்கத்தாரால் நியமிக்கப் பட்ட உத்யோகஸ்த ரல்லாத மெம்பர்களையும் சேர்த்து ஜனப்ரதி நிதிகளாகக் கணக் கிட்டால் 10 பேர்! அல்லது அந்தச் சட்ட ஸபை முழுமையும் எல்லாருமே ஜனப்ரதிநிதிகள் என்று கணக் கிட்ட போதிலும், இருபது பேருக்கு மேல் ஆக வில்லை. சீட்டோ "உருட்சி முறை" யில் நடை பெறுகிறது. (அதாவது ஒரு வட்டத்தார் இந்த முறை சீட்டுப் போட்டால் அடுத்த முறை மற்றொரு வட்டத்தார் போட வேண்டு மென்ற முறை.) ஆதலால் ஸபையில் முழு முழு ஜில்லாக்களுக்கே ப்ரதிநிதி யில்லாமல் போய் விடுகிறது. லார்ட் மாலிஸ்மரியும், க்ளாட்ஸ்டனும் இக் காட்டாருக்கு மெய்யான ப்ரதிநிதி யுரிமை கிடைக்க வேண்டு மென்பதே தமது விருப்ப மென்று கூறிய வார்த்தைக்கும் இங் குற்ற அனுஷ்டானத்துக்கும் எவ்வளவு பேதம் ஏற்படுகிறது பார்த்தீர்களா? மேலும் ஸபைகளில் மெம்பர்கள் கேள்வி கேட்கும் உரிமையை வரையறைப் படுத்த உத்தேசம் கொண் டிருக்கிறார்க ளென்று சில வதந்திகள் உலாவுகின்றன. இங்ஙனம் வரையறைப் படுத்தக் கூடாது. அரசிறையின் விஷயத்தில் சட்ட ஸபையில் விவாதம் செய்வது போல் வெறும் பொய்க் கூத்து நடக்கிறது. ஜனப் பிரதிநிதிகளின் வாய்ச் சொல்லுக்கு யா தொரு மதிப்பு மில்லை.

இந்தியாவின் பொருள் நிலை.

1834 - ஆம் வருஷ முதல் 1894 - ஆம் வருஷம் வரை உள்ள 60 வருஷங்களில் பாரத நாட்டின் பொருள் நிலையின் சரித்திரத்தை ஸம்க்ஷேபமாகச் சொல்லுகிறேன. இந்தக் காலத்தில் 34 - வருஷங்களில் அரசிறையில் குறை விழுந்தது. 83 கோடி ரூபாய் மொத்தக் குறைவாயிற்று. மற்ற 26 வருஷங்களில் மிச்சப் பணம் கையிருப்பாகச் சேர்ந்தது 42 கோடி ரூபாய். 83 கோடிக்கு 42 கோடி பொலல் 41

கோடி ரூபாய் குறைவு பட்டது. இந்தக் குறைவுக்குக் கடன் வாங்கும்படி நேரிட்டது. கடனும் குறைவும் உடன் செல்லும் தோழிகளல்லவோ? அதாவது ராஜாங்கம் தான் வாங்கிய கடனை மீட்டும் இறுக்க முடியாத நிலைமைக்கு ஏற்கெனவே வந்து விட வில்லை யெனினும் அந்தப் பாதையில் செல்லுகிறது.

ராணுவச் செலவை வளர்த்தல்.

இவ் வாறு பரிதாபத்துக் கிடமான நிலையில் நமது ராஜாங்கத்தார் வந்து சேர்ந்ததன் மூகாந்தரம் யாதெனில் பெரும் பகுதி அவர்கள் எல்லை நாட்டாரின் மீது படை பெடுத்துச் செல்லும் செலவுகளே யாம். இனி, ரூபாயின் மதிப்புக் குறைந் திருப்பதையும் இந்த நிலைக் குரிய காரணங்களில் ஒன்றாகக் காட்டக் கூடும். அதனாலும் பல நீமைகள் விளைந்து தா னிருக்கின்றன. ஆனால் ராஜாங்கத்தாரின் தற் காலப் பண இடர்ப்பாடுகளுக்கு அதனை மூலக் காரண மாக வேனும் முக்ய காரண மாக வேனுங் காட்டுதல் தவறு. ஸர் ஆக்லன்ட் கால்வின் ஸமீப காலத்தில் "நைன்டீந்த் ஸென்சரி" (பத்தொன்பதாம் நூற் றாண்டு) என்ற பத்திரிகையில் எழுதியிருக்கும் வ்யாஸ மொன்றில் 1883 - முதல் 1893 - ஆம் வருஷம் வரை பாரத ராஜ்யச் செலவு 11 கோடி ரூபாய் அதிகமாக ஏறி யிருப்பதைக் குறித்துப் பேசுகையில் அதற்கு மூன்று காரணங்கள் காட்டுகிறார். அவற்றுள் ராணுவச் செலவே முக்யமென்கிறார்.

சித்ரால் படை யெழுச்சி.

இந்தியாவில் பொது ஜனங்களுக்கு ஞாபகக் குறை அதிகம். போன கோடையில் அந்தப் படை யெழுச்சி புறப்பட்ட காலத்தில் எல்லாச் செலவுகளும் கூடி மொத்தம் 15 லக்ஷ ரூபாய்க்கு மேலே போகா தென்று சொன்னார்கள். எனினும், இது வரை மேற் படை யெழுச்சிக் காக 2 கோடி ரூபாய்க்கு மேலே செலவாகி விட்டது. இன்னும் இவர்கள் சித்ராலைச் சேர்த்துக் கொள்ளப் புகு மிடத்தே எவ்வளவு மிகுதிச் செலவு நேருமோ அறிய மாட்டோம்.

ராணுவச் செலவுகளைக் குறைக்க வேண்டும். எல்லையை விசாலப் படுத்தும் முறையை நீக்க வேண்டும். லண்டன் செலவுகள் பெரிய பாரமாக மூண்டு விட்டன. இன்னும் மிகுதி யாய்க் கொண்டு வருகின்றன. 10 வருஷங்களில் அந்

தச் செலவுகள் 100-ல் மூப்பது பங்கு ஏறிப் போய் விட்டன. 1882 - ல், 17,366,000 ரூபா யாக இருந்தது. 1892 - ல் 22,911,000 ரூபாய் ஆகி விட்டது. லண்டனி லுள்ள இங்கிலீஷ் பொக்கசத் திலிருந்து கொடுக்க வேண்டிய பெருஞ்செலவுகள் பலவற்றை நமது தலை மீது சுமத்தி யிருக் கிறார்கள். லண்டனில் இந்தியா மந்திரி ஸபையின் கட்டடச் செலவு 5,00,000 பவுன் நாம் கொடுத்தோம். குடியேற்ற மந்திரியின் கார்ய ஸ்தலக் கட்டடத்துக்கு ப்ரித்தானிய ராஜாங்கத்தார் 1,00,000 பவுன் செல விட்டாராகள். இந்தியா மந்திரியின் கார்யஸ்தலத்துக்கு 5,00,000 லக்ஷம் பவுன் ஆன தேன்? குடியேற்ற மந்திரியின் கார்யஸ்தலக் கட்டடத்துக்கு 1,00,000 பவுன் போது மென்ற தேன்? இந்தியா மந்திரியின் சிப்பந்திச் செலவு முதலியவற்றுக்கு வருஷத்தில் 2,30,000 பவுன் நாம் செலவிடுகிறோம். குடி யேற்ற மந்திரியின் சம் பள முதலியனவோ, குடியேற்ற நாட்டாரால் கொடுக்கப் பட வில்லை. ப்ரித்தானிய கவர்ன்மெண்டாரே அந்த இனத்தில் 41,000 பவுன் வருஷத்தில் செலவிடுகின்றனர். லண்டனி லுள்ள சீனத் தூதரின் செலவுக்கு நாம் வருஷந் தோறும் 12,500 பவுன் கொடுத்து வருகிறோம். லண்டனி லுள்ள பாரஸீகத் தூதரின் செலவுக்கு வருஷந் தோறும் 7,000 பவுன் நாமே கொடுக்கிறோம். அவ்வனமே துருக்கிய அராபியாவில் இங்கிலாந்தின் ப்ரதிநிதிக்குச் செல வாகும் தொகையும், பாக்தாதில் உள்ள ஆங்கிலத் தூதருக்குச் செல விடும் தொகையும் சேர்ந்து வருஷந் தோறும் 172,360 பவுன் நம் மூடைய தலை மீது பொறுக்கிறது.

ஸாம்ராஜ்யப் போர்களில் இந்தியாவின் பங்கு.

இங்கிலாந்தி னுடைய யுத்தங்களுக் காக நம்மவர் முற் காலத்தில் மிகுந்த ரக்தத்தையும் பொருளையும் பலி கொடுத் திருக்கிறார்கள். அபிஸ்ஸீனியாப் புடை யெடுப்பில் நம் முடைய ஜனங்கள் போய் உதிரஞ் சிந்தி மடிந்தனர். இந்தியாவின் அரசிறையி லிருந்து பணம் செல விட்டனர். இவ் வாறு பல பல த்ருஷ்டாந்தங்கள் காண்பிக்க லாம்.

இந்தியாவின் வறுமை.

1882-ல் லார்ட் க்ரோமர் (அப்போது அவருக்கு ஸர் எலெலின் பேரிங் என்று பெயர்) சில கணக்குகள்

சொன்னார். அவற்றை இங்கு காட்டுகிறேன். ப்ரித்தானிய ஜனங்களில் சராசரி ஒவ்வொருவனுக்கும் வருஷ வரும்படி 33 பவுன். பிரான்ஸில் 23 பவுன். ஐரோப்பாவில் மிகவும் ஏழையான துருக்கியிலே கூட சராசரி வருஷ வரும்படி ஒவ்வொருவனுக்கு 4 பவுன். ருஷியாவில் 9 பவுன் என்று முல்ஹால் என்ற பண்டிதர் கணக் கிட்டுக் கூறுகிறார். இந்தியாவில் தலைக்கு வருஷ வரும்படி 27 ரூபாய்! (பவுன் அன்று ரூபாய். அதாவது 2 பவுன் கூட ஆக வில்லை.) இங்கிலாந்து தேசத்தான் தனது 33 பவுன் வரும்படியின் மீது 100-க்கு 7 தீர்வை செலுத்துகிறான். பாரத வாஸியோ தனது ஒன்றே சொச்சம் பவுன் வரவின் மீது 100-க்கு 5 தீர்வை செலுத்துகிறான்.

இதனால் அன்றோ ஸர் வில்லியம் ஹன்டர் நம்முடைய ஜனங்களில் 4 கோடி பேருக்கு நாள் தோறும் ஒரே வேளைக்கு மேல் உணவு கிடைக்க வில்லை யென்று கூறினார். இதனாலே யன்றோ நாகரிக தேசங்களில் மனிதன் இனிப் பஞ்சம் நேர இடங் கொடுக்க மாட்டா னென்று பண்டித—க்யுவியர் (Cuvier) கூறிய இந்த நவீன காலத்திலே கூட நமது தேசத்தில் அடிக்கடி வந்து லக்ஷக் கணக்கான ஜனங்களை வாரிக் கொண்டு செல்லும் பஞ்சங்கள் நிகழ்ச்சி பெருகின்றன? க்யுவியர் சொல்லியது ஐரோப்பாவில் மெய்யே யன்றி [illegible] நாட்டில் மெய் யன்று. சென்ற நூற் றாண்டில் இந்நாட்டை ஒரு ஆங்கில வாக்கி "ஆசியாவின் பூஞ்சோலை" என்றும், "கீழ்த்திசையின் களஞ்சியம்" என்றும் வியந்து பேசினார். சென்ற ஒரு நூற் றாண்டுக்குள்ளே தான் இத்தனை தாழ் வான நிலைமைக்கு நாம்வந்து சேர்ந்து விட்டோம்.

"பயோனீர்" பத்திரிகை சொல்லுகிறது :—

"இந்தியாவில் பெருங் கூட்டங்களான ஜனங்கள் ஏழைகள்; மிகவும் ஏழைகள். நம் முடைய ஆட்சியோ செலவு மீறிய ஆட்சி. சித்ரால் சங்கடத்தைப் போல் அநாவசியமான வீண் யத்தனங்களில் அடிக்கடி பொருளை விழ லாக்குகிறோம். வேறு பல இலாகாக்களின் செலவையும் சுருக்கினால் நல்லது" என்கிறது.

பல செய்திகள்

மேலும், மாஞ் செஸ்டர் வ்யாபாரிகளின் அனு கூலத்தை நாடி கவர்ன்மென்டார் இந்தியாவில் புதிதாக முளை விட்ருக்கி

கும் யந்திர ஆலைத் தொழிலுக்குத் தீங்கான சுங்கத் தீர்வை விதித் திருப்பதை உடனே ரத்து செய்து விட வேண்டும். மாஞ் செஸ்டருக்கு நன்மை விளையு மாறு பாரத ராஜாங்கத் தார் பாரத ஜனங்களுக்குத் தீமை செய்தல் அடாது.

இந் நாட்டில் ஸ்திர மாகக் குடி யேறுத ஐரோப்பிய யூரேஷிய உத்யோகஸ்தர்களுக்கு ராஜாங்கத்தார் பரிவர்த்தன நஷ்ட ஈடு கொடுப்பது தவறு. அதனை உடனே நிறுத்தி விட வேண்டும். ராஜாங்க உத்தியோகங்கள் பாரத பூமியின் மக்களுக்கு அதிகமாகக் கொடுக்கப் பட வேண்டும்.

சிவாஜியும், ஹைதர் அலியும், ரண ஜித சிங்கும், மாதவ்ஜீ சிந்தியாவும் இக் காலத்தில் பிறந் திருந்தால் அவர் களுக்கு நமது நாட்டு லைக்கியத்தில் ஒரு சிறு லேனபதி (கர்னல்) வேலை கூடக் கிடைத் திராது. ஒரு தளகர்த்தன் (காப்டின்) ஸ்தானம் கூடப் பெற் றிருக்க மாட்டார்கள். இந் நனம் ஒரு தேசத்தின் ஜனத் தொகை முழுதையும் ராணுவ விஷயத்தில் ஜாதி பிரஷ்டம் செய்வதி னின்றும் ஸாம்ராஜ் யத்தின் உறுதிக்கும் பலத்துக்கும் பெருமைக்கும் அனுகூலம் ஏற்படாது.

நியாயஸ்தலங்களில், குற்ற வழக்குக்களில் பாரத மக்க ளும் ஐரோப் பியரும் வாதி, பிரதிவாதிக ளாக நிற்கு மிடத்தே பக்ஷ பாத மற்ற நீதி கிடைக்க வில்லை.

வக்கீல்களுக்குக் கக்ஷிக்காரரைப் பிடித்துக் கொடுக்கும் கூட்டத்தாரை ஒழித்து விட வேண்டு மென்ற நோக்கத்துடன் வக்கில் மசோதா கொண்டு வந் திருப்ப தாகச் சொல்லுகிறார் கள். ஆனல் அனுபவத்தில் இது ஷை கூட்டத்தாருக்குத் தீமை விளைக்காமல், ஜில்லா ஸ்தலங்களி லுள்ள வக்கில்களுக் கே தீங்காக முடியு மென்று தோன்றுகிறது. இதனிலும் ஜூரி மசோதாவிலும் பலவித மான ஆக்ஷேபங்களுக் கிட முண் டாவதால் இவ் விரண்டு மசோதாக் களையும் சட்ட மாக் காமல் நிறுத்தி விட வேண்டும்.

பாரத நாட்டின் கைத் தொழில்களை அபி விருத்தி செய்ய வழிகள் தேட வேண்டும். நீதி நிர்வாக இலாகாக் களைப் பிரித்து விட வேண்டும். ராஜாங்க உத்யோகங்களின் பொருட்டு இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஸம காலப் பரீ க்ஷைகள் நடத்துதல் தகும். இங்கிலாந்தி னிடம் நம்பிக்கை

செலுத்த வேண்டும். ஆனால் விடுதலையி னிடத்தே தீராத பக்தியை நாட்ட வேண்டும்

என்று ஸுரேந்த்ர நாத பானர்ஜி தமது உபந்யாஸத்தை முடித்தார்.

இவ் வருஷத்துக் கூட்டத்தில் பின்னே காட்டுகிற முக்யமான செய்திகள் குறிக்கத் தக்கன.

எல்லைக்கு வெளி நாடுகளில் இங்கிலாந்து தனது ராஜ்ய விருத்திக்காகச் செய்யும் போர்களில் இந்தியாவிலிருந்து ஆள் பலம் கொண்டு போனால், செலவிலேனும் ஒரு பங்கு இங்கிலீஷ் பொக்கசத்தி லிருந்து கொடுக்கப் படவேண்டு மென்ற எட்டாந் தீர்மானத்தைப் பற்றிப் பேசுகையில் மிஸ்டர் H. A. வாடியா என்பவர் :— " அந்தோ ! ஆசியாவைப் பூமண்டலப் படத்தி னின்றும் அழித்து விட்டனர். வடக்கேயும், தெற்கேயும், கிழக்கேயும் ஐரோப்பா வந்து ஆசியாவின் மேலே ஏறுகிறது. ருஷியாவும், ப்ரான்ஸும், இங்கிலாந்தை பயமுறுத்த வேண்டு மானால் இந்தியாவிலே பயமுறுத்து கின்றன !" என்று கூறி வருந்தினர்.

ஸ்ரீமான் பாலகங்காதர திலகர் இந்தக் கூட்டத்தில் வைத்ய இலாகாத் திருத்தத்தைப் பற்றிப் பேசுகையில் ஆங்கிலத்தில் பேசாதபடி மஹாராஷ்ட்ர பாஷையில் பேசினார்.

பீராரிலிருந்து வந்த பாண்டு ரங்க பாபுஜீ என்ற விவசாயி பீராரில் குடியானவர்களில் பலருக்கு வருஷ முழுதும் செலவு செய்ய ஏழெட்டு ரூபாய்க்கு மேல் கிடைக்காமல் அவர்கள் தத்தளிப் பதைக் குறித்துப் பேசினார். குற்றவாளியாகி தண்டனைப் பட்டிருக்கும் கைதி ஒருவனுக்கு ராஜாங்கத்தார் வருஷத்தில் 40 அல்லது 50 ரூபாய் செலவிடுகிறார்களென்பதையும், யோக்ய மான குடியானவனுக்கு வருஷத்தில் அதிலே ஐந்தி லொரு பங்கு பணத்தைக் கொண்டு ஜீவிக்க நேர்கிற தென்பதையும் ஸ்ரீ பாபுஜி ஒப்பிட்டுக் காட்டினார்.

பின்பு பத் தொன்ப தாந் தீர்மானத்தை ஒட்டிப் பேசுகையில் சோபால க்ருஷ்ண கோகலே பாரத தேசத்துக் குடியானவனைப் பின் வரு மாறு வர்ணனை புரிந்தார்.

" பட்டினி கிடந்து, வற்றிப் போய், சுருங்க லெடுத்து, இந்தியக் குடியானவன் காலை முதல் மாலை வரை தனது சொற்ப உணவுக்காக உழைக்கிறான். அவனில்லாத பொறு

மையும், சாந்தமும், ஸாதிக்கலு மூடையவனுப் தன்னை ஆளு வோரின் ராஜ்ய ஸபையில் பிரதிநிதி யற்றவனுப், தெய்வமும் மனிதரும் தனது முதுகின் மீது சுமத்தும் பாரத்தை யெல் லாம் அவன் தனியுடனே சுமக்கக் காத்திருக்கிறன்."

ராய் ஸங்கலனி என்ற, ஸ்யாவி ஒருவர் வந்து 23-ஆம் தீர்மானத்தை அனுஸரித்துப் பேசினர். தாம் உலகத்தை யெல்லாம் துறந்து விடினும் மனுஷ்ய ஸேவையையும் தேச பக்தியையும் துறக்க வில்லை யென்று இந்த ஞானி கூறினர்.

தீர்மானங்கள்.

1. முதல் தீர்மானம் :—

ஜன சபையின் சமைப்பு.

இந்த விஷயத்தில் சென்ற வருஷம் செய்த தீர்மானப் படி, புனு காங்கரஸ் கனத்தார், பாரத ஜன ஸபையின் ரூபத் தையும் தொழிலையும் குறித்து உத்தேசமாகச் செய் திருக் கும் விதிகளை, இந்த புனு கமிட்டியார் எல்லா சாசுவதக் கணங் களுக்கும் தெரிவித்து, அடுத்த கூட்டத்திற்குக் குறைந்த பக்ஷம் மூன்று மாஸங்களுக்கு முந்தியே பொதுக் கார்யதர் சிக்கும் சாசுவத வக்கீலுக்கும் அறிக்கை யிட ஏற்பாடு செய்ய வேண்டு மென்று, இந்த ஜன சபை நியமிக்கிறது.

2. இரண்டாந் தீர்மானம் :—

செலவு விசாரணைக் கூட்டம்.

செலவுக்கு ஆதார மான ராஜ்ய முறைமைகளையே (வே ருடன்) சோதனை செய்வது மன்றி, உத்யோகஸ்தரும் ஆங் கிலோ இந்தியரு மல்லாத பிற ரிட மிருந்து ராஜ்யம் விசா ரிப்பதற்குரிய ஸௌகர்யங்கள் ஏற்படுத்தி நடத்தினு லொழி யச் செலவு விசாரணைக் கூட்டத்தார் நடத்தும் விசாரணை யால் ஜனங்களுக்கும் திருப்தி யில்லாமல் ராஜாங்கத்துக்கும் பயன் படாமல் போய் விடு மென்றும், இந்தக் கூட்டத்தின் விசாரணைகளை பஹிரங்க மாக நடத்தினுல் அதிகப் பயன்கள் விளைய லா மென்றும் இந்த ஜன ஸபை தெரிவித்துக் கொள்ளு கிறது.

3. மூன்றாந் தீர்மானம் :—

குடி, படை, ஆட்சிகளின் செலவு.

தேசத்தின் பொருள் நிலை மூட்டுப்பாடாக இருப்பதைக் நி ராணுவ உத்தியோகஸ்தரின் சம்பளம் முதலிய பிற

ராணுவச் செலவுகளையும் லண்டன் செலவுகளையும் குறைத்து பகே இப்போ துள்ள ஸ்திதிக்கு ஒரே மருந்தா மென்றதன் உறுதியான நம்பிக்கையைத் தெரிவித்துக் கொள்வது மன்றி; இந்தியாவின் பொருட் கஷ்டத்துக்குப் பரிவர்த்தன நிலைமையைக் காட்டிலும் ராணுவச் செலவின் மிகையே முக்ய காரணமென்று பார்லிமென்ட் ஸபைக் கமிட்டியார் சொல்லிய கருத்தை இங்கிலாந்தில் அர்த்த சாஸ்த்ர பண்டிதர் அங்கீகாரம் செய்வது கண்டு இந்த ஜன ஸபை மகிழ்ச்சி கூறுகிறது.

4. நான்காக் தீர்மானம் :—

நீதி நிர்வாஹப் பிரிவு.

நீதி பரிபாலனத்தில், நீதி நிர்வாஹ அதிகாரங்களைப் பிரிப்பதற் குரிய கார்யங்கள் செய்யும்படி இந்த ஜன ஸபை மீளவும் இந்தியா ராஜாங்கத்தாரையும், இந்தியா மந்திரியையும் ப்ரார்த்தனை செய்து கொள்ளுகிறது.

5. ஐந்தாக் தீர்மானம் :—

ஜூரி விசாரணை.

இந்த தேசத்தில் ஜூரி விசாரணை விஷயத்தில் அடிக்கடி மாறுதல்கள் செய்வதையும், செய்வ தாக பய முறுத்துவதையும் கண்டு இந்த ஜன ஸபை அஞ்சுகிறது;

அங்ஙனம் எவ் வித மாறுதலும் செய்யும் படி பிரிடிஷ் இந்தியா ஜனத் தொகையில் எப் பகுதியாரும் விரும்ப வில்லை யாதலால், இவ் விஷயமாக இப் போது ஷவஸ்ராய் ஸபையில் ஆலோசனை செய்யப் படும் மஸோதாவை மேல் யோசனையின்றி இப் படியே தள்ளி விட வேண்டு மென்று தெரிவித்துக் கொள்வ தடன், முந்திய ஜன ஸபைக் கூட்டங்களில் செய்த தீர்மானங்களை மீளவும் உறுதி செய்து, இப்போது ஜூரி விசாரணை வழக்கத்தில் இல்லாத குற்றங்களுக்கும், ஜில்லாக்களுக்கும் அவற்றைப் பிரயோகம் செய்யவும், ஜூரிகளின் தீர்ப்புக்கள் முடிபுத் தன்மை யுடையன வாகச் செய்யவும் வேண்டு மென்று இந்த ஜன ஸபை ப்ரார்த்திக்கிறது.

6. ஆறாந் தீர்மானம் :—

ஸ்வ தேச ராஜ்யங்களில்
பத்திரிகைகளின் மூச்சைப் பிடித்தல்.

இந்தியா கவர்ன்மென்டார் அன்ய இலாகாவில், 1891-ஜூன் 25-ல் ப்ரசுரம் செய்த வினம்பர மொன்றில் ஸ்வதேச

ராஜ்யங்களில், ப்ரிட்டிஷ் பரிபாலனத்தின் மீதே இருக்கும் எல்லைகளில், பத்திரிகைகளின் மூச்சைப் பிடிக்கும் விதி செய்யப்பட்டிருப்பது பிற போக்காகவும் தொடுங் கோன்மை யாகவும் தீமையாகவும், ஆழ்ந்த ராஜ தந்திரத்துக்கும் ஜனங் களின் விடுதலைக்கும் விரோதமாகவும் இருப்பதனால் அதை பல மாக ஆக்ஷேபித்து இன்னும் தாமஸம் பண்ணுமல் அந்த விதியை அழித்து விடும்படி இந்த ஜன ஸபை ப்ரார்த்திக் கிறது.

7. ஏழாந் தீர்மானம் :—

உத்யோக விசாரணைக் கூட்டமும்
ஸம காலப் பரீக்ஷைகளும்.

மூன்னிய ஜன ஸபைக் கூட்டங்களில் தீர்மானித்த படியே, பொது உத்யோக விசாரணைக் கூட்டத்தாரின் கார்யங் கள் தேச ஜனங்களுக்கு யா தொரு பயனும் உதவாமல் போய் விட்டது பற்றி, உத்யோகப் போட்டிப் பரீக்ஷைகளை ஸம காலமாக இங்கிலாந்திலும் இந்தியாவிலும் நடத்துவதற் கனு கூல மாக 1893- ஜூன் மாஸத்தில் செய்த தீர்மானத்தை நிறை வேற்றிலை லொழிய இந்த விஷயத்திற்குத் திருப்திக ரமான முடி வேற்படா தென்று இந்த ஜன ஸபை அறிவிக் கிறது.

8. எட்டாந் தீர்மானம் :—

எல்லைப் புறத்தே படையெடுத்துப் போதல்.

இந்தியா ஆட்சிச் சட்டத்தில் 56-ம் பிரிவைப் பார்லி மென்ட் ஸபையார் ஏற்படுத்திய காலத்தில் அவர்கள் கருதி யிருக்கக் கூடாத வண்ண மாக ப்ரிட்டிஷ் அதிகாரத்தை இந்தி யாவின் வட கிழக்கு, வட மேற்குப் பக்கங்களில் நாட்டிற் குரிய எல்லைகளுக் கப்பால் நெடுந் தூரம் விசாலப் படுத்திக் கொண்டு செல்வதை உத்தேசித்து ;

இந்தியாவின் அரசிறைப் பணத்தையும் படைகளையும் எல்லைக்குப் புறம்பே உபயோகப் படுத்தி முன்பு பார்லி மென்ட் ஸபையின் உத்தரவு அவசியமாகப் பெற்றுக் கொள்ள வேண்டு மென்றும், இந்தியாவின் அவஸரங்களைக் கருதி அவ் வித மான படை யெழுச்சிகளின் செலவுகளை யெல்லாம் இங்கிலாந்தும் இந்தியாவும் தம் முள்ளே பங் கிட்டுக் கொள்ள வேண்டு மென்றும், அங்ஙனம் யாதானு மோ ருறுதிப்பாடு செய்க்கா விடின் இந்தப் படை யெழுச்சிகளால் பாரத தேசம்

கிராசைக் கிட மான பொருட் குழப்பத்தில் வீழ்ந்த விடு மென்றும் இந்த ஜன ஸபை தெரிவித்துக் கொள்ளுகிறது.

9. ஒன்பதாந் தீர்மானம் :—

தென் ஆபிரிகாவில் பாரத தேசிகளின் கஷ்டங்கள்.

தென் ஆபிரிகாவில் பாரதக் குடியேற்றத்தார் மீது சமத்த விரும்பும் கஷ்டங்களைக் கருதி இந்த ஜன ஸபை மிகவும் பலமான ஆசேஷபம் தெரிவிப்பதுடன், ப்ரிட்டிஷ் ப்ரஜைகளின் அனுகூலங்களுக்கு இடையூறு நேரத் தக்க இடங்களிலெல்லாம் இந்தியா கவர்ன்மென்டாரும் ப்ரிடிஷ் கவர்ன்மென்டாரும் செய்திருப்பது போலவே, இந்தியக் குடியேற்றத்தாருக்குச் சார்பாகப் பரிந்து பேசி கம்மவரை அவ் விரண்டு ராஜாங்கத்தாரும் காப்பாற்றுவார்களென்று இந்த ஜன ஸபை நம்புகிறது.

10. பத்தாந் தீர்மானம் :—

விவசாயிகளின் கடனும் அரசிறை வசூலும்.

ஒருவன் தன் நிலத்தை மற்றவனுக்கு உரிமை யாக்கும் ஸ்வதந்த்ரத்தைக் குறுக்கக் கூடிய எந்த விதியும் மிகவும் பிற்போக்காக இருக்குமென்பது மட்டுமேயன்றி, அதன் பிற் காலப்பயன்கள் அபிவிருத்திக்குத் தடையாகிக் குடியானவர்களை இப் போதைக் காட்டிலும் இன்னும் உதவி பற்றவர்களாகச் செய்து விடுமென்றும் ;

குடியானவர்களின் வறுமையானது ஒரு பகுதி அவர்களுடைய அறியாமையாலும், மற்றொரு பகுதி இந்தியாவிலே பல இடங்களில் விளைச்சல் அடிக்கடி மாறுபடுமென்பதை அறியாமல் ஸ்திரமான அரசிறைத் தீர்வையை மிகவும் நெருக்கி வாங்கும் முறைமையாலும் உண்டாகிற தென்றும் ;

இதற்கு உண்மையான மருந்து பொதுக் கல்வியைப் பரவச் செய்ததும், சாசுவத நிலவரித் திட்டம் வழக்கத்திலில்லாத இடங்களில் அரசிறை வஸூல் முறைமையைச் சற்றே தெளித்து விடுதலுமே யாகுமென்றும் ;

இந்த ஜன ஸபை தெரிவித்துக் கொள்ளுகிறது.

11. பதினொன்றாந் தீர்மானம் :—

சட்ட சபைகளில் கேள்வி கேட்கும் உரிமை.

சட்ட சபைகளில் உத்யோகஸ்த ரல்லாத மெம்பர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த தாகிய கேள்வி கேட்கும் உரிமை

பொதுப் படையாக நீதானத் துடன் உபயோகிக்கப் பட்டு வக் நிருப்பது பற்றி இந்த ஜன ஸபை திருப்தி யடை வதுடன்;

இதனால் இங்கும் இங்கிலாந்திலும் உள்ள அதிகாரிகள் ஸந்தோஷங் தெரிவித் திருப்பதையும் எண்ணி;

கேள்விகள் போடு முன்னே அவற்றுக் குரிய காரணங் களை விளக்கிச் சிறிய முகவுரை சொல்லும் உரிமை ப்ரதிநிதி களுக் கிருந்தால், அக் கேள்விகள் பயன் மிகுதி யுறு மாத லால், அவ் வுரிமை கொடுக்கு மாறு ராஜாங்கத்தாரை வற் புறுத்துகிறது.

12. பன்னிரண்டாந் தீர்மானம்:—

வைத்ய இலாகா.

(க) தேசத்துக் குடி ராணுவ வைத்ய உத்யோகங்களின் ஸ்திதியில் சீர் திருத்தம் அவசிய மென்றும், அச் சீர் திருத் தம் இன் னின்ன வழிகளில் கடை பெற வேண்டு மென்றும் தான் கொண்டிருக்கும் கொள்கைகள் உயர்ந்த வைத்ய வட்டங்களில் வற்புறுத்தப் பட்டு வருவதைக் கண்டு இந்த ஜன ஸபை திருப்தி அடைவது மல்லாமல், பொது நலத்தை யும் வைத்ய சாஸ்த்ரம், வைத்யத் தொழில் இவற்றின் அபி வ்ருத்தியையும் கருதி, அரசாட்சியில் செட்டு முறையையும் விரும்பி ஓரே ராணுவ வைத்ய இலாகா தான் இருக்க வேண்டு மென்றும், அதில் ஐரோப்பியர் பட்டாளத்திக் கொ ன்றும், சுதேசித் தருப்புக்களுக்கு மற்றொன்று மாக இரண்டு வகுப்புக்கள் இருக்க வேண்டு மென்றும், அவ் விரண்டும் ஓரே மாதிரியான வழிகளில் நடத்தப்பட வேண்டு மென் றும்;

நாட்டுக் குடி வைத்ய உத்யோக மண்டலத்தைத் தனி யான, ஸ்வாதீன முள்ள தொரு வைத்ய உத்யோக மண்டல மாக்கி, இப்போதுள்ள ராணுவ ஸம்பந்தத்தை அறுத் தெறி ந்து விட்டு, இந்தியாவிலும் பிற நாடுகளிலு முள்ள பதிரிங்க வைத்யர்களுக்குக் கொடுக்க வேண்டு மென்றும்; இதர அம் சங்கள் ஸமமாக இருந்தால் ஸ்வ தேசத் தாருக்குக் கொடுப்ப தே முறை யாகு மென்றும்; இந்த ஜன ஸபை உறுதியாகக் கூறுகிறது.

(உ) பின்னும் உதவிக் குடி ராண வைத்யர், ஆஸ்பத்திரி உத்யோகஸ்தர் களின் ஸ்தானங்களையும் அவஸரங்களையும்

பஹிரங்க மாகத் தீர விசாரணை செய்தால் தான் நெடுங் கால மாக நடந்து வரும் அக்ரமங்களையும் அவற்றால் நிகழும் முறை யீடுகளையும் தீர்க்க முடியு மென்பதை உறுதியாகக் கூறுவ துடன், ரஸாயனப் பாகு பாட் டதிகாரியின் இலாகாவைப் புதி தாக்கி கவர்ன் மென்டார் ஸமீப காலத்தில் ப்ரசுரம் செய்த ஆலோசனையில்— அடிக்கடி நியாய மென்று அங்கீகா ரம் செய்யப்பட் டிருக்கும்—உதவி ரஸாயன விபக்தாக்களின் வேண்டுதல்களை ராஜாங்கத்தார் மறந்து விட்டதாகக் காண் பதி னின்றும் இந்த ஜன ஸபை மிகவும் வருத்தப் படுகிறது.

13. பதின் மூன்றாந் தீர்மானம்:—

வக்கீல் சட்டத்தைத் திருத்தும் மசோதா.

வக்கீல்களுக்குக் கக்ஷிக்காரரைப் பிடித்துக் கொடுக்கும் கூட்டத்தை அழித்து விட வேண்டு மென்ற கருத்துடன் ராஜாங்கத்தார் செய்யும் முயற்சி யா தாயினும் அதனிடம் பரிபூரண அனுதாபம் தெரிவிப்பது மன்றி, இப்போது வைஸ் ராய் சட்ட ஸபையின் ஆலோசனையில் உள்ள வக்கீல் சட்டத் திருத்த மசோதாவில் ஜில்லா நியாயாதிபதிகளும், அரசிறைக் கமிஷனர்களும், வக்கீல்களைத் தள்ளவும், ஷை சட்டத்தின் கீழே வரும், வழக்குக்களில் தம் முடைய குற்ற மின்மையை ருஜுப் படுத்தும் பாரத்தை, வக்கீல்களின் மீது சுமத்தவும் இடங் கொடுக்கும் விதிகள் போட் டிருப்பது கண்டு, இந்த ஜன ஸபை அஞ்சுகிறது; மேலும் அந்த மசோதாவின் நிபந்த னைகள் வக்கீல்களின் ஸ்வாதீனத்தை குறைக்கும் படி யாகவும், பொது ஜனங்களின் கண் முன்னே வக்கீல்களின் பதவியை இறக்கும் படி யாகவும், ஆனால் வக்கீல்களுக்குக் கக்ஷிக்கார ரைப் பிடித்துக் கொடுக்கும் கூட்டத்தை அழிக்கத் தகாத தாகவும், நீதியின் முடிவுகளை மேலேற்றத் தகாத தாகவும் இருப்பதால் அதை நழுவ விட்டுவிட வேண்டு மென்று இந்த ஜனஸபை ப்ரார்த்திக்கிறது.

15. பதினைந்தாந் தீர்மானம்:—

வைஸ்ராய் சட்ட சபையில்

மத்ய மாகாணப் பிரதிநிதி நியமனம்.

வைஸ்ராய் சட்ட ஸபையில் மத்ய மாகாணங்களுக்கு ப்ரதிநிதியாக ஒருவரை இந்தியா ராஜாங்கத்தார் இம் முறை நியமித் திருப்பதில் ஸ்தல ஸங்கங்களை அவ்வித நியமனத்து க்கு சிபார்சு பண்ணும்படி கேட்காமல் செய்து விட்டது பிற்

போக்கான செய்கை யென்று கூறி பலமான கண்டனம் புரி வது மன்றி ஏற்கெனவே வங்காளம், சென்னை, பம்பாய், வட மேற்கு மாகாணங்களுக்குக் கொடுத் திருப்பது போன்ற ப்ரதிநிதி யுரிமை மத்ய மாகாணங் களுக்கும் கொடுத்தற் குரிய ஏற்பாடுகளை உடனே ஆரம்பிக்கும்படி இந்த ஜன ஸபை வேண்டுகிறது.

16. பதினாறாந் தீர்மானம் :—

பரிவர்த்தன நஷ்ட ஈடு.

குடி பேறுத, ஸர்க்கார் உத்யோகஸ்தரான, ஐரோப்பிய யூரேஷியர்களுக்குப் பரிவர்த்தன ஈடுகொடுப்பதில் இப்போது வருஷச் செலவு ஒன்றரைக் கோடி ரூபாய்க்கு மேலே போ வதனால், அந்த வழக்கத்தை நிறுத்தி விட வேண்டு மென்ற மூன்றிய இரண்டு வருஷங்களின் தீர்மானத்தை இந்த ஜன ஸபை மீளவும் வற்புறுத்துகிறது.

17. பதினேழாந் தீர்மானம் :—

மூன்றாம் வகுப்பு ரெயில்வே ப்ரயாணிகளின் கஷ்டங்கள்.

மூன்றாம் வகுப்பு ரெயில்வே ப்ரயாணிகள் படும் கஷ்ட ங்களை அங்கீகாரம் செய்வது பற்றி இந்தியா கவர்ன் மென் டாருக்கு நன்றி தெரிவிப்பதுடன், ரெயில்வே வரும்படியில் பெரும் பகுதி மூன்றாம் வகுப்புப் ப்ரயாணிகளிட மிருந்து வருகிற படியால் தாம் இவ் விஷய மாகச் செய்யும் தீர்மானங் களில் இந்த கஷ்டங்களை விரைவில் நீக்க ஏற்பாடு செய்வார்க ளென்ற நம்பிக்கையை இந்த ஜன ஸபை தெரிவித்துக் கொள் ளுகிறது.

18. பதினெட்டாந் தீர்மானம் :—

காட்டிலாகா.

வெவ்வேறு மாகாண கவர்ன்மென்டார் குடைய விதிக ளின் கீழே காட்டிலாகாவின் பரிபாலனம் கிராமத்து ஜனங்க ளைப் பல விதங்களில் காட்டிலாகாக் கீழ்த் தர உத்யோகஸ்த ரின் கொடுமைக்கும் உபத்ரவத்துக்கும் உட் படுத்தித் தீங்கு விளைவிப்பதி னின்றும் தேச முழுமையிலும் மிகுந்த அதி ருப்தி நேர்ந்திருப்பது கண்டும் ;

1894 - ஆம் வருஷத்துத் தீர்மானத்தில் காடு காத்தல் அரசிறையை மிகுதிப் படுத்தும் பொருட்டன் றென்றும்,

குடியானவர்களுக்கும் காலுடைகளுக்கும் ஸௌகர்யம் செய்யும் பொருட் டென்றும் கூறப் பட்டிருப்பது கருதியும்;

இப்போதுள்ள விதிகள் ஜன ஸௌகர்யத்தை அரசிறை வளர்ச்சி யென்ற கோக்கத்திற்குக் கீழ்ப்படுத்துவது பற்றியும்;

இந்தத் தீங்கை நிவர்த்தி செய்யும் பொருட் டாக ஷை விதிகளைத் திருத்துதல் அவசிய மென்று இந்த ஜன ஸபை அபிப்பிராயப் படுகிறது.

19. பத்தொன்பதாந் தீர்மானம் :—

உப்பு வரியைக் குறைத்தல்.

உப்பு வரியைக் கூடிய சீக்கிரத்தில் குறைப்ப தாகச் சென்ற ஸெப்டம்பர் மாதத்தில் இந்தியா மந்திரி செய்த வாக்குறுதிக்காக இந்த ஜன ஸபை அவருக்கு நன்றி தெரிவிப்ப தடன் ;

முந்திய ஜன ஸபைக் கூட்டங்களின் கருத்துக் கிணங்கி;

இந்த தேசத்தில் மிகவும் ஏழையான வகுப்பினருக்கு உப்புத் தீர்வையால் விளையும் பெருங் கஷ்டத்தை எடுத்துக் காட்டுவது மன்றி ;

இக் கஷ்டத்தைக் கருதி ராஜாங்கத்தார் ஷை தீர்வையை அதன் 1882-ஆம் வருஷத்தின் அளவுக்குக் கொண்டு வருதல் மிகவும் அவசிய மென்பதையும் இந்த ஜன ஸபை தெரிவித்துக் கொள்ளுகிறது.

20. இருபதாந் தீர்மானம் :—

உயர்தரக் கல்விக்கு ஸர்க்கார் உதவிப் பணம்.

நாட்டுக் கல்வியின் தற்கால நிலையில் உயர்தரக் கல்விக்கு ஸர்க்கார் கொடுக்கும் உதவிப் பணத்தை எவ் வகையிலும் குறைத்ததும், ராஜாங்கத்தாரால் முழுமை யாகவேனும் பகுதி யளவேனும் ஆதரிக்கப் படும் பாடசாலைகளின் சம்பளங்களை ஏற்றதும், அயுக்த மென்று பலமாகத் தெரிவிப்ப தடன் ;

கல்வியின் எல்லாக் கிளைகளிலும் ராஜாங்கச் செலவை அதிக மாக்குதல் முக்ய மென்றும், தொழிற் பாடசாலை களும் கலா சாலைகளும் ஸ்தாபித்தல் அவசிய மென்றும் உறுதி யாக இந்த ஜன ஸபை கூறுகிறது.

21. இருபத் தொன்றுந் தீர்மானம் :—

நூலின் மீது சுங்கத் தீர்வை.

20-ஆம் இலக்கத்தின் கீழே யுள்ள இந்தியா தேசத்து நூல்களுக்குச் சுங்கத் தீர்வையை நீக்கியது பற்றி லாங்கஷைர் வ்யாபாரிகள் ஆக்ஷேபித்தல் சரி யில்லை யாதலாலும் ;

இந்தியா ராஜாங்கத்தார் அரசிறையின் லாபத்தைக் கருதி இறக்குமதித் தீர்வைகள் விதிக்கும் உபாயத்தால் "விடு தலை வியாபார"க் கொள்கைகளுக்கு விரோத மில்லை யாதலாலும்;

அந்த உபாயத்தை உறுதி யாகக் கைப் பற்றி நிற்பார்க ளென்று இந்த ஜன ஸபை நம்புகிறது.

22. இருபத் திரண்டாந் தீர்மானம் :—

பலதிரட்டு.

(க) வருமான வரி செலுத்துதற் குரிய வரும்படிச் சிற் றளவை ரூ. 500-லிருந்து ரூ. 1000-ஆக உயர்த்துதலும் ;

(உ) 1890- மார்ச்- இந்தியா கெஜட்டில் பிரசுரம் செய் யப் பட்ட ராஜாங்க அறிக்கையின் 103, 104, 105 ப்ரகர ணங்களில் கூறிய படி முழுதும் பிறை வேற்று மாறு மாகான ஆட்சிகளே இந்தியா ராஜாங்கத்தார் இடைவிடாமல் வற்புறுத் துதலும், எல்லாக் கிராமங்களிலும் ஜனங்களின் இஷ்டம் தெரிந்து கொண்ட பின்னரே சாராயக் கடைகள் வைப்பதற் குரிய சுலப மான முறை யொன்று கண்டு பிடித்து நடத்து தலும் ;

(ஊ) பிறை யோலை பிறப்பிக்கும் வழக்குகளில் குற்றஞ் சாற்றப் பட்டோர் தம்மை மாஜிஸ்திரேட் விசாரிக்காமல் ஜில்லா கோர்ட் விசாரணைக்கு ஒப்புவிக்கும் படி கேட்க அதி காரமுண் டென்ற நிபந்தனை யொன்றைக் குற்ற விசாரணை நீதிச் சட்டத்தில் சேர்த்தலும் ;

(ச) இந்தியாவின் ஏழைகளில் 500 லக்ஷம் பேர் முழுப் பசிக்கு மிகவும் ஸமீபித்த நிலையில் துன்ப வாழ்க்கை வாழ்வது கருதியும், இவர்களுடைய தொகை வருஷந் தோறும் மிகு திப் படுதல் கருதியும், பதிற் றுண்டு தோறும் பத்து லக்ஷக் கணக் கான ஜனங்கள் பசியால் மடிந்தே போவது கருதியும், இவர்களுடைய ஸ்திதியை அபிவிருத்தி செய்தற் குரிய ஏற் பாடுகளே உடனே தொடங்குதலும் ;

(டு) ஆயுதச் சட்டத்தின் கீழ் ஏற்பட்ட விதிகள் இந்தியாவில் வலிப்போர், தேசம் பார்க்க வந்தோர், எல்லாருக்கும் ஒரே வகையில் பிரயோகப் படும் வண்ணமாகவும்; காட்டு மிருகங்கள் இருந்து வழக்கமாக மனித உயிர்களையும், பயிர்களையும், கால் நடைகளையும் அழிக்கும் இடங்களில் அனுமதி உத்தரவுகள் தாராள மாக வழங்கும் படிக்கும்; சீர் திருத்தப் பட்ட விதிகளின் படி கொடுக்கும் உத்தரவுகள் ஒருவ னுடைய ஆயுள் முழுமைக்கும் பயன் படும் படிக்கும்; கெட்ட உபயோகம் ருஜு ஆனலன்றி அவற்றை மாற்று திருக்கும் படிக்கும்; அவை பிறப்பிக்கப் படும் மாகாண எல்லை முழு மைக்கும் உபயோகமாகும் படிக்கும்; மேலும் விதிகளை மாற்றுதலும்;

(சு) இந்தியாவில் ராணுவக் கலாசாலைகள் ஸ்தாபித்து, அவற்றில் சட்டப்படி பாரத பிரஜைகள் எனத் தகுந்தோர், தத்தம் திறமைக்கும் பயிற்சிக்கும் தக்கபடி, பாரத சேனையில், ஸந்தத பெற்ற, அல்லது பெறுத நியமனம் அடைவதற்குரிய படிப்பும் பழக்கமும் ஏற்படுத்துதலும்;

(எ) நாடு முற்றும் முள்ள யுத்தப் பிரியரான ஜாதியாரில் ஆள்திரட்டி உள் நாட்டுப் படையொன்று சமைத்தலும்;

(அ) ப்ரித்தானியாவில் நடப்பது போல், இந்தியாவிலும் விஸ்தாரமான ஸ்வேச்சைக் காப்பு (வாலண்டர்)ப் படை ஏற்படுத்த அனுமதி கொடுத்தலும், அதனைத் தூண்டுதலும்;

(சு) நன்கு வரையறையப் பட்ட சில கொள்கைகளால் தீர் வரியைத் திட்டப் படுத்தி சில ஸ்வான்கள் முதலாக நிலத்தில் பொருள் செலவிட் டிருப்போரின் உரிமைகளைக் காத்தலும்; மிகவும் அவசியமென்று மூன்றிய ஜனசபைக் கூட்டங்களில் தெரிவித்த அபிப்பிராயத்தை இந்த ஜன ஸபை மீட்டும் வற்புறுத்துகிறது.

23. இருபத்து மூன்றாந் தீர்மானம்:—

பிரிட்டிஷ் கமிட்டிச் செலவுகள்.

பிரிட்டிஷ் கமிட்டி, காங்கிரஸ் பத்திரிகை யாகிய இந்தியா, உதவிப் பொதுக் கார்யதர்சியின் கார்யாலயம் இவற்றின் செலவுகளுக்காக ரூபாய் 60,000 கொடுக்க வேண்டுமென்றும், இப்போதேதானும் இனிக் கமிட்டியே லேனும், தீர்மானம் செய்கிறபடி 1896 - ஆம் வருஷத்துக்கு வேல

வேறு வட்டத்தார்களும் சந்தா செலுத்த வேண்டு மென்றும், இந்த ஜன ஸபை தீர்மானிக்கிறது.

24. இருபத்து நான்காந் தீர்மானம் :—

ப்ரிட்டிஷ் காங்கிரஸ் கமிட்டிக்கு நன்றி.

சென்ற வருஷத்தில் ஸர் வில்லியம் வெடர்பர்ன் முதலிய ப்ரிட்டிஷ் காங்க்ரஸ் கமிட்டி மெம்பர்கள் இந்தியாவுக்குச் செய்த நன்மைகளைக் கருதி அவர்களுக்கு இந்த ஜன ஸபை மிகவும் ஆழ்ந்த நன்றி தெரிவிக்கிறது.

25. இருபத்தைந்தாந் தீர்மானம் :—

ஜன ஸபையின் பொதுக் கார்யதர்சிகள்.

வருகிற வருஷத்தில் A. O. ஹ்யூம் நமது பொதுக்கார்ய தர்சியாகவும், தீ. எ. வாச்சா உதவிப் பொதுக் கார்யதர்சி யாகவும் இருக்கும்படி இந்த ஜன ஸபை நியமிக்கிறது.

26. இருபத்தாறாந் தீர்மானம் :—

அடுத்தக் கூட்டம்.

1896, கிறிஸ்மஸ் தினத்துக் கப்பால் பிந்தி நிச்சயிக்கக் கொள்ளப்படும் தேதிகளில் பாரத ஜன சபையின் பன்னிரண்டாங் கூட்டம் கலகத்தாவில் நடை பெறக் கடவ தென்று இந்த ஜனஸபை நிச்சயிக்கிறது.

பதினொன்றும் ஜன ஸபையின் தீர்மானங்கள்.
பதினொன்றும் அத்தியாயம் முற்றிற்று.

ஜனசபையின் சரித்திரம்.

பன்னிரண்டாம் அத்யாயம்.

பாரத ஜன ஸபையின் 12 - ஆம் கூட்டம் கல்கத்தாவில் 1896 - டிஸம்பர் 28 - ஆம் தேதி முதல் நான்கு தினங்கள் நடை பெற்றது. 790 பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

உபசார கணத் தலைவராகிய ரமேச சந்த்ர மித்திரர் மிகவும் அஸௌக்ய மாக இருந்த படியால், ராஷ் விஹாரி கோஷ் பிரதிநிதிகளுக்கு நல் வரவு கூறினர்.

அப்பால் முஹம்மத ரஹிம்துல்லா ஸயானி ஜன ஸபையின் அக்ராஸனபதி யாகத் தெரிந்தெடுக்கப் பட்டனர்.

ஸபாநாயகர் ப்ரஸங்கம்.

பன்னிரண்டாம் ஜன ஸபைக் கூட்டத்தில் ஸ்ரீமான் முஹம்மத ரஹிம்துல்லா செய்த உபந்யாஸத்தின் ஸாரம் பின் வருமாறு :—ஸ்வதேசிகளே,

என்னை இக் கூட்டத் தலைவனாக்கிய நன்றி மறத்தற் பாற்றன்று.

பூர்வகதை.

இது வரை இந்த ஜன ஸபைத் தலைவராகி நடத்திய பெரியோர்களில் ஹிந்துக்கள், மஹமதியர், ஆங்கிலேயர், பார்ஸிகள் என்ற நான்கு ஜாதிகளுக்கும் ப்ரதிநிதிகள் உளர். அதனால் இந்த ஸபை ஒரு சிறு வகுப்பு அல்லது பகுதியின் கூட்ட மன் றென்றும் பாரத தேச முழுமைக்கும் பொதுவென்றும் விளங்குகிறது.

இங்கு ஸபைத் தலைமை வஹிப்ப தாகிய பெருமையை இது மட்டும் பெறுத வகுப்புக்கள் பூதரும், போர்த்து கேசியரும், பூரேஷியருமே யாம். இக் கூட்டங்கள் சிறியன வாதலாலும், இவற்றி னிடையே தக்க ப்ரதிநிதிகள் அகப்படாமையாலும் இங்ஙனம் நேர்ந்தே யன்றி இவ்வகுப்பினரை விலக்கி வைக்க வேண்டு மென்ற எண்ணம் நமது ஜன ஸபைக் கிருப்பதாகக் கருத லாகாது. இந்தியாவில் பிறந்து இந்தி

யாவை ஸ்வதேச மென்போர் அணைவர்க்கும் இந்த ஸபை பொது உரிமை யாகும்.

சில மேற்கோள் வசனங்கள்.

இந்தியாவி லுள்ள ஜனங்களுக்குக் கல்விப் பயிற்சி ஐரோப்பிய நெறியில் செய்வித்து, அவர்களை ஐரோப்பிய காகரிக்கப்படி ராஜரீக ஆட்சியில் ஸமஸ்வதந்த்ர மூடையவர்க ளாகச் செய்து விடவேண்டு மென்ற கருத்து ஏற்கெனவே பல ஆங்கிலேய ராஜதந்திரிகளால் வற்புறுத்தப் பட்டிருக்கி றது. இதற்கு த்ருஷ்டாந்த மாகக் கீழே சில வசனங்களை மேற்கோள் காட்டுகிறேன்.

1787-ஆம் வருஷத்தில் ஸர் ஜான் ஷோர் சொல்லியது:-

"நமது பாரத ராஜ்யத்தி லுள்ள குடிகளின் கைத்தொ ழில் அபிவிருத்தி யடைந்திருப்பது மெய்யே. ஆனல் தூர த்தி லிருந்து அன்னியர் நடத்தும் ஆட்சியால் விளையும் தீமை கள் அந்த நலத்தைக் காட்டிலும் மிகவும் பெரியன."

ஸர்ட் இந்தியா கம்பெனியார் பிறப்பித்த 1813 - ஆம் வருஷத்துக் கட்டளையில் பின் வருமாறு சொல்லப்படுகிறது:-

"ப்ரிடிஷ் ராஜ்யத்தின் கீழுள்ள இந்தியா ஸ்வதேசிக ளின் நன்மையையும் ஸந்தோஷத்தையும் கருதுவதே இங்கி லாந்தின் கடமை. அவர்களுக்குள்ளே லௌகிகப் பயன்கள் தரக் கூடிய கல்வியும், மத ஒழுக்கங்களின் அபிவிருத்திக் குரிய கல்வியும் ஏற்படுத்த வேண்டும். ஏனவே, இங்கிலாந்தி லிருந்து இந்தியாவுக்குப் போய் தர்ம நெறிகளைச் செய்ய வேண்டு மென்ற நோக்க மூடையவர்களுக்கு நாம் போதிய லௌகர்யங்கள் செய்து கொடுக்க வேண்டும். ஆனல் இங்க னம் செய்யு மிடத்தே சுதேசிகளுடன் ஐரோப்பியர் இன் னின்ன மாதிரிகளிலே தான் பழகலா மென்று வரையறுக்கும் அதிகாரம் மாகாண ராஜாங்கத்தாருக் கிருப்பது கேடாமலும் இந்தியா ஸ்வதேசிகள் தத்தம் மதக் கொள்கைகளை யதேச் சையாக அனுஸரிக்கலா மென்று இது வரை அனுஷ்டிக்கப் பட்டு வரும் ப்ரிட்டிஷ் ராஜாங்கக் கருத்துக்கு ஹானி நேராம லும் கவனித்துக் கொள்ள வேண்டும்."

மேலும் டெ கட்டளையின் 43 ஆம் ப்ரகரணத்தில் மூன்று மாகாணங்களிலும் (பம்பாய், வங்காளம், சென்னை இவற்றில்) வாழும் ஸ்வதேசிகளின் கல்விக்காக ராஜாங்கத்தார்

(வருஷந் தோறும்) 10,000 பவுன் செலவிடவேண்டு மென்று விதிக்கப் பட்டது.

பின்னர் 1815 -அக்டோபர் 2-ஆம் தேதி யன்று லார்ட் மாய்ரா பிறப்பித்த அறிக்கை யொன்றில் ஸ்வதேசிகளின் அறிவையும் ஒழுக்கத்தையும் மேன்மைப் படுத்தும் வண்ண மாக ஒரு பொதுக்கல்வி முறை ஏற்படுத்த வேண்டு மென்ற தமது கருத்தை வெளியிட்டார்.

இங்ஙனமே 1817 - ல் லார்ட் ஹேஸ்டிங்ஸ் (கவர்னர் ஜெனரல்) ப்ரசுரித்த விளம்பர மொன்றில், தமது ராஜ்யாதி காரத்தைக் குறைவு படுத்தாமல் காப்பாற்றும் பொருட்டாக நாட்டு ஜனங்களைக் கல்வியற்ற நிலையில் வைத் திருக்கவேண்டு மென்ற எண்ணம் ஆங்கில ராஜாங்கத் தாருக்குக் கிடையா தென்று தெரிவித்தார்.

1823-ல் பின்ஸ்டன் சொல்லியது :—

"ஜனத் தொகை அளவு மிஞ்சிப் போகும்படி செய்யும் பால்ய விவாஹங்களும், ஒருவன் தன் ஆயுள் முழுதும் பாடு பட்டுச் சேர்த்த திரவியத்தை யெல்லாம் கல்யாணக் காலங்க ளில் ஒரே யடியாகச் செலவிட்டுக் கெடுத்தலும், குடியான வர்கள் உதவியற்று வட்டிக் கடன் கொடுப்போருக் கிரையா வதும், சுத்தமான உடைகளையும் மனைகளையும் விரும்பா திருத் தலும், பின்னும் இவை போன்ற பிறதீமைகளும் ஒழிய வேண்டு மாலை அதற் கெல்லாம் கல்வியே தனி மருந்தாகும். தற்கொலை, கொலை முதலிய கொடுஞ் செயல்களுக் காதார மான மூடபக்திகளை யெல்லாம் அழிக்க வேண்டு மாயின், அறிவைப் பரப்புதல் ஒன்றே அதற்கு வழியாம்."

இனி 1828-ல், ஸர் ஜான் மால்கோம் பின் வருமாறு கூறினர்:—

இந்தியாவில் ஸ்வதேசிகளுக் கிடையே நமது கல்வியைப் பரவச் செய்தால் அதனின்றும் நாம் அரசாட்சி உத்யோகங் களில் ஒவ்வொரு பகுதியிலும் அவர்களை மேன் மேலும் சேர்த்துக் கொள்ள லௌகர்யம் ஏற்படும். இதனால் ஆட்சி யில் செலவு குறையும்; குணம் விருத்தியாகும்; நம தாட்சி யும் பத்ரமாக இருக்க இடமுண்டாகும். ஆனால், தக்க கல்வி யுடைய ஸ்வதேசிகளுக்கு உயர்ந்த பதவிகள் கொடுத்தா லொழிய இக்கல்வி நமக்கே ஆபத்தாக முடிந்துவிடும்.

1834-ல் லார்ட் மக்காலே சொன்னார் :—

"பாரத ஜனங்கள் நமக்குக் கீழே கொடுங்கோ லரசுக் குட்பட்டு வாழ்வதைக் காட்டிலும் அவர்களுக்கு விடுதலையும் நல்லரசாட்சியும் கிடைத்தால் அதில் நமக்கே அதிக அனு கூலங்க ளேற்படும். அவர்கள் தமது ஸ்வதேசிய ராஜாக்க ளால் ஆளப் பட்டு இங்கிலீஷ் துணிகளை உடுத்துக் கொண் டும், இங்கிலீஷ் கத்திகளை உபயோகித்துக் கொண்டும் இருப் பார்களாயின் அதிலே நமக்குப் பெரிய லாப மாகும். அங் ஙன மின்றி, ஆங்கிலேயக் கலெக்டர்களுக்கும் மாஜிஸ்ட்ரேட் களுக்கும் தாழ்ந்த ஸலாம் போடப் பழகியவர்க ளாய், ஆனல் இங்கிலீஷ் கைத் தொழிலின் அருமை தெரியாத படி அத் தனை மூடர்களாகவேனும், அவற்றை விலை கொடுத்து வாங்கக் கூடாத படி அத்தனை ஏழைகளாக வேனும் இருப்பார்களா யின் அதில் நமக்குத் தகுந்த லாப மில்லை."

ஈஸ்ட் இந்தியா கம்பெனியின் 1833-ஆம் வருஷத்துக் கட்டளையில் பின்வருமாறு சொல்லப் படுகிறது :—

"இந்தியாவி லுள்ள ஸ்வதேசிகளில் எவனும்..... தனது மதம், பிறப்பிடம், குலம், நிறம் இவை காரண மாக, அல்லது இவற்றுள் ஏதேனு மொன்று காரண மாக, நம் முடைய ஆட்சியில் எந்த ஸ்தானத்துக்கும், உத்யோகத்துக் கும், கியமனத்துக்கும் தகுதி யற்றவனெனக் கருதப் பட மாட் டான்."

அப்பால் 1835-ஆம் வருஷத்தில் கட்டுப் பாடின்றி வர்த்தமானப் பத்திரிகைகள் ப்ரசுரிக்கும் உரிமை இந் நாட் டோருக்குக் கொடுக்கப் பட்டது.

இங்கிலாந்தின் ப்ரதம மந்திரி யான க்ளாட்ஸ்டன் சொல்லியது :—

"பெருமை வாய்ந்த பாரத ஜனங்களின் ராஜரீக ஆசை கள் மேன்மேலும் வளர்ச்சி பெற்று வருவதை நாம் இகழ்ச்சி யுட னுவது, உதாசீனத்தோ டாவது நடத்துதல் நமக்குத் தீமை யாக முடியும்."

லார்ட் ராபர்ட்ஸ் (சேனுபதி) சொல்லியது :—

"பாரத ஜனங்கள் ஒற்றுமை யுடனும், திருப்தி யுடனும் வாழும் படி செய்வதே நம் ஆட்சிக்கு முக்ய பல மாகும்."

1874-ஆம் வருஷத்தில் லார்ட் கார்த் ப்ரூக் (வைஸ்ராய்) சொல்லியது :—

"இந்தியாவை நமது லாபத்திற் காகவும், அனுகூலத்துக் காகவும் ஆளாமல் ஸ்வதேசிகளின் நன்மைக் காக ஆளுதல் நம் முடைய கடமை. இதனை நாம் எப் போதும் மறக்கக் கூடாது."

1892-ல் லார்ட் ரிப்பன் சொல்லியது :—

"மஹாராணியின் விளம்பரம் ஓர் உடம்பா டன்று. அது ஒரு ராஜ தந்திரச் சூழ்ச்சியு மன்று. அஃது நம் முடைய ராஜ்யத்தின் மூல தர்மங்களைக் கூறுவது.....நாம் அனை வரும் அதற்குக் கட்டுப் பட்டு நடக்க வேண்டும். அதன் கருத்தை மறுத்துப் பேசுதல் நம் முடைய ராஜ்யத்தின் குணத்துக்கும், நமது தேசத்தின் கௌரவத்துக்கும் கே டாகும்."

1858-ஆம் வருஷத்தில் மஹாராணி பிரகடித்த விளம்பரம்.

ஸ்ரீமான் மகம்மது ரஹிம்துல்லா ஸயானி பின்னும் சொல் லுகிறார் :—

மஹாராணியின் 1858-வருஷத்து ஸ்ரீமுகத்தை பாரத ஜனங்கள் தமது ("மாக்ன கார்த்தா" மஹா சாஸனம்) என்று பாராட்டுகிறார்கள். இங்ஙனம் பாராட்டுதல் பொருந்தும். இந்த விளம்பரத்தில் தெய்வ சாக்ஷியாகச் செய்யப்பட்ட வாக் குறுதிகளை யெல்லாம் நிறைவேற்றும் பொருட்டாகவே நமது ஜன ஸபை மிகவும் ஊக்கத்துடன் முயற்சி செய்து வருகிறது. இந்த வாக் குறுதிகளில் சில நிறைவேற்றப் படாமலும், சில பங்க முற்றும் இருத்தல் நியாய மில்லை யென்றே நம்மை ஆள் வோரிடம் நாம் விண்ணப்பஞ் செய்து கொள்ளுகிறோம்.

இந்த ஸ்ரீமுகத்தின் சில பகுதிகளை இங்கெடுத்துக் கூறு கிறேன் :—

"நம்முடைய மற்ற குடிகளுடன் நம்மைக் கட்டுப்படுத் தும் கடமைத் தளைகளாலேயே நாம் நமது பாரத ராஜ்யத் தின் குடிகளுடனும் கட்டுப்பட் டிருப்பதாகக் கருதுகிறோம். ஸர்வ சக்தி யுடைய ஈசன் கருணையால் நாம் அக் கடமைகளை விசுவாஸத்துடனும், மன உண்மை யுடனும் நிறை வேற்று வோம்....."

"மேலும் நம்முடைய குடிகள் எக் குலத்தின ராயினும் எந்த மதஸ்த ராயினும், எவ்விதமான உத்யோகங்களை வஹிப்பதற்குத் தகுந்த கல்வியும் திறமையும் அவர்களுக்

குண்டோ, அவ்வித உத்யோகங்களெல்லாம் அவர்களுக்குக் கொடுக்கப்படும்." இந்த வாக்குறுதிகளை உடனே நிறைவேற்ற வேண்டுமென்பதே நம்முடைய விருப்பமாகும்.

ஜன ஸபையும் மஹம்மதியரும்.

இந்தியாவிலுள்ள மஹம்மதியர் எல்லாரும்—அல்லது சற்றேறக் குறைய எல்லாரும்—ஜன ஸபைக்கு விரோதிகளென்று சிலர் கற்பனை பண்ணுகிறார்கள். இஃ துண்மையன்று. பழைய அறியாமையையும் சோம்பரையும் துடைத்துவிட்டு மற்ற வகுப்பினருடன் கூடி ஜன ஸபையை ஆதரிக்கத் தக்க சிறு வகுப்பொன்று நாளுக்கு நாள் மிகுதிப் படும்..... இனி மஹம்மதியரில் ஜன ஸபைக்கு விரோதமாக இருக்கும் மிகச் சிறிய பகுதியாரின் கருத்துக்களை ஆராய்வோம். பூர்வத்தில் ஹிந்துக்கள் மஹம்மதியரின் ஆட்சிக் கடங்கியவராய் எல்லா அம்ஸங்களிலும் மஹம்மதியருக்குக் கீழ்ப்பட்டு வாழ்ந்தனரென்றும், பின்னிட்டு ஆங்கில ராஜ்யம் வந்ததற்கப்பால், மஹம்மதியர் ஆங்கிலக் கல்வியைப் பெரிதும் புறக்கணிக்க ஹிந்துக்கள் அதில் மிகத் தேர்ச்சி பெற்று விட்டனராதலால், ராஜாங்க உத்தியோகங்களில் ஹிந்துக்கள் ஏறவும். மஹமதியர் தாழவும் நேர்ந்து விட்டதென்றும், ஆதலால் ஹிந்துக்கள் ஸம்மந்தப்பட்ட எந்தக் கார்யத்திலும் மஹம்மதியர் சேர்ந்து நடத்துதல் மஹம்மதியரின் கவுரவத்துக்கு ஹானியென்றும் சிலர் சொல்லுகிறார்கள். வேறு சிலர் இந்த ஜன ஸபை ப்ரிட்டிஷ் ராஜாங்கத்துக்கு விரோதமென்றும், கொரானில் ராஜபக்தியே விசேஷமென்று கூறியிருப்பதால் இதில் மஹம்மதியர் சேரத் தகாதென்றும் சொல்லுகிறார்கள்.

பின்னுஞ் சிலர் இந்த ஜன ஸபையின் நோக்கங்கள் பகற்கனவுகளென்றும் இவை கர்ம லோகத்தில் எப்போதும் பலிதமடைய மாட்டாவென்றும் கூறிப் பழிக்கிறார்கள்.

மற்றுஞ் சிலர் நமது ஜன ஸபை ஐரோப்பிய ஆட்சி முறையை விரும்புகிறதென்றும், பரீக்ஷைகளில் தேறினவருக்கு உத்தியோகங்கள் கொடுப்பதென்ற ஐரோப்பிய ஸம்ப்ரதாயம் இந்த நாட்டுக்குப் பொருந்தாதென்றும், இங்கு வம்ச பரம்பரையைக் கருதிப் பூர்வ மஹம்மதிய அதிகாரிகளின் மக்களுக்கு உயர்ந்த ஸ்தானங்கள் கொடுப்பதே தகுமென்றும் சொல்லுகிறார்கள். இஃ தெல்லாம் தவறு; அறியாமையால் சொல்லப் படுவது.

மஹம்மதியர்க ளாகிய நம்மவர்களில் பலர் முன்பு ஹிந்துக்களாக இருந்தமஹம்மதிய மார்க்கத்தில் சேர்ந்தவர்களேயன்றி வேறில்லை. அங்ஙன மின்றி வெளி நாட்டாரின் மக்களாக இருப்போரும் இங்கு பல காலமாகக் குடி யேறி ஹிந்துக்களுடன் பழகி, ஒத் தழைத்து வந்திருக்கின்றனர். மேலும், ஹிந்துக்களாயினும் மஹம்மதியராயினும் எப்போது நாம் ஒரே தேசத்தில் பிறந்த, ஒரே வித லாப நஷ்டங்களே யுடையவ ரானோமோ அப்போதே நாம் அனைவரும் ஒரே கூட்ட மென்பதில் ஸந்தேஹ மில்லை....."

ஸ்ரீமான் மஹம்மது ஸயானி மின்னும் சொல்லுகிறார் :—

பிரதிநிதி யாட்சி முறைமை மஹம்மதியரின் பூர்வ சரித்திரத்துக்குப் பொருந்தா தென்றும், கொடுங்கோ லரசரின் ஸ்வேச்சாதிகாரமோ நமது குணத்துக்குப் பொருந்து மென்றும் சொல்வோர் நமது பழமையை நன்கு தெரிந்து கொள்ளாதவர்கள்.

பரிசுத்த நபி மஹம்மத(அலைகி லஸல்லம் அவர்கள்)தமக் கடுத்த காலிபு இன்ன ரென்பதைத் தாம் குறிப்பிடாமல் முஸ்லிம்கள் அத்தனை பேரும் கூடித் தமக் கிஷ்டமான வரை காலி பாகத் தெரிந்து கொள்ளும் படி செய்து விட்டுப் போனர்.

முஸ்லிம்களின் ஆட்சியானது ஜனங்களால் தெரிந் தெடுக் கப் பட்டவனும், ஜனங்களுக்கு உத்தர வாதியு மாகிய அரசன் வசத்தில் இருக்கத் தக்க தென்று பண்டிதர்-அஹமது ரிஜா சொல்லுகிறார். ஜனப் பிரதிநிதிகளிடமும், உலேமாக் (வித்வான்) களிடமும் கலந்து அவர்களின் சொற் படியே அரசன் ஆட்சி நடத்த வேண்டு மென்பது தான் முஸ்லிம் விதி.

மேலும் நபி மஹமத (அலைகி லஸல்லம்) :—" எல்லாவித ஜிஹாத் (தர்ம யுத்தம்) களைக் காட்டிலும் கொடுங்கோ லரசனை எதிர்த்துச் சொல்லும் நியாயச் சொல்லே மேலான தர்ம யுத்த மாகும் " என்று சொல்லி யிருக்கிறார்.

இதனை யெல்லாம் கருதி மஹம்மதியர் மேன் மேலும்ஜன சபையில் கூடி தேசப் பொது நலத்துக்குப் பாடு படுவார்க ளென்று நான் உறுதி யாக நம்புகிறேன்.

அப்பால் ஸ்ரீமான் மஹமத ரஹிம்தல்லா ஸயானி சொல்லுகிறார்:—

பாரத தேசத்தின் வறுமை.

இங்கிலாந்தின் ஜனத் தொகையில் ஆள் ஒன்றுக்கு வருஷ வரவு சராசரி 33 பவுன்; இந்தியாவில் 27 ரூபாய்;

அதாவது (ஒற்றை ரூபாய்க்கு 1 ஷில்லிங் 4 பென்ஸ் என்ற கணக்குப் படி) 1 பவுன் 14 ஷில்லிங் 6 பென்ஸ்! என்னே இங்கிலாந்தின் வருமபடியைக் காட்டிலும் நமது வருமபடி பத்தொன்பது மடங்கு குறைந்ததாகிறது.

இந்தியா மிகவும் ஏழையான நாடு. பாரத ஸ்திரீகள் அன்றாடகம் கைக்கு வாய் ஜீவனம் நடத்துகிறார்கள். நம்மில் பெரும் பகுதியார் ஆண்டுதோறும் சோறின்றி மடிகின்றார்கள். பின்னும் பெரும் பகுதியாருக்கு ஈராள்தோறும் ஒரு வேளைக்கு மேல் உணவு கிடைப்பதில்லை. தீர்வைச் சுமை பொறுக்கத் தகாது. தீர்வை வசூல் செலவும், குடி, படை ஆட்களின் செலவும் ஜனங்களுடைய சக்தியைக் கடந்து நெடுந் தூரம் மேலே ஏறிப் போய் விட்டது. இங்கு இன்னும் சில ஆங்கிலேய ராஜதந்திரிகளின் வசனங்களை எடுத்துக் கூறுகிறேன். அவற்றை நீங்கள் கவனிப்பீர்களாயின், பயன் தராத செலவுகளை உடனே நிறுத்தி விடுதல் எவ்வளவு அவசியமென்பதும், அன்னியர்களுக்குக் கொடுக்கப் படும் உத்தியோகங்களில் பெரும் பகுதியினை அவர்களை நீக்கி அவை நம்மவர்களுக்குக் கொடுக்கப் படுதல் எத்தனை முக்கிய மென்பதும் தெளிவுற விளங்கும்.

1858-ஆம் வருஷம் ஜூன் 14-ஆம் தேதி பார்லிமென்ட் (காமன்ஸ்) ஸபை முன்னே மிஸ்டர் ஜான் ப்ரைட் கூறியது:—

"இந்தியாவின் ஜனத்தொகையில் பெரும் பாலோராகிய பயிரிடுவோர் மிகுந்த வறுமையிலும், சோர்விலும், துன்பத்திலும் வாழ்கிறார்கள்."

காமன்ஸ் ஸபை தெரிந்தெடுத்த கனத்தின் மூன்பு லார்ட் லாரென்ஸ் கூறியது:—

"பாரத ஜனங்களில் பெரும்பாலோருக்கு உணவே தட்டுகிறது. அவர்கள் அத்தனை கொடுமையான வறுமைகள்."

1877 டிஸம்பர் 11-ல் மான்செஸ்டர் நகர மண்டபத்தில் ப்ரைட் சொல்லியது:—

"இந்தியாவில் பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் இனி மேலே தீர்வை விதிக்க இடமில்லாத படி தீர்வைச் சுமையை ஏற்றி விட்டார்கள். இவ்வளவு தீர்வை விதித்தும் செலுத்த முடியாதபடி அபாரமான கடன் வாங்குகிறார்கள்."

மிஸ்டர் க்ளாட்ஸ்டன் சொல்லுகிறார் :—

"இந்தியாவின் செலவு—அதிலும் விசேஷமாக ராணுவச் செலவு—பயங்கரமாக இருக்கிறது."

லார்ட் ஸாலிஸ்பரி சொல்லுகிறார் :—

"நாம் இந்தியாவின் இரத்தத்தைக் கறக்கும்படி நேர்ந்திருக்கிறது." மேலும் லார்ட் ஸாலிஸ்பரி (இந்தியா மந்திரி) தமது 1875 - ஏப்ரல்-29-ஆம் தேதி அறிக்கையில் சொல்லுகிறார் :—

"இந்தியாவின் ஆசிறைப் பணத்தில் பெரிய தொகை இங்காட்டிற்கு வந்து விடுகிறது. அதற்கு, எதிர்லாபம் யாதுமில்லை."

ஸர் ஜார்ஜ் விங்கேட் 1889-ல் ப்ரசாரம் செய்த "இந்தியாவுக்கும் நமக்குமுள்ள த்ரவ்ய ஸம்பந்தங்கள்" என்ற நூலில் பின்வருமாறு சொல்லுகிறார் :—

"இந்தியாவின் தீர்வைப்பணத்தில் இங்கிலாந்திற்கு வந்து இங்கு செலவாகும் பகுதி இந்தியாவுக்கு வெறும் நஷ்டம்; அவர்களுக்கு அந்தப்பணம் முழுகியே போகிறது."

1869 - மார்ச் - 11 - ஆம் தேதி லார்ட்ஸ் ஸபையில் ட்யூக் ஆப் ஆர்கில் என்பவர் கூறியது :—

"இந்தியாவின் விஷயத்தில் நாம் நமது கடமையைச் செலுத்த வில்லை. நம்முடைய வாக்குறுதிகளை நிறைவேற்ற வில்லை."

மேலே ரஹிம்துல்லா மஹமது ஸயானி சொல்லுகிறார் :—

இந்த ஜீவியில் நாம் சட்டத்துக் கினங்கிய முறைமைகளாலே சிற்சிறுதங்கள் கேட்பது கூட ராஜத்துரோக மென்றும், வாயை மூடிக்கொண்டு சும்மா இருப்பதே சிரேஷ்ட மென்றும் சிலர் சொல்லுகிறார்கள். இவர்களுடைய உபதேசத்தை நாம் கவனிக்க வழியில்லை. இப்போது நடை பெறும் ஆட்சி முறையால் இந்த தேசத்தினின்றும் வருஷந்தோறும் நானூறு லக்ஷம் பவுன் ஒரு காசுகூடத் திரும்பி வாராமல் இங்கிலாந்தில் முழுகடிக்கப் படுகிறது! எனவே, நமது நாட்டில் அடிக்கடி பஞ்சங்கள் தோன்றுவ தொரு வியப்பாக மாட்டாது.

பஞ்சம்.

இருபது வருஷங்களுக் கப்பால் மீண்டும் கொடிய பஞ்சம் வந்து தேசத்தில் பெரும் பகுதியைப் பற்றிக் கொண்டு

விட்டது. பிஹாரிலும், வடமேற்கு மாகாணங்களிலும், பஞ்சாபிலும், மத்ய இந்தியாவில் சில பகுதிகளிலும், சென்னை, பம்பாய், மைஸூர், மாகாணங்களில் பல ஜில்லாக்களிலும் மழைக் குறைவினால் பஞ்சம் சேர்ந்து நாள்தோறும் உணவுதேடி ஜீவனம் செய்யும் வகுப்பினர் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். வறுமையில் பெயர் வாங்கினவர்களாகிய குடியானவர்களே எல்லாரைக் காட்டிலும் அதிகக் கஷ்டப் படுகிறார்கள். அடித்தபடி சிறு தொழிலாளிகள், தச்சர் முதலியவர்கள். அதற்கடுத்தபடி நாள் தோறும் ஒரணாக் கூலிகூடக் கிடைப்பது அருமையாக வேலை செய்யும் கூலிக்காரர். கவர்ன்மென்டார் ஏதோ சிகிச்சைகள் செய்யத் தொடங்கியிருக்கிறார்கள்.

ஆனால் 1877–78-ம் வருஷத்துப் பஞ்சத்தில் ஸர்க்கார் கணக்குப் படியே ஐம்பது லக்ஷம் ஜனங்களுக்குமேல் மடிந்து போய் விட்டார்கள் என்பதை நினைக்கும்போது, இவ்வருஷம் யாது நேருமோ என்ற நடுக்க மூண்டாகிறது. நாட்டில் மிச்சத்தானியம் சிறிதள வேனும் சேகரித்துவைக்க இடமில்லாமலிருப்பதே பஞ்சத்துக்குக் காரணம்.

உணவுத் தானியங்கள்.

ப்ரிட்டிஷ் இந்தியாவில் இருபத்திரண்டு கோடி ஜனங்களிருப்பதாக ஸர்க்கார் கணக்கில் ஏற்படுகிறது. அவர்களில் நாள் ஒன்றுக்குத் தலைக்கு 1½ ராத்தல் வீதம் மொத்த உணவு 5·80 கோடி டன் தான்யம் வேண்டும். ஆனால் உணவுப் பயிர் செய்யப்படும் நிலத்தின் மொத்த அளவு 18·60 கோடி ஏக்கர். ஒரு ஏகருக்கு 3·1 டன் (694 - ராத்தல்) சராசரி விளைகிறது. எனவே உணவுப்பயிரின் மொத்த அளவு 5·76 கோடி டன்னுக்குமேல் மதிப்பிட வழியில்லை. ஆதலால் இங்குவிளையும் தானியம், ஏற்கெனவே தேச ஜனங்களுக்குப் போதாது. நாலு லக்ஷம் டன் குறைவு படுகிறது. அதிலும் 25 லக்ஷம் டன் வருஷந் தோறும் நாட்டினின்றும், கடலுக் கப்பால் கடத்தப் பட்டுப் போகிறது. அதாவது ஒரு கோடி ஜனங்களுக்கு ஆஹாரம் குறைகிறது.

இந்த மதிப்பு அதிகாரிகள் கொடுத் திருக்கும் கணக்குப் படி ஏற்பட் டிருப்பதால் இது தவறாக இருக்க நியாயமில்லை. எனவே, நமது தேசத்தின் ஆஹார ஸ்திதி எத்தனை பயங்கரமானது பார்த்தீர்களா?

காலஞ் சென்ற ஸர் ஜேம்ஸ் கோர்ட் இந்தியாவில் 10 தினங்களுக்குப் போதிய அளவு கூடமிச்சத் தானியம் கிடையாதென்று சொல்லுகிறார். அவர் இப்படிச் சொல்லியதன் பிறகு ஜனத் தொகை மிகவும் விருத்தியடைந் திருக்கிறது. மேலும் உணவுக் குரிய தான்யங்களின் பயிரைக் காட்டிலும் உணவுக் குதவாத தான்யப் பயிர்கள் அதி தீவிரமாக விருத்தியடைந்து வருகின்றன. அதைக் கீழே காண்பிக்கப் படும் கணக்கிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

IV.	1880 - 81. (கோடி ஏக்கர் கணக்கு)	1894—95 (கோடி ஏக்கர் கணக்கு)	மிருதி (நூற்றுக்கு)
மொத்த உணவுப் பயிர்	16· 62	18· 62	12
மொத்தம் உணவுக்கு வேண்டாத பயிர்	2·15	3· 90	81

நிலத்தீர்வை.

நிலத்தீர்வையை தானிய மாகக் கொடுப்பது (இனத் தீர்வை) நமது நாட்டில் மூன்று வழக்கமாக இருந்தது. அதை மாற்றி இந்த ராஜாங்கத்தார் பணத்தீர்வை வாங்குவதினின்றும் நமது நாட்டுக் குடியானவருக்கு அதிகக் கஷ்டம் ஏற்படுகிறது. முற்காலத்தில் பயிரில் 16 - அணைமகசூல் விளைந்தால் அதற்குத் தக்கபடி தீர்வை செலுத்தப்படும். விளைவு விகிதம் 8-அணா ஆனால் தீர்வையும் அதற்குத் தக்கபடி குறையும். என வேவிளைவு குறைவுபட்ட காலங்களிலும் குடியானவ ருடைய ஆஹாரத்துக்குக் கஷ்ட மில்லாம லிருந்தது. வீட்டு வருஷச் செலவுக்கு தான்யம் எப்போதும் ஓரே அளவாகவும், ரொக்கார்த் தீர்வை மாத்திரம் விளைவுக்குத் தக்கபடி ஏறியிறங்கிக்கொண்டும் இருந்தது. இப்போதோ ரொக்கார்த்தீர்வை என்றும் ஓரே படியாகவும், விளைவு குறையும் போது குடியானவருக்கு நஷ்டினியாகவும் இருக்கிறது.

முடிவுரை.

குடி, படை ஆட்சிச் செலவு பொறுக்க முடியாத தாக இருக்கும் காரணம் பற்றியே இந்த மாதிரி வறுமையும் அதினின்று கொடிய பஞ்சங்களும் தோன்றுகின்றன. இந்த அரசாட்சியின் ரூபத்தை மாற்றினாலன்றி இந்த வறுமை தீராது. சட்ட ரீதியில் வரவு செலவு கணக்கை நிச்சயப் படுத்துவதில் நம்மவருக்கு எவ்விதமான அதிகாரமும் இல்லை.

திருத்தப் பிரேரபணை கொண்டு வந்து சபையை அபிப்பிராயப்படி பகுதிப் படுத்தும் அதிகாரம் நமக்குக் கொடுத்தல் இன்றியமையாதது. ஈசனருளால் நமது ஸ்பையின் கார்யங்கள் விக்ன மின்றி நிறை வேறுக என்று மஹாமதஸையானி கூறி முடித்தனர்.

அக்கிராஸனதிபதியின் பிரசங்கம்
முற்றிற்று.

பன்னிரண்டாம் ஜன ஸபையில் நடைபெற்ற விசேஷங்களில் சில வற்றை இங்கு குறிப் பிடுகிறோம்:—

தென் ஆபிரிக்காவில் இந்தியர் படும் கஷ்டங்களை நீக்க வேண்டு மென்ற ஒன்பதாந் தீர்மானத்தைக் குறித்துப் பேசுகையில் ஸ்ரீ. பரமேசுரம் பிள்ளை பின்வரும் விஷயங்களை யெடுத்துக் கூறினர்:—

"தென் ஆபிரிகாவில் நம்மவர் அனுமதிச் சிட்டில்லாமல் யாத்திரை செய்யக்கூடாது; இரவில் வீதிகளிலே நடக்கக் கூடாது; நகரங்களுக் கிடையே குடியிருக்கக் கூடாது; சேரிகளிலே தான் வஸிக்கலாம்; ரயில் வண்டிகளில் மூதல், இரண்டாம் வகுப்புக்களில் ஏறக்கூடாது. ட்ராம் வண்டிகளி லின்றும் நம்மவரைத் தாக்குகிறார்கள். ஒற்றையடிப் பாதைகளி லின்றும் நம்மவரைத் தள்ளுகிறார்கள்.

ஹோட்டல்களில் நம்மவர் பிரவேசிக்கக் கூடாது; ரஸ்தாக்களில் நாம் நடக்கக் கூடாது. நம்மீது காறி உமிழ்கிறார்கள்; நமைமைக்கண்டால் கைகொட்டுகிறார்கள், சபிக்கிறார்கள், சித்காரம் பண்ணுகிறார்கள். மனிதனால் ஸஹிக்கமுடியாத அவமானங்களுக்கு நம்மை உட்படுத்துகிறார்கள். .... ராஜாங்கத்தாரால் நம்மைக் காப்பாற்ற முடியா தெனில் நம்மவர் இங்கேயே இருந்து, தீங்குவச் சுமையால்மூச்சு முட்டும் இந்ததேசத்தின் மிச்ச ஜனத்தொகையைப்போக் நோய், அல்லது பஞ்சம் வந்து கருணையுடன் அழிக்க, மடிதலே நன்று."

இத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகையில் விஷ்ணு நாராயண ஆப்தே பின்வருமாறு சொன்னர்:—

"கிழ் நிலையில் இருக்கும் தேசத்தார்களை உயர் நிலைக்குக் கொண்டு வருதலே இங்கிலாந்தின் காரியமென்று ஒலர் சொல்

லுகிறார்கள். தென் ஆபிரிகாவில் நடக்கும் செய்திகளைப் பார்க்கையில், அந்த வார்த்தையை யாரும் நம்ப இடமில்லை."

பஞ்சத்தைக்குறித்து ஸுரேந்த்ர நாத பானர்ஜி பேசிய போது பஞ்சங்கள் தெய்வச் செயலால் நேர்கின்றன என்று மத்ய மாகாணத்தின் கமிஷனர் சொல்லியதை மறுத்து ராஜாங்கத்தாரின் பிழைகளால் நேர்கின்றன என்பதை எடுத்துக் காட்டினர். அவ் வருஷத்தில் பஞ்சம் மிகவும் கொடுமையாக இருந்தமையாலும், நாகபூர், கோலாபூர் முதலிய இடங்களில் ஜனங்கள் கஷ்டம் பொறுக்க மாட்டாமல் கொள்ளையும், கலகமும் தொடங்கும் படி நேர்ந்தமையாலும் ஜன ஸபையார் பெருங் கவலையுடன் இவ்விஷயத்தை ஆராய்ச்சி செய்தனர்.

இந்தத் தீர்மானத்தைப் பற்றிப் பிரதிநிதிகள் ஆதரித்துப் பேசினர்கள். இங்கிலாந்துக்கு இங்கிருந்து பணத்தை வற்புறுத்திக் கொண்டு போகுதல், தீர்வை மிகுதி, செலவு மிகுதி, நாட்டுக் கைத்தொழில்களை அழித்தமை, இவற்றால் ஜனங்கள் ஸாதாரண காலங்களிலேயே அறையிற்றுச் சோற்றுக்கு மேலே அறியாதவர்களாய் மெலிந்து சக்தியின்மிருப்பதால் பஞ்சம், ப்ளேக் நேரிடுவது மன்றி, அவை நேரிடும் போது முழு சக்தியு மிழந்து ஸுலபமாக மடிந்து போகிறார்களென்றும், ராஜாங்கத்தாரின் பிழைகளாலேதான் இந்தப் பெருங்கேடு நிகழ்கிற தென்றும் ஷை பத்தப் பிரதிநிதிகளும் முறையிட்டனர். கேட்பார் யார்? ஜன ஸபையின் சொல்லை ராஜாங்கத்தார் துச்சமாகக் கருதினர்! அஸாம் தேயிலைத் தோட்டங்களில் ஐரோப்பியத் தோட்டக்காரர் நமது நாட்டுக் கூலிகளை மிருகங்களிலும் இழிவாக நடத்தும் அநியாயங்களுக்கு உபபலமான உள் நாட்டு இடம் பெயர்ப்புச் சட்டத்தை ரத்துசெய்ய வேண்டி மென்ற தீர்மானத்தை, குறித்து பேசுகையில் விபின சந்த்ரபாலர்:—

"அஸௌக்ய மான தூரப் பிரதேசங்களில் தோட்டக்காரருடைய கார்யம் நடப்பதற்கு அவ்வித தண்டனைச்சட்டம் அவசிய மென்று அதிகாரிகள் சொல்லுகிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட இடங்களில்போய் வாழும்படி கூலிக்காரரைபலாத்காரம் செய்யும் அதிகாரம் எவனுக்கும் கிடையாது" என்றார். பின்பு அந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய ராஜனீகாந்த ஸர்க்கார்:—

"ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் அடிமை முறையை ஒரத்த வர்களாக இருந்தும் இந்த மானங்கெட்ட சட்டத்தைச் சட்டப் புஸ்தகத்தில் சேர்த்தது எனக்கு வியப்புண்டாக்குகிறது. இதன் பிரதிநிதிகள் மிருகத் தன்மையுடையவன. கூலிகள் இந்தச் சட்டத்துக்கு நடுங்குகிறார்கள். சிறிது காலத்துக்கு முன் ஒரு கூலிக்காரன் கூட்டத்துடன் ரயில்வே ஸ்தானத்துக் குப் போகும் வழியில் தன் கழுத்தைத் தானே அறுத்துக் கொண்டு மடிந்தான்" என்றார்.

நிலத்தீர்வையை அடிக்கடி உயர்த்தும் வழக்கத்தைக்கண் டனம் செய்வதான 17-ஆம் தீர்மானத்தைப் ப்ரேரணை செய்து பேசிய ஸ்ரீ. ஜி. சுப்பிரமணிய அய்யர்:—

"சாசுவத நிலவரித் திட்டத்தை நாடு முற்றிலும் வழக் கத்தின் மேழ கொண்டு வருவதாக வாக்குறுதி [illegible]கும், அவ்வாக் குறுதியை ராஜாங்கத்தார் இன்னும் நிறை வேற்ற வில்லை" என்றனர்.

இந்த ஜனஸபை முடிவுபெறும் தருணத்தில் ஸபாநாயக ரான ஸ்ரீமான் மஹமதி ரஹிம்துல்லா ஸயானிக்கு அவருடைய தேசபக்தியைக் கண்டு வியந்த சில மஹம்மதிய நண்பர்களால் ஒரு தங்க கடிகாரமும் சங்கிலியும் பரிசளிக்கப் பட்டன.

தீர்மானங்கள்.

1. முதல் தீர்மானம்:—

மஹாராணி ஆட்சியில் அறுபதாண்டின் நிறைவு.

கருணை தங்கிய மஹாராணி சக்ரவர்த்தினியின் ஆட்சி ப்ரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்தின் சரித்திரத்தில் மிகவும் நீண்டதும், மிக உபகார மானதும், மனித ஸுகதோஷத்திலும், நாகரிகத் திலும் மிக முக்யமான அபிவிருத்திகளுடன் பிணைக்கப் பட் டதுமாதலால், இந்த ஆட்சியில் அறுபதாண்டு முடிவு பெற் றமை கருதி அவருக்கு இந்த ஜன ஸபை வணக்கத்துடன் மகிழ்ச்சி தெரிவிக்கிறது.

மேலும் மஹாராணி இன்னும் நெடுங் காலம் உயிருடன் வாழ்ந்த இக்காட்டை ஆளவேண்டு மென்று இந்த ஜனஸபை ஆசைப்படுகிறது.

2. இரண்டாந் தீர்மானம்:—

ப்ரித்தானிய ஜன ஸபைக் கமிட்டிக்கு நன்றி.

இந்தியாவின் ராஜீக அபிவிருத்திக்காக ஸர் வில்லியம் வெடர்பர்னும் ப்ரிட்டிஷ் கனத்தின் பிறஸபிகர்களும் சய

கலங்கருதாமல் உழைத்து வருவது கருதி இந்த ஜனஸபை மனப்பூர்வமான நன்றி தெரிவிப்பது மன்றி, ஷி. கணத்தின் ப்ரதிநிதியாக இங்கு நமது ஸபைக்கு வந்திருக்கும் W. S. கெய்னுக்கு அன்புடன் நல்வரவு கூறுகிறது.

3. மூன்றாந் தீர்மானம் :—

நீதி, நிர்வாஹ அதிகாரங்களைப் பிரித்தல்.

காலஞ்சென்ற மனமோஹன் கோஷ்ஜாபகம்.

நீதி பரிபாலனத்தில் நீதி, நிர்வாஹ அதிகாரங்களைப் பிரிக்கும் விஷயத்தில் இங்கும் இங்கிலாந்திலும் பொது ஜன அபிப்பிராயம் நமக்கு ஆதரவாக இருப்பது கண்டு இந்த ஜன ஸபை மகிழ்வது மன்றி ;

இந்த அவஸரமான இச் சந்தர்ப்பத்தை விரைவில் நிறை வேற்றுமாறு செய்தற் குரிய காரியங்களை உடனே தொடங் கும்படி இந்தியா கவர்ன்மெண்டாரையும் இந்தியா மந்திரியை யும் ப்ரார்த்திக்கிறது.

மேலும், இவ் விஷயத்தைப் பற்றி விசேஷ ஆராய்ச்சி செய்தவராகிய மனமோஹன் கோஷ் இறந்து விட்டது பற்றி இந்த ஜன ஸபை மிகவும் வருத்தப்படுகிறது.

4. நான்காந் தீர்மானம் :—

பாரத அரசிறையின் மாகாணப் பகுதிப்பாடுகள்.

ராஜஸவ் சிலவு ; இங்கும் இங்கிலாந்திலும் மேற் பார்வை ; மேல் நியமம் ; ராஜ்யக் கடனுக்கு வட்டி செலுத்து தல் ; என்ற பகுதிகளைத் தவிர ஆட்சியின் மற்றெல்லாப் பகு திகளுக்கும் மாகாண ஆட்சியாளர்களே பொறுப்பாளிகளாக ஏற்பட்டிருப்பதனால் மாகாணப் பகுதிப்பாடுகள் என்ற வகை யில் மாகாண ஆட்சிகளுக்கு இப்போது கொடுக்கப்படும் தொ கைகள் போதா வென்றும் ;

(இவ் விஷயமாக) ஐந்து வருஷங்களுக்கு ஒரு முறை நடைபெறும் மாகாண உடம்பாடு 1897-ல் புதுப்பிக்கப்படுமாத லால், அதை யொட்டி, அரசிறையின் நிலைமை யதிகாரத்தைப் பங்கிடும் விஷயத்தில் இன்னும் ஓரடி முன்னே எடுத்து வைக் கக்கூடிய காலம் வந்து விட்டதென்றும் ;

(என்ன மெனில்) வெவ்வேறு மாகாணங்களின் அரசி றைப் பரிபாலனப் பொறுப்பை முக்யமாக மாகாண ஆட்சியா

நின் வசத்தில் விட்டு விடுதலாலும், இந்தியா ஆட்சியார் ஒவ் வொரு மாகாண ஆட்சியினிடமிருந்தும் வரையறுத்த, நியாய மான கொள்கை பொன்னின் படி விதிக்கப்படும் ஸ்திரமான தொகையொன்று மாத்திரமே பெற்றுக்கொண்டு உடம்பாட் டுக்காலம் முடிவு பெறு மளவும் அதனை எவ்வகையிலும் மாற்ற திருப்பதனாலும் (அது செய்யத் தக்கது) என்றும் ;

அங்ஙனம் செய்தால் மாத்திரமே வெவ்வேறு மகாணங் களின் திருப்திகரமான ஆட்சியிலும், பொருட் பெருக்கத்தி லும், உண்மையான அபிவிருத்தி விளைவதற்கு மிக அவசிய மான அரசியை நிச்சயமும், அதன் இயற்கை வளர்ச்சியால் நேரும் அனுகூலமும் மாகாண ராஜாங்கத்தாருக்குக் கிடைக்கு மென்றும், இந்த ஜனஸபை தெரிவித்துக் கொள்ளுகிறது.

5. ஐந்தாந் தீர்மானம் :—

உத்தியோக விசாரணைக் கூட்டமும் ஸமகாலப் பரீக்ஷைகளும்.

முன்சிய ஜன ஸபைகளில் கருத்தைத் தழுவி ;

உத்தியோக விசாரணைக் கூட்டத்தாரின் ஆலோசனைகளால் இந்த தேசத்து ஜனங்களுக்கு யாதொரு நற்பயனும் கிடைக் காமல் போனது பற்றி இந்த ஜனஸபை ஆழ்ந்த வருத்தம் தெரிவிப்பதுமன்றி ;

1893-ம் வருஷம் ஜூன் மாதம் 2—ஆம் தேதி யன்று காமன்ஸ் (பார்லிமென்ட்) ஸபையில் தீர்வை, வைத்தியம், காவல், (போலீஸ்), தச்சு, தந்தி, காடு, கணக்கு, என்ற (இலாகாக்களில்) பாரதக் குடியாட்சி உத்தியோகங்களில் நிய மனங்களுக்காக நடத்தப் பெறும் போட்டிப் பரீக்ஷைகளை இந்தியாவிலும் இங்கிலாந்திலும் நடத்துவதற்கு அனுகூலமாகச் செய்யப்பட்ட தீர்மானத்தை அநுஷ்டானத்துக்குக் கொணர் ந்தாலன்றி, இவ்விஷயத்துக்கு ஸரியான தீர்ப்பு வேறில்லை யென்ற தனது நிச்சயத்தை உணர்த்துகிறது.

பாரத ஜனங்களுக்கு நீதியாகவும், அவர்களுக்குச் செய் யப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறும் மே காமன்ஸ் ஸபைத் தீர்மானத்தை விரைவில் ஊர்ஜிதப் படுத்தும்படி பிரித் தானிய ராஜாங்கத்தாரை இந்த ஜனஸபை வேண்டுகிறது.

6. ஆறாந் தீர்மானம் :—

பாரத வாலிகளும் உயர்தரக் கல்வியிலாகா
உத்தியோகங்களும்.

சில தினங்களின் முன்னே இந்தியா மந்திரியின் அனுமதி பெற்றதாகிய கல்வி இலாகாத் திருத்த ஆலோசனையானது பாரத தேசத்தார்களில் இங்கிலாந்தில் கல்வி பயின்றோர் உட்பட யாருமே இனி—இதற்கு முன்பு தாம் ப்ரவேசிக்க அனுமதி பெற்றிருந்த—உயர்தரக் கல்வி உத்தியோகங்களில் புக இடமில்லாமல் செய்துவிடவேண்டுமென்ற கருத்துடைய தாய், "இனிமேல் கல்வி இலாகாவில் உத்தியோகம் பெற விரும்பும் இந்தியா ஸ்வதேசிகள் வழக்கமாக இந்தியாவிலேயே நியமனம் பெறுவார்; அங்குள்ள மாகாண உத்தியோக மண்டலத்தில் ஸாதாரணமாக நியமிக்கப் படுவார்கள்" என்று கூறும் தீர்மானம் அடங்கியதாக இருப்பதனால் அந்த ஆலோசனையை இந்த ஜனஸபை கண்டனம் செய்கிறது.

கல்வி யிலாகாவின் உயர்தர வகுப்பில் பட்டம் பெற்ற பாரதவாஸிகளை நியமிப்பதற்கு இப்போது ஏற்படும் விஷயமாக அந்த ஆலோசனையைச் சீர்திருத்த வேண்டுமென்று இந்த ஜனஸபை ப்ரார்த்திக்கிறது.

7. ஏழாந் தீர்மானம் :—

ஜூரி விசாரணையைப் பரவச்செய்தல்.

ஜூரி விசாரணையில் தக்க பயன்களைத் திருப்பதாக இவ்விஷயத்தைப் பற்றிய ஆராய்ச்சிக் கூட்டத்தார் அபிப்ராயம் கொடுத்திருப்பது கருதியும், கல்வி வளர்ந்து வருகிற படியால் எல்லாப் பகுதிகளிலும் கல்வி கற்றோர் போதிய தொகை கிடைப்பது கருதியும், முன் ஜனஸபைகளின் கோரிக்கை கிணங்கி, ஜூரி விசாரணை இப்போது அவஸ்டானம்பெறுத ஜில்லாக்களிலும், அது பிரயோகப் படாத குற்றங்களின் விஷயத்திலும் அதை வழக்கப் படுத்தவேண்டுமென்று இந்த ஜனஸபை அபிப்பிராயப் படுகிறது.

8. எட்டாந் தீர்மானம் :—

உப்பு வரியைக் குறைத்தல்.

இப்போ உள்ள உப்பு வரி விஷயம் தேசத்தில் உள்ள ஏழை வகுப்பினருக்குப் பெருங் கஷ்டமாக மூண்டிருக்கிற

தென்ற தன் கருத்தை இந்த ஜன ஸபை மீட்டும் அறிவித்துக் கொள்வதுடன், அர்த்தக் கஷ்ட நிவர்த்தி செய்யும் பொருட்டாக அவ்வரியை 1868-ஆம் வருஷத்தில் இருந்த மட்டத்துக்குக் குறைத்து விடுதல் அவசிய மென்பதையும் உணர்த்துகின்றது.

9. ஒன்பதாம் தீர்மானம் :—

தென் ஆபிரிகாவில் பாரதக் குடியேற்றத்தார்.

தென் ஆபிரிகாவில் பாரதக் குடியேற்றத்தார் மீது கும் த்தப்பட் டிருக்கும் உரிமைக் குறைகளையும், அவர்களுக்கும் ஐரோப்பியக் குடியேற்றத்தார்களுக்கு மிடையே செய்யப் பட் டிருக்கும் அநியாயமான, அவமானத்தைத் தரிய, பகுபா சங்களையும் தருதி பலமான கண்டனை செய்வதுட பாரதக் குடியேற்றத்தான அனுகூலங்களுக்கு அவர்களுக்கு விதிக்கப்பட் டிருக்கும் நிஷ்டங்களி னின்றும அவர்களை விடுவிக்கும்படி இந்த ஜன ஸபை ப்ரித்தானிய ராஜாங்கத்தாரையும் பாரத ராஜாங்கத் தாரையும் ப்ரார்த்தனை செய்து கொள்ளுகிறது.

10. பத்தாம் தீர்மானம் :—

குடி, படை வைத்திய உத்தியோக மண்டலங்களின் சீர்திருத்தம்.

(க) தேசத்துக் குடி, படை வைத்திய உத்தியோகங்களின் விஷயத்தில் சீர் திருத்தம் அவசிய மென்றும், அம்மாதிரி இன்னின்ன முறைகளில் நடைபெறவேண்டு மென்றும் தான் கொண்டிருக்கும் கொள்கைகள் உயர்ந்த வைத்திய, ராஜ்ய வட்டங்களில் வற்புறுத்தப் பட்டு வருவது கண்டு இந்த ஜன ஸபை திருப்தி அடைகிறது.

மேலும் பொது ஜனத்தையும் வைத்திய சாஸ்திரம், தொழில் இவற்றின் நலத்தையும் தருதி, அரசாட்சியில் செட்டு முறையையும் தருதி;

(1) ராஜ்ய வைத்திய இலாகாவை ஒரே இலாகாவாகச் செய்து, அதில் ஐரோப்பியரீனர்க்கு ஒன்றும், ஸ்வதேசியப் படைக்கு மற்றொன்று மாக இரண்டு வகுப்புக்களை சமைத்து அவ் விரண்டையும் ஒரே மாதிரியான வழிகளில் நடத்த வேண்டு மென்றும்;

(2) நாட்டுக் குடி வைத்திய உத்தியோக மண்டலத்தைத் தனியாக, ஸ்வாதீன முடைய வைத்திய உத்தியோக மண்டலமாக்கி, இப்போதுள்ள ராணுவத் தொடர்பை அறுத்தெறிந்து விட்டு, அம் மண்டலத்து ஸ்தானங்களை இந்தியா தேசத்தாரும் பிறருமாகிய பொது வைத்தியர்களுக்குக் கொடுக்கவேண்டு மென்றும்; மற்ற அம்சங்கள் ஸமமாக இருந்தால் ஸ்வதேசத்தாருக்குக் கொடுப்பதே தகுமென்றும், இந்த ஜனசபை மீட்டும் வற்புறுத்துகிறது.

(உ) குடி உதவி ரண வைத்தியர், ஔஷத சாலைக்கார்யஸ்தர்களின் பதவியையும் வேண்டுதல்களையும் பரிபூர்ணமாகவும் பஹிரங்க மாகவும் விசாரணை நடத்தி நெடுங்காலமாக (அவர்களின் வி[illegible]ல்) நடை பெற்று வரும் ஒழுங்குத் தவறுகளையும் அவற்றால் தோன்றும் குறைப்பாடுகளையும் நீ[illegible]வேண்டு மென்று இந்த ஜ[illegible] ஸபை வற்புறுத்துகிறது.

11. பதி னொன்றாந் தீர்மானம் :—

பல திட்டு.

முந்திய ஜனஸபைகளின் சந்தத்தை அனுஸரித்து;

(க) 1890-ஆம் வருஷம் மார்ச் மாஸத்து இந்தியா கெஜட்டில் ப்ரசுரம் செய்யப்பட்ட அறிக்கையின் 103, 104, 105, ப்ரகரணங்களில் கூறியபடி முழுதும் நிறைவேற்றுமாறு மாகாண ஆட்சிகளை இந்தியா கவர்ன்மென்டார் இடை விடாமல் வற்புறுத்துவது மன்றி, ஜனங்களின் இஷ்டம் தெரிந்து கொண்ட பின்னரே சாராயக் கடைகள் ஏற்படுத்துதற் குரிய ஸுலபமான வழி யொன்று கண்டு பிடித்து அதன்படி நடத்தவேண்டு மென்றும்;

(உ) சிறையோலை பிறப்பிக்கும் வழக்குக்களில் குற்றஞ் சாற்றப் பட்டோர் தம்மை மாஜிஸ்ட்ரேட் விசாரிக்காமல் ஜில்லா கோர்ட் விசாரணைக்கு ஒப்புவிக்கும்படி கேட்கலா மென்ற நிபந்தனை யொன்று குற்ற விசாரணை நீதிச் சட்டத்தில் சேர்க்கப்பட வேண்டு மென்றும்;

(ங) ஆயுதச் சட்டத்தின் கீழ் ஏற்பட்ட விதிகள் இந்தியாவில் வாஸஞ் செய்வோர் நாடுபார்க்க வந்தோர் எல்லோருக்கும் ஒரே விதமாக வழங்கப்படும் வண்ணமாகவும், காட்டு மிருகங்கள் இருந்து வழக்கமாக மனித உயிர்களையும் கால் நடைகளையும் பயிர்களையும் அழிக்கும் இடங்களில் அனுமதி

உத்தரவுகள் (லைஸென்ஸ்) தாராளமாக வழங்கும் படிக்கும்; திருத்திய விதிகளின்படி கொடுக்கும் உத்தரவுக ளெல்லாம் ஒருவனுடைய ஆயுள் முழுமைக்கும் பயன்படும்படிக்கும்; அவை கெட்ட உபயோகம் ருஜுவானா லன்றி மாற்றப்படா மலும் தாம் பிறப்பிக்கப் படும் மாகாண எல்லை முழுதிலும் உபயோக மாகும் படிக்கும்; அவ் விதிகளை மாற்றவேண்டு மென்றும் ;

(ச) இந்தியாயில் ராணுவக் கலாசாலைகள் ஸ்தாபித்து; (அவற்றில்), சட்டப்படி பாரத ப்ரஜைகள் என்று கூறத்தகுந் தோர் தத்தம் திறமைக்கும் பயிற்சிக்கும் தக்கபடி பாரத ஸேனையில் ஸன்னது பெற்ற அல்லது பெறாத உத்தியோகஸ்த ராக நியமனம் அடைவதற்குரிய பழக்கமும் படிப்பும் கற்பிக்க வேண்டு மென்றும் ;

(ரு) ப்ரித்தானியாவில் நடை பெறுவது போல் பாரத ஜனங்களி னிடையேயும் விஸ்தாரமான ஸ்வேச்சைக் காப்புப் படை யொன்று சமைக்க உத்தரவு கொடுத்துத் தூண்டுதல் செய்யவேண்டு மென்றும்;

(சு) இந்தியாவில் குடியேற்ற உறுதி பெறாத ஐரோப் பிய,யூரேஷிய ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கும் பரிவர்த்தன நஷ்ட ஈட்டுத் தொகையை நிறுத்திவிடவேண்டு மென்றும் ;

(எ) இந்தியா மந்திரியின் ஸபையை ஒழித்து விட வேண்டு மென்றும் ;

(அ) பஞ்சாப் மாகாணத்தில் ஒரு ஹைகோர்ட்டும், மாகாணச் சட்ட ஸபையும் ஸ்தாபிக்கவேண்டு மென்றும் ;

(கூ) இந்தியா கவர்ன்மென்ட் அன்ய இலாகாவின் 1891 ஜூன்-25 ஆம் தேதி அறிக்கையின்படி ஸ்வதேச ராஜ்யங்க ளில் ப்ரிட்டிஷ் ஆட்சியின் கீழுள்ள ஸ்தலங்களில் பத்திரிகை களுக்கு வாய்ப் பூட்டு விதித் திருக்கும் முறை பிற்போக்காக வும், அநியாயமாகவும், தீங்காகவும், தேர்ந்த ராஜதந்திரத்துக் கும், ஜனங்களின் விடுதலைக்கும் விரோத மாகவும் இருப்ப தால் அதை நீக்கிவிட வேண்டு மென்றும் ;

இந்த ஜனஸபை ப்ரார்த்தனை செய்து கொள்ளுகிறது.

12. பன்னிரண்டாந் தீர்மானம் :—

வறுமையும் பஞ்சமும்.

இந்தியா முழுதிலும் கொடிய பஞ்சம் வந்து சூழ்ந் திருப்பது கண்டு இந்த ஜன சபை வ்யாகூலப் படுகிறது;

இதற்கும் பலவீன வருஷங்களில் கடந்த மற்றப் பஞ்சங் களுக்கும் ஜனங்களின் பெரிய வறுமையே காரணம்; அந்த வறுமைக்குக் காரணம் யாதெனில் பல வருஷங்களாக இந்த நாட்டின் செல்வத்தை இங்கிலாந்துக்கு வற்றடித்துக் கொண்டு போவதும், மிக மிஞ்சிய தீர்வை வஸூலும், தீர்வைத் திட்டமுமே யாம்; இவற்றின் காரணம் குடி, படை என்ற இருவகை ஆட்சிகளிலும் ராஜாங்கத்தார் மட்டு மீறிப் பணஞ் செலவிடுதல்; இதனால் ஜனங்கள் மிகவும் ஏழைகளாய், பஞ் சம் தோன்றின மாத்திரத்தில் ராஜாங்கத்தார் உணவு கொடுத் தால்—அல்லது ஸாமான்ய ஜனஸஹாயம் எற்பட்டால் அன்றி மடிதல் அவசியமாய் விடுகிறது; எனவே இந்த ஜனஸபையின் அபிப்பிராயப்படி பஞ்சம் மீண்டும் மீண்டும் வராமலிருப்ப தற்குஏதேனும் உபாயம் யாதெனில் செட்டு முறைபைவற்புறுத்தி, ராஜ்யத்தின் பொருளாதாரங்களை சேர்த்தே கையாண்டு, பெரும் பாலும் நாசமாக்கப்பட்டிருக்கும் காட்டுத் தொழில்களையும் கலைகளையும் மறுபடி வளர்த்து, நவீனக் கைத்தொழில் களை யும் வழக்கப்படுத்தும் ராஜ தந்த்ர முறைமையே யாம்;

இதனிடையே இப்போது அனுஷ்டானத்திலிருக்கும் பஞ்சச் சட்டத்து நிபந்தனைகள் சம்பளம், படி விஷயத்தில் போதாதனவாகவும், வேலை வாங்கும் விஷயத்தில் கொடி யனவாகவும் இருப்பதால், மனித உயிர்களைக் காப்பதும், மனி தத் துன்பத்தைத் தணிப்பதும் ராஜாங்கத்தாரின் முக்யமான கடமை என்பதை அவர்களுக்கு நினைப் பூட்டுவது மன்றிப் பஞ்ச எதிர்காப்பு நிதிக்குத் தனிக் கணக்கு வைத்து அதன் பூர்வாதன நிலைக்குக் கொண்டுவருதலுடன், அந்நிதியைப் பஞ்சத் தால் வருந்தும் ஜனங்களுக்கு உடனே நிவர்த்தி செய்விப்ப தாகிய அதன் பூர்வாதன நோக்கத்திற்கு அதிகம் உபயோகிக் கும்படி இந்த ஜனஸபை ராஜாங்கத்தாரை வேண்டுகிறது;

இந்த பயங்கரமான ஸந்தியில் இங்கிலாந்திலிருந்து ஸாமான்ய ஜன ஸஹாயம் இந்நாட்டிற்குள்ளே பெருகிவரக் காத்திருப்பது கருதியும், கஷ்டப் படுவோரில் பெரும் பகுதி யார் ஸாமான்ய ஜன உதவியால் மாத்திரமே நிண்டத் தக்கோ

ராக இருப்பதை வருத்தியும் இப்போது இந்தியா கவர்ன்மெண்டார் அவ்வித உதவி இன்று வராதபடி தடுக்கும் முறைமையை பலமாகக் கண்டனம் செய்வது மன்றி, இவ்விஷயத்தில் லார்ட் லிட்டனுடைய ஆட்சியின் போது நடந்த விபத்துக்கிடமான பிழையை இந்த ஸமயத்தில் மீட்டும் செய்யத் தகாதென்று இந்த ஜன ஸபை வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறது.

13. பதின் மூன்றாந் தீர்மானம் :—

சாசுவதத் திட்டம், விவசாய நிதிகள், வருமான வரி, தொழிற் கல்வி.

பாரத தேசத்து ஏழை வகுப்பினரின் பரிதாப நிலையில் கவனம் செலுத்தும்படி இந்த ஜனஸபை இந்தியா கவர்ன்மெண்டாரை மீளவும் வேண்டுவது மன்றி, அவர்களில் மூழ்தாக நானூறு லக்ஷம் ஜனங்கள் ஸாதாரண வருஷங்களிலேயே முழுப்பசிக்கு மிகவும் ஸமீபத்தில் கஷ்ட வாழ்க்கை வாழ்வதாக உயர்ந்த அதிகாரிகளே கூறுவதனால், அவர்களுடைய நிலைமையைச் செம்மைப் படுத்துவதற்கு வேறு பல உபாயங்களினிடையே பின்வருவன வற்றையும் இந்த ஜன ஸபை பொர்சு செய்கிறது.

(க) இப்போது சாசுவத நிலவரித் திட்டம் வழங்காத இடங்களில் அதனை வழக்குப் படுத்துக; சாசுவத நிலவரித் திட்டத்தை இப்போது வழங்குதல் அயுக்த மென்று தோன்றக் கூடிய ப்ரதேசங்களில் குடியானவரின் ஜீவனத்துக்குப் போதிய மிச்சம் இருக்கும் படியாக, அதிக வரித்திட்டங்கள் போடாமல் தடைசெய்க;

(உ) விவசாய நிதிகள் (பாங்கிகள்) ஸ்தாபனம் செய்க; விவசாயக்கடன் சட்டத்தின் கீழே (குடியானவருக்குக்) கடன் கிடைப்பதில் அதிக ஸௌகர்யங்கள் செய்து தருக;

(ங) வருமான வரிச் சட்டத்தின் படி தீர்வைக்கிடமாகக்கூடிய வரும்படிச் சிற்றளவு ரூ. 500-லிருந்து ரூ. 1000-ஆக உயர்த்திவிடுக;

(ச) கைத்தொழிற் பாடசாலைகள் ஸ்தாபனம் செய்க; ஸ்வதேசியக் கைத்தொழில்களை வளர்த்திடுக; என.

14. பதினன்காம் தீர்மானம் :—

பாரதஸர்வகலா ஸங்கங்களின் சீர் திருத்தம்.

உயர்தரக் கல்விக்கும் பாரத ஜனங்களின் அறிவு தக்க படி வளர்ச்சி பெறுதற்கும் இப்போது பரீக்ஷைகளால் மாத்திரமே உண்டாவதைக் காட்டிலும் அதிகமான ஸௌகர்யங்கள் செய்து கொடுத்தல் மிகவும் அவஸர மென்று கருதத் தக்க காலம்வந்து விட்டபடியால் கல்கத்தா, சென்னை, பம்பாய் ஸர்வகலா ஸங்கச் சமைப்புச் சட்டங்களை வேண்டியவாறு சீர் திருத்தி, உபாத்திமை (போதனைத்) தொழிலைச் சேர்த்தும் கல்வி யளவைப் பெருக்கியும் பொதுவாகத் தற்கால அவசியங்களுக்குப் பொருந்த மாறு செய்யவேண்டு மென்று இந்த ஜனஸபை ப்ரார்த்திக்கிறது.

15. பதினைந்தாம் தீர்மானம் :—

உள்நாட்டுக் குடிப் பெயர்ப்புச் சட்டம்.

இந்தியாவில் எல்லாப் பகுதிகளுக்கும் ஸாமானுக்கும் போக்கு வரவு எளிதாகிவிட்ட படியால், 1893 ஏழாம் கட்டளையால் திருத்தப்பட்ட 1882 உள்நாட்டுக் குடிப்பெயர்ப்புச் சட்டத்தை ஒழித்துவிடுவதற்குரிய காலம் வந்துவிட்ட தென்று இந்த ஜனசபை கருதுகிறது.

16. பதினாறாம் தீர்மானம் :—

மாகாண நிர்வாஹ ஸபைகளில் ராணுவ மெம்பர்கள்.

சென்னை, பம்பாய் கவர்னர் ஸ்தானங்களுக்கு இந்தியாவிலுள்ள உத்தியோகஸ்தரை நியமனம் செய்யாமல் இங்கிலாந்திலிருந்து ராஜதந்திரிகளை நியமிக்கும் முறை மிகவும் அறிவுடைய தென்பது கருதியும், அவசிய மானபோது இவர்கள் "தீர்மானவாக்கு" சொல்லும் படி இவர்களுக்குச் சட்டத்தால் அனுமதி செய்யப்பட்டிருக்கும் அதிகாரத்தை இவர்கள் பூர்யோகிக்கும் வண்ண மாகவும், இந்த மாகாணங்களின் நிர்வாஹ ஆட்சி கவர்னராலும் இரண்டு மெம்பர்களாலும் நடைபெறும் அனுஷ்டானத்தை மாற்றி கவர்னருடன் மூன்று மெம்பர்களால் நடை பெறுமாறு செய்யவேண்டு மென்றும், இந்த மூன்று ஸபிகர் (மெம்பர்) களில் ஒருவர் பாரதக் குடியாட்சி உத்தியோக மண்டலத்தைச் சேராதவராக இருக்க வேண்டு மென்றும், புதியசெலவில்லாமல் இந்த நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டாக, அந்தந்த மாகாணங்களின்

ஸைனுபதிகளேயே (1893-ஆம் வருஷத்துச் சென்னை பம்பாய் ஸைன்யங்களின் சட்டம் நிறைவேறு முன் இருந்தபடி) மெம் பர்களாக்கிவிட வேண்டு மென்றும் இந்த ஜனஸபை தெரி வித்துக் கொள்ளுகிறது.

17. பதினேழாந் தீர்மானம் :—

நிலவரித் திட்டம்.

நிலவரித் திட்டத்தைச் சில வருஷங்களுக்கொரு முறை மாற்றுகிற முறைமை வழங்கும் மாகாணங்களில் இது வரை நடந்தநிலும் அதிகச் சுருக்கமான கால இடைகளில் மாற்றி வருவதை பலமாகக் கண்டனம் செய்வது மன்றி, அத்திட்டம் ஒரு முறை ஏற்பட்டால் பிறகு (குறைந்த பக்ஷம் 60 - வரு ஷங்களுக்குப் பின்) நீண்ட காலத்திற் கப்பாலே தான் மாற் றத் தருமென்று இந்த ஜனஸபை தெரிவித்துக் கொள்ளு கிறது.

18. பதினெட்டாந் தீர்மானம் :—

ஸ்வதேச ராஜாக்களைச் சிங்காதனத்தினின்று தள்ளுதல்.

அக்கிரமமான ஆட்சி, கெட்ட நடை என்ற முகாந்தரங் களை யொட்டி இனி எந்த ஸ்வதேச ராஜாவையும் அதிபதி யையும் சிங்காதனத்தி லிருந்து தள்ளவேண்டு மாயின் மெ. ஸ்வதேச ராஜாக்களுக்கும், அதிபதிகளுக்கும் கவர்ன்மெண் டாருக்கும் ஒருங்கே தீர்ப்பு தரக்கூடிய நீதி விசாரணைக்காரர் முன்னே விசாரித்து மெ. அக்கிரம ஆட்சி அல்லது கெட்ட நடை ருஜுவாகு மன்றி அங்ஙனம் தள்ளக்கூடா தென்று இந்த ஜனஸபை தெரிவித்துக் கொள்ளுகிறது.

19. பத்தொன்பதாந் தீர்மானம் :—

வைஸ்ராய் சட்ட ஸபையில் மத்யமாகாண நியமனம்.

வைஸ்ராய் சட்ட ஸபையில் மத்ய மாகாணங் களுக்குப் பிரதிநிதியாக ஒருவரைச் சென்ற வருஷம் இந்தியா கவர்ன் மென்டார் நியமித் திருப்பதில், ஸ்தல ஸங்கங்களை அவ்வித நியமனத்துக்கு சிபார்சு செய்யும்படி கேட்காமல் நியமித் திருப்பது பிற்போக்கான செய்கை யென்று கூறி பலமான கண்டனம் புரிவது மன்றி, ஏற்கெனவே வங்காளம், சென்னை, பம்பாய், வடமேற்கு மாகாணங்களுக்குக் கொடுத்திருப்பது போன்ற ப்ரதிநிதி யுரிமை மத்ய மாகாணங்களுக்கும் கொடுத் தற் குரிய ஏற்பாடுகளை உடனே தொடங்க வேண்டு மென்று இந்த ஜன ஸபை ப்ரார்த்திக்கிறது.

20. இருபதாந் தீர்மானம் :—

தீன்ஷா எடல்ஜி வாச்சாவும் ராஜவிசாரணைக் கூட்டமும்.

நாட்டுச் செலவு விஷயமாக ராஜ (நியமித) விசாரணைக் கூட்டத்தின் மூன்பு ஸாக்ஷ்யம் சொல்லும் பொருட்டாக பம்பாய் மாகாண ஸபையார் ஜன ஸபையின் உதவிப் பொதுக் கார்ய தர்சி யாகிய தீ. எ. வாச்சாவை அனுப்புவது பற்றி இந்த ஜன ஸபை தனக் குள்ள திருப்தியை தெரிவித்துக் கொள்வது மன்றி, விசாரணைக் கிடமான விஷயங்களில் இந்த ஜன ஸபையின் கருத்துக்களே நேரே, தகுந்த படியாக தீ. எ. வாச்சா எடுத்து சொல்லுவார் என்ற முழு நம்பிக்கை பூண்டிருக்கிறது.

21. இருபத்தொன்றாந் தீர்மானம் :—

தாதாபாய் நவுரோஜி யிடம் நம்பிக்கை.

இந்தியா ஜனங்களுக்கு தாதாபாய் நவுரோஜி (பார்லிமெண்டில் சரியான) பிரதிநிதியாவார் என் பதில் நமது குறைவற்ற முழு நம்பிக்கையை மீட்டும் தெரிவித்துக் கொள்வது மன்றி, அவரை அவருடைய பழைய சிட்டுக் கிராமமாகிய லெண்டரல் பிள்ஸ் பரியாரேனும் அல்லது லிபரல் (உதாரக்) கக்ஷியைச் சேர்ந்த வேறெந்தச் சிட்டுக் கிராமத்தா ரேனும் மறுபடியும் (பார்லிமெண்ட் மெம்பராகத்) தெரிந் தெடுப்பார் களென்று இந்த ஜனஸபை நம்புகிறது.

22. இருபத் திரண்டாந் தீர்மானம் :—

ப்ரிட்டிஷ் கமிட்டிச் செலவுகள்.

ப்ரிட்டிஷ் ஜனஸபைக் கமிட்டியின் செலவுகளுக் காகவும் காங்க்ரஸ் பத்திரிகை யாகிய "இந்தியா" வின் செலவுக்காகவும், உதவிப் பொதுக் கார்யதர்சியின் கார்யாலயத்துச் செலவுகளுக்காகவும் ரூ. 60,000 பகுத்து வைக்க வேண்டு மென்றும், 1897-ஆம் வருஷத்துக்கு இப்போ தாயினும், இனிக் கமிட்டியிலேனும் தீர்மானம் செய்கிற படி வெவ்வேறு ஜனஸபை வட்டத்தாரும் சந்தா செலுத்த வேண்டு மென்றும் இந்த ஜன ஸபை தீர்மானிக்கிறது.

23. இருபத்தி மூன்றாந் தீர்மானம் :—

ஜன ஸபையின் பொதுக் கார்யதர்சிகள்.

வரும் வருஷத்தில் வ. ஓ. ஹயூம் தனது பொதுக் கார்ய தர்சியாகவும், தீ. எ. வாச்சா உதவிப் பொதுக் கார்யதர்சி யாக

வும் இருக்கும்படி இந்த ஜன ஸபை மீட்டும் நியமனம் செய்கிறது.

24. இருபத்து நான்காம் தீர்மானம் :—

அடுத்தக் கூட்டம்.

1896-ம் வரு கிறிஸ்மஸ் தினத்தைக் கப் பால் பின்னிட்டு நிச்சயம் செய்து கொள்ளக் கூடிய தேதிகளில் பேரார் மாகாணத்தில் அமராவதி நகரத்தில் நமது பாரத ஜன ஸபையின் பதின்மூன்றாம் கூட்டம் நடை பெறக் கடவ தென்று இந்த ஜன ஸபை தீர்மானம் செய்கிறது.

பன்னிரெண்டாம் ஜன ஸபையின் தீர்மானங்கள் முற்றுப்பெற்றன.

பன்னிரெண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

ஜன சபைச் சரித்திரம்.

13-ஆம் அத்யாயம்.

பதின்மூன்றும் ஜன ஸபையின் வர்த்தமானங்கள்.

பேரார் மாகாணத்தில் அமராவதி நகரத்தில் பாரத ஜன ஸபையின் பதின்மூன்றாங் கூட்டம் 1897 டிசம்பர் 27, 28, 29, தேதிகளில் நடைபெற்றது. அவ் வருஷத்தில் நாடு முழுதிலும் கொடிய பஞ்சம் தோன்றி மிகவும் சேத முண்டாயிற்று. ஜனங்கள் பெரிய துக்கத்தில் ஆழ்ந்திருந்தனர். அப்படி யிருந்தும் ஜன ஸபைக்கு 692 பேர் வந்திருந்தனர். ப்ளேக் வியாதி ஸம்பந்தமான கல்லரை அதிகாரம், மஹமதியர்களின் ஜனனக்களிலும், ஹிந்துக்களின் கோயில்களிலும் ஐரோப்பிய ஸோல்ஜர் (சிப்பாய்)கள் புகுந்து பல அக்கிரமங்கள் செய்தபடியால் ஜனங்களுக்குள்ளே பயம் அதிகமாயிற்று. அதினின்றும் ப்ளேக் விசாரணை ஸங்கத் தலைவராகிய ராண்ட் (Rand) என்பவரையும், ஆயெர்ஸ்ட் என்ற தளகர்த்தரையும் கொன்று விட்டதினிமித்தமாக, அதிகாரிகள் ஜனங்களிடத்தில் அதிக ஸம்சயமும் பயமும் கொண்டவர்களாய் எப்படியேனும் ஜன ஸபை கூடாமல் தடுத்துவிட முயற்சி புரிந்தார்கள். ப்ளேக் நோய் பரவக் கூடுமென்ற பயத்தாலும் ஜன ஸபை கூடாம லிருப்பது நன்றென அதிகாரிகள் கருதினர். எனினும் ஸ்ரீமான் கணேச ஸ்ரீகிருஷ்ண கபர்தேயைத் தலைவராகக் கொண்ட உபசார கணத்தாரின் ஊக்கத்தாலும் அசையாத மன உறுதியாலும் தடுக்கக் கருதியவர்களின் நோக்கம் நிறைவேறாமல் ஜன ஸபை நன்கு நிறை வேறிற்று.

உபசார கணத் தலைவர் என்ற முறையில் கபர்தே செய்த உபன்யாஸத்தினிடையே பின் வருமாறு கூறினர்:—

"நாடு முழுதும் பஞ்சம் வந்து பெருஞ் சேதம் விளைவித்து விட்டது. மேலும் இந்த துக்க மிருந்த வருஷத்தில் "ப்ளேக்" (கொள்ளை நோய்) வந்து செய்த கொடுமை சொல்லுந் தரமன்று. பல ஆற்றாண்டுகளாக இம் மாதிரி நோய் இந்நாட்டில் பார்த்தது கிடையாது. எல்லைச் சண்டையொன்றில் அதிகாரிகள் வீணாக அளவற்ற திரவியத்தை அழித்து

விட்டனர். இவற்றுடன் வெள்ளங்களும், பெரு நெருப்புக் களும், பூகம்பங்களும் கூடிப் பெருங்கேடு விளைத்து விட்டன .....இத னிடையே புனலில் ராண்டும், அபொஸ டும் பரிதாப கரமாகக் கொலை யுண்டதி னின்றும் அதிகாரிகள் ஸம்சய மிகுந்தவர்களாய் தேச முழுதிலும் ப்ரிட்டிஷ் ராஜ் யத்தை அழித்துவிட வேண்டுமென்ற நோக்கத்துடன் பெரிய ரஹஸ்யச் சூழ்ச்சிக் கூட்டமிருப்பதாக வீண் கனவு கண்டு பத்திராதிபர்கள் மீது வழக்குத் தொடுத்துச் சிறைப் படுத்தி னர். விசாரணை யில்லாமல் ஜனத் தலைவரை அடைத்து வைக் கலாயினர். குற்றச் சட்டத்தில் புது அம்சங்கள் சேர்க்க யோசனை செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் நாம் கூடி யிருக்கிறோம்.....இவ் வளவுக் கிடையே நமக்கு 1858-ஆம் வருஷத்தில் "மாக்னா கார்த்தா" (மஹா சாஸ னம்) என்ற ஸ்ரீமுகம் பிறப்பித்த மஹா ராணியின் ஆட்சியில் அறுப தாண்டு நிறைவு நடந்த தொன்று தான் ஸந்தோஷப் படத்தக்க செய்தி" என்றனர். பிறகு ஜன ஸபையின் அக்ராஸன பதியாக ஸ்ரீமான் சங்கரன் நாயர் வீற்றிருந்தார்.

அக்ராஸன பதியின் உபந்யாஸத்தின் ஸாராம்சம்.

ஸ்ரீ சங்கரன் நாயர் சொன்னார்:—

நிஜ. சென்ற இவ் வருஷத்தில் ஆங்கிலக் கல்வி கற்ற வகுப்பினர் ராஜத் துரோகிக ளென்ற சத்தம் மறுபடி கிளம்பி விட்டது. ப்ரிட்டிஷ் ராஜாங்கத்தாரால் நமக்கு விளைந்திருக் கும் நன்மைகளை நாம் மனதார அங்கீகாரம் செய்து கொள்ளு கிறோம். இக்கிலீஷ் படிப்பினால் நம்முடைய புத்தி ஆங்கி லேய வழியில் மாறி விட்டது. நாம் இப்போத ஆங்கிலேய ரைப் போலவே யோசனை செய்கிறோம். ஆங்கிலேயரைப் போலவே வாழ்கிறோம். ஜனங்களில் எல்லோருக்கும் ஸம உரிமைகளும் ஸஹோதரத் தன்மையும் உண்டென்ற கொள்கை நமக்கு வழக்கமாய் விட்டது. ஜனங்களுக்கு அதிகாரம் கொடுத்து ஸ்வராஜ்யம் ஏற்படுத்த முன்னே இங்கிலாந்து தேசத்தில் கொரோன்தியர், ஸக்ஸோனியர் முதலிய வகுப்பி னர் தீராத சண்டைகள் செய்து கொண்டு மிகவும் இழிவுடன் இடந்த நிலைமையில் நமது நாடு இப்போ திருக்கிறது. இந்த நிலைமை மாறவேண்டு மானால் நமக்கும் ஸ்வராஜ்யம் கொடுக்க வேண்டும்...ராஜாங்கத் துரோகி யென்பதாக முற்காலத்தில் ஆங்கிலேய ராஜ கொலை யுண்ட பின் லண்டன் நகரத்து மதில் மீது தலையை மாத்திரம் கோத்து வைக்கப் பட்ட வாலேஸ

என்ற ஸ்கோத்துலாந்து தேசத்து வீரனையும், கோயிலில் இழிய கொலை புரிந்த ப்ரூஸ் என்ற ஸ்காட் ஜாதி இளவரசனையும் பின்னும் ஆங்கிலேய ராஜாங்கத்தாரால் ராஜத்துரோகி களென்று தூக்கிடப் பட்ட எம்மெட் முதலிய ஐர்லாந்து தேசத்து ஜனத்தலைவர்களையும் சிறிது காலத்துக்கு முன்பு மஹாத்மி சேம்பர்லேன் புகழ்ந்து பேசிய உபந்யாஸம் போன்ற விஷயங்களை இந்தியாவுக்குள் வர வொட்டாமல் செய்தல் சாத்ய மன்று.

ஒரு மனிதனை அடிமையாக இருக்கும்படி ஆங்கில பாஷையில் தர்க்கித்தல் அஸாத்யம்...ஆங்கிலம் பேசும் ஜாதி யார்களின் ஸமத்துவக் கூட்டத்தில் நம்மையும் சேர்க்க வேண்டும்.....வெள்ளைக்காரப் படிப்பினால் நமது ஹிந்து மத ஜனசார விஷயங்களிலே கூடப் பல முக்யமான சீர்திருத்தங்கள் ஸுகஸ்சி பெற்று வருகின்றன. இன்னும் ஹிந்து மதத்தின் பிரிவுக் குணத்தை மாற்றவும், ஜாதி பேதங்களை ஒழிக்கவும், கீழ் ஜாதியார்களுக்குக் கல்விப் பயிற்சி ஏற்படுத்தவும், ஸத்ரீகளை ஆண்களுடன் ஸமத்துவம் பெறும்படி செய்யவும், எந்த மதத்திலும் பக்ஷபாத மில்லாமல் ராஜரிகமும் அபிவிருத்தியும் விடுதலை யுணர்ச்சியும் நன்றெனக் கருதி ஸ்ராஜாங்கம் வேண்டும்.....

பாரத தேசத்தில் பஞ்சமும் வறுமையும்.

பஞ்சத்தின் போது ப்ரித்தானியாவி லிருந்து கிடைத்த பேருதவிக்கு மனப்பூர்வ மாக நன்றி செலுத்துகிறோம்..... இவ்விதப் பஞ்சங்களுக்கு மூல காரணம் பாரத தேசத்தின் கொடிய வறுமையே யாம். விவசாயத் தொழிலுக்குப் பொதுப்படை யாக அனுகூல மென்று காண்கிறப் படும் வருஷங்களிலே கூடச் சென்னை மாகாணத்தில் 280 லக்ஷம் ஜனத்தொகையில் 50 லக்ஷம் ஜனங்களுக்கு தான்ய மில்லை யென்று சென்னைத் தீர்வை வசூல் கார்ய ஸ்தலத்தார் (ரெவின்யூ போர்டார்) கணக்கிட்டனர். இது உண்மை யாயின் ஜனங்களுக்குப் பிரதி கூலமான வருஷங்களில் ஆஹார மில்லை எத்தனை கோடி கெட்டிருக்கு மென்பதை எளிதாக ஊஹித்துக் கொள்ளலாம். நாம் ஸர்க்கார் கணக்கை கவனிக்கவேண்டிய அவசிய மில்லை. தேச முழுதும் மிகக் கொடிய வறுமையில் ஆழ்ந்து கிடப்பதை நம் கண்ணைத் திறந்து நான்கு புறத்திலும் நோக்கினால் உடனே தெரிந்து கொள்ளலாம்.....தீர்வைத் திட்டத்தை சாத

வதமாகச் செய்தல் இதற்குத் தக்க மருந்தாகும். அங்ஙனம் செய்தால் விவசாயி அதிகப் பணம் செலவிட்டு அதிகம் உழைப்பதனாலுண்டாகும் லாபத்திலே தீர்வை யதிகாரி அதிகத் தீர்வை விதிப்பானென்ற அச்சம் நீங்கி விடும். அப்போது மேன்மேலும் மூதற் பணமும் தொழி லும் நில அபிவிருத்தியில் பிரயோகப்படும்.....சாசு வதத் திட்ட முறைமையே நல்லதென்று முன்னொரு காலத் தில் ராஜாங்கத்தார் தீர்மானம் செய்திருந்தனர். ஆனல் ஸமீப வருஷங்களில் ராணுவச் செலவு நெருக்கத்தால் தீர் வையை அபரிமிதமாக ஏற்றி வருகிறார்கள். இந்தியா முழு மைக்கும் உடனே சாசுவதத் திட்டம் ஏற்பாடு செய்ய வேண் டும்.

இந்தியாவுக்கு வெளியே இந்தியாவுக்கு யாதொரு லாபமுமில்லாமல் ஆங்கிலேயர் மேன்மேலும் பூமி பிடிக்கும் பொருட்டாகச் செய்யும் போர்களுக்கு இந்தியாவிலிருந்து பணம் செலவிடும் முறைமை யோயமன்று. அவ்விதமான போர்களின் செலவு முழுதையும் இங்கிலாந்தின் அரசிறையி லிருந்து செலவிடுதலே சரியாகும்.

ஆங்கிலேயர் மேல்ஜாதி யென்றும், நாம் கீழ்ஜாதி யென் றும் நம்மை அவர்கள் வாள் வலிமையால் ஆளுகிறார்களென் றும் நினைப்பதினாலேயே இத்தீன நிலையும் விளைகிறது. நாம் இந்தக் கொள்கையைப் பகைக்கிறோம். ஆயுதச் சட்டம் ஏற் படுத்தி ஐரோப்பியரும் யூரேஷியரும் இஷ்டப்படி ஆயுதந் தரிக்கலாமென்றும் நாம் மாத்திரம் அனுமதிச் சீட்டு (லெலை னஸ்) வாங்காமல் ஆயுதந் தரிக்கக்கூடாதென்றும் விதித் ததும் அந்தக் கொள்கையை ஒட்டியேயாம்.....இந்த நாட்டில் நம்மை இவர்கள் கீழ்ஜாதியாக நடத்துவதினின்றும், தென் ஆப்ரிக்கா முதலிய வெளித் தேசங்களில் வெள்ளையர் நமக்கு ஸமத்துவ உரிமைகள் இல்லையென்று கூறுவதற்கு இடமுண்டாகிறது.....இதனல் நமக்கு விளையும் அவ மானங்களுக்கும் கஷ்டங்களுக்கும் எல்லையில்லை. இனி நாம் இனி ஸஹிக்க மாட்டோம். பரிபூர்ண ஸமத்துவம் நம க்கு உடனே கொடுக்கவேண்டும்.

புனவில் கலகம் நடந்த விவரம்.

பஞ்சத்தின் கொடுமை போதாதென்று இவ்வருஷத் தில் பம்பாய் மாகாணத்தில் கொள்ளை நோயும் வந்து புகுந்

த்து. இந்த பயங்கரமான நோய்க்கு இதுவரை யாதொரு மருந்தும் கண்டு பிடிக்கவில்லை. ப்ளேக் நோயை அடக்குவ தற்காகப் புனாவில் ஐரோப்பிய சிப்பாய்கள் ஜனங்களை அனு வசிய அவமானங்களுக் குட்படுத்திக் கோயில்களையும் ஜனனுக் களையும் அசுத்தப்படுத்தலாயினர். ஜனங்களுக்குள்ளே மிக வும் சோகமுண்டாயிற்று. புனா லர்தார்களில் ஒருவராகிய ஸ்ரீ நாத்து என்பவர் இந்த அக்கிரமங்களைக் கண்டனம்செய்து ராஜாங்கத்தாருக்கு மனுப்போட்டார். ஒரு ஐரோப்பிய சிப் பாய் ஒரு ஹிந்து ஸ்த்ரீயை மானபங்கஞ் செய்ததாகத் தகுந்த லாக்ஷிகளுடன் நாத்து ருஜுப்படுத்தினர். இன்னும் லோல் ஜர்களால் ஜனங்களுக்கு எண்ணற்ற துன்பங்கள் விளைந்தன. மஹ ராட்டா பத்திரிகை "இப்போது நகரத்தில் ஆட்சி புரி யும் ப்ளேக் நோயின் பிரதிநிதிகளைக் காட்டிலும் ஷி நோய் ஏத்தனையோ மடங்கு கருணையுடையது" என் றெழுதிற்று. .....கடைசியாக ப்ளேக் கமிட்டியின் அக்ராலனபதி யாகிய ராண்டு கொலை யுண்டார். ஆங்கிலப் பத்திரிகைகள் கூக்குரலிட்டன. ஐரோப்பியர் நடுங்கிப்போயினர். நாத்து வையும் அவருடைய ஸஹோதரரையும் பிடித்து விசாரணை யில்லாமல் சிறைப்படுத்தி விட்டார்கள். ஸ்ரீமான் பால கங் காதர திலகர் மீதும் மஹாராஷ்ட்ர பாஷைப் பத்திராதிபர் வேறிருவர் மீதும் ராஜத்துரோக வழக்குத் தொடர்ந்தனர். திலகரின் விசாரணையில் ஜூரி 6 பேர் ஐரோப்பியராகவும் 3 பேர் இந்தியராகவும் நியமிக்கப்படவே திலகரை 6 ஐரோப் பியரும் குற்றவாளி யென்றும், 3 இந்தியர் குற்றவாளி இல்லை யென்றும் அபிப்பிராயங் கொடுத்தனர். ஜூரி விசாரணை யில் முக்யமாக மஹாராஷ்ட்ர பாஷையில் நடத்தப்பட்ட "கேஸரி" பத்திரிகையில் எழுதிய விஷயங்கள் குற்றமா இல்லையாவென்று கண்டுபிடிக்க வேண்டியதால்-அந்த பாஷை தெரிந்த ஸ்வதேசிகளை ஜூரிகளாக நியமிப்பதே சரியாக இருந்திருக்கும். திலகர் தண்டனை யடைந்தார். ஐரோப் பாவில் ராஜத்துரோகக் குற்றம் செய்தவர்களை ஸாமான்யக் குற்றவாளிகளைப்போல் நடத்தாமல் சற்றே மரியாதையுடன் நடத்துவது வழக்கம். இங்கே அப்படியில்லை. திலகரை ஸாமான்யக் குற்றவாளி போலவே நடத்தினர்..... எது நேர்ந்தாலும் நாம் நம்பிக்கை இழந்துவிடலாகாது. ஸ்வ தேச பக்தியைக் கைவிடாமலிருந்தால் நமக்கு வெற்றி யுண் டாய் நமது நாடு அற்புதமான உயர்நிலை பெறும் என்று ஸ்ரீ சங்கரன் நாயர் பேசி முடித்தார்.

இவருடைய உபன்யாஸம் மிகவும் சுருக்கமாகவும் தெளிவாகவும் சக்தியுடையதாகவும் விளங்கிற்று.

இவ்வருஷத்துக் கூட்டத்தில் நடந்த இதர முக்யமான செய்திகள் :—1818, 1819, 1827 வருஷங்களின் கட்டளைகளின்படி ஸர்க்காருக்குள்ள விசேஷ அதிகாரங்களின் விஷயத்தைக் குறித்துப் பேசி, ஐந்து மாதங்களுக்கு மேலாகச் சிறைப்பட்டுப் கிடந்த நாத்து ஸஹோதரரை விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்ட பன்னிரண்டாந் தீர்மானத்தை ஸுரேந்த்ர நாத் பானர்ஜி ப்ரேரேபணை செய்தார். அதை யொட்டிப் பேசுகையில் ஸ்ரீ பானர்ஜி பின்வருமாறு கூறினர் :—

"புனாவில் கண்டப் போலீஸ் வைத்தது தவறு. தில கரையும் புனாவில் வேறிரண்டு பத்திராதிபரையும் அடைத்து வைத்தல் அதனிலும் பெரிய தவறாகும். தனி மனுஷ்யனுக்குள்ள ஸ்வதந்திரத்தை நாம் எப்பாடுபட்டும் காத்துக்கொள்வோம். அந்நியனம் இங்கு பிரதிக்ஷேபணை செய்து கொள்ளுகிறோம்." என்றார்.

நாத்து ஸஹோதரர்களை அடைத்து வைத்த அநியாயத்தைக் குறித்துப் பேசுகையில் அனிபெஸண்ட் தனது ஜன ஸபைக்கு கையில் ப்ரான்ஸ் தேசத்தில் ராஜ்யப் புரட்சி நடக்கு முன்னே மிகக் கொடிய அரசு செலுத்திய பூர்போன் ராஜ வம்சத்தார் காலத்தில் "லேத்தர் தகேஷே" என்ற சிறைச் சீட்டுக்கள் விடுத்ததுபோல விசாரணை யின்றிக் குடிகளை அடைக்கும் மிருகத்தனமான வழக்கம் இன்றுவரை பாரத தேசத்திலிருப்பதை எடுத்துக் காட்டுகிறார்.

17-ஆம் தீர்மானம் பஞ்ச விசாரணைக் கூட்டத்தார் பஞ்சநிவர்த்திக்குரிய வழிகளை ஆலோசிப்பது மட்டுமேயன்றி, பஞ்சம் அடிக்கடி தோன்றும் காரணங்களை ஆராய்ந்து தெளிந்து அவற்றைத் தடுக்கும் முறைகளைக் கண்டு பிடிக்க வேண்டுமென்ற கருத்துடையது. இதை ஸ்ரீ ராமானுஜுலு நாயுடு என்பவர் ப்ரேரணை செய்தார். சென்னை மாகாணத்தில் 1854, '65, '76, '77, '78, '91, '97, இத்தனை வருஷங்களிலும் பஞ்சம் நேரிட்டதை எடுத்துக் காட்டி இங்ஙனம் அடுத்தடுத்துப் பஞ்சம் வருவதைத் தடுக்குமாறு ராஜாங்கத்தார் ஒன்றுமே செய்யவில்லை யென்பதை ராமானுஜுலு நாயுடு எடுத்துக்கூறினர்.

தீர்மானங்கள்.

1. முதல் தீர்மானம் :—

எல்லை நீதி.

இந்தியா ராஜாங்கத்தார் இப் போத அனுஸரிக்கும் எல்லை முறைமை பொதுவாக ப்ரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்தின் உயர்ந்த நலங்களுக்கும் விசேஷமாக இந்த தேசத்தின் அனுகூலங்களுக்கும் தீமையாக முடியும்; எனெனில் இப்போ துள்ள ப்ரிட்டிஷ் ஸாம் ராஜ்யத்தின் வரம்புகளுக்கப்பால் அடிக்கடி படை யெடுத்துச் செல்வதனாலும் அதினின்றும் அருமையான உயிர்களுக்கும் தேசப் பணத்துக்கும் பெருஞ் சேதம் விளைவதாலுமே யாம் என்ற தமது ஆழ்ந்த, உண்மையுள்ள தீர்மானத்தை இந்த ஜன ஸபை அறிவிக்கிறது.

எனவே, இவ்வனம் வலியப் படையெடுக்கும் முறையை நிறுத்தி விடும் படிக்கும், அன்றி அப்படை யெழுச்சிகள் அவசியமென்று தோன்றினால், அவை ஸாம்ராஜ்யத்தின் பொது நோக்கங்களுக்காக நடை பெறுவன ஆதலின், அவற்றின் செலவில் பெரும் பகுதி ப்ரிட்டிஷ் அரசிறைப் பணத்திலிருந்து கொடுக்கும் படிக்கும் இந்த ஜனஸபை ப்ரித்தான்னிய தேசத்து மஹா ஜனங்களை வேண்டுகிறது.

2. இரண்டாந் தீர்மானம்:—

எல்லைச் சண்டைச் செலவுக்கு ப்ரிட்டிஷ் கோடை.

1. பஞ்சம், கொள்ளை நோய், என்ற விபத்துக்களால் இந்த நாட்டுப் பொருள் நிலை தைந்து போயிருப்பதனாலும், ஏற்கெனவே குறைவான நமது பொருளாதாரங்கள் இதனால் மேலும் குறைவு பட்டிருப்பதனாலும், வடமேற்கெல்லைக்கப்பால் நடத்தும் படை யெழுச்சித் தொழில்கள் ஸாம்ராஜ்ய முழுதையும் நன்மை யுறக்காக்கும் நோக்கமுடையன ஆதலாலும், ப்ரித்தானியாவுக்கும் நமக்கு மிடையே ராணுவச் செலவுகளை என்ன முறையால் பங்கிட்டுக் கொள்வதென்ற விஷயத்தைப் பிந்தி நிச்சயம் செய்து கொள்ளினும், இப்போது நடைபெறும் போர்ச் செலவுக்குத் தக்க தொகை கொடுக்கும்படி தயை செய்ய வேண்டுமென்று இந்த ஜன ஸபை ப்ரிட்டிஷ் பார்லிமெண்டை வேண்டுகிறது.

2. முதலிரண்டு தீர்மானங்களில் கண்ட ப்ரார்த்தனை அடங்கிய மனுவொன்றை இந்த ஜன ஸபையின் பெயரில் அக்ராஸனபதியையெழுத்திட்டுப் பார்லிமெண்ட் ஸபைக்கு அனுப்பும்படி இந்த ஜன ஸபை நியமிக்கிறது.

3. மூன்றாம் தீர்மானம்:—

ஜன ஸபையின் ப்ரார்த்தனைகளும்
ராஜ (நியமித) விசாரணைக் கூட்டமும்.

பாரத தேசச் செலவைப் பற்றிய ராஜ விசாரணைக் கூட்டத்தார் தம்முடைய விசாரணைகளைப் பொது ஜனங்களின் முன்னிலையில் நடத்துவதாகத் தீர்மானம் செய்திருப்பது பற்றி இந்த ஜனஸபை மகிழ்ச்சி யடைகிறது. மேலும் இந்தியா தேசத்தின் வழக்கை முழுதும் எடுத்துரைக்கும்படி கன்றாங்கிய விசாரணைக் கூட்டத்தார் ப்ரதிநிதித் தன்மை வாய்ந்த பாரத ஸாக்ஷிகளுக்கு ஸமயம் ஏற்படுத்திக் கொடுத்தது பற்றி நன்றி தெரிவிக்கிறது. மேலும் விசாரணைக் கிடமான மூன்று பகுதிகளின் விஷயத்திலும் ஜனஸபையின் ப்ரார்த்தனை பின் வருமாறு:—

(க) இந்தியாவின் செலவை அடக்கியாளும் அம்சத்தில்:—

1. வைஸ்ராய் ஸபையில் உத்யோகஸ்த ரல்லாத மெம்பர்களை பாரத ஜனங்களுக்கு நேரான ப்ரதிநிதிகளாக்க வேண்டும்: திருத்தங்கள் ப்ரேரிக்கவும் அரஜாதைத் திட்டத்தின் நியமனங்களை யொட்டி ஸபையைப் பிரிக்கவும் அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கவேண்டும். (2) வைஸ்ராய் சட்ட ஸபையிலும் மாகாண ஸபைகளிலுமுள்ள தெரிந்தெடுக்கப் பட்ட மெம்பர்களின் சிபார்சின்மீது இந்தியா மந்திரி ஸபையில் நல்ல அனுபவமும் பதவியுமுடைய பாரத ப்ரதிநிதிகளில் தக்க தொகை நியமிக்கப் படவேண்டும். (3) ஒவ்வொரு வருஷமும் இந்தியாவின் பொருள் நிலையைக் குறித்து விசாரணை செய்து அறிக்கை கொடுக்கும் படி காமன்ஸ் ஸபையின் விசேஷக் கமிட்டி யொன்று நியமிக்கவேண்டும்.

(உ) செலவு மிகுதி அம்சத்தில்:—

ராணுவச் செலவு முதலிய பயன் தராத செலவுகளைக் குறைத்து விட வேண்டும். ஜனங்களின் க்ஷேமத்தையும் அபிவிருத்தியையும் வளர்ப்பதில் அதிகத் தொகை செலவிடவேண்டும். உயர்தர உத்யோகங்களில் ஐரோப்பியரை நியமிக்காமல் இயன்றவரை பாரத வாஸிகளை நியமிப்பதனால் அதிகப் பணமிச்சமும் ஆட்சியில் திறமை மிகுதியும் விளையும்.

(ங) செலவுப் பங்கிடுகளின் அம்சத்தில்:—

இந்தியாவுக்கும் ஸாம் ராஜ்யத்தின் மற்றப் பகுதிகளுக்கும் பொதுவான அனுகூலத்தைக் கருதிய செலவுகளில், இல்

கிலாந்தின் அரசிறையினின்றும் சரியான பகுதி கொடுக்க வேண்டும். முக்யமாக இப்போது எல்லிக்கப் பரல் நடை பெறும் போர்ச் செலவை ஸாம்ராஜ்யப் பொக்கஷத்திலிருந்து தர வேண்டும்.

மேலும் ஷை தீர்மானத்தில் ஒரு பிரதி கையெழுத் திட்டுக் காலதாமஸ மின்றி நம் முடைய ஸபா நாயகர் ராஜ (நிய மித) விசாரணைக் கூட்டத்தின் அக்ராஸன பதிக்கு அனுப்ப வேண்டு மென்று இந்த ஜன ஸபை நியமிக்கிறது.

4. நான்காந் தீர்மானம்:—

பல திரட்டு.

பண்டைய ஜன ஸபைக் கூட்டங்களின் தீர்மானக் கருத் தக்களைத் தழுவி இந்த ஜன ஸபை கீழே கண்ட சீர் திருத் தங்கள் அவசியமென்று ராஜாங்கத்தாரிடம் தெரிவித்துக் கொள்ளுகிறது.

(க) ஆப்காரித் திருத்தம் (10 ஆம் ஜன ஸபைக் கூட்டம் 16-ஆம் தீர்மானம் கூ-ஆம் பகுதியைக் காண்க.)

2. ஆயுதச் சட்டத்தைச் சீர்திருத்தம் செய்தல் (1894 10-ஆம் கூட்டம் 16-ஆம் தீர்மானம் கூ-ம் பகுதியைக் காண்க.)

(ங) ராணுவக் கலாசாலைகள் ஸ்தாபித்தல் (ஷை-ஷை-எ-ஆம் பகுதி காண்க).

(ச) பாரத தேசத்தில் ஸ்வேச்சைக் காப்புப் படை ஏற் படுத்துதல் (ஷை-ஷை-கூ-ம் பகுதியைக் காண்க.)

(ஞ) ஐரோப்பிய, யூரேஷிய உத்யோகஸ்தருக்குப் பரி வர்த்தன ஈடு கொடுப்பதை ஒழித்தல்.

(ஸு) இந்தியா மந்திரியின் ஸபையை ஒழித்து விடுதல்.

(ஏ) பஞ்சாபிற்கு ஒரு ஹைகோர்ட் ஸ்தாபனம் செய் தல்.

பின்னும் இந்த ஜன ஸபையானது மூன்றிய ஜன ஸபை யின் கொள்கையை அனுஸரித்து :—

(க) கல்வி இலாகாவில் பக்ஷபாதங்கள் கூடப்படாதையும் (12-ஆம் ஜன ஸபை [1896] கூட்டம் ஆறாந் தீர்மானத்தைக் காண்க.]

(உ) உப்புத்தீர்வை மித மிஞ்சி ஏறிக் கிடப்பதையும் (12-1896-8-ஆம் தீர்மானம்.)

(ங) தென் ஆபிரிகாவில் நம்மவர்களுக்கு அநியாயங்கள் கடப்பதையும் (12-1896-9.)

(ச) மத்ய மாகாணங்களின் ப்ரதிநிதியாக ஒருவரை வைஸ்ராய் ஸபையில் ஜனங்களின் அனுமதி யின்றி நியமித் திருப்பதையும் பலமாகக் கண்டனம்செய்கிறது.

தவிரவும், பின் வரும் சீர்திருத்தங்கள் அவசியம் செய்ய தீர வேண்டு மென்ற முக்ய ஜனஸபைக் கூட்டங்களின் ப்ரார்த்தனைகளை இந்த ஜனஸபை மீட்டும் பலமாக வற்புறுத்து கிறது. அவையாவன :—

(க) வைத்ய இலாகாத் திருத்தம் (12-1896-10 ஆம் தீர்மானத்தைக் காண்க.)

(உ) யூனிவர்ஸிடி [ஸர்வ கலா சங்கத்] திருத்தம் (12-1896-14-ஆம் தீர்.)

(ஙு) உள்நாட்டுக் குடியேற்றக் கட்டளை—1892-ஆம் வருஷத்து முதல் (I) கட்டளையை 1893-ஆம் வருஷத்து ஏழாம் (VII) கட்டளையால் திருத்திய சட்டத்தை உடனே அழித்து விட வேண்டும் (12-1896-15-ஆம் தீர்.)

(ச) தக்க விசாரணை யின்றி ஸ்வதேச ராஜாக்களைச் சிங்காதனத்தி னின்றும் பெயர்க்கும் வழக்கத்தை நிறுத்தி விட வேண்டும். (12-1896-18-ஆம் தீர்.)

(ஞ) நாடு முழுதிலும் ஜூரி விசாரணை ஏற்படுத்தி ஜூரித் தீர்ப்பைக் கடைசி சாசவத மாகச் செய்துவிட வேண் டும். (12–1896-7)

5. ஐந்தாந் தீர்மானம் :—

ஸமகாலப் பரீக்ஷகளும் உத்தியோக விசாரணைக்கூட்டமும்.

[1896-ஆம் வருஷத்தில் கடை பெற்ற 12--ஆம் ஜன ஸபைக் கூட்டத்துத் தீர்மானங்களில் 5-ஆம் தீர்மானத்தைக் காண்க.]

6. ஆறாந் தீர்மானம் :—

ஸ்வதேச ராஜாக்களின் எல்லைக் குள்ளே
பத்திரிகைகளுக்கு வாய்ப் பூட்டு.

[ஸ்வதேச ராஜாக்களின் எல்லைக்குள் ப்ரிடிஷ் ராஜாங் கத்துக்கு சொந்தமான இடங்களில் பத்திரிகைகளுக்கு வாய்ப் பூட்டுப் போட்டிருக்கும் 1891-ஜூலை-25-ஆம் தேதி இந்திய

ராஜாங்கத்து அறிக்கையை ஒழித்துவிட வேண்டும். 1895-11-ஆம் ஜனஸபைக் கூட்டம் 6-ஆம் தீர்மானத்தைக் காண்க.]

7. ஏழாந் தீர்மானம்:—

நிலவரித் திட்டம்.

நிலவரித் திட்டத்தை அடிக்கடி மாற்றும் வழக்கம் நடைபெற்று வரும் மாகாணங்களில் அங்ஙனம் மாற்றுதற் குரிய கால வரை யரையைச் சுருக்கியும் தீர்வைத் தொகையை அதிகப் படுத்தியும் ராஜாங்கத்தார் அனுஷ்டித்து வரும் முறைமையை இந்த ஜனஸபை பலமாகக் கண்டனஞ் புரிவதுமன்றி, இந்த தேசத்தின் நன்மைகளை உத்தேசித்து அப்படிப் பட்ட மாகாணங்களில் நிலத் தீர்வையை சாசுவத மாகத் திட்டப் படுத்துதல் முற்றிலும் அவசியமென்ற தனது ஸ்திரமான நம்பிக்கையை அறிவிக்கிறது.

8. எட்டாந் தீர்மானம்:—

நீதி நிர்வாஹ அதிகாரங்களைப் பிரிவு படுத்தல்.

(1896-12-ஆம் ஜனஸபைக் கூட்டம் 3-ஆம் தீர்மானத்தைக் காண்க.)

9. ஒன்பதாந் தீர்மானம்:—

பஞ்ச விசாரணைக் கூட்டம்.

இந்தியா ராஜாங்கத்தார் பஞ்ச விசாரணைக் கூட்டமொன்று நியமித் திருப்பது கண்டு இந்த ஜனஸபை மகிழ்ச்சி தெரிவிப்பதுடன் அந்தக் கூட்டம் இவ்விஷயத்தை அற விசாரணை பண்ணு மென்ற நம்பிக்கை கொண்டிருக்கிறது; மேலும் [1896-ஆம் வருஷம் 12-ஆம் ஜனஸபைக் கூட்டத்தில் செய்யப்பட்ட 12-ஆம் தீர்மானத்தில் முதல் ப்ரகரணத்தில் கூறிய] சிபாரிசுகளை நிறைவேற்றும் படி இந்த ஜனஸபை ப்ரார்த்திக்கிறது.

10. பத்தாந் தீர்மானம்:—

ப்ரிட்டிஷ் ஜனங்களுக்கும் ப்ரிட்டிஷ் குடியேற்றத்தாருக்கும் அமெரிக்காவுக்கும் நன்றி யுரை; பஞ்ச நிவர்த்திக்கு பணம் அனுப்பிய உதவிக்காக.

சிறிது காலத்துக்கு முன்னே இங்கு நடந்த பயங்கரமான பஞ்சத்தில் பத்துலக்ஷக் கணக்கான ஜனங்கள் பஞ்சத்தினால் கஷ்டப் பட்டதை நிவர்த்தி செய்வதற்கு தயவுடன் பண உதவி புரிந்த ப்ரிட்டிஷ் ஜனங்களுக்கும், ப்ரிட்டிஷ் குடி

யேற்றத்தாருக்கும் அமெரிக்காவுக்கும் இந்த ஜனஸபை நன்றி தெரிவிப்ப தடன், நமது நாட்டிலுள்ள ஆங்கிலேயரிலும் இந்தியரிலும், ஆணும் பெண்ணும், பலர் செய்த நிரவிய ஸஹாய முதலிய ஸேவைகளை மிகவும் நன்கு மதித்துப் பாராட்டுகிறது.

மேலும் ஜனஸபைக் கமிட்டிகள் தம் முள்ளே 1000 பவுன் சேகரித்து லண்டன் நகர ஸபைத் தலைவருக்கு அனுப்பி, லண்டனில் முக்யமான ஸ்தல மொன்றில் ஒரு ஞாபகச் சின்னம் நிறுத்திக் கடந்த பஞ்சத்தின் போது பாரத நாட்டாருக்குச் செய்த உதவிக்கு நன்றி யுணர்ச்சி காட்டுவதை உலகறிய நாட்டும்படி கேட்டுக் கொள்ள வேண்டு மென்று இந்த ஜனஸபை நியமிக்கிறது.

11. பதினொன்றாந் தீர்மானம்:—

மாகாண நிர்வாக ஸபைகளின் அமைப்பு.

சென்னை, பம்பாய் கவர்னர் ஸ்தானங்களுக்கு இங்கிலாந்திலிருந்து ராஜ தந்திரிகளை நியமிக்கும் முறை மிகவும் அறிவுடைய தாகையாலும், அவசியமான போது தீர்மான வாக்குச் சொல்லும் உரிமை இந்த கவர்னர்களுக்குச் சட்டப்படி அனுமதி செய்யப் பட்டிருப்பதனை அவர்கள் உபயோகப் படுத்தும் வண்ண மாகவும், அம் மாகாணங்களில் இப்போது கவர்னரும் இரண்டு மெம்பரும் சேர்ந்து நிர்வாஹம் பண்ணும் முறையை மாற்றி, கவர்னரும் மூன்று மெம்பரும் சேர்ந்து பண்ணும்படி செய்ய வேண்டு மென்றும், அம் மூவரில் ஒருவர் பார்தக் குடி யாட்சி மண்டலத்தைச் சேராதவராக இருக்க வேண்டு மென்றும், இந்த ஜனஸபை ப்ரார்த்திக்கிறது.

12. பன்னிரண்டாந் தீர்மானம்:—

தேச நிர்வாகக் கட்டளை.

1818-ஆம் வருஷத்து வங்காளத்து 3-ஆம் கட்டளை, 1819 சென்னை 2-ஆம் கட்டளை, 1827 பம்பாய் 25-ஆம் கட்டளை, இவற்றால் கவர்ன்மென்டாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அஸாதாரணமான அதிகாரங்களை அவர்கள் நாட்டிலே ஸமாதானமும் அமைதியும் நடை பெறும் காலத்தில் வழங்குதல் நியாய மில்லை யென்று மரியாதை யுடன் கண்டனம் செய்வது மன்றி, அந்த அதிகாரங்களை உபயோகிக்க வேண்டி மானஸ் ராஜாங்கத்தார் மிகவும் பர்யாலோசனை

செய்த அதிஜாக்ரதை யுடனும், பெரிய பொறுப் புணர்ச்சி யுடனும் வேலை செய்வதற் குரிய வரம்புகள் கட்ட வேண்டு மென்று இந்த ஜனஸபை ப்ரார்த்திக்கிறது.

(க) எங்ஙனமெனில்:—ஷெ கட்டளைகளின் முக வுரையில் கூறப்பட்ட நிலைமை ஷெ மாகாணத்திலேனும் அத னிடையே குறிப்பிட்ட யாதாயினுமொரு பகுதியிலேனும் இருப்பதாகவும், ஆதலால் அவசியமானபோது (ஷெ சட்டங் களின்படி) தமக்குள்ள அதிகாரங்களைச் செலுத்த நிச்சயித்து விட்டதாகவும் மாகாண கவர்ன்மெண்டார் முதலாவது விளம் பரம் போடவேண்டும். அந்த அதிகாரங்களின்படி நிறைப் படுத்தப்பட்ட எவனையும் நியாயஸ்தலத்தில் விசாரணைக்குக் கொண்டு வராமல் மூன்று மாஸத்துக்கு மேலே அடைத்து வைக்கக் கூடாது.

(உ) 1827-ஆம் வருஷத்து பம்பாய் 25-ஆம் கட் டளையின் கீழே நாத்து ஸ்தார்களை அடைத்த ராஜாங்கத் தால் பொறுப்பெண்ண மில்லாமல் செய்திருக்க மாட்டார் களென்று கருதினும், இவர்களைப் பிடித்துவைத்து இப்போது ஐந்து மாஸமாய் விட்டபடியால் ஜனங்களின் மனதில் அதி னின்றும் வினைந்திருக்கும் அசாந்தியையும் திகிலையும் மாற்றும் பொருட்டாகவும் நீதியை உத்தேசித்தும், அவ்விரண்டு ஸர் தார்களையும் உடனே நீதி விசாரணைக்குட்படுத்த வேண்டு மென்றும் அவர்கள் மீது குற்றத்தை ருஜுப் படுத்தத் தகு ந்த ஸாக்ஷ்யமில்லாவிடின் விடுதலை செய்துவிடவேண்டுமென் றும் இந்த ஜனஸபை விரும்புகிறது.

13. பதின்மூன்றாந் தீர்மானம் :—

ராஜாங்கத் துரோகச் சட்டம்.

124. ஏ. பிரிவுப் படியுள்ள ராஜத்துரோகச் சட்டத் தில் சில மாறுதல்கள் செய்யக் கருதியிருப்பது கண்டு இந்த ஜன ஸபையிருந்த கவலையும் அச்சமும் எய்துகிறது; விடுதலைக் குச் சார்பான வழிகளில் அதை மாற்றுவதே செய்யத்தக்க காரியமென்றும், அதை இன்னும் நிர்ப்பந்தமாக்குவது நியாய மில்லை யென்றும் கருதுகிறது;

இந்தியாவில் உள்ள ராஜத் துரோகச் சட்டத்தை இங்கி லாந்தின் சட்டத்தைப்போல் செய்துவிட வேண்டுமாயின், அதைக் கையாளும் முறைமை அங்கிருப்பது போலவே, இங் கும் அணை கட்டிக் காக்கப்படவேண்டும். எங்ஙனமெனில்

குற்றஞ் சாற்றப்பட்டவர்களை எப்போதும் ஜூரிகளாலேயே விசாரணை செய்ய வேண்டும். அந்த ஜூரியில் பாதித் தொகைக்குக் குறையாமல் குற்றஞ் சாற்றப்பட்டாரின் ஸ்வ தேசிகளாக இருக்கவேண்டும். எல்லாரும் ஏகோபித்துச் செய்தாலொழிய ஜூரியின் தீர்ப்புச்செல்லாத தாக்கவேண் டும். மேலும் ராஜத்துரோஹ வழக்குகளை இதுவரை ஜில்லா கோர்ட்டாரும் ஹைகோர்ட்டாரும் மாத்திரமே விசாரணை செய்யலாமென்பதை மாற்றி மாஜிஸ்ட்ரேட்களும் விசாரிக் கலாமென்று விதிக்கக் கருதுவதையும், ராஜத்துரோகத்தை ஒருவன் பரப்புவதாகத் தோன்றினால் அவனை ஜில்லா மாஜிஸ் ட்ரேட் பன்னிரண்டு மாஸத்துக்குக் நன்னடக்கை ஜாமீன் கேட்கலாமென்று விதிக்கக் கருதுவதையும் இந்த ஜன ஸபை பலமாகக் கண்டனம் செய்கிறது. மேலும் வைஸ்ராய் ஸபை யில் பாரத தேசத்துக் குற்றச் சட்டத்தின் 124. (ஏ) பிரிவை சட்டமாக்கிய காலத்தில் ஸர் ஜேம்ஸ் பீஜ் ஜேம்ஸ் ஸ்தீ பென் கொடுத்த வாக்குறுதிகளினின்றும் இப்போது சட் டத்தில் செய்யக் கருதியிருக்கும் மாறுதல்கள் வேற்றுமைப் படுகின்றனவென்றும், இதனால் சொல் விடுதலைக்கும் அச்சு விடுதலைக்கும் தீர்க்க முடியாத தீங்கு விளையு மென்றும், அதி னின்றும், தேசத்தின் அபிவிருத்தி தடைப்படுமென்றும், ஜனங்களின் மனதில் நம்பிக்கை ஏற்படுத்த வேண்டிய இடத் தில் கலக்க மேற்படுத்து மென்றும் இந்த ஜன ஸபை அபிப் பிராயப்படுகிறது.

இந்தத் தீர்மானத்தில் ஒரு ப்ரதியை நமது ஸ்பாகாயகர் சட்ட ஸபைக்கு அனுப்பவேண்டுமென்று இந்த ஜன ஸபை விதிக்கிறது.

14. பதினான்காந் தீர்மானம்:—

குற்ற விசாரணை மசோதா.

இப்போது வைஸ்ராய் சட்டஸபையில் ஆலோசனை யிலிருக்கும் 1897-ஆம் வருஷத்துக் குற்ற விசாரணை நீதி யிசாதா பிற்போக்குடையதாகவும், அபிவிருத்திக்கு எதி ரிடையாகவும் இருப்பதாலும், அதினின்றும் போலீஸாருக்கு இப்போதுள்ள மித மிஞ்சிய அதிகாரங்கள் இன்னும் மிகுதிப் படு மாதலாலும் மாஜிஸ்ட்ரேட்களுக்கு இப்போதில்லாத புதிய ஸ்வேச்சாதிகாரம் ஏற்படு மாதலாலும், ஹைகோர்ட் டாரின் அதிகாரம் குறைவுபடு மாதலாலும், இவை யனைத் திலும் குற்றஞ் சாற்றப் பட்டவர்களுக்கு பெரிய கஷ்டங்கள்

வினையு மாதலாலும் அம் மகோவாவை இந்த ஜன ஸபை கண் டனம் செய்கிறது.

15. பதினேந்தாந் தீர்மானம்:—

பஞ்சாப் சட்ட ஸபைச் சீர் திருத்தம்.

பஞ்சாபுக் கொரு சட்ட ஸபை அமைத்தது பற்றி ராஜாங்கத்தாருக்கு நன்றி செலுத்துவ துடன்;

மற்ற மாகாணங்களில் ஸபிகருக்கும் ஜனங்களுக்கும் இருப்பது போலே, ஸபிகர்களுக்குக் கேள்வி கேட்கும் உரிமை யும், ஜனங்களுக்கு ஸபிகரைத் தெரிந்தெடுக்கும் உரிமையும் அம் மாகாணத்திற்கு இன்னும் அளிக்கப் படாதிருப்பது பற்றி இந்த ஜன ஸபை வருத்தம் தெரிவிக்கிறது.

16. பதினாறாந் தீர்மானம்:—

பேரார் மாகாண ஆட்சி.

பேரார் மாகாணம் ப்ரிட்டிஷ் இந்தியாவின் பகுதி யில்லா விடினும், இப்போது ப்ரிட்டிஷ் இந்தியாவின் மற்றப் பகுதி களைப் போலவே அதுவும் ஸபையுடன் கூடிய வைஸ்ராயினு லேயே பரிபாலிக்கப்பட்டு வரவும், அந்த மாகாணத்துக்குச் சட்டம் செய்யும் முக்யமான தொழில் சட்ட ஸபையினால் செய்யப் படாமல் நிர்வாக அதிகாரிகளால் செய்யப் படுவது தினின்றும், அம் மாகாணத்தை வைஸ்ராயும் அவருடைய ஸபை யாரும் பரிபாலிக்கும் வரை அம் மாகாணத்துக் குரிய எல் லாச் சட்டங்களும் சட்ட வலிமையுடைய உத்தரவுகளும் ப்ரிட்டிஷ் இந்தியாவைப் போலவே வைஸ்ராய் சட்ட ஸபை யால செய்யப் பட வேண்டு மென்று இந்த ஜன ஸபை வணக் கத்துடன் பிரார்த்திக்கிறது.

17. பதினேழாந் தீர்மானம்:—

பஞ்ச விசாரணைக் கூட்டம்.

இந்தியா ராஜாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட பஞ்ச விசா ரணைக் கூட்டத்தின் விசார ணைம்சங்களினிடையே, மீட்டு மீட்டும் பஞ்சங்கள் நிகழ்வ தன் காரணங்களையும் அவற்றைத் தடுப்பதற்குரிய முன் எச்சரிக்கைகளையும் கூட்டி விசாரணை செய்யும்படி இந்த ஜன ஸபை வேண்டுகிறது.

18. பதினெட்டாந் தீர்மானம்:—

தாதாபாய் நவுரோஜிக்கு நன்றி யுரை.

பாரத ஜனங்களுக்கு ஸ்ரீ தாதாபாய் நவுரோஜி தக்க ப்ரதிநிதி யென்பதில் தனக்குள்ள வற்றாத முழு நம்பிக்கை

யைத் தெரிவித்துக் கொள்வது மன்றி, அவரைப் பழைய ஸெண்ட்ரல் பின்ஸ் பரியேனும் லிபரல் (உதாரக்) கக்ஷியைச் சேர்ந்த வேறு சீட்டுக் கிராம மேனும் மீளவும் பார்லிமென்ட் மெம்பராக நியமிக்க வேண்டு மென்று இந்த ஜனஸபை ப்ரார்த்தனை செய்து கொள்ளுகிறது.

19. பத்தொன்பதாந் தீர்மானம் :—

ப்ரிட்டிஷ் கமிட்டிக்கும் லார் வில்லியம் வெடர் பர்னுக்கும் நன்றி; செலவுத் தொகை.

(க) [1895-11-ஆம் கூட்டம் 24-ஆம் தீர்மானத்தைக் காண்க.]

(உ) ப்ரிட்டிஷ் கமிட்டிச் செலவுகளுக்கும் ஜனஸபையின் கருவியாகிய "இந்தியா" பத்திரிகையின் செலவுக்கும் உதவிப் பொதுக் கார்யஸ்தரின் கார்யாலயச் செலவுக்கும் ரூ. 60,000 பகுத்து வைத்து, அதன் பொருட்டு 1898 வருஷத்திற்கு இப்போ தேனும் இனிக் கமிட்டியிலேனும் முடிவு செய்கிற படி எல்லா வட்டத்தாரும் தத்தமக் குரிய சந்தாக் கனைச் செலுத்த வேண்டு மென்று இந்த ஜனஸபை நியமிக்கிறது.

20. இருபதாந் தீர்மானம் :—

காரியதர்சிகளின் நியமனம்.

வரும் வருஷத்துக்குப் பொதுக் கார்யதரிசியாக எ. ஓ. ஹ்யூமையும் உதவிப் பொதுக் கார்யதரிசியாக நீ. எ. வாச்சாவையும் இந்த ஜனஸபை மறுபடி நியமனம் செய்கிறது.

21. இருபத்தொன்றாந் தீர்மானம் :—

1898 கிறிஸ்மஸ் காலுக் கப்பால் பிற்பாடு குறிக்கப் படும் தேதியில் சென்ன பட்டணத்தில் பாரத ஜனஸபையின் பதினான்காங் கூட்டம் நடை பெறுக வென்று இந்த ஜனஸபை தீர்மானம் செய்கிறது.

பதிமூன்றும் ஜன ஸபையின் தீர்மானங்கள் முற்றிற்று.

பதிமூன்றும் அத்தியாயம் முற்றிற்று.

ஜன சபைச் சரித்திரம்.

14-ஆம் அத்யாயம்.

14-ஆம் ஜனசபைக் கூட்டத்தின் விவரங்கள்.

1898-ஆம் வருஷம் டிஸம்பர் 29, 30, 31-ஆம் தேதிகளில் பாரத ஜன ஸபையின் 14-ஆம் கூட்டம் சென்ன பட்டணத்தில் நடைபெற்றது. 614 பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

ஸ்ரீமான் ஆனந்த மோஹன வஸு அக்ராஸனாதிபதியாக வீற்றிருந்து பின்வரும் உபந்யாஸம் புரிந்தார்:—

லபா நாயகர் செய்த ப்ரஸங்கத்தின் ஸாரம்.

ஸ்ரீ ஆனந்த மோஹன வஸு சொல்லுகிறார்—

"இங்கிலாந்தின் விடுதலைக்காக உழைத்த கிளிஸ்தவ வீரன்—இங்கிலாந்துக்காக மட்டு மன்று; பல்கேரியா, க்ரீஸ் (கிரேக்கம்) அர்மீனியா, இத்தாலி என்ற நாடுகளனைத்திலும் கன்மை விளையும் பொருட்டுப் பாடுபட்ட—இங்கிலாந்தின் கீர்த்தி பெற்ற மந்திரி வில்லியம் ஈவார்ட் க்ளாட்ஸ்டோன் இறந்து போய்விட்டது பற்றி மிகவும் வருத்தப்படுகிறோம். இன்றைய தினம் லார்ட் கர்ஸன் பம்பாயில் வைஸ்ராயாக வந்திறங்கினர். அவருக்கு நல்வரவு சொல்லுகிறோம்."

"சிறிது காலமாக நம்முடைய ஸ்வதந்த்ரங்களைக் குறைக்கவேண்டுமென்ற பரிதாபகரமான சிந்தனையொன்று அதிகாரிகளின் உளத்தில் புகுந்திருப்பது கண்டு வருத்தமடைகிறேன். இது வரை இப்படியில்லை. நமது ராஜீக அபிவிருத்தி வேகமாக ஏறிக்கொண்டு போகாவிடினும் தொடர்ச்சி நழுவாமலிருந்தது. இருபது வருஷங்களுக்கு முன்னே ஒரு பிற்போக்கான காரியம் செய்யப்பட்டது. அதாவது லார்ட் லிட்டன் காலத்தில் ஏற்பட்ட ஸ்வதேச பாஷைப் பத்திரிகைகளின் சட்டம். ஆனல் அதை விரைவில் ரத்து செய்து விட்டனர். இப்போது மறுபடியும் இரண்டு வருஷங்களாகப் பிற்போக்கு ஏற்பட்டு வருகிறது. சென்ற காலத்தில் மேதாவிகளும் உபகாரிகளும் ஏற்படுத்தின ராஜ்ய தந்த்ரத்தை இப்போது மாற்றுகிறார்கள்."

"கல்வி யிலாகாவில் ஆரம்பத்தில் ஆங்கிலேயர்களைப் போலவே ஸமான நியதிகளில் நம்மவரையும் நியமிப்பது வழக்கமாக இருந்தது. அப்பால் ஏறக்குறைய இருபது வருஷங்களுக்கு முன்பு நம்மவர்களுடைய சம்பளம் குறைக்கப்பட்டது. எனினும் உன்னத ஸ்தானங்களில் நம்மவர் நியமனம் பெறலாமென்ற விதியிருந்தது. பிறகு "வயிர உத்ஸவம்" (அதாவது மஹாராணியின் ஆட்சியில் அறுபதாம் ஆண்டு நிறைவுக்கொண்டாட்டம்) நடைபெற்ற 1896-ஆம் வருஷத்தில் முதல் முதல் ஷெ உன்னத ஸ்தானங்கள் சிலவற்றில் நம்மவர் சேரத்தகுதியில்லை யென்று கூறி நம்மவரின் பதவியை இறக்கியது மன்றிச் சம்பளத்தைப் பின்னும் குறைத்து விட்டனர். அதே வருஷத்தில் ரூர்க்கி நகரத்திலுள்ள தச்சுத் தொழிற் கலாசாலையில் நம்மவர் சேரக்கூடாதென்று விதி போட்டனர்."

"நாத்து ஸர்தார்களை அடைத்து விட்டனர். அவ்விருவரும் 18 மாஸங்களாக விசாரணை யின்றிச் சிறைப் பட்டுக் கிடக்கிறார்கள். இதே மாதிரியான செய்கைகள் ருஷியாவில் நடக்கும் போது ஆங்கிலேயர் இகழ்ச்சியுடன் நகைக்கிறார்கள். இவ்விதமான செய்கைகள் ராஜாங்கத்தாரால் செய்யப் படுவதினின்றும் அவனவன் உட்பட்பு அவனவனுக்கு சொந்த மென்ற மூதற் சட்டத்துக்கு ஹானி நேரிட்டு ஜனங்களுக்குள் மிருந்த திகில் உண்டாகிறது. மேலும் புது ராஜத்துரோகச் சட்ட மொன்று கொண்டு வந்திருக்கிறார்கள். குற்ற விசாரணை நீதிச் சட்டத்தில் சில மாறு பாடுகள்செய்திருக்கிறார்கள். இவற்றால் நாட்டிலுள்ள வாக்கிகளும் பத்ராதிபரும் திருடர் போக்கிரிகளைப் போலே நன்னடத்தை ஜாமீன் கொடுக்க வேண்டு மென்றும், போலீஸ் தலைவராகிய ஜில்லா மாஜிஸ்ட்ரேட் ராஜத்துரோக வழக்குகளை விசாரணை செய்யலாமென்றும் ஏற்பட்டது."

"இன்னும் பின்னடையான சட்டங்கள் எத்தனையோ நிறைவேற்றி யிருக்கிறார்கள். இவற்றுள் கல்கத்தா முனிஸிபல் சட்ட மொன்றும். கல்கத்தா நகர ஸபையார் தமது கடமைகளை மிகத் திறமையுடன் நடத்தி வந்தனர். ராஜதானி நகரத்து ஸபைக்கு இன்று அபிபாயமாகச் செய்யப் படும் அவமானம் நாளை தேச முழுமைக்கும் செய்யப்படும். இதனால் ஸ்தல ஸ்வய ராஜ்யத்துக்கே பெரு விபத் தண்டாய் விடும்."

"எல்லைப் புறத்தில் ஓயாமல் படை யெடுத்துச் சென்று அபரி மிதமான செல்வத்தை வாரி யிறைப்பதால் உள் நாட்டுச் சீர் திருத்தங்களுக்கு பணமில்லாமல் போகிறது. நான் இங்கிலாந்தி லிருக்கும்போது எனக்கு ராஜரீகக் கிளர்ச்சிகளில் ஸம்பந்தப் படாத ஒரு கனவானிட மிருந்து ஒரு கடிதம் கிடைத்தது. அதில் —"நீர் ப்ரிட்டிஷ் ராஜ்யத்துக்கு மித்திரரா? அங்ஙன மாயின் அந்த ராஜாங்கத்தார் இந்தியாவில் நடத்தும் தற்கொலைக் கொப்பாகிய ராஜதந்திர முறையை மாற்ற முயற்சி செய்யும். நீர் அந்த ராஜ்யத்துக்கு சத்துருவா? அங்ஙன மாயின் இப்போது நடப்பது போலவே நடந்து அந்த ராஜ்யம் தானாகவே அழிக வென்றெண்ணி வாயை மூடிக் கொண்டிருந்து விடும்" என்று அவர் சொல்லுகிறார். ப்ரிட்டிஷ் ராஜ்யத்திற்கு நன்மையைக் கருதியே நானும் என் போன்றவர்களும் இங்ஙனம் கண்டித்துப் பேசுகிறோம்.....ஸ்ரீ ராமேச சுந்திரர் ஸமீப காலத்தில் பின்வருமாறு கூறி யிருக்கிறார்:—"சென்ற இரண்டு வருஷங்களில் ஜனங்களுக்கு ப்ரிட்டிஷ் ராஜ்யத்து நீதியிலும் யோக்யதையிலும் நம்பிக்கை கெட்டுப் போனது போல் இதுவரை எப்போதும் கெட்டுப்போ யிருந்தது கிடையாது," என ப்ரிட்டிஷ் ராஜாங்கத்தாருக்கு நான் கூறும் புத்தி பின்வருமாறு:—"உங்களுக்கு இந் நாட்டில் பத்திரமும், கவுரவமும், நிலையான கீர்த்தியும் வேண்டு மாயின் ஜனங்களை பய மின்றி நம்புங்கள். விடுதலையின் வாம்புகளை அகற்றிக் கொண்டு செல்லுங்கள். ஜனங்களுக்குப் புது விலங்குகள் பூட்ட வழிதேட வேண்டாம். ஏற்கெனவே உள்ள விலங்குகளை உடைக்க வழி தேடுங்கள்" என்பதேயாம்."

"பார்லிமெண்ட் ஸபையில் இந்தியா நேராகப் பிரதிநிதிகள் தெரிந் தெடுக்கும் உரிமை கொடுக்கப்பட வேண்டும். நமது ஜனஸபை வருஷத்தில் ஒருமுறை கூடித் தீர்மானங்கள் செய்வது மட்டுமே யன்றி வருஷ முழுமையும் தொடர்ந்து தொழில் செய்வதற் குரிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும்"

என்று ஸ்ரீமான் ஆனந்த மோஹன வஸு கூறினர்.

பதினான்காம் ஜனஸபைக் கூட்டத்தில் நடைபெற்ற இதர முக்கிய விஷயங்கள்.

ஜனப் பிரதிநிதிகள் எவ்வளவோ தடுத்துக் கூறியும் கேளாமல் வைஸ்ராய் சட்ட ஸபையில் நிறைவேற்றப் பட்ட

ராஜத்துரோகச் சட்டத்தைக் கண்டனை புரிந்து செய்யப் பட்ட காங்கரஸ் தீர்மானம் ஸ்ரீ ஜம்புலிங்க முதலியாரால் ப்ரேரேபணை செய்யப் பட்டது. அந்தச் சட்டத்தை நிறைவேற்றக் கூடாதென்று தேச முழுதிலும் பெரிய கிளர்ச்சி நடந்தது. இத் தீர்மானத்தைப் பிரேரணை செய்து பேசுகையில் ஜம்புலிங்க முதலியார் ராஜத்துரோகச் சட்டங்களின் பூர்வ சரித்திரத்தை விரித்துக் கூறினர். அந்தச் சட்டத்தில் "விரோதமும் இகழ்ச்சியும்" என்ற பதங்களையும் ராஜாங்கத்தார் சேர்த்திருப்பதினின்றும் ராஜாங்கத்தாருடைய எந்தச் செய்கையையும் நாம் கண்டிக்க வழியில்லாமல் போகிறது. எதைத் திருத்த வேண்டுமென்று நாம் சொன்ன போதிலும், அந்த விஷயத்தில் இப்போதுள்ள நிலைமை இகழ்ச்சி அல்லது பகைமைக் கிடமென்று நாம் கருதுவதாகத் தாங்கள் ஊகிப்பதாக அவர்கள் சொல்லி நம்மை தண்டனை செய்து விடலாமன்றோ? மேலும் இந்திய ஸ்வதேசிக் குடிகள் (யூரேஷியரையும், ஆங்கிலோ இந்தியரையும் தவிர) வெளி நாடுகளில் பேசின வார்த்தைகளுக்கு இந்த நாட்டிற்குத் திரும்பி வந்தபின் தண்டனை புண்டென்று திட்டஞ் செய் திருக்கிறார்கள். இதனாலும், சன்னடத்தை ஜாமீன் கேட்பதைப் பற்றிய நியமங்களாலும் தேச முழுமையிலும் ராஜாங்கத்தாரிடம் மிகவும் கோபமும், கூச்சலும் ஏற்பட்டிருக்கின்றன. மேலும் "புதிய வைஸ்ராய் முன்னிருந்தவர் செய்த இந்த அநியாயச் சட்டத்தை ரத்து செய்து விட வேண்டு" மென்று ஜம்புலிங்க முதலியார் ப்ரார்த்தனை செய்தார்.

ஆறாந் தீர்மானம் சாசுவத நிலவரித் திட்டம் ஏற்படுத்த வேண்டுமென்ற கருத்தடையது. இதனை ஸ்ரீ. வெங்கட ரத்னம் ப்ரேரேபணை செய்தார். கவர்ன்மென்டார் சில விஷயமாகச் செய்த வாக்குறுதிப் பத்திரங்கள் கழிவுக் காயிதங்களுக்கு நிகராய் விட்டன வென்றும், ராயத்வாரிப் பட்டா நியமங்களிலிருந்த நல்ல அம்சங்களை யெல்லாம் மாற்றி விட்டார்களென்றும் வெங்கட ரத்னம் கூறினர். பிறகு R. M. போடாஸ் என்பவர் இத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகையில் பின்வருமாறு கூறினர்:—"பம்பாய் மாகாணத்தில் சாசுவதத் திட்டமில்லாத படியால் வரியும் அநியாயங்கள் பல. கோட் (ஜமீந்தார்) கள் கிராமங்களைக் கைவிட்டு விடுகின்றனர். ஏனெனில் அவர்களுக்குக் குடியானவர்களிடமிருந்து கிடைக்கும் வரிப் பணத்தைக் காட்டிலும் கவர்ன்மென்டார் அவர்க

னிடம் அதிக வரி கேட்கிறார்கள். அவர்கள் எங்கிருந்து கொடுப்பார்கள்? எனவே அவர்கள் விட்டு விடும் கிராமங்களை கவர்ன்மென்டார் இதுதான் ஸமய மென்று ஜப்தி பண்ணி விடுகிறார்கள்" என்றார்.

ரஹல்யப் பத்திரிகைச் சோதனைக் கமிட்டிகள் நியமனம் செய்திருப்பதைக் கண்டித்துப் பேசிய 8-ஆம் தீர்மானம் W. A. சேம்பர்ஸ் என்ற ஆங்கிலேயரால் ப்ரேரேபணை செய்யப் பட்டது. "என்னுடைய தேசத்தாரால் ஆளப்படும் தேச மொன்றில் இவ்விதமான அனுஷ்டானம் நடை பெறுதல் எனக்குத் திகைப் புண்டாக்குகிறது" என்று சேம்பர்ஸ் சொன்னார். பிறகு அத் தீர்மானத்தை ஸ்ரீ. N. C. கெல்கார் ஆதரித்துப் பேசிய போது:—"பகைத்தற் கிடமான இந்த ரஹல்யச் சோதனை அனுஷ்டானத்தை நாம் மிகவும் கொதிப் புடன் கண்டனை செய்ய வேண்டும். இது பத்திரிகை ஸென்ஸார் என்பதாகக் கொடுங்கோல் நாடுகளி லுள்ள அனுஷ்டானத்தைச் சற்றே பெயர் மாற்றி வைத்திருப்பது தவிர வேறொன்று மில்லை. எனவே இந்த அனுஷ்டானம் இந்தியாவில் ப்ரிட்டிஷ் ராஜ்யத்துக்கு ஆழ்ந்த அவமானமாகும்" என்றார்.

பன்னிரண்டாம் தீர்மானம் தென் ஆபிரிகாவில் நம்மவர்ப் படும் கஷ்டங்களைக் குறித்தது. அதனை ஸ்ரீ. பரமேசரன் பிள்ளை ப்ரேரேபணை செய்தார். "காலம் ஏற ஏறத் தென் ஆபிரிகாவில் நம்மவர் படும் கஷ்டங்கள் மிகுதிப்பட்டு வரலாயின. 1891-ஆம் வருஷத்தில் இந்தியர்களுக்கு ஸட்டாலில் இருந்த வாக்குச் சீட்டு ஸ்வதந்தரத்தைப் பிடுங்கி இந்தியாவிலுள்ள நம்மவரின் ஸ்திதிக்குக்கொணர்ந்து விட்டார்கள். ஆஸ்வரி ட்ரான்ஸ்வால் குடியரசு கவர்ன்மெண்டார் நகரங்களுக்கு வெளியே சேரிகளில் வாழும்படி செய்தனர். குப்பை, அசுத்தங்கள்கொண்டு கொட்டும் இடத்தில் அவற்றினிடையே நம்மவர் வாஸம் செய்யும்படி சேர்த்திருக்கிறது. வேறு சில குடியேற்றங்களில் நாம் ஏற்றையடிப் பாதைகளில் நடக்கக்கூடாதென்றும், ரயில் வண்டி முதலிரண்டு வகுப்புக்களில் ஏறக் கூடாதென்றும், காட்டுப் பொன் வைத்திருக்கக் கூடாதென்றும், இரவில் 9-மணிக்கப்பால் வெளியேறக் கூடாதென்றும் அனுமதிச் சீட்டில்லாமல் யாத்திரை செய்யக்கூடாதென்றும் விதி செய்திருக்கிறார்கள்.

லார்ட் எல்கின் (வைஸ்ராய்) நேட்டால்சட்டத்துக்கு ஸம்மதப்பட்டு விட்டார். பதினைரு வருஷங்களுக்கு முன்பு இந்தியா கவர்ன்மெண்டார் இந்தப் "பெரிய அநியாயத்துக்கு" ஒரு போதும் ஸம்மதப்பட மாட்டோமென்று தெரிவித்தனர். லார்ட் எல்கின் அதை மீறி வேலை செய்து விட்டார். குடியேற்ற மந்திரியாகிய ஜோஸப் சேம்பர்லேன் இவ்விஷயத்தில் நமக்குதவி செய்து காப்பதாக வாக்குறுதி செய்தார். அதை நிறைவேற்றவில்லை. லார்ட் ஜயார்ஜ் ஹாமில்டன் 'நம்மவரைக் காட்டு ஜனங்களின் கூட்டமென்று சொன்னார். இவர் இந்தியா மந்திரி! எனவே இவரிடம் நாம் உதவி எதிர் பார்க்கவும் வழியில்லை" என்று பரமேசுவரன் பிள்ளை கூறினர்.

பத்தாந் தீர்மானம் நாணய விஷயத்தைப் பற்றினது. இதை ஸ்ரீ வாச்சா ப்ரேரேபணை செய்தார். சண்டையாலும் கொள்ளை நோயாலும் பஞ்சத்தாலும் நாட்டில் அபரிமிதமான பணவற்றுதல் உண்டாயிருக்க, நாணயச் செலாவணி வேற்றுமைகளால் உண்டானதாக நீணத்தல் தவறென்று வாச்சா கூறினர். அந்தத் தவறுதலான எண்ணத்தால் 1893-ஆம் வருஷத்தில் "திருத்திய நாணயச் சட்டம்" ஏற்படுத்தியதும் பரிவர்த்தனக் கிரயத்தை ஸ்திரமாக்க முயற்சிகள் செய்ததும் விழலென்பதை வாச்சா எடுத்துக் காட்டினர். ஸ்ரீ. சுப்பிரமணிய அய்யர் ஷை தீர்மானத்தை ஆதரித்துப் பேசியபோது, தீர்வைகள் வெள்ளியில் விதிக்கப் படுவதனால், ரூபாய்க்கு ஏற்பட்ட பொய்க்கிரயத்தை உத்தேசித்துக் குடியானவன் தனது வினைவில் முன்னிலும் 100-க்கு 60 மடங்கு அதிகமாக விற்றுத் தீர்வை கொடுக்கும்படி நேரிட்டிருக்கிறது. ஆங்கிலேயர் சைம் முதற் பணம் இந்த தேசத்துக்கு மேன்மேலும் வருவதைச் சிலர் அனுகூலமாகக் கருதுகிறார்கள். அஃது அங்ஙனம் கருதத் தக்கதன்று. அதனால் இந் நாட்டி லிருந்து அதிகப் பணம் வற்றடிக்கப் படுகிறது. நமது தேசத்து முதல் போட்டு வியாபாரம் செய்வதில் ஏற்படும் லாபமே உண்மையான லாபமாகும்" என்றார். இந்த ஜன ஸபைக் கூட்டத்தின் மூன்றாந் தினத்தன்று லார்ட் கர்ஸானிட மிருந்து காங்கரஸ் ஸபையாருடைய நல் வரவுக்கும் வாழ்த்துதலுக்கும் பிரதியாக நன்றியுரைத் தந்திவந்ததும் அதில் அவர்:—"இந்தியாவுக்கு நான் ஏதேனும் நன்மை செய்து விட்டுத்தான் போவேன். இங்கிலாந்துக்கு அடுத்தபடி இந்த தேசத்தினிடம் எனக்கு அன்புண்டு"

என்றனர். மிஸஸ் அனிபெஸண்ட் இத்தத் தந்தியைக் குறித்துத் தமதுபுத்தகத்தில் பேசுமிடத்தே :—" இங்ஙனம் தந்தி கிடைத்த காலத்தில்; பின்னிட்டு 1905-ஆம் வருஷத்தில், 'அவுரங்கஜீபுக்குப் பின்பு லார்ட் கர்ஸானுடைய ஆட்சியே இந்தியாவுக்குப்பெரிய கஷ்ட'மென்று காங்க்ரஸ் ஸபாநாயகர் ஸ்தானத்தில் ஸ்ரீ கோகலே சொல்லும்படி நேருமென யாரால் எதிர் பார்த்திருக்க முடியும்?" என்று கூறினர்.

தீர்மானங்கள்.

1. முதல் தீர்மானம் :—

வில்லியம் க்ளாட்ஸ்டனின் மரணம்.

நவீன ராஜதந்திரிகளில் முதற் பட்டவரும் மனுஷ்ய ஜாதியின் உண்மை யுள்ள நண்பரும் ஆகிய வில்லியம் ஈவர்ட் க்ளாட்ஸ்டன் இறந்து விட்டதினின்று ப்ரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்துக்கும் ஸகல உலக முழுமைக்கும் ஏற்பட்ட, நிவர்த்தி செய்யமுடியாத நஷ்டத்தைக் கருதி இந்த ஜனஸபை மிகவும் வருத்தம் தெரிவிப்பதன்றி, பாரத தேசத்தில் இப்பொழுதைக்காட்டிலும் அதிக உதாரமும் முன்னேற்றமுமுடைய அரசியல் ஸ்தாபிக்கும் விஷயத்தில் அவர் காண்பித்த அனுதாபத்தின் பொருட்டுத் தனக் குள்ள நன்றி யுணர்ச்சியை வெளிப் படுத்துகிறது. மேலும் அவருடைய குமாரர் ஹெர்பர்ட் க்ளாட்ஸ்டனுக்கு ஷிம்லா தீர்மானத்தில் ஒரு பிரதி அனுப்ப வேண்டு மென்று நிச்சயிக்கிறது.

2. இரண்டாந் தீர்மானம் :—

தர்பங்கா மஹாராஜாவின் மரணம்.

தர்பங்கா மஹாராஜா ஸ்ரீ லக்ஷ்மேசுவர ஸிங் பஹதூரின் துக்கத்துக்குக் கிடமான அகால மரணத்தினின்றும் இந் நாட்டிற்கு நேரிட்டுள்ள பெரு நஷ்டத்தைக் கருதி இந்த ஜனஸபை மிகவும் வருத்தமடைகிறது. பொது நலத்தில் அவருக்கிருந்த ஆவலையும் மேதையையும் இந்த ஜனசபை மிகவும் பாராட்டுகிறது. அவரால் நமது ஸபைக்குச் செய்யப்பட்ட உதார மிகுந்த வற்றுத உதவியை நினைத்து இந்த ஜனஸபை நன்றி யுணர்ச்சி தெரிவிக்கிறது.

காலஞ்சென்ற மஹாராஜாவின் ஸஹோதரர் ராஜா மஹாராஜா ராமேசுவர ஸிங்குக்கு இந்தத் தீர்மானத்தின் ஒரு

பிரதிநிதியை அனுப்ப வேண்டுமென்றும் இந்த ஸபை தீர்மானிக்கிறது.

3. மூன்றாந் தீர்மானம் :—

லாஹோரில் ஸர்தார் தயாள் ஸிங்கின் மரணம்.

லாஹோரில் ஸர்தார் தயாள் ஸிங் இறந்து விட்டதுபற்றித் தமாகப்பஞ்சாப் மாகாணத்துக்கும், நாடு முழுமைக்கும் நேர்ந்த பெரு நஷ்டத்தை யெண்ணி, இந்த ஜன ஸபை தன் ஆழ்ந்த துயரத்தை வெளிப் படுத்துவதுமன்றி, பாரத ஸ்வதேசிகளின் நிலைமையைச் செம்மைப் படுத்த வேண்டுமென்ற முற்போக்கான முயற்சிகள் அனைத்திற்கும் அவர் செய்த உதாரமான உதவியையும் அவருடைய பொதுநல உணர்ச்சியையும் இந்த ஸபை மிகவும் உயர்வாகப் பாராட்டுகிறது.

4. நான்காந் தீர்மானம் :—

ராஜத்துரோகச் சட்டம்.

சென்ற ஜன ஸபைக்கூட்டத்தில் நாம் தடுத்துப் பேசியதையும், இன்னும் பல ஆங்கிலேய இந்தியப் பெரிய மனிதர்களும் ஸபையார்களும் கண்டனம் செய்வதையும் பொருட்டாக்காமல் பாரதக் குற்றச் சட்டத்திலும், குற்ற விசாரணை நீதிச் சட்டத்திலும், போலிஸார் மாஜிஸ்திரேட்டார்களின் அதிகாரங்களை மட்டு மீறி அதிகப் படுத்தும் படியாகவும், பத்திரிகை விடுதலையையும் பேச்சு விடுதலையையும் குறைக்கும் படியாகவும் சில மாறுதல்கள் செய்ய எண்ணியிருந்ததை வைஸ்ராய் சட்ட ஸபையில் நிறைவேற்றி விட்டது கண்டு இந்த ஜன ஸபை வருத்தப்படுவதுமன்றி, அம் மாறுதல்களை ரத்து செய்யும்படி வற்புறுத்துகிறது.

5. ஐந்தாந் தீர்மானம் :—

லார்ட் கர்ஸானுக்கு நல் வரவு.

லார்ட் கர்ஸானுக்கு இந்த ஜன ஸபை வணக்கத்துடன் நல் வரவு கூறுகிறது. அவர் பாரத ஜனங்களிடம் அன்பு மிக்க வார்த்தைகள் சொல்லியிருப்பதை கண்டு நன்றி தெரிவிக்கிறது; இந் நாட்டில் பிரிட்டிஷ் ஆட்சியின் உத்தம லக்ஷ்யதாயங்களை அனுஸரித்து இவருடைய அதிகார காலத்தில் ஜனங்களிடம் நம்பிக்கையும் முன்னேற்றத்தில் நாட்டமும் மூண்டிய ராஜ தந்திரம் கைக்கொள்ளப் படுமென்று நம்புகிறது. இந்தத் தீர்மானத்தை பம்பாயில் லார்ட் கர்ஸானுக்குத்

தந்தி மூலமாக அனுப்பும்படி ஸபா காயகரை நியமிக்கிறது.

6. ஆறாந் தீர்மானம்:—

நிலத் தீர்வைத் திட்டம்.

[சாசுவத நிலத்தீர்வைத் திட்டம் வழங்காத ப்ரதேசங்களில் குறைந்த பக்ஷம் 60 வருஷங்களுக்குள்ளே தீர்வை உயர்த்தவ தில்லை யென்றேனு மொரு விதி செய்ய வேண்டுமென்பது:—சென்னை-1894-பத்தாம் ஜனஸபைக் கூட்டம் இரண்டாந் தீர்மானத்தில் இரண்டாம் ப்ரகரணத்தைக் காண்க.]

7. ஏழாந் தீர்மானம்:—

எல்லைச் சண்டைகள்.

சென்ற சில வருஷங்களாக இந்தியா கவர்ன்மெண்டார் எல்லை யகற்சி செய்ய முயன்று வருதல் அவர்களுடைய சிறந்த சுன்மைகளுக்கு விரோத மாகும்; எனெனில் அதனால் தேசத்தின் இயற்கை வரம்புகளுக் கப்பால் படை யெழுச்சிகள் செய்ய நேர்ந்து இந்த நாட்டின் குடியாட்சிக்கும் பொருட் கஷ்டம் உண்டாகிறது. இந்த முறைமையை வேருடன் மாற்றி முன்போலே தேசத்தின் சட்ட எல்லைக்குள் அடங்கி நிற்றல் என்ற ஒரே ஸ்வதான முறைமைக்கு மீண்டு செல்லும் வரை, எல்லைத் தொந்தரைகள் நீங்கி விட்டன வென்றும், எல்லைச் சாதியார் நண்பர்களாய் விட்டன ரென்றும் ராஜாங்கத்தார் எத்தனை நம்பிக்கை யாகச் சொன்னாலும் அவ்வுறுதிப் பாடுகள் பொருளாக மாட்டா. திருஷ்டாந்த மாகச் சென்ற சில வாரங்களில் ஸ்வாத் பள்ளத் தாக்கில் நடந்த ஸம்பவங்களி னின்றும் பெருந் தொகையான படைகளை ஆபத்தமாக வைத்துக்கொண் டிருக்கும் படி நேர்ந்திருக்கிறது. இதினின்றும் நமது செலவுகள் இன்னும் மிகுதிப் படும். மேலும் இவ்விதமான படையெழுச்சிகளின் செலவில் சரியான பங்கு ப்ரிட்டிஷ் பொக்கசத்தி லிருந்து கொடுக்க வேண்டு மென்ற தனது ஆழ்ந்த கொள்கையை இந்த ஜனஸபை மீளவும் அறிவித்துக் கொள்ளுகிறது.

8. எட்டாந் தீர்மானம்:—

ரஹஸ்யப் பத்திரிகைக் கமிட்டிகள்.

இந்தியாவின் சில பகுதிகளில் ரஹஸ்யப் பத்திரிகைக் கமிட்டிகள் ஸ்தாபனம் செய்திருப்பது மிகவும் ஆசேபத்துக்

கிடமாகுமென்றும் பிரிட்டிஷ் ஆட்சியின் உட்கொள்கைக்கு விரோதமாகுமென்றும் தனக்குள்ள பலமான அபிப்பிராயத்தை இந்த ஜனஸபை தெரிவித்துக்கொள்ளுகிறது.

9. ஒன்பதாந் தீர்மானம்:—

ஸ்தல ஸ்வராஜ்யம்.

வங்காளத்துச் சட்ட ஸபையில் கொண்டு வந்த கல்கத்தா முனிஸிபல் மஸோதா; தக்க ஜனப் பிரதிநிதிகள் சேராமல் பம்பாய் நகர விருத்தி ஸங்கம் ஏற்படுத்திய செய்கை; இன்னும் இவை போன்ற வேறு பல செயல்களால் ஸ்தல ஸ்வராஜ்ய விஷயத்தில் பிற்போக்கான முறைமையை ராஜாங்கத்தார் தொடங்கியிருப்பதை வெளியுறக் கண்டு இந்த ஜன ஸபை ஆழ்ந்த அதிருப்தி தெரிவிக்கிறது.

10. பத்தாந் தீர்மானம்:—

நீதி, நிர்வாஹப் பிரிவு.

(நீதி, நிர்வாஹ அதிகாரங்களை உடனே பிரிக்கவேண்டுமென்று மறுபடி வற்புறுத்துதல். 1897 அமராவதி 13-ஆம் கூட்டம் 8-ஆம் தீர்மானத்தைக் காண்க)

11. பதினொன்றாந் தீர்மானம்:—

குடிபடை வைத்ய இலாகாவைச் சேம்மைப் படுத்துதல்.

(க) [இந்தியா குடி வைத்ய இலாகாவைப் படை வைத்ய இலாகாவினின்றும் பிரித்து விடவேண்டுமென்பது; 1894 சென்னை 10-ஆம் கூட்டம் எட்டாம் தீர்மானம் முதல் பகரணத்தைக் காண்க.]

(உ) குடி உதவி ரண வைத்தியர் கூட்டத்தினின்றும் 19-பேரை கவர்ன்மென்டார் குடி ரண வைத்யராக நியமிக்க வழி ஏற்படுத்தியிருப்பது கண்டு இந்த ஜன ஸபை திருப்தி அடைகிறது. எனினும், "தணிந்த குடி வைத்ய உத்யோகமண்டலத்" தார் (குடி உதவி ரண வைத்யர்கள்), குடி மருந்துச் சாலை உதவி உத்யோகஸ்தர்களின் நிலைமையும் சம்பள அபிவிருத்தித் திட்டமும், மற்ற இலாகாக்களில் ஸமான உத்யோகஸ்தர்களின் நிலைமை முதலியவற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், அதிருப்திக்கும் பரிதாபத்துக்கும் இடமாக இருப்பதனால் தணிந்த குடி வைத்ய இலாகாவின் தற்கால அமைப்பைப் பற்றி வெளிப் படையான விசாரணை நடத்தும்

பொருட்டு உத்தியோகஸ்தரும், அல்லாதாரும் கலந்த விசாரணைக் கூட்ட மொன்று நியமிக்கும் படி இந்த ஜன ஸபை ராஜாங்கத்தாரை வேண்டுகிறது.

(ரு) இந்த ஸம்பந்தத்தில்:—தமது வாழ்நாளின் கடைசி வருஷங்களை இங் நாட்டு வைத்ய இலாகாச் சிர் திருத்தத்தில் செலவிட்ட பம்பாய் வாஸி பண்டித K. N. பஷனூர் ஜீ. ஸமீபத்தில் அகால மரண மடைந்ததினின்றும் இந்த தேசத்துக்கும் இந்த ஜன ஸபைக்கும் சேர்ந்த நஷ்டத்திக்காக இந்த ஸபை வருத்தந் தெரிவிக்கிறது.

12. பன்னிரண்டாந் தீர்மானம்:—

தென் ஆப்ரிகாவில் பாரதக் குடியேற்றத்தாரின் குறைபாடுகள்.

தென் ஆப்ரிகாவில் குடியேறி வாழும் ஐரோப்பியருக்கும் இந்தியருக்கும் இடையே செய்யப்படும் அவமானத்துக் கிடமான அபேயாயப் பக்ஷபாதங்களைக் கருதி இந்த ஜன ஸபை மிகவும் துயரப் படுகிறது. சிறித காலத்துக்கு முன்பு த்ரான்ஸ்வால் ஹை கோர்ட்டார் நம் மவர்களைச் "சேரிகளிலே தான் வஸிக்க வேண்டு மென்று தீர்ப்புச் செய்தது அத்தப் பக்ஷபாதங்களுக் கொரு முக்ய திருஷ்டாந்த மாகக் காட்டத் தக்கது. எனவே, பாரதக் குடியேற்றத்தாருக் கேற்பட்டிருக்கும் உரிமைக் குறைகளினின்றும் அவர்களை மீட்டுக் காப்பாற்றும்படி பாரத ராஜாங்கத்தாரையும், ப்ரித்தானிய ராஜாங்கத்தாரையும் இந்த ஜன ஸபை ப்ரார்த்திக்கிறது.

13. பதின் மூன்றாந் தீர்மானம்.

செலவணி விஷயம்.

(க) இங்கிலாந்தில் செலவு செய்யும் பொருட்டாக இங்கிருந்து பணத்தை வற்புறுத்திக் கொண்டு போவதே பரிவர்த்தன கஷ்டத்துக்கு முக்ய காரணமாதலால், அந்த கஷ்டத்தைக் கட்டும் பொருட்டாக இன்னும் இன்னும் பெரு நஷ்டந் தோன்றும்படி காணயத்தை மாற்றுதல், செலவணியைக் குறுக்குதல் முதலிய க்ருத்ரிம உபாயங்களால் இன்னும் பாரத தேசத்துப் பொருளாதாரங்களில் அதிக முட்டுப்பாடும் நம்ம தேசத்து வியாபாரத்துக்கு அதிக கஷ்டமும் நேருமேயன்றி வேறு பயனிராதென்று இந்த ஜன ஸபை அபிப்பிராயப் படுகிறது.

(உ) உயர்ந்த பண்டிதர்கள் சொல்லியிருக்கிறபடி அச் செலவில் தக்க பகுதியை இங்கிலாந்து பொறுப்பதே

இந்த விஷயத்தக்கு உண்மையான நிவர்த்தியாகு மென்று இந்த ஜன ஸபை கருதுகிறது.

(ஈ) ஸர் ஹென்ரி பெளவரை அக்ராஸன பதியாகக் கொண்டு நிகழும் செலாவணிக் கமிட்டியார் ஆராய்ச்சி செய்து வரும் விஷயத்தில் இந்தியாவின் கொள்கையை எடுத்துக் கூறும் பொருட்டாக ராமேச சந்த்ர தத்தரையும் மோர்வான்ஜீ ரஸ்தம்ஜீயையும் தவிர வேறு திறமையுள்ள பாரத ப்ரதிநிதிகளை ஸாக்ஷிகளாக அழைக்காதது பற்றி இந்த ஜன ஸபை மிகவும் வருத்தப் படுகிறது.

(உ) லண்டனிலுள்ள செலாவணி விசாரணைக் கூட்டத்தின் ஸபா நாயகராகிய ஸர் ஹென்ரி பெளவருக்கு இந்தத் தீர்மானத்தைத் தெரிவிக்கும்படி ப்ரிட்டிஷ் ஜன ஸபைக் கமிட்டியின் தலைவராகிய ஸர் வில்லியம் வெடர்பர்ன் இந்த ஜன ஸபை ப்ரார்த்திக்கிறது.

14. பதினான்காந் தீர்மானம் :—

சென்னை பம்பாய் நிர்வாஹ ஸபைகளில் பாரத வாஸிகளைச் சேர்க்கவேண்டு மென்பது.

சென்னை, பம்பாய் மாகாணங்களின் கவர்னர்களாக இங்குள்ள உத்யோகஸ்தர்களை நியமிக்காமல் இங்கிலாந்திலிருந்து ராஜதந்திரிகளைத் தருவித்து நியமிக்கும் உபாயம் மிக அறிவுடைய தாதலால் அது நன்கு பயன் படுமாறு ஷை மாகாணங்களின நிர்வாஹம் இப்போது கவர்னராலும் இரண்டு ஸபிகர்களாலும் நடை பெறுவதை மாற்றி கவர்னராலும் மூன்று ஸபிகர்களாலும் நடத்தப்பட வேண்டு மென்றும், அம் மூன்று ஸபிகர்களில் ஒருவர் இந்தியராக இருக்க வேண்டு மென்றும் இந்த ஜனஸபை கருதுகிறது.

15. பதினைந்தாம் தீர்மானம் :—

தேச நிர்வாஹ விதிகளை ரத்து செய்தல் :—

1818-ஆம் வருஷத்து வங்காளத்து மூன்றும் (III) கட்டளையையும், 1819 சென்னை இரண்டாம் (II) கட்டளையையும், 1827-பம்பாய் இருபத்தைந்தாம் (XXV) கட்டளையையும் ரத்து செய்து விடும்படி ராஜாங்கத்தாரை இந்த ஜன ஸபை வற்புறுத்துகிறது.

ஏனெனில் மஹாராணியின் அரசு மாத்திரமே யன்றிப் பொதுவாக எல்லா நாகரிக ராஜாங்கங்களின் அனுஷ்டானங்

களுக்கும் நீதி பரிபாலனத்துக்கும் அக்கட்டளைகளின் கொள்கையும் நியமங்களும் முழுதும் விரோதமாகவும் குடிகளின் ஸ்வதந்திரத்துக்கு ஸ்திரமான அபாயமாகவும் இருந்தலால்.

16. பதினாறாந் தீர்மானம் :—

ஸ்மகாலப் பரீக்ஷைகள்.

உத்தியோக விசாரணைக் கூட்டத்தாரின் முயற்சிகளால் இந்த நாட்டு ஜனங்களுக்கு எவ்விதக் கற்பனையுமின்றி அவை விழலாய் விட்டது கண்டு இந்த ஜனஸபை தன் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவிக்கிறது. 1893-ஜூன் மாதத்திய காமன்ஸ் ஸபைத் தீர்மானத்தின் படி குடியாட்சி, வைதிகம், போலீஸ், தச்சு, தந்தி, காடு, கணக்கு என்ற பாரத பரிபாலன உத்தியோகங்களுக்கெல்லாம் போட்டிப் பரீக்ஷைகள் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஸமகாலமாக நடத்துவதே விரும்பத் தக்கது. மேலும் தபால், உப்பு, ஆப்காரி, காட்டிலாகா உத்தியோகங்களில் உயர்தரஸ்தானங்களில் இந்தியரை நியமிக்கும் விஷயத்தில் உத்தியோக விசாரணைக் கூட்டத்தார் செய்திருக்கும் சிபார்சுகள் இன்னும் நிறைவேற்றப் படவில்லை யென்பதை எடுத்துக் காட்டுவதுடன் தெ உத்தியோகங்களில் எல்லாத் தரங்களிலும் கல்வி கற்ற இந்தியரை இன்னும் அதிகமாக நியமிக்க வேண்டு மென்று ப்ரார்த்தனை செய்து கொள்ளுகிறது.

17. பதினேழாந் தீர்மானம் :—

பத்திரிகைகளுக்கு வாய்ப் பூட்டு.

[ஸ்வதேச ராஜ்யங்களில் ப்ரிட்டிஷ் ஆட்சிக் குட்பட்டிருக்கும் எல்லையில் பத்திரிகைகளின் வாயை கட்டும் சட்டத்தை ரத்துசெய்ய வேண்டு மென்பது-அமராவதி, 1897-1 ஸெ-ஆம் ஜனஸபைக் கூட்டத்தின் 6-ஆம் தீர்மானத்தைக் காண்க.]

18. பதினெட்டாந் தீர்மானம் :—

தொழிற் கல்வி.

இப்போது நடை பெற்று வரும் தொழிற் கல்வி முறைமை போதாத தாகவும் அதிருப்திக் கிடமாகவும் இருப்பதால், தேசத்து ஜனங்களின் வறுமையையும் நாட்டுக் கைத்தொழில்களின் க்ஷீண நிலையையும் கருதித் தொழிற் கல்வி விஷயத்தில அதிக விஸ்தாரமான, ஸத்துள்ள ஆலோசனை

யொன்று தயார் செய்யும் படிக்கும், அது கன்றுகவும், வெற்றி பெறும் வண்ண மாகவும் இயலுமாறு அதிகப் பணம் பகுத்து வைக்கும் படிக்கும் ராஜாங்கத்தாரை இந்த ஜனஸபை ப்ரார்த்திக்கிறது.

19. பத்தொன்பதாங் தீர்மானம்:—

ஜனஸபையின் சமைப்பும் தொழிலும்.

(க) அந்தந்த வருஷத்தி னிடையே தத்தம் மாகாணங்களில் நடந்த தொழிலைப் பற்றி வருஷந் தோறும் ஜனஸபையின் முன்னே அறிக்கை கொடுக்கும்படி யான மத்ய கணங்கள் ஏற்பாடு செய்து அவற்றின் மூலமாகக் கார்யஸ்தர்கள் நியமித்து ஜனஸபையின் நோக்கங்களை நிறைவேற்றுதற்குரிய வழிகளைத் தேடும்படி எல்லா சாசுவத ஜனஸபைக் கமிட்டிகளையும் இந்த ஜனஸபை வேண்டுகிறது.

(உ) இந்தத் தீர்மானத்தை விரைவில் நிறைவேற்றும் பொருட்டு வேண்டிய காரியங்களை உடனே தொடங்கும்படி இந்த ஜனஸபை சென்னை, பம்பாய், நாகபூர், அமராவதி, கல்கத்தா, அலஹாபாத், லாஹோர் சாசுவதக் கமிட்டிகளை வேண்டுகிறது.

சென்னபட்டணத்து ஜனஸபை உபசார கணத்தாரால்சுற்றுக் கடிதமாக விடுக்கப்பட்ட அபேக்ஷா ரூபமான சமைப்புப் பத்திரிகையைப் பற்றி ஆலோசனை செய்து அடுத்த ஜனஸபைக் கூட்டத்தின் கண்ணே வரையறையான யோசனை யொன்றுகொண்டு ஸமர்ப்பிக்கும்படி பின்வரும் கனவான்களும், நமது ஸபா நாயகரும், பழைய ஜன ஸபைத் தலைவர்களில் இப்போது இந்தியாவில் வஸிப்போரும் கூடிய கமிட்டி யொன்று நியமிக்கப்பட வேண்டுமென்றும், அடுத்த கூட்டத்தில் இந்த விஷயமே முதலாவதாக வாதிக்கபடவேண்டுமென்றும் இந்த ஜன ஸபை தீர்மானிக்கிறது.

கமிட்டி.

(1) பாபு அசுவினி குமார தத்தர்—வங்காளம்
(2) தீ. எ. வாச்சா, பம்பாய்
(3) ஜோஷீராம், பஞ்சாப்
(4) கங்கா ப்ரஸாத் வர்மா, அயோத்யா.
(5) பண்டித மதன்மோஹன் மாளவியர்.
(6) ரகுநாத் பாண்டுரங்க கர்ந்தேகர், ஸதாரா.

(7) பாப்புராவ் தாதா, மத்ய மாகாணங்கள்.

(8) ஜீ. சுப்பிரமணிய அய்யர், சென்னை.

(9) R. N. முதோல்கார் பேரார் (கார்யதர்சி)

20. இருபதாந் தீர்மானம்:—

பலதிரட்டு.

(i) (க) [ஆப்காரித்திருத்தங்கள்—அமராவதி 1897 13-ம் கூட்டம், நான்காந் தீர்மானம் முதல் (க) ப்ரகரணம்]

(உ) [ஆயுதச் சட்டத் திருத்தம்—அமராவதி 1897 13 4 (உ) ப்ரகரணம்]

(ங) [ராணுவக் கலாசாலைகள் ஷை ஷை ஷை (ங) ப்ரகரணம்]

(ச) [ஸ்வேச்சைப் படை ஷை ஷை ஷை ஷை (ச) ப்ரகரணம்]

(ரு) [பரிவர்த்தன நஷ்ட ஈடு ஷை ஷை ஷை ஷை (ரு) ப்ரகரணம்]

(சு) [இந்தியா மந்திரி ஸபையை ஒழித்தல் ஷை ஷை ஷை ஷை (சு) ப்ரகரணம்]

(எ) [பஞ்சாபுக்கு ஹைகோர்ட் ஏற்படுத்துதல் ஷை ஷை ஷை ஷை (எ) ப்ரகரணம்]

இத்திருத்தங்கள் உடனே செய்யவேண்டுமென்று முந்திய ஜன ஸபைக் கூட்டங்களில் உறுதி செய்யப்பட்ட தீர்மானங்களை இந்த ஜனஸபை மீளவும் வற்புறுத்துகிறது.

(ii) மேலும் முந்திய கூட்டங்களின் கருத்தை அனுஸரித்துப் பின் வரும் விஷயங்களில் இந்த ஜன ஸபை தனது பலமான கண்டனம் தெரிவிக்கிறது.

(க) [கல்வி யிலாகாவில் நம்மைப்படி யிறக்கி வைத்திருக்கும் புது விதிகள்—அமராவதி 1897, 13-ஆம் கூட்டம் 4-ஆம் தீர்மானம் ii இரண்டாம் சாகை முதல் (க) ப்ரகரணம்]

(உ) [உப்புத் தீர்வை மிகுதியால் நேரும் கஷ்டம் ஷை ஷை ஷை ஷை (உ) ப்ரகரணம்]

(ங) [மத்ய மாகாணங்களில் சட்ட ஸபையில் பொது ஜனங்களைக் கலக்காமல் ப்ரதிநிதி ஏற்படுத்திய அக்கிரமம் ஷை ஷை ஷை ஷை (ச) ப்ரகரணம்]

(iii) தவிரவும், பிற்கூறப்பட்ட சீர்திருத்தங்களை உடனே நிறைவேற்ற வேண்டு மென்ற முந்திய கூட்டங்

களின் கருத்தை இந்த ஜனஸபை மறுபடியும் உறுதியாக எடுத்துக் கூறுகிறது:—

(க) [ஸர்வகலா ஸங்கத்திருத்தம்—அமராவதி 1897 13—4—(iii) மூன்றும் சாகை. இரண்டாம் (உ) ப்ரகரணம்]

(உ) [உள்காட்டுக் குடிப்பெயர்ப்புச் சட்டத்திருத்தம் ஷை ஷை ஷை ஷை (ங) ப்ரகரணம்.]

(ங) [ஸ்வதேச ராஜாக்களை விசாரணை யின்றித் தள்ளக்கூடாது ஷை (ச) ப்ரகரணம்]

(ச) [ஜூரி விசாரணையை வளர்த்தல் ஷை (ஞ) பிர.]

(ஞ) பாரத ஸ்வதேசிகள் குற்றஞ் சாற்றப்பட்டு ஹை கோர்ட்டுகளில் ஜூரிகளால் விசாரணை நடக்கையிலும், அஸெஸர்களின் உதவியுடன் நடக்கும் விசாரணைகளிலும் ஷை ஜூரிகள் அல்லது அஸெஸர்களில் பாதிப்பேருக்குக் குறையாமல் பாரத ஸ்வதேசிகளாக இருக்கவேண்டுமென்று குற்றஞ் சாற்றப்பட்டோர் கேட்டுக்கொள்ளத் தக்கபடியாக குற்ற விசாரணை நீதிச் சட்டத்தை மாற்றுதல் இந்த தேசத்தாரின் நலத்தைக் கருதுமிடத்தே அவசியமாகிறதென இந்த ஜன ஸபை அபிப்பிராயப் படுகிறது.

(சு) [காட்டிலாகா விதிகளில் சிர்திருத்தங்கள் செய்து கிராம ஜனங்களுக்குக் கீழ் உத்யோகஸ்தர்களால் நேரும் கொடுமைகளை நீக்கவேண்டு மென்பது புனா 1895, 11-ஆம் கூட்டம் 18-ம் தீர்மானத்தை காண்க]

(எ) வருமான வரிச்சட்டத்தின் கீழே தீர்வை விதிப்பதற்குரிய வரும்படிச் சிற்றளவை ரூ. 500 லிருந்து ரூ 1000 ஆக உயர்த்தவேண்டுமென்று இந்த ஜன ஸபை ப்ரார்த்திக்கிறது.

21. இருபத்தொன்றாந் தீர்மானம்:—

பஞ்சாப் சட்ட ஸபை.

[பஞ்சாப் சட்ட ஸபைத் திருத்தங்கள் அமராவதி 1897 13-ஆம் கூட்டம் 15-ஆம் தீர்மானத்தைக் காண்க]

22. இருபத்திரண்டாந் தீர்மானம்:—

பேராருக்குச் சட்டஞ் செய்தல்.

[பேரார் மாகாணத்துக்குச் சட்டம் சிர்வாஹ அதிகாரிகளால் செய்யப்படுவதை மாற்றி வைஸ்ராய் சட்ட ஸபையா

ரால் செய்யப்படவேண்டு மென்பது:- அமராவதி 1897 13-ஆம் கூட்டம் 16-ஆம் தீர்மானம்]

23. இருபத்து மூன்றாந் தீர்மானம்:—

ப்ளேக் செலவு.

ப்ளேக் நோய் பரவாமல் செய்யும் ஏற்பாடுகள் நாடு முழுமையின் பொது நலத்தைக் கருதிச் செய்யப்படுவதாக அங்கீகரிக்கப்பட்டிருப்பன. ஆதலால் அவ்விஷயமாக விளையும் செலவுகளை ஸ்தல ஸங்கத்தார் மீது சுமத்தாமல் ராஜாங்கத்தார் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த ஜன ஸபை அபிப்பிராயப் படுகிறது.

24. இருபத்து நான்காந் தீர்மானம்:—

தாதாபாய் நவுரோஜியிடம் நம்பிக்கை.

[அமராவதி 1897 13-ஆம் கூட்டம் 18-ஆம் தீர்மானம்]

25. இருபத்தைந்தாந் தீர்மானம்:—

[ப்ரிட்டிஷ் கமிட்டிக்கு நன்றி, அதன் செலவுக்கும் "இந்தியா" பத்திரிகைச் செலவுக்கும் 2 பொதுகார்யதர்சி செலவுக்கும் ரூ. 60,000 பகுத்துக் கொடுக்கவேண்டுமென்பது. அமராவதி 1897 13, 19. இரண்டு ப்ரகரணங்களையும் காண்க]

26. இருபத்தாறாந் தீர்மானம்.

ஜன ஸபையின் கார்யதர்சிகள்.

[அமராவதி 1897 13—20]

27. இருபத்தேழாந் தீர்மானம்:—

பாரத ஜன ஸபையின் 15-ஆம் கூட்டம் லக்நவ் நகரத்தில் 1899 கிறிஸ்மஸ் பண்டிகை தினத்துக்குப் பிறகு பின்னே நிச்சயிக்கப்படும் தினங்களில் கூடைபெறும்படி இந்த ஜனஸபை தீர்மானிக்கிறது.

பதினொன்காம் ஜன ஸபையின் தீர்மானங்கள் முற்றுப்பெற்றன.

பதினொன்காம் அத்தியாயம் முற்றிற்று.

ஜனசபையின் சரித்திரம்.

பதினேந்தாம் அத்தியாயம்.



15-ஆம் ஜனசபைக்கூட்டம் லக்நவ்:—1899.

கிறிஸ்மஸ் காலத்தில் நடந்தது. 740 ப்ரதிநிதிகள் வந்திருந்தனர். இவர்களில் 300 மகமதியர் உள்ளூர் (லக்நவ்) ப்ரதிநிதிகளாகவே வந்தனர்.

ஸபாநாயகர் உபந்யாஸச் சுருக்கம்.

இந்தக் கூட்டத்தில் ஸ்ரீமேச சந்த்ர தத்தர் அக்ராஸனம் வஹித்துச் செய்த உபந்யாஸத்தின் சுருக்கம் பின் வருமாறு :

இரண்டு வருஷங்களுக்கு முன்பு மஹாராணியின் ஆட்சியில் அறுபதாண்டு கிறைவுக் கொண்டாட்டம் நடந்த போது நான் லண்டனில் இருந்தேன். ஆறு மயில் வட்டத்துக்கு மஹாராணியின் ஊர்கோலம் நடந்தது. வழியெல்லாம் ஆங்கிலேய ஜனங்கள் கூடி நின்று ஆர்ப்பரித்தனர். ஊர் கோலத்துடன் ப்ரிட்டிஷ் குடியேற்றநாடுகளினின்றும் வந்தபரிவாரங்கள் செல்வதைக் காணுந்தோறும் ஜனங்கள் கர கோஷத்தாலும் வெற்றி யொலியினாலும் களிப்புக் காட்டின; எனினும் வீரச் சாயலும், காம்பீர்யமும் சிறந்த பாரத ராஜாக்களின் படையைக் கண்ட மாத்திரத்தில் எழுந்த ஆரவாரம் வேறெதிற்கும் எழவில்லை. பிற்பாடு இந்த விஷயத்தைக் குறித்து இங்கிலீஷ் பத்திராதிபர்களும் ராஜ தந்த்ரிகளும் வ்யாக்யானங்கள் புரிகையிலே மற்றக் குடியேற்ற நாடுக ளனைத்திலும் செல்வமும் செழிப்பும் குதிகொண்டு நிற்கையில் பாரத தேசமொன்றில்மாத்திரம் கொடிய பஞ்சம் நேர்ந்திருப்பதை எடுத்துக் காட்டி பாரதநாட்டில் கடைபெறும் ஆங்கிலராஜ்யத்தைப் பழித் துரைத்தனர்.

அந்த வருஷத்தில் நமக்குப் பஞ்சம் ஒரு விபத்து மாத்திரமன்று. எல்லைப்புறத்தில் சண்டை நடந்து கோடிக் கணக்கான திரவியமும் பல வீர உயிர்களும் கஷ்டமாயின.

ப்ளேக் நோய் வந்தது. அது இன்னும் போகவில்லை. இந்த நாட்டிலேயே உலாவிவருகிறது. இதனிடையே கவர்ன்மெண்டாரும் பல உற்பாதங்களை விளைக்கலாயினர். அறுபது வருஷங்களாக நாம் அனுபவித்துவந்த பத்திரிகை ஸ்வதந்த்ரத்தைக்குறைத்துக் கொடுமையானசட்டங்கள் செய்யப்பட்டன. ராஜத் துரோகச் சட்டம் அநியாமைபால் செய்யப்பட்டது. படிப்பைப் பரப்பினால் ராஜத்துரோகம் குறையுமென்பதை அறியாமல் படிப்பைப் பரப்பினால் ராஜத்துரோகம் அதிகப்படும் என்று சிலர் கருதுவாராயினர். மேலும் கல்கத்தா முனிஸிபல் சட்டம் ஏற்படுத்தி ஸ்தல ஸ்வராஜ்யக் கொள்கையை அழித்தது மிகவும் வருத்தத்துக்கிடமான விஷயம்.

1899-ஆம் வருஷத்துப் பஞ்சம்.

கனவான்களே! மாதரசுகளே!

இவ்வருஷத்தில் மீளவும் நாடுமுழுதிலும் கொடிய பஞ்சம் நிகழ்ச்சிபெற்று வருகிறது. இனியேனும் குடியானவர்களுடைய நிலைமையை கவனித்துத் திருத்துதற்குரிய பலமான ஏற்பாடுகள் செய்யாதிருந்தால் சரியன்று. ஏழைக் குடியானவர்களுக்கு இத்தனை வறுமையும், கடனும் கஷ்டமும் ஏற்பட்டது அவர்களுடைய குற்றத்தாலன்று. ஜனத்தொகை மிகுதியால் இந்நாட்டில் வறுமை மிகுதியுற்று அதனால் பஞ்சங்கள் தோன்றுவதாகச் சிலர் சொல்லுகிறார்கள். இது பிழை. இங்கிலாந்திலும் ஜர்மனியிலும் ஜனத்தொகை எதிர்செல்லும் வேகத்தில் இங்கேறவில்லை யென்பதை நீங்கள் அறிய வேண்டுமாயின், மாஜி பாரத ஜனன மரணக் கணக்குக் காரியஸ்தராகிய மிஸ்டர் பேன்ஸ் எழுதி, லண்டனில் ப்ரசுரம் செய்திருக்கும் "ப்ரிட்டிஷ் ஸாம்ராஜ்யல் தொகுதி"யின் முதற்பாகத்தில் வாசித்துக்கொள்ளலாம்.

இந்தியா தேசத்துக் குடியானவரின் வறுமை சிலருடைய மிதமிஞ்சிய செலவினாலும், அநியாமையாலும், செட்டில்லாமையாலும் உண்டாயிற் றென்று சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் நான் உயர்ந்த கவர்ன்மெண்ட் உத்தியோகங்களில் என் ஆயுளில் சிறந்த பகுதி முழுதையும் செலவிட்டுக் குடியானவருடன் நெருங்கிப் பழகியிருக்கிறேன். என் போன்றவர்கள் அனுபவத்தில் கண்டது யாதெனில், பூமியின் மீதுள்ள எல்லா நாட்டினரைக்காட்டிலும் நம்முடைய குடியானவரே செட்டும் சிக்கனமும், ஜாக்ரதையும், மிகுதியாக உடையவர்கள். குடி

யானவர் மீது குற்றமில்லை. ராஜாங்க முறைமையி லுள்ள தவறுதல்களால் பஞ்சம் உண்டாகிறது.

பஞ்சாப் நில மாற்றுதல் மசோதா.

பஞ்சாப் குடியானவர்கள் தம் நிலத்தை விற்கவும் அடை மானம் வைக்கவும் கூடாதென்று தடுத்து அதனால் குடியான வர்களுடைய நிலம் காசுக்கடைச் செட்டிகளின் வசப்படாமல் காக்கலாமென்று கவர்ன்மெண்டார் யோசிக்கிறார்கள்.

இது ஸாத்யமில்லை. தான் பாடுபட்டுக் கிடைக்கும் கூலிச்சலில் தன் ஆஹாரத்துக்கு வேண்டிய பகுதி குடியான வன் மிச்சம் வைக்கத் தகுந்த உபாயமொன்று கண்டு பிடி த்து அதன் மூலமாக அவனுடைய கீழ்மையைச் செம்மைப் படுத்த வேண்டுமே யல்லாது, அவனுடைய சொந்த நிலத்தை அவன் பிறருக்கு விற்கவும் அடைக்கவும் கூடாதென்று விதி செய்து அதனால் அவனுக்குள்ள ஒரே உடைமையாகிய பூஸ்தி திக்கு விலை மதிப்புக் குறையும்படி செய்வதினின்றும் அவ னுடைய நிலைமை இன்னும் சீர்கெடுமே யன்றிச் சீர்திருந் தாது.

பஞ்சத்துக்கு உண்மையான காரணமும் நிவாரணமும்.

குடியானவனுடைய ஏழ்மைக்கும் கடனுக்கும் மூல காரணம் தீர்வைச் சுமையேயாம். ஸாதாரண வருஷங்களில் அவன் சிறிதேனும் மிச்சம் வைக்க வொட்டாதபடி தீர்வை வசூல் செய்து விடுவதனால் கெட்ட வருஷங்களில் அநுபவடை குறையும்போது அவன் கதி அதோ கதியாய் விடுகிறது. பல் லாயிர வருஷங்களின் அனுபவத்தை ஆதாரமாகக்கொண்டு பூர்வீக ஹிந்து ஸ்மிருதி கர்த்தாக்கள் பூமியின் மீதில் ஆயி லொரு பங்கு அரசனுக்குக் கடமை செலுத்தவேண்டுமென்று விதித்தனர். தற்கால அனுபவத்திலும் அந்தப் பூர்வ விதியே நிறைந்ததென்பது விளங்குகிறது. வங்காளத்தில் சாசுவத நில வரித் திட்டத்தாலும், 1859-1868, 1885 நிலச் சட்டங்களா லும், நிலத்தீர்வை மிதமிஞ்சி ஏறுதபடி செய்யப்பட்டிருக் கும் ஜில்லாக்களில், குடியானவர்கள் ஜமீந்தார்களுக்குக் கொடுக்கும் கடமை ஆயிலொரு பங்குக்கு மேலே போக வில்லை. ஆதலால் வங்காளத்தில் இந்த நூற்றாண்டில் கொடு மையான பஞ்சங்களில்லை. 1874, 1897 வருஷங்களில் பேஹா ரில் நிகழ்ந்த பஞ்சங்களிலே கூட உயிர்ச்சேதம் மிருதியாக ஏற்படவில்லை. வங்காளத்து விதியையே நாட்டின் மற்றப

பகுதிகளிலும் வைத்து, மற்ற மாகாணங்களிலும் மொத்த வினைவில் ஆயிலொரு பங்குக்கு மேலே கடமை வாங்குவ தில்லை யென்று விதித்து விட்டால் பிறகு நாட்டிலெங்கும் பஞ்சமே தோன்றாது.

வடமேற்கு மாகாணங்கள்.

வடமேற்கு மாகாணங்களில் சாசுவதத் திட்டம் ஏற்பட வில்லை. ஒவ்வொரு முறையும் புதுத்திட்டம் செய்யும்போது ராஜாங்கத்தாருக்குச் செலுத்தவேண்டிய தீர்வைச்சுமை ஏறிக்கொண்டு போகிறது. எனினும், இங்கு சராசரியாக மொத்த வினைவில் சுமார் நூற்றில் இருபது ஜமீந்தார்கள் கடமை வாங்குவதாகவும், அவர்களிடமிருந்து அதனிலும் பாதி கவர்ன்மெண்டாருக்குக் கிடைப்பதாகவும் ஸர் அந்தோணி மாக்டோனல் கணக்கிட்டுச் சொல்லியிருக்கிறார்.

சென்னை ராஜதானி.

சென்னை ராஜதானியின் நிலைமை மிகவும் பரிதாபத்துக் கிடமானது. அங்கு சாசுவதத்திட்டமில்லை. அங்கு குடியா னவர்களிட மிருந்து கவர்ன்மெண்டார் நேரே தீர்வை வசூல் செய்கிறார்கள். மொத்த வினைவில் பயிர்ச்செலவு போக மிஞ் சியதில் அரைப்பங்கு (சுமார்) வாங்குகிறார்கள். இதிலும் தீர்வைத் திட்டத்தை மாற்றும் போதெல்லாம் நிரந்தரமாகத் தீர்வையை உயர்த்திக்கொண்டே போனால், அந்த மாகாணத் தில் அடிக்கடி பஞ்சம் வராமல் வேறென்ன வரும்?

பம்பாய், பீஜாப், மத்ய மாகாணங்கள்.

பம்பாயிலும் வறக்குறையச் சென்னை ராஜதானிக்குள்ள விதியே வழ்ங்கி வருகிறது. பஞ்சாபில் நிலவிதி ஒருவாறு வடமேற்கு மாகாணங்களைப் போலவேயிருக்கிறது. மத்ய மாகாணங்களில் ஓங்கும் நிலத்தீர்வை முறைக்கு மால்குஜாரி முறை என்று பெயர். [வங்காளத்தில் ஜமீந்தார் முறை யென்றும், அயோத்தியில் தாலுக்தார்முறையென்றும், வட மேற்கிலும் சென்னையிலும் முறையே மஹால் வாரி, ரயத் வாரி முறையென்றும் சொல்லப்படுவது போலென்க.] எல்லா முறைகளிலும் இந்த மால் குஜாரி முறை மிகவும் சிக்கெட் டது. குடியானவரிடமிருந்து மால் குஜார் (ஜமீந்தார்)களுக் குக் கிடைக்கும் பகுதியில் 100-க்கு 72 பங்கு வரியென்றும் தீர்வையென்றும் ஸர்க்காருக்குப் போகிறது. குடியானவனு க்கு வயிற்றுக்குப் போதும் படியான தானியம் உறுதியாக

மிஞ்சுமாறு தீர்வை வசூல் செய்யவேண்டும். அவ்வனம் செய்யும் வரை பஞ்சங்கள் சேர்ந்து ஜனங்கள் அழிவது நிற்காது.

ராணுவச் செலவு; சேலாவணி; தேசத்துக்கடன்.

ராணுவச்செலவு மிகவும்அபாரமாகிவிட்டது. இந்தியாவின் அவசியங்களுக் கல்லாமல், ஆசியாவிலும், ஐரோப்பாவிலும் ஆபிரிக்காவிலும் சாம்ராஜ்ய முழுமைக்குள்ள அவசரங்களின் பொருட்டாக இந்தியாவில் பிரமாண்டமான ஸைன்யம் வைத்திருக்கிறார்கள். மேலும் 1860-ஆம் வருஷத்துக் கப்பால் ப்ரித்தானியாவின் தேசக்கடன் 17½-கோடி பவுன் குறைந்திருக்கிறது. அதேகாலத்தில் இந்தியாவின் தேசக்கடன் 10 கோடி பவுன் ஏறியிருக்கிறது. இதற்கு நாம் செலுத்தும் வட்டியும் இங்கிலாந்துக்குத் தான் போகிறது.

செல்வாணி விஷயத்தில் கவர்ன்மெண்டார் ஏற்படுத்தியிருக்கும் புதுமுறையினின்றும் குடியானவர்களுடைய கடன் அதிகப்பட்டு, அவர்கள் சேர்த்து வைத்திருக்கும் சொத்துக்களுக்கு மதிப்புக்குறையத் தக்கதாக இருக்கிறது. நமது நாட்டுக் கைத் தொழில்கள் இங்கிலீஷ் யந்திரத்தொழிலின் போட்டியினால் அழிந்து போய்விட்டன. அதனால் அத் தொழில்களை உயிர் மீட்டிக் காப்பதற்குரிய உபாயங்கள் செய்யவேண்டும்.

நமது தேசத்தின் ஆட்சியில் நமக்கு அதிகாரமில்லாமல் இருக்கிறது. நமதுநாட்டில் நம்மைஅன்னியராக அன்னியர்கள் நடத்துகிறார்கள். மூவாயிர வருஷங்களாக நம்முடைய கிராமங்களில் ஸ்வராஜ்ய முறைமை நடைபெற்று வந்திருக்கிறது. இப்போது ஆங்கிலேயர் நம்மை ஸ்வராஜ்யத்துக்குத் தக்கவர்களில்லையென்று சொல்லிப் போலீஸ் (காவலாட்களின்) மூலமாக ஆளுகிறார்கள். பஞ்சங்களும் உற்பாதங்களும் கஷ்டங்களுமில்லாமல் இந்த தேசத்தார் நேரே வாழ வேண்டுமானால் அதற்கு ஸ்வராஜ்யம் அவசியம்" என்று ரமேச சந்த்ர தத்தர் பேசினர்.

லக்கவ்-1899 15-ஆம் ஜனசபைக்கூட்டத்தில் நடைபெற்ற வேறு விசேஷங்கள்:—

நில உடைமை.

நிலத்தீர்வையில் மாத்திரம்தான் ஸர்க்காருக்கு அதிகாரம் உண்டேயன்றி, நில உடைமையில் அதிகாரமில்லை யென்றும்,

ஸர்க்காருக்குக்கொடுக்கும் கடமை நிலத்தீர்வையையேயன்றிக் குடிவார மன்றென்றும், லாலர் கன்னையா என்பவர் பஞ்சாப் நிலமாற்றுதல் சட்டத்தைக் குறித்த இரண்டாந்தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகையிலே கூறினர்.

வருஷவற்றுதல்.

இந்தியாவிலிருந்து வருஷந்தோறும் மூன்று கோடிக்கு மேல் நான்குகோடிப் பவுன் வரை இங்கிலாந்துக்கு வற்றடித் தக்கொண்டு போவதை நிறுத்தினு லொழிய இந்த நாட்டின் வறுமை தீராதென்று; பொன் நாணயத்தை அளவையாக்க வேண்டுமென்ற மசோதாவைக் கண்டித்துப்பேசும் நான்காந் தீர்மானத்தைப் பிரேரேபணை செய்கையில் தீ. எ. வாச்சா கூறினர்.

மேலும் ஸ்ரீவாச்சா :—

"ரூபாயின் அடையாள மதிப்பை ஏற்றி அதிலுள்ள வெள்ளியின் விலையைக் குறைத்து விட்டார்கள். மூன்று வெள்ளி விலை ஒரு தோலா ஒரு ரூபாயாக விற்றது. இப் போது ஒரு தோலா 10 அல்லது 11 அணுவுக்கு விற்கிறது. சொற்ப சொத்துடையவர்கள் தங்கள் மிச்சத்தை யெல்லாம் வெள்ளிப் பூண்களாக மாற்றி வைத்திருப்பவற்றுக்கு இப் போது மதிப்புக் குறைந்து போய்விடும். மேலும், வெளி நாட்டு வியாபாரிகள் முதற் பணம் கொண்டுவந்து இங்கு வியா பாரம் நடத்துவது நமக்கு நன்மையென்று கருதுதல் மடமை. அதனல் இங்கிருந்து பணம் கொள்ளைபோவது மிகுதிப்படும். இந்த நாட்டு முதல் வைத்து வியாபாரம் செய்வதே இந்த நாட் டுக்கு லாபந் தரக்கூடியது" என்றார்.

தீர்மானங்கள்

15-ஆம் ஜனஸபைக் கூட்டம்-லக்நவ்-1899.

1. முதல் தீர்மானம் :—

நீதி நிர்வாக அதிகாரங்களைப் பிரித்தல்.

இங்கிலாந்திலும் இந்தியாவிலும், நீதி பரிபாலனத்தில், நீதி நிர்வாஹ அதிகாரங்களைப் பிரிக்கவேண்டுமென்ற விஷயத் தில் நமக்குக் கிடைத்திருக்கும் பொது ஜன ஆதரவைக் கண்டு இந்த ஜனஸபை திருப்தியடைகிறது. மிகவும் அவசியமான இப் பிரிவை நிறைவேற்றும்படி, லார்ட் ஹாப் ஹவ்ஸ்; ஸர் ரிச் சர்ட் கார்த்; ஸர் ரிச்சர்ட் கௌச்; ஸர் சார்ல்ஸ் வார்ஜண்ட்; ஸர் வில்லியம் மார்க்பி; ஸர் ஜான் பட்பீயர்; ஸர் ஜான்

ஸ்காட்; ஸர் ரோலன்ட் வில்லன்; மிஸ்டர் ஹெர் பர்ட் ஜெ-ரெய்னட்ல்ட்; ஸர் வில்லியம் வெடர் பர்ன் என்பவர்கள் இந்தியா மந்திரிக்கு விண்ணப்பம் கொடுத்திருப்பது பற்றி அவர்களுக்கு நன்றி செலுத்துகிறது.

இந்தியா கவர்ன்மெண்டார் தமது கவனத்துக்கு அனுப் புண்டிருக்கும் அம் மறுவைப்பற்றி யோசனை புரிந்த மிகவும் அவஸரமான இச் சீர்திருத்தத்தை விரைவில் நிறை வேற்று தற்குரிய காரியங்கள் செய்யும்படி வேண்டுகிறது.

2. இரண்டாந் தீர்மானம்:—

பஞ்சாப் நில மாற்றுதல் மசோதா.

(க) பஞ்சாபில் பயிரிடும் நிலத்தைப் பற்றிய சட்டத் தைத்திருத்தம் மசோதா வொன்று வைஸ்ராய் சட்ட ஸபை யில் கொணர்ந்திருப்பது கண்டு இந்த ஜனஸபை மிகவும் வருத் தப்படுகிறது. அந்த மசோதாவில் வேண்டுகிறபடி. நிலத்தை நிலஸ்வான்கள் விற்கவும் அடைக்கவும் கூடா தென்று கட்டுப் படுத்தினால்,

(1) விவசாயிகளுக்கும் ஜமீந்தார்களுக்கும் பொருள் மதிப்புக் குன்றும்;

(2) நிலத்தின்மீது மேன்மேலும் சுமத்தப்படும் ராஜாங் கத் தீர்வைகளுக்கு உத்தரம் சொல்ல வழியில்லாமல் போய் அவர்களுடைய ஏழ்மை மிகுதிப்படும்.

இந்த மசோதாவுக்கு எதிர்காலத்தில் மாத்திரமே யன்றி இறந்த காலத்தின்மீதும் ப்ரயோகம் உண்டென்று சொல்லும் நியமம் அநீதியும் அதர்மமு மாகுமென்று இந்த ஜனஸபை அபிப்பிராயப் படுகிறது.

(உ) பின்வரும் வழியால் பயிரிடுவோர்களுக்கு உண்மை யான அனுகூலம் ஏற்படுத்தலா மென்று இந்த ஜன. ஸபை சிபார்சு செய்கிறது. வரி வசூல் ஸர்க்கார் செய்யுமிடத்தே, விலை வாசி உயர்ந்தாலன்றி நிலத் தீர்வையை உயர்த்தக் கூடா தென்று 1882 ஆம் வருஷத்தில் நிச்சயிக்கப்பட்ட விதியை அனுஷ்டிக்க வேண்டும். ஜமீந்தார்கள் வரி வசூல் செய்யு மிடத்தே, மட்டு மிஞ்சி வரி வசூல் செய்யாதபடி தடுக்கக் கூடிய நியம மொன் றேற்படுத்தவேண்டும்.

(ரு) ஸபாநாயகர், ஜோஷிராம், N. குப்தர், வாச்சா, முன்ஷி மாதவ லால், இக்பால் சங்கர், என்பவர்கள் கூடிய

ஸமிதியொன்று நியமித்து, அந்த மசோதாவிலுள்ள பல நிய மங்களின் தகாத குணத்தை எடுத்துக்காட்டி கவர்ன்மெண்டா ருக்கு ஒரு விண்ணப்பம் கொடுக்கும்படி நியமிக்க வேண்டு மென்று இந்த ஜன ஸபை தீர்மானஞ் செய்கிறது.

3. மூன்றாந் தீர்மானம்:—

ப்ரிட்டிஷ் படையின் ஒரு பகுதிக்குள்ள செலவை இங்கிலாந்து பொறுக்க வேண்டுமென்பது.

சட்டப்படி இந்தியாவுக்குள்ள எல்லைகளுக்குப் புறத்தே தொழில் செய்யும்படி ப்ரிட்டிஷ் திருப்புக்களைக் கொண்டு போதல் அபாயமில்லையென்று கருதப்படுவதால், இந்தியாவில் இவ்வளவு பெரிய ஐரோப்பிய ஸைன்யம் வைத்திருப்பதன் செலவில் ஒரு பகுதியை இங்கிலாந்துப் பொக்கசத்தார் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்றும், இந்தியாவிலுள்ள ப்ரிட்டிஷ் திருப்புக்களில் 20,000-க்குள்ள செலவை ப்ரிட் டிஷ் பொக்கசத்திலிருந்து கொடுத்துவிடும் பக்ஷத்தில், ப்ரிட் டிஷ் திருப்புக்களை ஸாம் ராஜ்ய முழுமைக்கும் மூல பலமாக இந்தியாவில் வைத்திருப்பதிலே தனக்கு யாதொரு ஆக்ஷே பமு மில்லையென்றும் இந்த ஜன ஸபை தெரிவித்துக் கொள்ளு கிறது.

4. நான்காந் தீர்மானம் :—

செலாவணி விஷயம்.

(க) இங்கிலாந்தில் செலவிட இந்தியப் பொக்கசத்தி லின்று மிக்க நிரவியம் வற்றடித்துக்கொண்டு செல்வதே பரிவர்த்தனத்தால் நிகழும் நஷ்டத்துக்கு மூல காரண மாத லால், அந்த நஷ்டத்தை மீட்டுக்கருதி செலாவணி ஸமிதியார் செய்த சிபார்சின்படி இந்தியாவில் பொன்-அளவை புகுத்தது கண்டு இந்த ஜனஸபை பரிதபிக்கிறது. இந்தப் புதிய சட் டத்தால் இந்தியா இருப்பதற் குரிய பொற்கடமை ஏறு மென்று இந்த ஸபை அபிப்பிராயப்படுகிறது.

(உ) கவர்ன்மெண்டாரால் அங்கிகரிக்கப் பட்ட தீர்மா னத்தினின்றும் ஏழை வகுப்பினரின் கடன் சுமை மிகுதிப் படுமென்றும், வெள்ளிப் பூண்களாக அவர்கள் சேர்த்து வைத்திருக்கும் நிரவியத்தின் விலை மதிப்புக் குறையு மென் றும் அதனால அவர்களுடைய வரி, தீர்வைகளில் சுமை அதி கப் படுமென்றும் இந்த ஸபை கருதுகிறது.

(ஈ) மேலும் ஸர்க்கார் அங்கீகரித் திருக்கும் தீர்மானம் உள் நாட்டுத் தொழில்களுக்குத் தீங்கு விளைக்கு மென்று இந்த ஜனஸபை கருதுகிறது.

5. ஐந்தாந் தீர்மானம் :—

ராணுவக் குடி வைத்ய இலாகாக்களைப் பிரித்தல்.

ராணுவக் குடி வைத்ய இலாகாக்கள் ஒன்றுபட் டிருப் பதினின்றும் செலவுமிகுதியும், அஸௌகர்யமும், தேசத்தார் ராஜாங்கத்தார் என்னும் இரு திறத்தாருக்கும் தீங்கும் விளை வதனால், அவ் விரண் டிலாகாக்களையும் பிரித்துக் குடி வைத்ய இலாகா வொன்று தனியாகச் சமைத்து, இங்கிலாந்திலும் இந்தியாவிலும் பலதிரங்கமாக ஸமகாலப் போட்டிப் பரீக்ஷை கள் செய்வதினின்றும் அதற்கு உத்யோகஸ்தர் நியமனம் செய்யவேண்டுமென்று இந்த ஜனஸபை பலமாக வற்புறுத்து கிறது.

6. ஆறாந் தீர்மானம் :—

பத்திரிகைத் தந்திகளின் மசோதா.

இப்போது வைஸ்ராய் சபையின் ஆலோசனையி லிருக் கும் "பத்திரிகைகளுக்கு வரும் வெளி நாட்டுத் தந்திகளைப் பற்றிய மசோதா" வின கருத்து இதுவரை பயன் படத் தக்க அறிவையும் செய்திகளையும் கட்டுப்பா டின்றிப் பரவச் செய்யும் விஷயத்தில் ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் அனு ஸரித்து வரும் கொள்கைக்கு விரோத மென்றும், ப்ரிட்டிஷ் இந்தியாவில் (உத்தேசிக்கப்படும்) அந்தச் சட்டத்தை நிறை வேற்றுதற்குத் தக்க அவஸர மிருப்பதாகக் காட்டவில்லை யென்றும் இந்த ஜன ஸபை அபிப்பிராயப்படுகிறது.

7. ஏழாந் தீர்மானம் :—

கல்கத்தா முனிஸிபல் சட்டம்.

"கல்கத்தா நகர ஸபைச் சட்டத்தை" உறுதியாக்கியும் அதுபோலவே ஸ்தல ஸ்வராஜ்யத்துக்குப் பெருந் தீங்கான மசோதா வொன்றை பம்பாய் சட்ட ஸபையில் கொணர்ந்தும், ஸ்தல ஸ்வராஜ்யத்தைக் கவிழ்த்து விடத்தக்க கொள்கை தமக் கிருப்பதாக ராஜாங்கத்தார் விளங்குவிப்பது கண்டு இந்த ஜனஸபை அதிருப்தி கொள்ளுகிறது.

8. எட்டாந் தீர்மானம் :—

உபாத்தியாயர்களை ராஜாங்க விவகாரங்களில் கலக்கக் கூடா தென்று தடுத்தல்.

பொதுக் கல்வி யிலாகாவின் மேலதிகாரி அல்லது பிற அதிகாரிகளிடம் அனுமதி பெறாமல், ஸர்க்கார் உதவி பெற்ற பாடசாலைகளின் கார்யஸ்தர்களும் உபாத்தியாயர்களும் ராஜாங்க ஸம்பந்தமான கிளர்ச்சிகளிலும் பொதுக் கூட்டங்களிலும் ஸம்பந்தப் படக்கூடாதென்ற விதிகள் ப்ரிட்டிஷ் குடிகளுக்குரிய உரிமைகளை அனுபவிப்பதற்குத் தடையாய், கல்வி முயற்சியில் திறமையும் செல்வாக்கு முடையவர்கள் சேராத படி செய்து இந் நாட்டில் கல்வியைப் பரப்பும் பொருட்டாகக் குடிகள் உழைப்பதையும் ஸங்கங்கள் சேர்ப்பதையும் குறுக்கி விடு மென்று இந்த ஜனஸபை அபிப்பிராயப்படுகிறது. ஆதலால் கல்வி விதி; ஸஹாயச்சட்டம்; இவற்றினின்றும் மேலே விவரிக்கப்பட்ட கருத்துடைய நியமங்களை எடுத்து விடுதற்குரிய ஏற்பாடு செய்யும்படி இந்த ஸபை சென்னை, பம்பாய் ராஜாங்கத்தார்களை வேண்டுகிறது.

9. ஒன்பதாந் தீர்மானம் :—

ஆப்காரிச் சீர்திருத்தம்.

சில்லரைச் சாராயக் கடைகளுக்கு அனுமதிச் சீட்டுக்கள் கொடுக்கும் விஷயத்தில் கவர்ன்மெண்டார் கண்டிப்பான நியமங்கள் செய்யவேண்டு மென்றும், ஸ்தல வாஸிகளின் கருத்தைத் தெரிந்துகொள்ளாமல் இந்தியாவில் எங்கும் ஷாப் கடைகள் வைக்கக் கூடாதென்றும் இந்த ஜனஸபை அபிப்பிராயப் படுகிறது.

10. பத்தாந் தீர்மானம் :—

ஜனஸபையின் நிர்மாணம்.

பாரத ஜனஸபையின் அமைப்பைக்குறித்து இந்த ஜனஸபை பின் வரும் விதிகள் ஏற்படுத்திக் கொள்ளுகிறது.

(க) பாரத ஜனஸபையின் நோக்கம் யாதெனில் இந் நாட்டு ஜனங்களின் க்ஷேம லாபங்களைச் சட்டத்துக் கிணங்கிய வழிகளால் அபிவிருத்தி செய்தலே யாம்.

(உ) ஸாதாரணமாக ஜனஸபை முந்திய கூட்டத்தில் நிர்மானிக்கப்பட்ட இடத்திலும் காலத்திலும் கூடும். ஆனால்

பின்னே சொல்லப்போகிற நியமங்களின்படி அமைக்கப்படும் பாரத ஜனஸபைக் கமிட்டி (ஸமிதி)யார் அவசியம் கோர்ந்தால் ஜனஸபைக் கூட்டத்தின் காலத்தையும் இடத்தையும் மாற்றலாம். மேலும், மே ஸமிதியார் அவஸரம் கோர்ந்தபோது தம்மால் நிச்சயிக்கப்படும் காலத்திலும் இடத்திலும் ஜனஸபையின் விசேஷக் கூட்டம் கூடும்படி செய்யலாம்.

(ஈ) ஜனஸபைக்கும் பிரதிநிதிகள் ராஜீக ஸங்கத்தார்களாலும், மற்ற ஸபையார்களாலும், பொதுக்கூட்டங்களாலும் தெரிந் தெடுக்கப்படவேண்டும்.

(ச) ஜனஸபையின் விவகாரங்கள் "பாரத ஜனஸபைக் கமிட்டி" என்ற பெயர்கொண்ட தொரு ஸமிதியால் நடத்தப்படும். அந்த ஸமிதிக்கு ஜனஸபையால் தெரிந்தெடுக்கப்பட்ட 45 ஸபிகர் உண்டு. அவர்களில் 40 பேர் வெவ்வேறு மாகாண ஸமிதிகளாலும், அவை இல்லாத இடத்தில், ஜனஸபைக் கூட்டத்திற்கு வந்திருக்கும் மாகாணப் பிரதிநிதிகளாலும் தெரிந் தெடுக்கப்படுவர்.

ஸமிதிக்குஸபிகர்கள் எப்படிம் கணக்குப் பின்வருமாறு:-

வங்காளம்—அஸாம் உட்பட— 8 ஸபிகர் (மெம்பர்)

பம்பாய்—ஸிந்த் உட்பட—8 ஸபிகர்

சென்னை—ஸெகந்திராபாத் உட்பட — 8 ஸபிகர்

வடமேற்கு மாகாணங்கள்--அயோத்திஉள்பட--6 ஸபிகர்

பஞ்சாப்—4 ஸபிகர்

பேரார்—3 ஸபிகர்

மத்ய மாகாணங்கள் — 3 ஸபிகர்.

ஜனஸபை ஸமிதியின் ஸபிகர்களுடைய உத்யோகக் காலம் ஜனஸபையின் இரண்டு ஸாமான்யக் கூட்டங்களுக்கு இடையிலுள்ள காலமேயாம்.

(ஞ) பாரதஜனஸபை ஸமிதி தனக்கு ஸௌகர்யமாகத் தோன்றும் இடங்களில் வருஷத்துக்குக் குறைந்த பக்ஷம் மூன்று முறை கூடும். (அதாவது) ஜனஸபைக் கூட்டம் முடிந்த வுடனே ஒரு முறை; பிறகு ஜூன் அக்டோபர் மாஸங்களினிடையே ஸமிதியார் தீர்மானிக்கும் காலத்தில் ஒரு முறை; ஜனஸபைக்கு முந்தி ஒரு முறை.

(சு) ஷே ஸமிதிக்கு ஒரு கௌரவக் கார்யதர்சியும், சம்பளம் வாங்கும் ஒரு உதவிக் கார்யதர்சியும், தக்க சிப்பந்திகளும் ஏற்படுத்தப்படுவர்; இவர்களுடைய செலவுக்கு வருஷத்தில் 5000 ரூபாய் விதிக்கப்படும். இந்தத் தொகையில் ஒரு பாதி மூர்நின ஜனஸபை கூடிய இடத்து உபசார ஸமிதியாராலும், மற்றொரு பாதி அடுத்த ஜனஸபை கூடப்போகிற இடத்து உபசார ஸமிதியாராலும் தயார் செய்து கொடுக்கப்படும்.

(எ) மாகாண (ஜன ஸபை) ஸமிதிகள் பாரத நாட்டின் வெவ்வேறு மாகாணங்களில் தலை நகரங்களின் நடை பெறும். ராஜரீக ப்ரசாரமே இவற்றின் நோக்கம். பொதுப்படையாக ப்ரிட்டிஷ் ஆட்சியினிடம் நன்கு மதிப்பும், அவ் வாட்சியி லுள்ள குற்றங்களைச் சட்டத்தக் கிணங்கிய வழிகளால் நீக்கு தலும் அந்த ப்ரசாரத்தின் இயல்பாம். இம்மாத ஜன ஸபையின் நோக்கங்களை முன்னேறச் செய்யும் பொருட்டாக மாகாண ஸமிதியாரால் சாசுவத ஸமிதிகள் ஸ்தாபனம் செய்வதாலும், மாகாண ஸபைகள் கூட்டுவதாலும், வேறு தமக்கு உசித மாகத் தோன்றும் வழிகளாலும், பாரத ஸமிதியைக் கலந்து கொண்டு நடத்தப் படும் மாகாண ஸமிதிகளே பாரத ஸமிதிக்குப் பொறுப்புள்ள கருவிகளாம். இவை தமது தொழிலைக் குறித்து பாரத ஸமிதிக்கு வருஷாந்த அறிக்கைகள் கொடுக்க வேண்டும்.

(அ) ஸபா நாயகரைத் தெரிந் தெடுத்தலும், தீர்மானங்கள் வரைதலும், இன்னும் ஜன ஸபையின் ஸம்பந்த மான எல்லாக் கார்யங்களும் பாரத ஸமிதியால் செய்யப் படும். மேலும் பாரத ஸமிதியே பிரதிநிதிகள் தெரிந் தெடுக்கவும், பேசுவோரை நியமிக்கவும், ஜன ஸபையின் விவகார நடையை நிச்சயிக்கவும் விதிகள் செய்து ஜன ஸபையின் அனுமதியின் மீது அவற்றை நிறை வேற்றும்.

(கு) மாகாண ஸமிதிகளில் ஸபிகர் நியமனம், விவகார நடை, இன்னும் அவற்றின் தொழில் ஸம்பந்தமான எல்லா விதிகளும் உபவிதிகளும் மாகாண ஸமிதியாராலேயே செய்யப் படும். ஆனல் பின்னிட்டு அவை பாரத ஜன ஸபை—ஸமிதியின் அனுமதிக் குட்பட வேண்டும்.

(டு) "பிரிட்டிஷ் காங்கரஸ் கமிட்டி" என்ற பெயருடைய ஸமிதி யொன்று இங்கிலாந்தில் நடத்தப் பெறும்.

அந்த நாட்டில் அது நமது ஜன ஸபையின் கார்யங்களை கவனிக்கும். இந்த ஸமிதியின் செலவுகளுக்கு வேண்டிய தொகை ஜன ஸபைத் தீர்மானத்தால் திட்டஞ் செய்யப் படும். அங்ஙனம் திட்டஞ் செய்த தொகையை பாரத ஸமிதியார் அப்போதைக் கப்போது தம்மால் நிச்சயிக்கப் படும் வழிகளால் தயார் செய்து கொடுக்க வேண்டும்.

(கெ) ஜன ஸபையின் கார்யத்தை நடத்துவதற்கு சாசுவத நிதி சேர்க்கத் தனக்கு உசித மாகத் தோன்றும் வழிகளில் பாரத ஸமிதி ஏற்பாடு செய்யும். அந்த நிதி இந்தியாவில் மாகாணத்துக் கொருவர் வீதமாக ஜன ஸபையால் நியமிக்கப் படும் ஏழு தர்மகர்த்தாக்களின் பெயரால் சேமிக்கப் படும்.

11. பதினொன்றாந் தீர்மானம் :—

ப்ரிட்டிஷ் கமிட்டியினிடம் நம்பிக்கை.

பாரத ஜனங்களின் பொருட்டாக ப்ரிட்டிஷ் ஸமிதியார் செய்து வரும் உயர்ந்த கார்யங்களை இந்த ஜன ஸபை அங்கீகாரம் செய்கிறது. ஷி ஸமிதியில் உள்ள ஸர் வில்லியம் வெடர்பர்னிடத்திலும் மற்ற ஸபிக ரிடத்திலும் குறைவு படாத நம்பிக்கை யுணர்த்துகிறது.

ப்ரிட்டிஷ் ஸமிதியின் செலவுகளுக்காகவும், ஜன ஸபைப் பத்திரிகை யாகிய "இந்தியாவின்" செலவுக் காகவும் ரூ. 54,000 கொடுக்க வேண்டு மென்று இந்த ஜன ஸபை தீர்மானிக்கிறது.

12. பன்னிரண்டாந் தீர்மானம் :—

நிர்வாஹ சபைகளில் பாரத வாஸிகளின் நியமனம்.

(14-ம் கூட்டம், 1898; சென்னை; 14-ம் தீர்மானத்தைக் காண்க).

13. பதின்மூன்றாந் தீர்மானம் :—

பஞ்சத்தைத் தடுக்கும் வழிகள்.

பாரத ராஜாங்கத்தாராலும், மாகாண ராஜாங்கத்தார்களாலும் இப்போது வந்திருக்கும் பஞ்சத்தில் மனித உயிர்களைக் காப்பாற்றவும், கஷ்ட நிவர்த்தி செய்யவும் நடத்தப் பெறும் முயற்சிகளுக்காக இந்த ஜனஸபை நன்றி செலுத்துகிறது. ஆனால் குடியானவர்களின் நிலைமையை அபிவிருத்தி

செய்யவும் பஞ்சம் மீளவும் வாராத படி தடுக்கவும் உண்மை யான உபாயத்தை அனுஸரிக்கும்படி வற்புறுத்துகிறது. அதாவது ஸர்க்கார்ச் செலவைக் குறைக்க வேண்டும்; நாட்டுக் கைத்தொழில்களை வளர்க்க வேண்டும்; நிலத் தீர்வையை மட் டுப் படுத்த வேண்டும்; என்று இந்த ஜனஸபை போர்சு செய்கிறது.

14. பதினான்காந் தீர்மானம் :—

பல திரட்டு.

(i) முந்திய ஜனஸபைகளின் கருத்தைத் தழுவி இந்த ஸபை பின்வரும் சீர் திருத்தங்களை பலமாக ஆதரிக்கிறது :—

(க) ஆயுதச் சட்ட விதிகளைத் திருத்தல் [1897 4-ஆம் தீர்மானம்—i—ஆம் பகுதி 2-ம் கிளை.]

(உ) ராணுவ கலாசாலைகள் ஸ்தாபித்தல் [ஷெ-(ங)]

(ங) ஸ்வேச்சைக் காப்புப் படை சமைத்தல் [ஷெ-(ச)]

(ச) ஐரோப்பிய யூரேஷிய உத்யோகஸ்தருக்குப் பரி வர்த்தன படி ஈடு கொடுப்பதை நிறுத்தி விடுதல் [ஷெ-(ஞ)]

(ஞ) பஞ்சாபில் ஹைகோர்ட் நியமித்தல்.

(ii) முந்திய ஜன ஸபைக்கூட்டங்களின் கருத்தைத் தழுவி இந்த ஸபை பின் வரும் செயல்களைக் கண்டிக்கிறது.

(க) கல்வியிலாகாப் புதிய விதிகள் [1897. 4-ஆம் தீர் மானம் ii-ஆம் பகுதி (க) கிளை]

(உ) உப்பு வரி யேற்றம் [ஷெ-(உ) கிளை]

(ங) மத்ய மாகாணங்களுக்கு ஷெ மாகாணத்து ஜனங் களால் தெரிந் தெடுக்கப்படாத ப்ரதிநிதி யொருவரை வைஸ் ராய் சபையில் சேர்த்தது. [ஷெ-(ச)]

(ச) 1893-ஆம் வருஷத்து 7-ஆம் கட்டளையால் திருத் தப்பட்ட 1882-ம் வருஷத்து உள்நாட்டுக் குடிப்பெயர்ப்பு மூதற் கட்டளையையும் இந்த ஸபை கண்டிக்கிறது.

(iii) மேலும் இந்த ஜன ஸபை முந்திய கூட்டங்களின் நிருபபத்தைத் தழுவிப் பின் வரும் நிச்சயங்களைத் தெரிவிக் கிறது.

(க) ஜமீர்த்திருத்தம் [1897 அமராவதி 4-ம் தீர்மா னம் iii ஆம் பகுதி (இ) ஆம் கிளை]

(உ) குற்ற விசாரணை நீதிச் சட்டத்தில் ஜூரி விசாரணை விஷயமான திருத்தம். [1898 (சென்னை) 20-ஆம் நிர்மானம் iii-ஆம் பகுதி (இ)]

(ஊ) காட்டிலாகாத் திருத்தம் [ஷெ-(ச)]

(ச) வருமான வரித் திருத்தம் [ஷெ-(ச)]

(ஙி) இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஸமகாலத்தில் போட்டிப் பரீக்ஷைகள் நடத்தியே பாரதக் குடி யுத்யோகங்களுக்கு நியமனங்கள் செய்யவேண்டு மென்ற 1893 ஜூன் காமன்ஸ் ஸபைத் தீர்மானத்தை அனுஷ்டானத்துக்குக் கொணர்ந்தாலன்றி, பாரதக் குடி யுத்யோகங்களில் பாரத வாஸிகளை நியமிப்பதைப் பற்றிய விவகாரத்துக்குத் திருப்திகரமான தீர்ப் புண்டாகாதென்ற தனது நிச்சயத்தை இந்த ஸபை அறிவித்துக் கொள்ளுகிறது.

15. பதிஞ்சாந் தீர்மானம்:—

ஸ்வதேச ராஜ்யங்களில் பத்திரிகைகளுக்கு வாய்ப் பூட்டு.

[11-ஆம் கூட்டம் புஞ 1895 6-ஆம் தீர்மானத்தைக் காண்க.]

16. பதினாறாந் தீர்மானம்:—

தொழிற் கல்வி.

இப்போது அனுஷ்டானத்தில் உடை பெறும் தொழிற் கல்வி முறை குறை வாகவும், அதிருப்திகரமாகவும் இருப்பதனால், ஜனங்களின் வறுமையையும் நாட்டுக் கைத்தொழில்களின் அழிவையும் கருதி, ராஜாங்கத்தார் இன்னும் விஸ்தாரமானதும், பயனுடையதும் ஆகிய தொழிற்கல்வி முறை ஏற்படுத்த வேண்டு மென்றும், அது நன்கு தொழில் செய்யுமாறு அதிகப் பணம் பகுத்து வைக்கவேண்டு மென்றும் இந்த ஜன ஸபை ப்ரார்த்திக்கிறது. உயர்தர சாஸ்த்ரக் கல்வியும், ஆராய்ச்சியும் அபிவிருத்தியடையு மாறு ஸ்ரீமான் தாதா செய்த, தேசபக்தி நிறைந்த, உதவமான கொடையைக் கருதி இந்த ஸபை நன்றி தெரிவிக்கிறது.

17. பதினேழாந் தீர்மானம்:—

(1897-15-ஆம் தீர்மானத்தைக்காண்க.)

பஞ்சாப் சட்டசபைத் திருத்தம்.

18. பதினெட்டாந் தீர்மானம்:—

பேராருக்குச் சட்டஞ் செய்தல்.

பேரார் மாகாணம் (ஸபையுடன் கூடிய) வைஸ்ராயின் ஆட்சிக் குட்பட்டிருக்கும் வரை, பேரார் மாகாணத்துக் குரிய எல்லாச் சட்டங்களும், சட்ட வலிமையுடைய உத்தரவுகளும், மற்ற ப்ரிட்டிஷ் இந்தியா மாகாணங்களுக்குச் செய்வது போல் வைஸ்ராய் சட்ட சபையிலேயே செய்யப்பட வேண்டுமென்று இந்த ஜனஸபை அபிப்பிராயப் படுகிறது.

19. பத்தொன்பதாந் தீர்மானம்:—

ப்ளேக் ஸம்பந்தமான செலவு.

(1898. 23-ஆம் தீர்மானத்தைக் காண்க)

20. இருபதாந் தீர்மானம்:—

தாதாபாய் நவுரோஜியிடம் நம்பிக்கை.

(1898. 24-ஆம் தீர்மானப்படி)

21. இருபத்தொன்றுந் தீர்மானம்:-காங்க்ரஸ் பொதுக் கார்யதர்சிகள்.

(1898. 26-ஆம் தீர்மானப்படி)

22. இருபத்திரண்டாந் தீர்மானம்:—

இங்கிலாந்தில் ஒரு கிளைச்சங்கம்.

ப்ரிட்டிஷ் ஜனஸபைக் கமிட்டியுடன் கலந்து இங்கிலாந் தில் இந்தியா விஷயங்களைப் பற்றிய அறிவைப் பரவச்செய் யும் பொருட்டாகப் பொதுக்கூட்டங்கள் ஏற்படுத்துமாறு ஒரு கிளைச்சங்கம் ஸ்தாபிக்கவேண்டுமென்றும், அதன்பொரு ட்டு நிதி சேகரிக்கவேண்டுமென்றும் இந்த ஜனஸபை தீர் மானிக்கிறது.

பதினைந்தாம் ஜனஸபைக் கூட்டத்தின்

சரித்திரம் முற்றிற்று.

பதினைத்தாம் அத்யாயம் முற்றிற்று.

ஜனஸபையின் சரித்திரம்

பதினேழாம் அத்தியாயம்.

16-ஆம் ஜனஸபையின் சரித்திரம்.

1900 வருஷம் டிஸம்பர்மாதம் 27-ஆம் தேதி முதல் மூன்று நாள் பாரத ஜனஸபை லாஹோர் நகரத்தில் கூடை பெற்றது. உபசார ஸமிதியின் அக்ராஸனபதி ஸ்ரீ காளி ப்ர ஸந்நராயர். ஜனஸபையின் ஸபா நாயகராக ஸ்ரீமான் என். ஜே. சந்தாவர்க்கார் வீற்றிருந்தனர்.

ஸபாநாயகர் ப்ரஸங்கத்தின் ஸாரம்.

ஸ்ரீமான் சந்தாவர்க்கார் செய்த உபந்யாஸத்தின் ஸாரம் பின் வருமாறு:—

"ஸ்ரீமான் ராயரே, உபசாரஸ்மிதியோரே, ஸ்வதேசி களே, என்னை இந்த கவுரவ ஸ்தானத்தில் ஏற்றியது பற்றி நெஞ்சார நன்றி செலுத்துகிறேன்.

1899-ஆம் வருஷப் பஞ்சம்.

சென்ற இரண்டு வருஷங்கள் அடுத்தடுத்து நடந்த பஞ் சத்தைப் போலே கொடுமையான பஞ்சம் இந்த தேசத்தில் எப்போதுமே நடந்தது கிடையாதென்று லார்ட் கர்ஜன் சொல்லுகிறார். பாரத ஜனஸபையின் இரண்டாங் கூட்டம் கல்கத்தாவில் 1886-ஆம் வருஷத்தில் நடந்தபோதே தேச ஜனங்களின் வறுமை பயங்கரமாக மிருதிப்பட்டு வருவதை எடுத்துக்காட்டி ஒரு தீர்மானம் செய்யப்பட்டது. இந்தப் பஞ்ச நிவர்த்திக்கு அதிகாரிகள் செய்து வரும் பிரயத்தனம் போதாது. இந்தியாவின் வருஷ வீனவு மொத்தம் 400 கோடி ரூபாய் மதிப்பாகிற தென்றும், எனவே விவசாயிகளில் ஒவ்வொருவனுக்கும் வருஷ வரும்படி மொத்தம் ரூ. 20 தான் ஆகிறதென்றும் லார்ட் கர்ஜன் கணக்கிட்டுக் கூறினர். இதில் ஒன்றரை ரூபாய் நிலத்தீர்வைக்கும், இன்னும் ஒன் றரை ரூபாய் சில்லரைத் தீர்வைகளுக்கும் போய் விடுகிறது. ஆகவே விவசாயிக்கு வருஷ வரும்படி ரூ. 17-க்கு மேலாக

வில்லை. இத்தனை குறைந்த வரவுக்குள் ஜீவனம் செய்யும் குடியானவர்களை மிக மிஞ்சிச் செலவு செய்வதனால் கெட்டுப் போனார்களென்று சில ஆங்கிலேயர் வாய்கூசாமல் சொல்லுகிறார்கள்.

நில வரி.

குடியானவர்கள் வட்டிக்குக் கடன் கொடுக்கும் செட்டிகளின் வசப்பட்டு நாச மடையாதபடி தக்ஷிணத்து விவசாயிகளின் நிவர்த்திச் சட்டமொன்று செய்யப் பட்டது. அதனால் குடியானவர்களுக்கு சொற்ப ஸௌகர்யமும் செட்டிகளுக்குக் கஷ்டமும் நேர்ந்ததே யன்றிப் பஞ்சம் தோன்றுவது நிற்க வில்லை. ஜனத்தொகை மிக மிஞ்சி ஏறிக்கொண்டு போவதாலும் குடியானவர்கள் விவாகம் முதலிய விசேஷக் காலங்களில் படாடோபமான செலவுகள் செய்வதனாலும் பஞ்சங்கள் வருவதாகச் சிலர் சொல்லுகிறார்கள். ஐரோப்பாவிலுள்ள தேசங்களில் நமது நாட்டைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு அதிக வேகமாகத் ஜனத்தொகை ஏறிச் சொல்லுகின்றது. விவாக முதலிய விசேஷ காலங்களில் செய்யப்படும் செலவு பெரும்பகுதி நகைகள் பண்ணுவதில் போகிறது. கஷ்டம் நேர்ந்த போது இந்த நகைகள் உபயோகப் படாவோ? ஆங்கிலேயக் குடியானவர்களைக் காட்டிலும் நம்முடைய குடியானவர்கள் அதிகச் செட்டுள்ளவர்களென்பதற்கு பலமான ஆதாரங்கள் இருக்கின்றன.

பஞ்சாப் நிலப் பெயர்ப்புச் சட்டம்.

ஸமீபத்தில் பஞ்சாபிலே நிலப் பெயர்ப்புச் சட்டமொன்று செய்யப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தை மற்ற மாகாணங்களுக்கும் ஏற்படுத்தப் போவதாகக் கேள்விப்படுகிறோம். குடியானவர் தமது நிலங்களை விற்கவும் அடைக்கவும் பாத்தியமில்லாமல் செய்யவேண்டுமென்பதே இந்தச் சட்டத்தின் நோக்கம். இதனால் குடியானவரை நிலத்துடன் கட்டிப்போடுவதாகிய பயன் கிடையுமேயன்றி அவர்களுடைய வறுமை தீராது. இதன் ஸம்பந்தமாக ஜெர்மானியக் கட்டுக் கதையொன்று ஞாபகம் வருகிறது. ஒரு குடியானவன் வீட்டில் பேய் குடி புகுந்த தாம். அந்தப் பேயைத் தூரத்தும் பொருட்டாக அவன் தன் வீட்டிலே தீயைக்கொளுத்திவிட்டான். வீடு எரிந்து தணிந்தது. சாம்பல் முதலிய சில ஸாமான்கள் மிஞ்சின. அந்தப் பேய் மேற்படி ஸாமான

களின் மீது வந்து நின்றுகொண்டு:—"இதோ பார்! நான் இன்னும் போகாமலிருக்கிறேன்" என்று சொல்லிற்றும். அது போலவே கவர்மென்டார் செய்துவரும் நில்லரை உபாயங்களில் அழியாமல் குடியானவர்களின் வறுமையாகிய பேய் மிஞ்சி நிற்கிறது.

லார்ட் கர்ஸான் கேள்வி.

"தேச முழுதிலும் 100-க்கு 25 பங்கு நிலத் தீர்வையைக் குறைத்துவிட்டால், பிறகு நாட்டில் பஞ்சமேனும் வறுமையேனும் மிஞ்சி யிராதென்று உங்களில் யாரேனும் உறுதி கூறமாட்டுவீர்களா?" என்று லார்ட் கர்ஜன் சென்னை மஹாஜன ஸபையாரை நோக்கிக் கேட்டார். அங்ஙனம் உறுதி கூறுதல் ஸாத்யமில்லை. ஆனால் கவர்மென்டார் புதிய திட்டத்தில் ஏற்பிய அளவு 100-க்கு 25 பங்கு நிலத் தீர்வையைக் குறைவு படுத்தினால் அந்த மட்டுக்குப் பஞ்ச நிவர்த்திச் செலவு குறையுமென்பதில் ஸந்தேஹமில்லை. தீர்வையை அடிக்கடி ஏற்றும் வழக்கம் குடியானவர்களுக்கு மிகுந்த பயத்தை விளைவிக்கிறது. த்ருஷ்டாந்தமாக பம்பாய் மாகாணத்திலுள்ள கல்பாண் தாலுகாவில் தோட்டப்பயிர் குறைந்துவிட்டதாகச் சென்ற நிலவரித்திட்ட அறிக்கையிலே கூறப்பட்டது. இரண்டாம் மாஸூல் இருப்பதாகக் காட்டினால் புதிய திட்டத்தில் தீர்வை ஏற்றப்படுமென்ற பயமே அங்ஙனம் தோட்டப் பயிர் குறைவு பட்டதன் காரணமென்று ஒரு நில அளவை உத்யோகஸ்தர் சொல்லியிருக்கிறார்.

கைத்தொழில்கள்.

கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யும் விஷயத்தில் ஜனத்தலைவர்களுக்கு அதிக சிரத்தையில்லை யென்பதாக லார்ட் கர்ஸான் சொல்லுகிறார். இது ஒருவாறு மெய்தான். ஆனால் நம்மூள்ளே கல்வி கற்ற பலர் கைத்தொழில் விஷயத்தில் இப்போது வாவர அதிக சிரத்தை காட்டி வருகிறார்கள். ஆனால் பம்பாய் யந்திரத் தொழிலின் மீது ராஜாங்கத்தார் சுங்கத் தீர்வை விதித்திருப்பதைப் பார்த்தால் ஐரோப்பியப் போட்டியை மீறி நமது நாட்டுக் கைத்தொழில்கள் பிழைக்கவேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கில்லை யென்பது தெளிவாக விளங்குகிறது.

அரசாட்சிச் செலவு.

மேலும் அரசாட்சிச் செலவு மிதமிஞ்சி நடைபெறுகிறது. 1883-84 வருஷத்துக்குப் பின் 1895-96 வரையுள்ள காலத்தில் ஜனத்தொகையின் விருத்தியளவைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமாக ஆட்சிச் செலவு மிகுதிப்பட்டிருக்கிறதென்று வெல்பி விசாரணைக் கூட்டத்தார் சொல்லியிருக்கிறார்கள். இங்ஙனம் கொடுமையான பஞ்சத்தில் ஜனங்கள் கஷ்டப்படும்போது ஆட்சிச் செலவை மிகுதிப் படுத்திக் கொண்டு போதல் நியாயமா? எப்படியேனும் இப்போது நடைபெறும் ராஜாங்க முறையைச் சீர்திருத்த முயலுதல் இந்த ஜனஸபையின் கடைமை." என்று சந்தாவர்க்கர் கூறினர்.

பதினாறாங் கூட்டத்தில் நடந்த வேறு விசேஷங்கள்:—

பஞ்சங்களைப் பற்றிய இரண்டாக் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகையில், ஜோஸப் பென் ஜமின்என்பவர் குஜராத்தில் பஞ்சத்தால் பீடிக்கப் பட்ட ஜில்லாக்களில் கலெக்டரும் கமிஷனரும் ஜனங்கள் தீர்வை செலுத்த சக்தியற்ற நிலைமையில் இருப்பதால் அவர்களிடம் தீர்வை வசூல் செய்யக் கூடாதென்று சொல்லியிருக்கவும் அதை மீறித் தீர்வை வசூல் செய்ய முயல்வதை எடுத்துக் கூறினர். பஞ்சாபில் பஞ்சம் பிடித்த ஜில்லாக்களில் ஒன்றாகிய ஹிஸ்ஸார் ஜில்லாவினின்று வந்த ஸ்ரீ சூடாமணி என்பவர் ஜனங்கள் ஸாஹூகார்களிடமிருந்து கடன் வாங்கி நிலத்தீர்வை செலுத்துகிறார்களென்று ஸாக்ஷ்யம் கூறினர்.

மூன்றாந் தீர்மானம் ராணுவ ஸம்பந்தமானது. அதனை ஆதரித்துப் பேசுகையில் ஸர்தார் மான் லிங் பாரதப் படைகளின் வீரத் தன்மையைப் புகழ்ந்துபேசியது மன்னித் தீர்மானிலும், பர்மாவிலும் ஆங்கிலேயருக்காக நம்மவர்கள் போர் செய்ததை எடுத்துக் கூறி, "இந்த ஸமயத்திலே கூட நம்மவர் ஆங்கில ராஜ்யத்துக்காகச் சீனத்தில் இரத்தம் சிந்துகிறார்கள்" என்றார்.

பிறகு ஸர்தார் குருசரண் லிங் அத் தீர்மானத்தை ஆமோதித்துப் பேசுகையில், சிப்பாய்ச் சண்டையின் போது டில்லி நகரத்தில் ஆங்கிலேயர் பெருங் கஷ்ட தசையில் இருந்த ஸமயத்தில் லிங் ஜாதிப் போர்வீரர் ஆனிவெயிலில் 22 நாட்களில் 580 மைல் தூரம் நடந்து சென்று, ஆங்கி

லேயரைக் காப்பாற்றின வியப்புக் குரிய செய்தியை எடுத்துக் கூறினர். அப்படி யிருந்தும் பின்னிட்டு லிக் ஜாதியாரை ஆங்கிலேயர் நம்பி ராணுவத்தில் உயர்ந்த பதவிகள் கொடுக் காமல் தாழ்ந்த படிகளில் வைத் திருப்பது பற்றி வியப்புப் பாராட்டினர்.

பாரதச்சரங்கங்களின் மசோதாவைக் கண்டனம் புரிந்து பேசியதாகிய 24-ஆம் தீர்மானத்தைப் பிரேரேபணை செய்து பேசுகையில் நம்மவர் ராஜரீகக் கிளர்ச்சிகளை விட்டு விட்டுக் கைத்தொழிலின் அபிவிருத்தியில் கருத்துச் செலுத்தினு லன்றி முன்னுக்கு வர முடியாதென்று சொல்வோரின் வார்த் தையை ஸ்ரீமான் பூபேந்தர நாதவஸு கண்டித் தெரிந்தார்.

"குடிகளின் உணவுப் பொருளான சர்க்கரையின்மீது வரி விதித்து, அன்னிய வியாபாரிகளுக்கு லாபம் எற்படுத்த விரும்பும் ராஜாங்கம் இந்த தேசத்தில் இருப்பது போல் வே றெங்கேனும் உண்டா? உள் நாட்டு யந்திர சாலைகளை நஷ்டப் படுத்தி அழித்து அன்னிய வியாபாரிகள் லாப மடையுமாறு செய்யவேண்டு மென்ற கொள்கை யுடைய ராஜ்யம் / இங் கிருப்பது போல் உலகத்தில் வேறெந்த நாட்டிலேனும் உளதா?, ராஜரீக விடுதலையில் லாவிட்டால் கைத்தொழில் ஸம் பந்தமான முயற்சிகள் ஈடேற மாட்டா" என்றார்.

தீர்மானங்கள்.

16-ஆம் ஜனஸபைக் கூட்டத்தில் செய்யப்பட்ட தீர்மா னங்கள் பின் வருமாறு :—

1. முதல் தீர்மானம் :—

ஜன ஸபை நிர்மாணத்தில் திருத்தம்.

பாரத ஜனஸபைக் கமிட்டியின் அமைப்பைப் பற்றிய 4-ஆம் விதி [1899-லக்கவ் 10-ம் தீர்மானத்தைக்காண்க] பின் வருமாறு திருத்தப்பட வேண்டுமென்று இந்த ஜனஸபை நிச்சயிக்கிறது:

"ஜனஸபையின் கார்யங்களை நிர்வஹிக்குமாறு பாரத ஜனஸபைக் கமிட்டியென்ற பெயர்கொண்ட ஸமிதி யொன்று நிருமிக்கப்படும். அதில் கீழே குறிப்பிட்ட உத்யோகஸ்த மெம்பர்களைத் தவிர இன்னும் ஜனஸபையால் தெரிந் தெடு

கப்பட்ட 45 மெம்பர்கள் இருப்பார்கள். அவர்களில் 40-பேர் வெவ்வேறு மாகாண ஸமிதியாராலும் மாகாண ஸமிதிகள் இல்லாத இடங்களில் ஜனஸபைக்கு வந்து கூடிய வெவ்வேறு மாகாணப் பிரதிநிதிகளாலும் பின் வரும் கணக்குப்படி சிபார்சு செய்யப்படுவர்.

மாகாணம்.		மெம்பர்கள்.
வங்காளம்	(அஸாம் உட்பட)	7
பம்பாய்	(ஸிந்த் உட்பட)	7
மதராஸ்		7
வடமேற்கு மாகாணங்கள்	(அயோத்தி உட்பட)	7
பஞ்சாப்		6
பேரார்		3
மத்ய மாகாணங்கள்		3

உத்யோக மெம்பர்களா வோர் ஜனஸபையின் ஸபா நாயகர்; அடுத்த ஸபைக்குத் தெரிந்தெடுக்கப்பட்ட ஸபாநாயகர் (தெரிந்தெடுத்த தேதிமுதல்); ஜனஸபையின் கார்யதர்சி; உதவிக்கார்யதர்சி; உபசாரகணத்தின் அக்ராஸனாதிபதி; அதனல் நியமிக்கப்பட்ட அதன் தார்யதர்சி.

பாரதஜனஸபைக் கமிட்டியின் மெம்பர்களுடைய உத்தியோகக் காலம் ஜனஸபையின் இரண்டு சாதாரணக் கூட்டங்களுக்கு இடைப்பட்ட காலமாகும்.

2. இரண்டாந் தீர்மானம்:—

இந்தியாவின் பொருள் நிலையைக்குறித்து விசாரணைசெய்ய ஒரு ஸமிதி.

இந்தியாவில் அடிக்கடி பஞ்சங்கள் நேர்வதையும்; ஒரு முறை அறுவடை தவறின போதிலும், ஜனங்கள் தாங்க மாட்டாமல் சோர்வு மீறுதிப்பட்டு வருவதையும்; இதனல் மனிதருக்குக் கஷ்டமும் உயிர்ச்சேதமும் கால் நடைகளின் சேதமும், விவசாயத் தொழில்களில் சிதைவும் ஏற்படுவதையும் கருதி கவர்ன்மெண்டார் சிக்ரத்தில் இந்தியா ஜனங்களின் பொருள் நிலைமையைக் குறித்து விசாரணை நடப்பித்து (இந்த நிலைமைக்குத்) தகுந்த நிவாரணங்கள் கண்டுபிடித்து அவற்றை அனுஷ்டிக்க ஏற்பாடு செய்யும்படி இந்த ஜனஸபை பிரார்த்திக்கிறது.

3. மூன்றாந் தீர்மானம் :—

ராணுவ உத்யோகங்களும் ராணுவக் கலாசாலைகளும்.

ஸாம்ராஜ்யத்தின் உதவிக்காக பாரதப் படைகள் உண்மையுடன் பாடுபட்டு வருவதை யெண்ணி, இந்த ஜனஸபை பின்வரும் சீர்திருத்தங்கள் செய்யும்படி ராஜாங்கத்தாரை மீளவும் ப்ரார்த்திக்கிறது:—

(க) உயர்தர ராணுவ உத்யோகங்கள் அவர்களுக்குத் திறக்கப் படவேண்டும்.

(உ) இந்தியாவில் ராணுவக் கலாசாலைகள் ஸ்தாபித்து அவற்றில் சட்டப்படி பாரத ஸ்வதேசிகளாயோருக்குக் கல்வியும் பாரத ஸேனையில் அவரவர் திறமைக்கும் பயிற்சிக்கும் தக்கபடி ஸன்னது பெற்ற அல்லது பெறாத உத்யோகஸ்தராக நியமனம் பெறத்தக்க பயிற்சியும் கொடுத்தல் வேண்டும்.

4. நான்காந் தீர்மானம் :—

நீதி நிர்வாஹ அதிகாரங்களைப் பிரித்தல்.

[லக்நவ் 1899-15 ஆம் ஜனஸபைக் கூட்டத்தின் முதல் தீர்மானப்படி.]

5. ஐந்தாந் தீர்மானம் :—

பாரத ஸ்வதேசிகளுக்கு உயர்தர உத்யோகங்கள்.

போலீஸ் (காவல்), மராமத்து, ராஜாங்க ரயில், அபினி, சுங்கம், தந்தி, நில அளவை முதலிய இலாகாக்களில் உயர்தர உத்யோகங்களி னின்றும் பாரத ஸ்வதேசிகளை விலக்கி யிருப்பது கண்டு இந்த ஜனஸபை வருத்தப் படுகிறது. இந்த உத்யோகங்களின் விஷயத்தில் பாரத தேசத்தாரின் உரிமைகளுக்கு முழு நியாயம் செலுத்தப் படவேண்டுமென்று இந்த ஸபை பிரார்த்திக்கிறது.

6. ஆறாந் தீர்மானம்:—

இந்தியப் பட்டதாரிகளும் ஸர்வகலா ஸங்கத்தில் ஸபிக பதவியும்.

கல்கத்தா ஸர்வகலா ஸங்கத்தில் பட்டதாரிகள் பட்டம் பெற்ற சில வருஷங்களுக்கப்பால் ஸபிகரைத் தெரிந்தெடுக்கலாமென்ற உரிமையை இப்போது விலக்கிவைத்திருப்பதை

யும், பஞ்சாப் ஸர்வகலா ஸங்கத்து ஸெனேட் கணக்தார் ஸபிகர்களைத் தெரிந்தெடுக்கும் விஷயமாக ஷி ஸர்வகலா ஸங்க நிர்மாணத்தில் கூறப்பட்ட விதிகள் நிறைவேற்றப்படா மலிருப்பதையும் கண்டு இந்த ஜனஸபை பரிதாபப்படுகிறது. செம்மையான கல்வி முறைமையை வேண்டினால் பாரத ஸர்வ கலா ஸங்கங்களின் பட்டதாரிகள் அவற்றுக்கு ஸபிகரைத் தெரிந்தெடுக்கும் உரிமை வழக்கத்தில் இல்லாத இடங்களில் அதை ஏற்படுத்தவேண்டுமென்றும், உள்ள இடங்களில் அதை விசாலப்படுத்தவேண்டு மென்றும் இந்த ஸபை கருது கிறது.

7. ஏழாந் தீர்மானம்:—

லார்ட் கர்ஸானுக்கு நன்றி.

பஞ்சநிவர்த்தி விஷயத்தில் லார்ட் கர்ஸான் அனுஷ்டித்த முறைமையின் உதார குணத்தைக் கருதியும், ஐரோப்பிய சிப்பாய்கள் தப்பாக்கி சட்ட அனுமதிகொடுக்கும் விஷயமாக ஸமீபத்தில் அவர்செய்த உத்தரவுகள்; ரங்கூன், ஹைதரா, வழக்குகளில் அவர் நடத்திய கார்யங்கள்; இவை போன்ற திருஷ்டாந்தங்களால் அவர் நீதியையும் ஒழுங்கையும் பரிபா லிப்பதில் காட்டிவரும் ஸ்திர நிச்சயத்தைக் கருதியும், இந்த ஜனஸபை அவருக்கு நன்றி செலுத்துகிறது.

8. எட்டாந் தீர்மானம்:—

தொழிற் கல்வி.

[லக்நவ்-1899 15-ஆம் கூட்டத்தின் 16-ஆம் தீர்மானப்படி.]

9. ஒன்பதாந் தீர்மானம்:—

பேரார் மாகாணத்தின் ஆட்சி.

[லக்நவ்-1899-15-ஆம் கூட்டத்தின் 18-ஆம் தீர்மானப்படி.]

பலதிரட்டு.

10. பத்தாந் தீர்மானம்:—

(க) ஆயுதச்சட்டத் திருத்தம் [அமராவதி 1897-13-ஆம் கூட்டம் 4-ஆம் தீர்மானம் 1 பகுதி (2) ஆம் கூ.]

(உ) ஸ்வேச்சைக் காப்புப் படை [அம. 1897-13-4-i-(ஈ).]

(ங) ஐரோப்பிய யூரேஷிய உத்யோகஸ்தருக்குப் பரி வர்த்தன ஈஷ்ட ஈடு கொடுக்கக் கூடாது. [அம 1897-13-4-i-(ஞ)]

(ச) பஞ்சாப் மாகாணத்துக்கு ஹைகோர்ட் [அம-1897-13-4-i-(எ)]

(க) ii கல்வியிலாகாத் திருத்தம் [கல்கத்தா 1896-12-ஆம் கூட்டம் 6-ஆம் தீர்மானத்தைக் காண்க.]

(உ) உப்பு வரியைக் குறைத்தல் [12-ஆம் கூட்டம் 8-ம் தீர்மானத்தைக் காண்க.]

(ஞ) வைஸ்ராய் ஸபையில் மத்ய மாகாணங்களுக்கு ஜனங்களால் நியமிக்கப்பட்ட ப்ரதிநிதி வேண்டு மென்பது [12-ஆம் கூட்டம் 19-ஆம் தீர்மானம்.]

(ச) அஸாம் தொழிற் சட்டங்களின் திருத்தம் [12-ஆம் கூட்டம் 15-ஆம் தீர்மானம்.]

(க) iii ஜமீரி விசாரணையைப் பரப்புதல் [கல்கத்தா-1896-12-ஆம் ஜன ஸபைக்கூட்டம் 7-ஆம் தீர்மானம்.]

(உ) ஜமீர்களில் பாதிப்பேர் ஸ்வதேசிகளாக இருக் கும்படி கேட்கும் உரிமை வேண்டுமென்பது [மதராஸ்-1898 14-ம் ஜனஸபைக் கூட்டத்தின் 20-ஆம் தீர்மானம் iii (ஞ)]

(ஞ) காட்டிலாகாத் திருத்தம் [14-ஆம் ஜனஸபைக் கூட்டம்; 20-ஆம் தீர்மானம் iii (ஊ)]

(ச) வருமான வரிச் சட்டத் திருத்தம் [புனா-1895-11-ஆம் கூட்டம் 22-ஆம் தீர்மானம் (க)]

(ஞ) ஸமகாலப் பரீக்ஷைகள் [லக்நவ்-1899-15-ஆம் கூட்டம் 14-ஆம் தீர்மானம் (ஞ)]

11. பதினொன்றாந் தீர்மானம்:—

இந்தியாவுக்கு ப்ரிட்டிஷ் பொக்கசத்திலிருந்து கொடுக்கும் தொகை.

இந்தியாவின் செலவு விஷயமாக ராஜ (நியமித) விசாரணைக் கூட்டத்தாரில் பெரும்பகுதியார் செய்த சிபார்சுகளின்படி ப்ரிட்டிஷ் பொக்கசத்திலிருந்து இந்தியாவின் பொக்கசத்திற்கு வருஷந்தோறும் 2,57,000 பவுன் கொடுப் பதாக வாக்களித்திருப்பதுபற்றி இந்த ஜனஸபை நன்றி

தெரிவிப்பதுடன் அவ்விசாரணைக் கூட்டத்தால் அங்கீகரிக்கப்படும் அளவேனும் இந்தியாவுக்கு நியாயம் செலுத்த விரும்பினால், இந்தக் கணக்கில் சென்ற பல வருஷங்களாக இந்தியாவுக்குச் சேரவேண்டிய பாக்கிகளையும் கொடுத்துவிட வேண்டுமென்று இந்த ஜனஸபை பார்லிமென்ட் ஸபையை வேண்டுகிறது.

12. பன்னிரண்டாந் தீர்மானம் :—

கைத்தொழில், கல்வி விஷயங்களைப்பற்றி ஜனஸபையின் உபஸமிதிகள்.

தேசத்தின் கைத்தொழில் விஷயங்களையும் கல்வி விஷயங்களையும் பற்றி ஆராய்ச்சி செய்யவும் வாதிக்கவும் ஜனஸபையின் ஒவ்வொரு வருஷாந்தக் கூட்டத்திலும் அரைகாலேனும் செலவிட வேண்டுமென்று பாரத ஜனஸபை ஸமிதியார் இக்கூட்டத்தின் முன்னேசெய்த சிபாரிசை இந்த ஜனஸபை அங்கீகரிக்கிறது. மேலும் வருஷந்தோறும் ஜனஸபையினால் இரண்டு ஸமிதிகள் நியமிக்கப்பட வேண்டுமென்றும், அவற்றுள் ஒன்று கல்வியைப் பற்றியும், மற்றொன்று கைத்தொழிலைப் பற்றியுமாக வேண்டுமென்றும்; அந்த ஸமிதிகளின் நோக்கம் தேசத்தில் கல்விவிருத்தியும் கைத்தொழில் விருத்தியும் ஏற்படுதற்குரிய வழிகளை ஆராய்ச்சி பண்ணிக் கூறுதலும் அதற்குரிய உதவிகள் புரிதலுமே யாகுமென்றும், இரண்டு ஸமிதிகளுக்கும் வருஷந்தோறும் ஒரு காரியதர்சி நியமிக்கப்பட வேண்டுமென்றும், இந்த ஸமிதிகள் தம்மைத் தாமே மாகாண ஸமிதிகளாக வருத்துக்கொள்ளவும் தம்முடைய ஸபிகளின் தொகையை மிகுப்படுத்திக் கொள்ளவும் அவற்றுக்கே அதிகார முண்டென்றும் இந்த ஜனஸபை தீர்மானிக்கிறது.

13. பதின்மூன்றாந் தீர்மானம் :—

லார்ட் கர்ஸானுக்கு மனு.

மேழே குறிப்பிட்ட கனவான்கள் சேர்ந்த கூட்டம் வைஸ்ராய் லார்ட் கர்ஸானை நேரே கண்டு பின்வரும் மனுவைக் கொடுத்து வரும்படி இந்த ஜனஸபை நியமிக்கிறது.

கணம்.

பிரோஸ்ஷா மேத்தா; உமேச சந்த்ர பானர்ஜி; பி. அநந்தா சார்லு; ஸுரேந்த்ர நாத் பானர்ஜி; முன்ஷி மாத

வலால் ; R. N. முதோல்கார் ; ரஹிமதுல்லா மஹமது ஸயானி ; ஹர்கிஷன்லால்.

மனு.

பிரபுவே, சென்ற டிஸம்பர் மாஸத்தில் லாஹோர் நகரில் நடந்த பாரத ஜன ஸபையின் 16-ஆம் கூட்டத்தில் சேர்ந்த பிரதிநிதிகளின் சார்பாக, நாங்கள், நிர்வாஹ ஸபை கூடிய தங்களுடைய கவனத்துக்கு மேற்படி ஜனஸபையில் முடிவு செய்யப்பட்ட தீர்மானங்களைக் கொண்டு வருவது மன்றி விசேஷமாக இந் நாட்டார் மனதை நெடுங்காலமாக அலைத்து வரும் பின்னே கூறப்படுகிற விஷயங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். இவற்றுக்கு அனுகூலமான தீர்ப்பு விரைவிலே கிடைக்கவேண்டு மென்பது ஜனஸபையின் கருத்தாம்.

(க) நீதி, நிர்வாஹ அதிகாரங்களைப் பிரித்தல் மிகவும் விரும்பத் தக்கதென்ற விஷயம் இப்போது பொதுப்படையாக நன்கு அங்கீகரம் செய்யப்பட்டிருக்கிறது. இவ்விஷயத்தில் உத்யோகஸ்தர், அல்லாதார், என்னும் இருதிறத்தாரும் பலமான அபிப்பிராய ஒற்றுமை காட்டியிருக்கிறார்கள். நாட்டின் ஆட்சியில் ஜனங்கள் மிக விரும்பும் இச் சீர்திருத்தத்தை ராஜாங்கத்தார் தயவுடன் விரைவில் நிறைவேற்றுவார்களென்று நம்புகிறோம்.

(உ) தேசத்தின் பெரும்பகுதியில் குடியானவர்களின் வறுமை மிகுதிப்பட்டு வருதலும், வறட்சியோ, பஞ்சமோ, தோன்றியவுடனே ராஜாங்கத்தார் அல்லது ஸமான்யர் செய்யும் தர்ம ஸஹாயம் இல்லாவிடின் அவர்கள் பிழைக்கத் திறமையின்றி யிருத்தலும் மற்றொரு ஸங்கடமான விவகாரம். ராஜாங்கத்தார் இவ்விஷயத்தில் ஆழ்ந்த கவனம் செலுத்தி வருகிறார்களென்பது மனுதார்களுக்கு நன்றாகத் தெரியும். எனவே, இக்கொடிய வறுமையைத் தணிக்கவும் விளைவு குறைவான வருஷங்களிலும், பஞ்ச வருஷங்களிலும் கஷ்டத்தை இன்னும் திறமையுடன் குடியானவர் தாங்கும்படி செய்யவும் தக்க மருந்தொன்று ராஜாங்கத்தாரால் கண்டு பிடிக்கப்படுமென்று நம்புகிறோம்.

(ஸ) ஸமீபப் பஞ்சங்களால் குடியானவர் வீழ்ந்திருக்கும் நிலையைக் கருதி, அவர்களுடைய வறுமை வளர்ச்சியும்

பந்தமான விசாரணை ஸ்வாதீனமானதொரு விசாரணைக் கூட்டத்தாரால் நடப்பிக்க வேண்டுமென்று விரும்புகிறோம்.

14. பதினான்காம் தீர்மானம் :—

பஞ்சாபைப் பொது விதி மாகாண மாக்குதல்.

(பாரத ராஜ்ய நிர்மாணம்) பொது விதிக்குட்பட்ட மாகாணமாகப் பஞ்சாபை மாற்றுவதற் குரிய காலம் வந்துவிட்ட தென்று இந்த ஜனஸபை வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறது.

15. பதினைந்தாந் தீர்மானம்.—

இந்தியாவில் சாராய வியாபாரம்.

லாஹிரி வஸ்துக்களின் உபயோகம், விசேஷமாக மதபானம், இந்நாட்டில் மிகவும் விரைவாக அதிகப்பட்டு வருவதைக் கண்டு இந்த ஜனஸபை மிகுந்த பயமும் வருத்தமும் அடைகிறது. சாராயங்கள் எளிய விலைக்குக் கிடைப்பதே இதன் ஒரே காரண மாதலால், அமெரிகாவில் செய்த "மெய்ன் மதச் சட்டம்", ஸ்காட்லிப்ரிட் லாஸனுடைய "அனுமதி மசோதா", "ஸ்தலத்தார் இஷ்டச்சட்டம்" இவைபோன்ற சட்ட விதிகளை இந்நாட்டில் நிறைவேற்றும் படியாகவும், மருந்தாக உபயோகப்படாத லாஹிரி வஸ்துக்களின் மீது அதிகத் தீர்வை விதிக்கும்படி யாகவும் இந்த ஸபை இந்தியா ராஜாங்கத்தாரை மிகவும் ஆவலுடன் ப்ரார்த்தனை செய்து கொள்ளுகிறது. இக்காரியங்களை ராஜாங்கத்தார் உடனே செய்யாவிட்டால் குடித்தல் வழக்கப்பட்டிருக்கும் வகுப்பினருக்குள்ளே அறம், பொருள், உடம்பு வலிமை மூன்றுக்கும் மேன்மேலும் அழிவு நிச்சயமாக நேருமென்ற தனது பலமான கொள்கையை இந்த ஜனஸபை தெரிவித்துக் கொள்கிறது. தொழிலாளிகளின் பெருங் கூட்டத்தை லாஹிரி வஸ்துக்கள் ஏற்கெனவே தீண்டி விட்டபடியால் இந்தியாவின் தொழில்களையும் கலைகளையும் வளர்க்கவேண்டுமென்று ராஜாங்கத்தார் கொண்டிருக்கும் நல்லெண்ணம் பலனின்றிப் போய்விடும். இவ் விஷயத்தை ஜனஸபை மிகவும் முக்யமாகக் கருதுகிறது. இதற்கும் தேசத்தின் பொருள் விருத்திக்கும் நெருங்கிய தொடர்புளதென்று கம்புகிறது. ஆதலால் சாராயங்களை எளிய விலைக்கு விற்றல் முதலிய கார்யங்களை இந்த ஸபை பலமாகக் கண்டனம் செய்கிறது.

16. பதினாறாந் தீர்மானம் :—

W. S. கேய்னுக்கு மகிழ்ச்சி யறிவித்தல்.

W. S. கெய்ன் பார்லிமென்ட் மெம்பர் ஸ்தானம் பெற்றிருப்பது பற்றி அவருக்கு இந்த ஜனஸபை மனப்பூர்வமான மகிழ்ச்சி யுரை கூறுவதுமல்லாமல் அவர் பாரத ஜனங்களுக்கு உண்மையான நண்பரென்பதையும் நம்முடைய விசேஷ நலங்களைக் கருதி உழைப்பவரென்பதையும் கருதி அவரிடம் நம்பிக்கை தெரிவிக்கிறது.

17. பதினேழாந் தீர்மானம் :—

ப்ரிட்டிஷ் கமிட்டிச் செலவுகள்.

ப்ரிட்டிஷ் கமிட்டியின் செலவுகளுக்கும் "இந்தியா" பத்திரிகையின் செலவுக்கும் 30,000 ரூபாய் கொடுக்கவேண்டுமென்று இந்த ஜனஸபை தீர்மானிக்கிறது.

18. பதினெட்டாந் தீர்மானம் :—

தச்சிலாகா.

பாரத மாதாமத் திலாகாவின் தச்சுக்கிளையில் "கூப்பர் மலைப் பள்ளிக்கூட"த்தின் மூலமாக நியமன மடையப் பயிற்சி பெறக்கூடிய இந்தியர்களின் தொகை வருஷத்தில் இரண்டு பேருக்கு மேலே போகக் கூடாதென்று விதிக்கும் புதிய விதிகளை இந்த காட்டாருக்கு நியாயம் செய்வது கருதி ஒழித்து விடவேண்டுமென்றும்;

மஹாராணியின் குடிகள் எல்லோருக்கும் ஸமதையாக அக்கலாசாலைகள் பயன்படவேண்டுமென்றும்;

மேலும், ஸூர்க்கி கலாசாலை ஸம்பந்தமான நியமனங்களின் விஷயத்தில் இந்தியருக்கும் ஆங்கிலோ இந்தியருக்கு மிடையே செய்யப்படும் அநியாயமான பக்ஷபாதங்களை ஒழித்து விடவேண்டுமென்றும் தேசத்தின் எல்லாப் பகுதிகளிலுமுள்ள மஹாராணியின், இந்தியக் குடிகளுக்கு அவ்வுத்தியோகங்கள் கிடைக்கும்படி செய்யவேண்டுமென்றும் இந்த ஜனஸபை கருதுகிறது.

19. பத்தொன்பதாந் தீர்மானம் :—

லண்டனிலுள்ள ஜனஸபையின் போருட்டாக உழைப்போ
ருக்கு நன்றி.

இந்த தேசத்துக்கும் ஜனஸபையின் முயற்சிக்கும் ஸர் வில்லியம் வெடர்பர்ன்; காதாபாய் நவுரோஜி; A. O. ஹ்யூம் என்போர் செய்துவரும் நன்மைகளின் பொருட்டாக இந்த ஜனஸபை தனது மனப்பூர்வமான நன்குமதிப்பையும் நன்றி யுணர்வையும் அறிவிப்பதுமல்லாமல் ஸர் வில்லியம் வெடர்பர்ன். பார்லிமென்ட் ஸபையினின்றும் விலகிவிட்டது பற்றி மிக வருத்தப்படுகிறது. அந்த ஸபையில் அவர் இங்கிலாந்துக் கும், இந்நாட்டுக்கும் மிகவும் நன்குமதித்தற்குரிய பெருங் காரியங்கள் செய்தாராகையால், பாரத ஜனங்களுக்கு அவர் அன்பால் இயற்றிய நற்செயல்களே இன்னும் தொடர்ந்து நடத்தும் வண்ணமாக அவர் விரைவில் பார்லிமென்ட் ஸபைக் குத் திரும்பி வருவாரென்று இந்த ஜனஸபை நம்புகிறது.

20. இருபதாந் தீர்மானம்:—

தென் ஆபிரிகாவில் இந்தியரின் குறைகள்.

தென் ஆபிரிகாவிலுள்ளப்ரிட்டிஷ் இந்தியரின்குறைகளை இந்தியா மந்திரி, இந்தியா கவர்ன்மென்டார்களின் கவனத் திற்கு இந்த ஸபை மீளவும் காட்டுகிறது. இப்போது அந்தக் கண்டத்தின் எல்லைகள் மாறி இதுவரை போயர்க் குடியரசு களாக இருந்த நாடுகள் இப்போது ப்ரிட்டிஷ் ராஜ்யத்துடன் சேர்க்கப்பட்டிருப்பதால், இதுவரை அந்நாட்டினரின் ஸ்வாதீ னத்தால் அங்கு மஹாராணியின் கவர்ன்மென்டாரால் நிவர்த்தி செய்ய இடமில்லாமலிருந்த பாரதக் குடியேற்றத்தாரின் உரிமைக் குறைவுகள் இனி இரா வென்றும்; வேறு பல சட் டங்களினிடையே விசேஷமாகக் "குடிபுகுவதைத் தடுக்கும் விதிகளாலும், வியாபாரிகளுக்கு அனுமதிச்சிட்டுக்கள் கொடுப் பதைப்பற்றிய சட்டத்தாலும்" நேரும் கஷ்டத்தை (மேற்படி சட் டங்கள் ப்ரிட்டிஷ் ராஜ்யநிர்மாணத்தின் மூலக் கொள்கைகளுக் கும் 1858-ஆம் வருஷத்து மஹாராணியின் ஸ்ரீமுகத்துக்கும் தெளிவாக விரோத மாதலால் மேற்படி கஷ்டத்தை) முழுதும் நிவர்த்திசெய்யவேண்டும், தணிக்கவேனும் வேண்டுமென்றும்; இந்த ஜனஸபை விரும்புகிறது.

21. இருபத்தொன்றாந் தீர்மானம் :—

விவசாய உண்டிகளைப்பற்றிய ஸமிதியில் பாத ஸபிகர்.

இந்தியாவில் விவசாய பாங்கிகள் ஏற்படுத்துவதன் ஸம்பந்தமாக ஸமீபத்தில் சமைக்கப்பட்ட கமிட்டியில் வெவ்வேறு மாகாணப் பிரதிநிதிகளான திறமைகொண்ட இந்திய மெம்பர்களை நியமிக்கவேண்டுமென்று இந்த ஜனஸபை வணக்கத்துடன் சிபாரிசு செய்கிறது.

22. இருபத்திரண்டாந் தீர்மானம் :—

(9) பகூஜீ ஜேஷ் ராம் மரணம்.

பல வருஷங்களாக ஜனஸபைக்கு மிகவும் உறுதியான பொறுப்பாளிகளில் ஒருவராக இருந்து தமது மரணத்தில் அதற்கு அரிய தொண்டுகள் செய்தவராகிய பகூஜீ ஜேஷ் ராம் என்பவரின் மரணத்தால் சேர்ந்த சஞ்சலத்தைக் குறித்து இந்த ஜனஸபை மிகவும் வருத்தப்படுகிறது.

23. இருபத்து மூன்றாந் தீர்மானம் :—

விவசாய நிலையும் சாகுவதத் திட்டமும்.

விவசாயிகளின் க்ஷேமத்தையும் ஜீவனதாரங்களையும் நிலத்தீர்வையின் தற்கால முறை எங்ஙனம் தீண்டுகிறதென்பதை ஆராய்ச்சி செய்யவேண்டுமென்ற கருத்துக் கொண்டிருப்பதை பற்றி இந்த ஜனஸபை ராஜாங்கத்தாருக்கு நன்றி தெரிவிக்கிறது. அங்ஙனம் செய்யப்போகிற ஆராய்ச்சியில் தீர்வைத் திட்டத்தை அடிக்கடி மாற்றும் விஷயத்தையும், அதை சாசுவத மாக்குதல் அவசியமென்று ஜனஸபை கருதுவதையும் சேர்த்து விசாரித்தல் தகும். மேலும், 1900 டிஸம்பர் 22-ஆம் தேதி இந்தியா கெஜட்டில் ப்ரசுரம் செய்யப்பட்ட இந்தியா கவர்ன்மென்டாரின் (கிலவரி, விவசாய இலாகா) தீர்மானத்தில் 4-ஆம் அதிகாரத்தில் குறிப்பிட்டபடி இவ்விஷயமாக மாகாண ராஜாங்கத்தாரிட மிருந்து கிடைக்கக் கூடிய அபிப்பிராயங்களை ப்ரசுரம் செய்யவேண்டும். அத் தீர்மானத்தின் நியமங்களின்படி அவ்விஷயத்தைக் குறித்து மேல் விசாரணை செய்தல் அவசியமா இல்லையா என்பதை முடிவு செய்யுமுன்னே ஜனங்கள் அதைப்பற்றித் தமக்குள்ள கருத்தை வெளியிட இடங்கொடுக்கவும் வேண்டுமென்று இந்த ஜனஸபை விரும்புகிறது.

24. இருபத்து நான்காம் தீர்மானம் :—

பாரதச் சுரங்கங்களின் மசோதா.

பாரதச் சுரங்கங்களின் மசோதாவில் தொழிலாளிகளை நியமிப்பதில் வரையறைகள் செய்யும் நியமங்களை அழித்து விடவேண்டுமென்றும், அதிலுள்ள தண்ட நியமங்கள் இன்னும் ஐந்து வருஷகாலம் அனுஷ்டானத்துக்கு வரக்கூடாதென்றும், இதனிடையே இச்சட்டத்தின்படி நியமனமடைய இளைஞர் பயிற்சி பெறும் வண்ணமாகத் தக்க ஸ்தலங்களில் சுரங்கத் தொழிற் பாடசாலைகள் ஏற்படுத்த வேண்டுமென்றும் இந்த ஜனஸபை மரியாதையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறது.

25. இருபத்தைந்தாம் தீர்மானம் :—

(க) ஜனஸபையின் பொதுக்கார்ய தர்சிகள்.

வரும் வருஷத்துக்குப் பொதுக்கார்ய தர்சியாக A. O. ஹ்யூமையும், உதவிப் பொதுக்கார்யதர்சியாக தி. எ. வாச்சாவையும் இந்த ஜனஸபை நியமிக்கிறது.

(உ) பாரத ஜனஸபை ஸமிதி.

1901 வருஷத்துக்கு பாரத ஜன ஸபையின் ஸமிதியாராகப் பின்வரும் கனவான்களை இந்த ஸபை நியமிக்கிறது.

உத்யோக மெம்பர்கள்.

(1) உமேச சந்த்ர பானர்ஜி (1885-ஸபா நாயகர்)

(2) தாதாபாய் நவுரோஜி (1886.....)

(1887 வருஷத்து ஸபா நாயகரான தியாப்ஜி பம்பாய் ஹைகோர்ட் ஜட்ஜியாய் விட்டார்.

1888 வருஷத்து ஸபா நாயகரான ஆல்ப்ரெட் பூல் இறந்து போனார்.)

(3) ஸர் வில்லியம் வெடர்பர்ன் (1889)

(4) பிரோஸ்ஷா மேத்தா (1890)

(5) பி. அநந்தாசார்லு (1891)

(1892-ல் உமேச சந்த்ர பானர்ஜியும், 1893-ல் தாதாபாய் நவுரோஜியும் இரண்டாமுறை ஸபா நாயகராயினர்.)

(6) ஆல்ப்ரெட் வெப் (1894)

(7) ஸுரேந்த்ர நாத் பானர்ஜி (1895)

(8) ரஹிமதல்லா மஹமது ஸயானி (1896)
(9) சங்கரன் நாயர் (1897)
(10) ஆனந்த மோஹன் போஸ் (1898)
(11) ரமேச சந்த்ர தத்தர் (1899)

N. G. சந்தரவர்க்கர் (1900) (பம்பாய் ஹைகோர்ட்ஜட் ஜியாய் விட்டார்.)

(12) தீ. எ. வாச்சா (பொதுக்கார்யதர்சி)
(13) ஆல்ப்ர்ட் நந்தி (உதவிக் கார்யதர்சி)
(14) கல்கத்தா உபசார ஸபி ஸபாநாயகர்.
(15) கல்கத்தா கார்யதர்சி.
(16) 1901 வருஷத்து ஸபைக்கு ஸபாநாயகராகத் தெரிந்தெடுக்கப் படுவோர்.

பொது ஜாப்தா.

(1) ஜே. கோஷால்.
(2) பண்டித விசுவாம்பர நாத்
(3) R. N. மூதோல்கார்
(4) வி. விஜயராகவாசாரியார்
(5) W. A. சேம்பர்ஸ்

பம்பாய்.

(1) ருஸ்தம்காமா.
(2) தாஜி அபாஜி கரே
(3) C. H. ஸேதல்வாட்
(4) கோபால கிருஷ்ண கோகலே
(5) பால கங்காதர திலகர்
(6) R. P. கார்மகர்
(7) தஹல்ராம் கேஷம்சந்த்

வங்காளம்.

(1) வைகுண்டநாத் ஸேன்
(2) ஸாளிக்ராம் ஹிங்
(3) அம்பிகா சரண் மஜும்தார்
(4) மதிலால் கோஷ்
(5) யதிந்த்ர நாத் செளதரி
(6) பூபேந்த்ர நாத் வஸு
(7) பருதிவீச சந்த்ர ராய

ஐக்கிய மாகாணங்களும் அயோத்தியும்.

(1) மூன்ஷி மாதவ் லால்
(2) மதன் மோஹன் மாளவியர்
(3) விஷ்ணு நாராயண தார்
(4) மூன்ஷி கங்காப்ரஸாத் வர்மா
(5) S. லிம்ஹா.
(6) பண்டித் ப்ருத்விநாத்
(7) ஹபீஸ் அப்துல் ரஹீம்

சென்னை.

(1) பி. ரங்கய்யா நாயுடு
(2) ஜீ. சுப்பிரமணிய அய்யர்
(3) நவாப் ஸய்யத மஹமது பஹதூர்
(4) பி. ராமசந்த்ர பிள்ளை
(5) சைரு கம்பியார்
(6) பி. கேசவ பிள்ளை
(7) ஜி. ஸ்ரீனிவாஸ ராவ்

பேரார்.

(1) M. V. ஜோஷி
(2) தேவராவ் விநாயக்
(3) கணேச ஸ்ரீ கிருஷ்ண கபர்தே

மத்ய மாகாணங்கள்.

(1) பூப குட்வாடா
(2) கிருஷ்ண ராவ் வாமன
(3) ராவ்ஜீ கோவிந்த்

பஞ்சாப்.

(1) பாபு காளிப்ரஸந்ந ராய்
(2) லாலா ஹர்கிஷன் லால
(3) பாதப் ராம தயாள்
(4) லாலா லாஜ்பத் ராய்
(5) லாலா தர்மதாஸ் ஸூரி
(6) லாலா கன்னைய லால்

(ந) பின்வரும் கனவான்கள் 1901-ஆம் வருஷத்துக்கு தொழில் ஸமிதியின் ஸபிகர்களாகவும், ஹர் கிஷன் லால் கார்யதர்சியாகவும் இருக்கும்படி இந்த ஜன ஸபை நியமிக்கிறது.

வங்காளம்.

(1) வைகுண்ட நாத் ஸேன்
(2) மன்மத நாத் ராய் சௌதுரி
(3) புலின விஹாரி ஸர்க்கார்
(4) ராதாரமண் கார்
(5) ஜே. சௌதுரி
(6) பூபேந்த்ர நாத் வஸு
(7) அக்ஷய குமார் மைத்ரா
(8) ககனேந்த்ர நாத் டாகோர்
(9) மோஹினீ மோஹன் சக்ரவர்த்தி
(10) அக்ஷய குமார் மஜும்தார்
(11) காளீ ப்ரஸந்ந காவ்ய விசாரதர்
(12) லலித சந்த்ர ஸேன்
(13) ப்ரமத கோவிந்த சௌதுரி
(14) தாராபத பானர்ஜி

ஐக்கிய மாகாணங்களும் அயோத்தியும்.

(1) பன்ஸீ லால் ஸிங்
(2) கங்கா ப்ரஸாத் வர்மா
(3) எஸ். ஸிம்ஹர்
(4) கே. பி. வாஸக்
(5) விபின விஹாரி வஸு
(6) மதன் மோஹன் மாளவீயர்

மத்ய மாகாணங்கள்.

(1) ராவ்ஜீ கோவிந்த்

பஞ்சாப்.

(1) ஹரி கிஷன் லால்
(2) லாஜ்பத் ராய்
(3) பாலக் ராம்
(4) திவாரகா தாஸ்
(5) காஷி ராம்

(6) தனீ சந்த்
(7) லால் சந்த்
(8) ப்ரபு தயாள்

பம்பாய்.

(1) பண்டித G. கஜர்
(2) ஜெ. என். தாத்தா
(3) ஜீ. எ. வாச்சா

சென்னை.

(1) வி. சங்கரன் நாயர்
(2) ஜீ. சுப்பிரமணிய அய்யர்
(3) பி. கேசவ பிள்ளை
(4) அச்யுத மேனன்
(5) டி. ரங்காசாரி
(6) பி. ரத்ன ஸபாபதி பிள்ளை
(7) வி. வேங்கட ரத்னம்

பேரார்.

(1) D. V. பாகவத்
(2) R. N. முதோல்கார்
(3) தேவராவ் விநாயக்
(4) கணேச நாகேச

(ச) பின்வரும் கனவான்கள் 1901-ஆம் வருஷத்துக் கல்வி ஸமிதியாராகவும் ஹர்கிஷன் லால் அதன் கார்பதர்சி யாகவும் இருக்கும்படி இந்த ஜனஸபை நியமிக்கிறது.

வங்காளம்.

(1) ஆனந்த மோஹன வஸு
(2) ஸுரேந்த்ர நாத பானர்ஜி
(3) நீலரத்ன ஸர்க்கார்
(4) ஹேரம்ப சந்த்ர மைத்ரா
(5) அசுவினி குமார தத்
(6) ப்யாரி லால் கோஷ்

(7) ராகுநாத் தாஸ்
(8) ப்ருத்விச சந்த்ர ராய்
(9) க்ருஷ்ண குமார் மித்ரா
(10) ச்யாம சரண் ராய்

ஐக்கிய மாகாணங்களும் அயோத்தியும்.

(1) ஆ. நத்தி
(2) மதன மோஹன மாளவியர்
(3) விஷ்ணு நாராயண தர்
(4) ஜீ. எல். மைத்ரா
(5) கங்கா ப்ரஸாத் வர்மா
(6) ராமகந்த சாட்டர்ஜி
(7) விபின விஹாரி வஸு
(8) K. P. வாலக்
(9) ஹரி ராம் பாண்டே
(10) தேஜ் பஹதூர் ஸப்ரே

பேரார்

(1) W. V. ஜோஷி
(2) R. N. முதோல்கார்
(3) கணேச ஸ்ரீ கிருஷ்ண கபர்தே
(4) D. V. பாசலத்

பம்பாய்.

(1) கோபாலகிருஷ்ண கோகலே
(2) சிமன்லால் H. ஸேதல் வாட்
(3) ருஸ்தம் காமா
(4) பாலகங்காதர திலகர்

பஞ்சாப்.

(1) ஹர்கிஷன லால்
(2) லாஜபத் ராய்
(3) பாலக் ராம்
(4) சுரேந்த்ர நாத்

(5) லால் சந்த்
(6) ஷாதீ லால்.

மத்ய மாகாணங்கள்.

(1) S. B. கோகலே

சென்னை.

(1) பி. அநந்தா சார்லு
(2) சேலம் விஜயராகவாசாரி
(3) வி. ஜம்புலிங்க முதலியார்
(4) ரைரு நம்பியார்
(5) கருணாகர மேனன்
(6) வி. வி. தேசிகாசார்யர்
(7) எஸ். கஸ்தூரி ரங்கய்யங்கார்

பதினாறும் ஜனஸபையின் சரித்திரம் முற்றிற்று.

16-ஆம் அத்யாயம் முற்றிற்று.

ஜனஸபையின் சரித்திரம்.

பதினேழாம் அத்யாயம்.



17 ஆம் ஜனஸபையின் சரித்திரம்.

ஜனஸபையின் பதினேழாங் கூட்டம் கல்கத்தாவில் பிடன் சதுரம் என்ற மைதானத்தில் சேர்த்தியான தோரணங்களாலும் மிகவும் அழகிய மின்னல் விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்ட பந்தலில் கூடிற்று.

896 ப்ரதிநிதிகள் வந்திருந்தனர்.

ஸபாநாயகர் பந்தலுக்குள் புகுந்தவுடனே ஐம்பத் தெண்மர் இணைந்தும் மக்களும் சேர்ந்து ஸ்ரீமதி ஸரளாதேவி கோபால் இயற்றிய "ஹிந்துஸ்தான்" என்ற பாட்டைப் பாடினர்கள். சுமார் 400 "வாலண்டீர்ப்" பிள்ளைகள் பல்லவியை மட்டும் ஒத்துப் பாடினர்.

காது மிகவும் இன்புற்று லயையோர்களை மிஞ்சிப் போயினர். இந்த ஸரளாதேவி வங்காளத்தில் தேசபக்தி அனலைத் தூண்டிய மூல காரணமாக உழைத்தவர்களில் ஒருத்தியாவர். இவர் இடந்தோறும் போய் வங்காளிப் பிள்ளைகளுக்கு கஸ்ரத் பழகுவித்த லக்ஷ்மாவந்தனம் பண்ணுவதற்கு மேலான அல்லது ஸமமான தர்மமென்று கற்றுக்கொடுத்தார்.

இவரைக் காட்டிலும் அதிகக் காரணம் சிவேதிதாதேவி. இவர் ஆங்கில ஸ்த்ரீ. ஸ்வாமி விவேகாநந்தருடைய தலை சிஷ்யர். இவரே வங்காள ஸ்த்ரீகளுக்குள்ளே ஸ்வராஜ்ய ராகத்தை மிகுதியாக வளர்த்தார்.

ஸ்த்ரீகள் ஸ்வராஜ்யத்திற்கு அனுகூலமாகப் பாடும் இடத்தில் புருஷரின் உழைப்பு மிகவும் கீர்த்திபெற்று விளங்கக் காண்கிறோம். இதனிறகு,

பதினேழாம் ஜனஸபைக் கூட்டத்தில் உபசாரணைத் தலைவராகிய நாத்தூர் மஹாராஜா பஹதூர் ஜகதிந்த்ர நாத்ராய்

பஹதூரின் ப்ரஸங்கம் முடிந்தவுடனே தீன்ஷா எதுல்ஜீ வாச்சா ஸபாநாயக ஸ்தானத்தில் அமர்ந்தனர்.

ஸபாநாயகர் ப்ரஸங்கம்.

தீன்ஷா எதுல்ஜீ வாச்சா செய்தப்ரஸங்கத்துக்கு ஸ்ரீமதி ஆனி பெஸண்ட் செய்திருக்கும் ஸம்க்ஷேபம் பின்வருமாறு:—

வாச்சா சொல்லுகிறார் :—விக்டோரியா மஹாராணியார் இறந்தனர். அமெரிக்காவில் ஜனாதிபதி மாக்கின்லேயை ஓர் அராஜகக் கக்ஷியான் கொலைபுரிந்துவிட்டான். மைஸூர் திவான் சேஷாத்திரி அய்யர் காலஞ் சென்றுவிட்டார். சென்ற வருஷத்தில் நிகழ்ந்த இம் மரணங்கள் மிகவும் பரிதபித்தற் குரியன. விக்டோரியா மஹாராணி காலத்திலே நாகரிகத்துக்கு மிகவும் அனுகூலம். அமெரிக்கா தேசத்தார் நமக்குப் பஞ்சத்தில் உதவி பண்ணினார்கள். சேஷாத்திரி அய்யர் இங்கிலீஷ் காரரைவிட ராஜதந்திரத் திறமையில் கம்மியர் குறைவில்லை யென்பதை நன்கு விளக்கினர்.

பஞ்சம்.

பஞ்ச நிவர்த்தியில் ஏழைக் குடியானவர்களிடம் கடுமையான வேலை வாங்கிக்கொண்டு ராஜாங்கத்தார் கஞ்சி வார்ப்பது பெரும் தர்ம மன்று. பஞ்ச நிவர்த்தியில் செலவிடும் பணம் குடியானவருக்கு இனி மன்று. குடியானவர்களிட மிருந்து தீர்வையாக வஸூலித்ததில் மிகவும் சொற்பமான பாகம். இதைச் சில ஆங்கிலேயர் மறந்துவிடுகிறார்கள். ஆண்டு தோறும் 47½ கோடி ரூபாய் தீர்வை செலுத்தும் ஜனங்களே இப்போது பஞ்சத்தில் கஞ்சிக்குத் தவிக்கிறார்கள். அவர்களிடமிருந்து தண்டின பணத்தில் ஒரு சிறிதளவு அவர்கள் சாகப்போகிற தறுவாயில் திரும்பக் கொடுப்பதை யக்ஞ மென்று சொல்லக் கூடாது.

பஞ்சத்தின் காரணங்கள் பல.

முக்கியமான காரணம் இங்கிருந்து பணத்தை இங்கிலாந்துக்கு வற்புறுத்திக் கொண்டு போவதேயாம்.

விவசாயிகளின் நிலைமையைப்பற்றித் தீர விசாரணை நடத்தவேண்டும். ரயில்பாதை அதிகமாவதைக் காட்டிலும் தீர்வைப் பணத்தை நீர்ப் பாய்ச்சல் கால்வாய் வெட்டுதல் விஷயத்தில் செலவிட்டால் குடியானவர்களுக்கு மிகுந்த நன்மை

பிறக்கும். நீர்ப்பாசனத்தால் விளைவு மிகும். ரயில் வினை வைச் சிதறடிக்கும். ரயில் ஸம்பூர்ணஅனுகூல மன்று—அதாவது, நம்முடைய தேசத்தில் தற்கால ஆட்சி முறை ஸம்பந்தப்பட்ட வரை.

சில நிவாரணங்கள்.

கடைசியாக விவசாய உண்டிகள் (பாங்கிகள்) அவசிய மென்பதை ராஜாங்கத்தாரே அங்கிகரிக்கத் தொடங்கி யிருப்பது பற்றி சந்தோஷப் படுகிறோம். எகிப்து தேசத்தில் கடைபெறும் உண்டி முறைமையே இங்கும் தழுவக் கக்க தென்று தோன்றுகிறது.

நமது தேசத்தி லிருந்து தான்யம் எற்றுமதி யாவதை நிறுத்திவிட வேண்டும். ஸாதாரண வருஷத்துக்கே கோற்றுக்குத் தட்டுகிறது. சாதாரணவருஷத்தில் அரைப்பட்டினி. கொஞ்சம் வறட்சி சேர்ந்தால் அதோ கதி!

தான்யத்தை நமது நாட்டில் மிச்சம் சேகரித்து வைத்திருந்தால் பஞ்சக்காலத்துக்குப் பயன் படும்.

ஜனங்களின் வறுமை மிகப் பரிதாபகரமானது. கவர்ன்மென்டார் விவசாயிகளின் நிலைமையைப்பற்றி ஸம்பூர்ணமான கணக்குகளை வெளியிடக் கூசுகிறார்கள். ஆர்கிள் ப்ரபு சொல்லுகிறார் :— "பாரத நாட்டுக் குடியானவர் போலே ஏழ்மை வறுமையும் மாறுக் குன்பமு முடைய இத்தனை பெருங் கூட்டம் ஐரோப்பாவில் எங்காட்டி லு மில்லை" என.

க்ஷேமத்துக்கு வழி.

30-கோடிக்கு மேல் காற்பது கோடி ரூபாய் வரை இங்கிருந்து வருஷந்தோறும் கசக்கிப் பிழிந்துகொண்டு போவதை நிறுத்துவதே க்ஷேமம் பிறக்க வழியாம்.

ஆட்சி முறை.

மூலத் தொல்லை யாதெனிலோ :— இந்தியாவுக்கு விடுதலை யில்லை. ஆகலால் அதிகாரிகளை நம்மிஷ்டப்படி நியமிக்க இடமில்லை. விடுதலையிருந்தால் எல்லாப் பெரிய உத்யோகங்களும் ஸ்வதேசிகளுக்கே கொடுப்போம். அதில் ஸந்தேகமில்லை. அவர்கள் இந்தநாட்டிலேயே குடியிருந்து இங்கேயே மடிவார்கள். இப்போதுள்ள ஆங்கிலேய அதிகாரிகள்

இங்கிருந்து பணத்தை மூட்டையாகக் கட்டிக்கொண்டு இங்கிலாந்துக்குப்போய் அங்கே செலவிடுகிறார்கள்.

மத்ய ஆசியாவை ருஷியர் ஆட்சி புரிகிறார்கள் (1901-ல் சொன்னது.) அங்கேகூட இப்படி உயர்தர உத்யோகங்களெல்லாம் ஸ்வதேசிகளுக்குக் கொடுக்காமல் ருஷியருக்குத்தான் கொடுப்பதென்ற வித்தாந்தம் கிடையாது. ஆனால் இந்நாட்டில் ஐரோப்பிய உத்யோகஸ்தரின் மொத்தத் தொகை 17300 பேருக்குமேல் இல்லை யென்றும் இது மிகை யாகாதென்றும் சிலர் சொல்லலாம். மெய்தான். ஆனால் இந்த 17300 பேருக்கும் வருஷச் சம்பளம் 16 கோடி ரூபாய். இந்தியர்களுக்கு 2½ கோடி ரூபாய்தான் சம்பளமாகிறது.

ப்ளாந்தாஜினெத் ராஜ வம்சத்தார் ஆங்கில பூமியை ஆளுகையில் உயர்தர உத்யோகங்களனைத்திலும் ப்ரான்ஸ் தேசத்தாரைக்கொண்டு நிரப்பிய காலத்தில் ஆங்கிலேயர் கையைக் கட்டிக்கொண்டு சும்மா இருந்தனரா? இப்போது நாமும் ஆங்கிலேயரும் பதவி மாற்றிக்கொள்ள ஸம்மதிப்பார்களா?

கைத்தொழிலபிவிருத்தி மாத்திரத்தால் நமது வறுமை தீராது.

எந்த தேசத்தைக் காட்டிலும் இந்த தேசத்தில் ஆட்சி செலவு அதிகம். தீர்வை விதிப்பதிலும் அதனைச் செலவிடுவதிலும் இந்தியருக்கு வாக்குரிமை யில்லை. கைத்தொழிலபிவிருத்தி மாத்திரமே இயலக் கூடியது. ஏனென்றால் நம்முடைய வறுமை கைத்தொழில் ஸம்பந்தமான காரணங்களின் மட்டும்- ராஜீக ஸம்பந்தமான காரணங்களால் ஏற்பட்டது. நம்மை ஆள்வோரோ ஜான் மார்லி சொல்லியதுபோலே "ஸாம்ராஜ்யப் பைத்தியம் பிடித்தலைகிறார்கள்." இந்த ஸாம்ராஜ்யப் பேதமை நீங்கி நம்மை ஆள்வோர் பழமை போலே உதார (லிபரல்) கக்ஷிக்கொள்கைகளைக் கைப்பற்றிக்கொள்ளும்படி வேண்டுகிறோம்.

நல்ல ஆட்சி வேண்டும்.

"ப்ரிட்டிஷ் ராஜ்யத்தால் நமக்குச் சில நன்மைகள் தோன்றியிருப்பதை நான் மறுத்துரைக்க வில்லை. ஆனால் இதிலுள்ள கனாக்களைப் பிடுங்கி எறிந்துவிட்டு நாளடைவில் இந்நாட்டில் நல்ல ஆட்சி ஏற்படுத்த வேண்டுமென்பதே நமது நோக்கம்." என்று வாச்சா சொன்னார்.

17-ஆம் கூட்டத்தில் நடந்த வேறு சில விசேஷங்கள்.

பின் வருமாறு :—பாரத தேசத்தின் வறுமை. தீராப் பல்லவியாகிய நமது தரித்திரத்தைக் குறித்த மூன்றாந் தீர்மானம் முதோல்கரால் சிபாரிசு செய்யப்பட்டது. அதில் பின்வரும் விஷயங்களைச் சொன்னர் :—

"1901-ஆம் வருஷத்து ஜன ஸங்கியையில் 1891-ஆம் வருஷத்துத் தொகையைக் காட்டிலும் ஐந்து மாகாணத்து ஜனத்தொகை குறைவுபட்டிருப்பதாக விளங்குகிறது. [இந்த நிலையில் ஜனத்தொகை அபரிமிதமாக ஏறுவதனால் பஞ்சமுண்டாவதாக ஆங்கிலேயப் பத்திராதிபர் கூறினர்!] ஸாதாரணமாக ஏற்படும் மரணக் கணக்கைக் காட்டிலும் பத்து லக்ஷம் பேர் அதிகமாகப் பஞ்சத்தில் மடிந்தனரென்று தெரிகிறது. குடியானவர்களின் பரிதாபகரமான வீழ்ச்சி நிலைக்கு ராஜாங்கத்தாரின் தீர்வை வசூல் முறையே காரணமென்று 1874-ஆம் வருஷத்து விசாரணைக் கூட்டத்தார் அபிப்பிராயங்கொடுத்திருக்கிறார்கள். பொதுப்படையாக பேரார்ல் 100-க்கு 30 பங்கு தீர்வை மிகுதிப்பட்டிருக்கிறது. மத்ய மாகாணத்தில் 100-க்கு 100 முதல் 200 வரை ஏறியிருக்கிறது! வறுமை மிகுதிப்படுதல் இங்கொரு வியப்பெனக் கருதலாமோ? சாசுவத நிலவரித்திட்டம் ஏற்படுத்துதலே இதற்கு நிவாரணம்" என்றார்.

ஷி. தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகையில் ஜீ. வேங்கடரத்நம் பின்வரும் விஷயங்களை எடுத்துக் கூறினர்:

"நிலத்தீர்வை அடிக்கடி மாறுமல் ஸ்திரப்படுவதே ரய்யத்வாரி முறைமையின் மூல தர்மம்" என்று 1862-ல் சென்னை கவர்ன்மெண்டார் ஸர்தேஷ்முகியை ஒப்புக்கொண்டார்கள். இது போலவே 1865, 67, 68 வருஷங்களில் பலவிதமான வாக்குறுதிகள் செய்யப்பட்டன. கடையாக 1883-ல் இந்தியா மந்திரி 1862-ஆம் வருஷத்துக் கொள்கையை மறுதலித்துப் பேசிவிட்டார்!" என்றனர்.

ஸ்வராஜ்யம்.

இந்தியாவில் பிரிட்டிஷ் படைகளின் செலவைக் குறித்த 10-ஆம் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகையில் மிஸ்டர் ஸ்மெட்லி சொல்லியது :—

"ஐர்லாந்தினுடைய கஷ்டங்களுக்கும் இந்தியாவின் கஷ்டங்களுக்கும் ஸ்வராஜ்யம் ஒன்றே நிவாரணமாம். இனி ஞர்களே, மன உறுதியுடன் இந்தியாவுக்கு ஸ்வராஜ்யம் வேண்டுமென்று கேளுங்கள். புதிய புதிய வரங்கள் கேட்டு நீங்கள் தீர்மானங்கள் செய்வதைப் பார்க்கும்போது எனக்கு பயம் உண்டாகிறது. உங்களை ஸ்வராஜ்யம் பெறுமல் தடுக்கும் பொருட்டாக ராஜாங்கத்தார் இந்த வரங்களை மகிழ்ச்சியுடன் தந்துவிடக் கூடும். ஸ்வராஜ்யம் கேளுங்கள். கடவுள் உங்கள் முயற்சியை ஆசீர்வதிப்பார்." என்றார்.

தீர்மானங்கள்.

1. முதல் தீர்மானம் :—

விக்டோரியா மஹாராணியின் மரணம்.

விக்டோரியா மஹாராணியின் மரணத்தால் தனக்கு விளைந்த ஆழ்ந்த துயரத்தையும், அதனால் இந்த ஸாம்ராஜ்யத்துக்கு நேர்ந்த தீர்க்க முடியாத நஷ்டத்தைப்பற்றிய தன் உணர்ச்சியையும் இந்த ஜனஸபை அறிவித்துக்கொள்ளுவது மன்றி ;

மஹாராணியின் ஸ்ரீமுகத்தாலும் அனுஷ்டானத்தாலும் செயல்களாலும் விளங்கியபடி அவருக்கு இந்த நாட்டு ஜனங்களின் க்ஷேமத்தைப்பற்றி இருந்த கவலையையும் அனுதாபத்தையும் இந்த ஜனஸபை நினைத்து நன்றி தெரிவிக்கிறது.

எட்வர்டு ராஜாவுக்கு வணக்கம்.

(உ) மஹா கருணை பொருந்திய ஏழாம் எட்வர்டு ராஜாவுக்கு இந்த ஜனஸபை தன் மதிப்பையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ளுகிறது. மஹாராஜாவின் காருண்ய அரசியலின்போது விடுதலை முறைகள் வலிமையுற, ஜன உரிமைகள் விரிவுபெற, மாஜி மஹாராணி விக்டோரியாவின் ஸ்ரீமுகத்தில் கூறிய வாக்குறுதிகள் நாளடைவில் நிறைவேறலாமென்று நம்பிக்கையுடன் எதிர் பார்க்கிறது.

நியாயாதிபதி ரானடேயின் மரணம்.

(ஊ) நியாதிபதி ரானடேயின் அகால மரணத்தால் தேசத்துக்கு நேர்ந்த பெரு நஷ்டத்தைப்பற்றிய தன் ஆழ்ந்த வருத்தத்தை இந்த ஜனஸபை பதிவு செய்கிறது.

2. இரண்டாந் தீர்மானம் :—

ப்ரிட்டிஷ் ஜனஸபைக்கமிட்டியும் "இந்தியா" பத்திரிகையும்.

(க) லண்டனில் ஒரு கமிட்டி தன்னுடன் ஒத்துழைப்பதும் தன் கருத்துக்களை ப்ரசாரம் செய்ய லண்டனில் ஒரு வாரப் பத்திரிகை நடைபெறுதலும் தன் கார்ய வ்ருத்திக்கு அவசியமென்று இந்த ஜனஸபை அபிப்பிராயப் படுகிறது. இப்போதுள்ளபடியே ப்ரிட்டிஷ் ஸமிதியும் அதனால் வெளிப்படும் "இந்தியா" பத்திரிகையும் தொடர்ந்து காக்கப்பட வேண்டுமென்றும், அச்செலவைப் பின்வரும் விஹிதப்படி கட்டவேண்டுமென்றும் இந்த ஜனஸபை நிச்சயிக்கிறது.

(உ) "இந்தியா" பத்திரிகையில் 4000 ப்ரதிகள் ஸ்தம் வாங்கிக் கொள்ளவேண்டும். வங்காளம் 1500 ப்ரதிகள்; சென்னை மாகாணம் 700 ப்ரதிகள்; ஐக்கிய மாகாணங்கள் 200 ப்ரதிகள்; அயோத்தி 50 ப்ரதிகள்; பஞ்சாப் 100 ப்ரதிகள்; பேராரும் மத்ய மாகாணங்களும் 450 ப்ரதிகள்; பம்பாய் 100 ப்ரதிகளாகப் பங்கிட்டுக் கொள்ளவேண்டும். வருஷச் சந்தா 8 ரூபாய் விஹிதம்.

(ஊ) பின் கூறப்படும் கனவான்கள் தம் பெயருடன் காணப்படும் வட்டங்களுக்குக் கார்யதர்சிகளாக நியமிக்கப் படுவதுமன்றி அவரவர் வட்டங்களுக்கு விதிக்கப்படும் இந்தியாப் ப்ரதிகளுக்குச் செலுத்தவேண்டிய தொகைக்குத் தாமே ஜவாபதாரிகளாவார் ரென்றும், தொகையை முன் பணமாக இரண்டு அரை வருஷத்தவணைகளில் கட்டி விடவேண்டுமென்றும் இந்த ஸபை நியமிக்கிறது.

வங்காளம் :—ஸுரேந்த்ர நாத் பானர்ஜி; பூபேந்த்ர நாத வஸு; வைகுண்ட நாத்ஸென்.

பம்பாய் :—பிரோல்ஷாமேஜ்தா; *தி. எ. வாச்சா; கோபால க்ருஷ்ண கோக்கலே.

மதராஸ் :—ஸ்ரீனிவாச ராவ்; விஜயராகவாசார்யர்; ஸைரு நம்பியார்; ஜீ. சுப்ரமணிய அய்யர்.

பேரார் மத்ய மாகாணங்கள் :—R. N. முதோல்கர்

ஐக்கிய மாகாணங்களும் அயோத்தியும் :—மதன மோஹன மாளவியர்; கங்கா ப்ரஸாத் வர்மா; ப்ரவிம்ஹர்; S. அல்ப்ரெட் நந்தி.

கான்பூர் :—ப்ருத்வீநாத் பண்டித்

பஞ்சாப் :—லாலா ஹர்கிஷன் லால்.

(ச) விசேஷ ப்ரதிநிதிக் கட்டணம்.

பிரிட்டிஷ் கமிட்டி, "இந்தியா" பத்திரிகை, இவற்றின் செலவைக் கட்டுவதற்கு அவசியமானதொரு மிச்சத்தொகை சேகரிக்கும் பொருட்டாக 1902-ஆம் வருஷமுதல் ஒவ்வொரு ப்ரதிநிதியும் இப்போது செலுத்தும் ப்ரதிநிதிக் கட்டணத்துடன் இன்னும் அதிகம் பத்து ரூபாய் செலுத்த வேண்டுமென்று இந்த ஜனஸபை நியமிக்கிறது.

3. மூன்றாந் தீர்மானம் :—

இந்தியாவின் வறுமையும் அதற்குச் சில நிவாரணங்களும்.

(க) பாரத நாட்டில் எளிய ஜனங்களின் பரிதாபகரமான நிலைமையை ராஜாங்கத்தார் கவனிக்கும்படி இந்த ஸபை வேண்டுகிறது. பாரத ஜனங்களில் 400 லக்ஷம் பேர் ஸாதாரண வருஷங்களிலேயே முழுப் பசிக்கு மிகவும் அருகே துன்பத்தில் உழலுகிறார்கள் என்பதாக அதிகாரிகளின் வாக்குறுதியினாலேயே விளங்குகிறது.

அவர்களுடைய நிலையைச் செம்மைப்படுத்த வேண்டினால், பிற உபாயங்களுக் கிடையே பின் வருவனவற்றையும் தழுவத் தகுமென்று இந்த ஜனஸபை காட்டுகிறது.

(உ) சாசுவதத் திட்டம் இப்போது நடைபெறாத இடங்களில் அதை ஏற்படுத்தல்; அங்ஙனம் செய்ய ஸௌகர்யப்படாத இடங்களில் தீர்வை யேற்றங்களுக்கு வரையறை விதித்தல்; இவற்றாலே குடியானவர் வயிற்றுக்குப் போதிய தானியம் மிஞ்சும்படி செய்யலாம். மேலும் இப்போதைக் காட்டிலும் நீண்ட காலங்கள் எட்டி யெட்டி இந்நிலவரித் திட்டங்கள் புதுப்பிக்கப் படுமென்ற உறுதிமொழி தரவேண்டும்.

(ங) விவசாய பாங்கிகள் ஸ்தாபிக்கவும், விவசாயக் கடன் சட்டத்தின்படி கடன் வாங்க அதிக ஸௌகர்யங்கள் செய்து தரவும் வேண்டும்.

(ச) தேசத்தின் கிருஷித் தொழிலை வளர்ப்பதற் குரிய ஏற்பாடுகள் செய்யவேண்டும்;—நமது நாட்டு ஜமீந்தார்

களும் தேசத்தின் விவசாய அவஸரங்களில் அதிக கவனம் செலுத்தித் தம்மால் இயன்ற உபாயங்களைக் கைக்கொள்ளும் படி இந்த ஜனஸபை போதிக்கிறது.

(ரு) வருமான வரிச் சட்டத்தின் கீழே தீர்வை வாங்குதற்குரிய வரவுச் சிற்றெல்லை 500 ரூபாயாக இருப்பதனை 1000 ரூபாயாக உயர்த்தவேண்டும்.

(சு) பொது உத்யோகங்களில் இந்நாட்டினரை அதிகமாக நியமிப்பதனாலே தேசத்தின் பொருள் வற்றைப் பகுதியேனும் குறைக்க வேண்டும்.

4. நான்காந் தீர்மானம் :—

நீதி, நிர்வாஹ உத்யோகங்களைப் பிரித்தல்.

தர்மத்துடனும் திறமையுடனும் நீதி பரிபாலனம் செய்ய வேண்டினால், நீதி, நிர்வாஹ அதிகாரங்களைப் பிரித்தல் அவசியமென்ற தன் நிச்சயக் கருத்தை இந்த ஜனஸபை மீட்டுமொருமுறை தெரிவிக்கிறது. இந்தியாவின் குற்றச் சட்டமுறையில் மிகப் பழக்கமுடையவர்களாகிய கீர்த்தி மிகுந்த லார்ட் ஹாப் ஹௌஸ்; ஸர் நிச்சர்ட் கார்த்; ஸர் வில்லியம் மார்க்பி; ஸர் ஜேம்ஸ் ஜார்டைன்; மிஸ்டர் ரெய்னால்ட்ஸ் முதலிய பெரிய ப்ராமாணிகர் இவ்விஷயத்தில் ஜனஸபையின் கொள்கையை அங்கீகாரம் செய்திருக்கின்றனர். இந்த விவகாரம் இப்போது இந்தியா ராஜாங்கத்தாரின் ஆலோசனையிலிருப்பதாகத் தெரிகிறது. இங்கு குறிக்கப்படும் விதியின் நேர்மையைக் கருதியும் இவ்விஷயத்தில் பொதுஜன அபிப்பிராய ஒருமைப்பாட்டைக் கருதியும், முக்யமாக நீதி நிர்வாஹ அதிகாரங்களின் கலப்பால் விளையும் பல நியாயச் சேத திருஷ்டாந்தங்களைக் கருதியும், மிக அவஸரமான இச்சீர்திருத்தத்தை நிறைவேற்றும்படி இந்த ஜனஸபை ராஜாங்கத்தாரை வேண்டுகிறது. இதனை நிறைவேற்றாமலிருப்பதற்குக் காரணம் யாதெனில், வீண் கௌரவத்துக்கு நஷ்டம் ஏற்படுமென்றும் நிர்வாஹ ஆட்சியின் பலங் குறையுமென்றும் உண்டான பயம் சிறு பகுதியும் ஆட்சிச் செலவு மிகுமென்றே பயம் பெரும் பகுதியும் காரணம். அச்செலவு மிகுதியாகாது. எங்ஙனமாயினும் அதனை ஒரு பெருந் தடையாகக் கொள்ளத்தகாது.

5. ஐந்தாந் தீர்மானம் :—

ப்ரீவி கௌன்ஸில் நீதி ஸபிதியில் இந்தியர்கள்.

இந்தியாவிலிருந்து போகும் புனர் விசாரணை மனுக்கள் ஸம்பந்தப்பட்ட அளவில் "ப்ரீவி கௌன்ஸில்" நீதி ஸபிதியை பலப்படுத்த வேண்டுமாகையால், கீர்த்திபெற்ற இந்திய வக்கீல்களை அங்ஙனம் இந்தியாவிலிருந்து போகும் புனர் விசாரணை மனுக்களுக்குத் தீர்ப்புச் சொல்வதில் உதவிபுரியும் வண்ணமாக டி ஸபிதியில் நியமிக்கவேண்டுமென்று இந்த ஜனஸபை வணக்கத்துடன் சிபார்சு செய்கிறது.

6. ஆறாந் தீர்மானம் :—

தென் ஆபிரிகாவில் பாரதக் குடியேற்றத்தார்.

தென் ஆபிரிகாவில் ப்ரிட்டிஷ் இந்தியக்குடியேற்றத்தார் உயிர்மிஞ்சி நிற்கப்பெறும் கஷ்டங்களின் விஷயத்தில் இந்த ஜனஸபை அனுதாபந் தெரிவிக்கிறது. அங்கு இந்தியர்களுக்கு விரோதமான சட்டங்கள் செய்யப்படுவதை ராஜப்ரதிநிதியின் கவனத்துக்கு காண்பிக்கிறது. ந்ரான்ஸ்வால், ஆரன்ஜ் நதிக் குடியேற்றங்களில் இந்தியர்களின் பதவி ஸம்பந்தமான ஆலோசனை குடியேற்ற மந்திரி செய்துவருமிடையே அக்குடியேற்றத்தார்களுக்கு நியாயமான ஏற்பாடு பண்ணிக்கொடுக்க தயவு செய்யும்படி வைஸ்ராயை ப்ரார்த்திக்கிறது.

7. ஏழாந் தீர்மானம் :—

போலீஸ் திருத்தம்.

போலீஸ் சீர்திருத்த விஷயம் ராஜாங்கக்தாரின் ஆலோசனையிலிருந்து வருவதையும், வைஸ்ராய் தம் உத்யோகக் காலத்துக்குள் முடிவு செய்யக் கருதியிருக்கும் பன்னிரண்டு விஷயங்களில் இதுவும் ஒன்றுமென்பதையும் தெரிந்து இந்த ஜனஸபை திருப்தியடைகிறது. பின் கூறப்பட்ட வழிகளில் போலீஸ் திருத்தப்பட்டாலன்றித் திருப்திகரமான சீர்திருத்தம் ஏற்படாதென்றதன் கொள்கையை மீளவும் அறிவிக்கிறது.

(க) போலீஸ் உயர்தர உத்யோகங்கள் இப்போதைக் காட்டிலும் அதிகமாகச் சட்டப்படி பாரதஸ்வதேசிகள் எனப் படுவோரில் ஆங்கிலக் கற்றவரால் நிரப்பப்படவேண்டும்.

இவர்கள் தம்கீழ் உத்தியோகஸ்தர்களின் பாஷை, வழக்கம், கினைப்பு, வாழ்க்கை நெறிகளிலே பழக்கமுடையோ ராதலால் இப்போதைக் காட்டிலும் கீழ்த்தர உத்தியோகஸ்தரின் மீது அதிகத்திறமையார்ந்த ஆட்சி செலுத்த வல்லோ ராவர்.

(உ) போலீஸ் கீழ்த்தரப் பதவிகளின் சம்பளத்தை யும் நம்பிக்கைகளையும் தக்கபடி அபிவிருத்திசெய்து அந்த இலாகாவைக் கல்வி கற்ற வகுப்பினருக்கு அதிக ருசிகரமா கச் செய்யவேண்டும். போலீஸ் கீழ்த்தர உத்தியோகங்களில் ஆங்கிலக் கல்வி கற்ற இந்தியரை இன்னும் விஸ்தாரமாக நியமிப்பதுடன் அவர்களுடைய சம்பளத்தையும் எதிர்கால அபேக்ஷா பதவிகளையும் அதிகப்படுத்தினால் போலீஸ் இலாகா திறமையும் ஞாணயமும் உடையதா மென்று இந்த ஜனங்களை அபிப்பிராயப்படுகிறது.

(ஊ) போலீஸ் இலாகாவின் மாகாணக் கினை உத்தியோ கங்களில் நியமனத்துக்காக இங்கிலாந்தில் கடைபெறும் போட்டிப் பரீக்ஷைக்கு ப்ரிட்டிஷ் ஜாதியார் மாத்திரமே அஜ ராகலா மென்ற நியதியை மாற்றி அதை இந்தியர்களுக்கும் திறக்கவேண்டும்.

8. எட்டாந் தீர்மானம் :—

பஞ்சம்.

(க) ஸமீப காலத்தில் இந்தியாமுழுதிலும் ஏறக் குறை யக் கொடுமையான பஞ்சம் மீண்டு வந்திருப்பது கண்டு இந்த ஜனஸபை துக்கப்படுவதுமன்றி இந்தியாவில் பஞ்சங்களுக்குக் காரணம், பெரும் பகுதி, ஒன்று :— இக் காட்டுத் தொழில் களும் செப்பங்களும் அழித்துவிட்ட படியாலும் இங்கிருந்து ஒயாமல் செல்வத்தை வற்றடித்துக் கொண்டு போவதாலும் நேர்ந்த வறுமை. மற்றொன்று: குடி, படை, இரண்டிலா காக்களிலும் ராஜாங்கத்தார் மிகமிஞ்சிப் பணம் செலவிடுவ தால் நேர்ந்த கிலத் தீர்வை மிகுதியும், நிட்ட மிகுதியும். இதனால் ஜனங்கள் மிக ஏழைகளாய்ப் பஞ்சம் வக்து தீண்டிய மாத்திரத்தில் உதவியற்றுப்போய், ராஜாங்கத்தார் அல்லது செல்வரிடமிருந்து ஸகாயம் கிடைத்தாலன்றி மடிதல் அவசிய மாகிறது. இந்த ஜனஸபையின் அபிப்பிராயப்படி பஞ்சம் மீட்டு மீட்டும் வராமலிருப்பதற்கு உண்மையான மருந்து யாதெனில் சிக்கன முறைமைய வற்புறுத்தி, ராஜ்யத்தின் பொரு ளாதாரங்களை நேரே கையாண்டு, நாட்டுப் பயிர்த்

தொழிலை அபிவிருத்தி செய்து, உள்நாட்டுச் சிற்ப முறைகளை யும் தொழில்களையும் உயிர் மீட்டுப் போஷிக்கவேண்டும்.

(உ) எல்லாக் கக்ஷியாரிலும் கீர்த்திமான்கள் பலர் கூடி லண்டனில் ஒரு பஞ்ச நிவர்த்தி ஸங்கமும் லிவர்ப்பூரில் அதற்கு ஒரு கிளையும் சமைக்கப்பட்டிருப்பது கண்டு இந்த ஜனஸபை ஸந்தோஷப் படுகிறது. இந்தியாவில் பஞ்சத்தால் வருந்துவோரிடம் அந்த ஸங்கத்தாருக்குள்ள அனுதாபத்தைக் கருதியும் அவர்கள் தமது காரியத்தை மிகவும் பயனுறத்தக்கபடியாகச் செய்து வருவதைக் கருதியும் இந்த ஜனஸபை அவர்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறது.

9. ஒன்பதாந் தீர்மானம் :—

(க) பொது உத்தியோக விசாரணைக் கூட்டமும் ஸமகாலப் பரீக்ஷைகளும்.

பொது உத்யோக விசாரணைக் கூட்டத்தாரின் தொழிலுகளினின்றும் எதிர்பார்த்த பயன்கள் விளையாமை கண்டு மறுபடியும் இந்த ஜனஸபை தன் ஆழ்ந்த வருத்தத்தை அறிவிக்கிறது. இங்கிலாந்திலும் இந்தியாவிலும் ஏக காலத்தில் உத்யோகங்களுக்குப் பரீக்ஷை நடத்துவதற்கு அனுகூலமான 1893-ஜூன் 2-ஆம் தேதி செய்யப்பட்ட காமன்ஸ் ஸபைத் தீர்மானத்தை நிறைவேற்றினாலன்றி அந்த விஷயத்துக்கு ஸரியான தீர்ப்புண்டாகாதென்ற தன் நிச்சயத்தை மீளவும் அறிவிக்கிறது.

இந்தியருக்கு உயதர உத்தியோகங்கள்.

(உ) போலீஸ் சங்கம், தந்தி, காடு, நில அளவை, அபினி முதலிய தணிந்த தரத்துக் குடியாட்சி உத்யோக இலாகாக்களில் உயர்ந்த பதவிகளிலே பாரத தேசத்தாரை அதிகமாக நியமிக்கும் விஷயத்தில், இப்போது கவர்ன்மெண்டாரின் அனுஷ்டானம் ஷை ஸ்தானங்களினின்று நம்மவரை விலக்குவதாகவும் மஹாராணியின் ஸ்ரீமுக நியமங்களுக்கும் உத்யோக விசாரணைக் கூட்டத்தாரின் சிபாரிசுகளுக்கும் விரோதமாகவும் இருப்பது கருதித் தனக்கு விளையும் ஆழ்ந்த வருத்தத்தை இந்த ஜனஸபை அறிவித்துக்கொள்ள விரும்புகிறது.

10. பத்தாந் தீர்மானம் :—

பாரத ராணுவச் செலவக்கு ப்ரிட்டிஷ் பொக்கசத்திலிருந்து ஸஹாயம்.

ப்ரிட்டிஷ் படைகளில் பெரும் பகுதிகள் மிகவும் பத்திரத்துடன் தேச ஸமாதானத்துக்கு யாதோரிடருமின்றி, ப்ரிட்டிஷ் இந்தியாவின் சட்டப்படியுள்ள எல்லைகளுக்கு வெளியே தொழில் செய்யும்படி செலுத்தப்பட்டு வருதலால், ஐரோப்பியப் படையை இப்போதுள்ள அளவில் இந்தியாவில் வைத்துப் பேணுதற்குள்ள செலவில் ஒரு பகுதி ப்ரிட்டிஷ் பொக்கசத்தினின்றும் பாரதவாஸிகளுக்கு ஈடுசெலுத்த வேண்டுமென்று இந்த ஜனஸபை அபிப்பிராயப் படுகிறது. ப்ரிட்டிஷ் படைகளின் செலவில் ஒரு பகுதியை பாரதப் பொக்கசத்தினின்றும் ப்ரிட்டிஷ் பொக்கசத்துக்கு மாற்றுதல் இந்தியாவுக்குச் செலுத்தவேண்டிய திரவிய நீதியில் ஓரம்சமாகுமென்று இந்த ஸபை கருதுகிறது.

11. பதினொன்றாந் தீர்மானம் :—

பாரத ப்ரபு குமாரர் படை.

பாரத இளவரசர், பிரபுமக்களின் ப்ரதிநிதிகள் அடங்கிய ஸாமந்தர் படையொன்று சமைத்திருப்பது கண்டு இந்த ஜனஸபை ராஜாங்கத்தாரை மெச்சுகிறது. ட்யூக் ஆவ் கன்னாட் சிபார்சு செய்தபடி ராணுவக் கலாசாலைகள் ஸ்தாபிப்பதில் வந்து முடிவுபெறக்கூடிய ராஜ தந்திரத்தில் இச்செய்கை முதற்படியாகுமென இந்த ஜனஸபை கருதுகிறது. அக்கலாசாலைகளில் பாரத ஸ்வதேசிகள் பாரத ஸேனையில் ஸந்நது பெற்ற அல்லது பெறாத உத்யோகஸ்தராக நியமனம் பெறத்தக்க கல்வியும், பயிற்சியும் ஏற்படுத்தவேண்டுமென்று இந்த ஸபை கருதுகிறது.

12. பன்னிரண்டாந் தீர்மானம் :—

கல்வி விசாரணைக் கூட்டத்தில் இந்திய மெம்பர்கள்.

கல்வி விஷயத்தின் எல்லாப் பகுதிகளையும் வைஸ்ராய் சிரத்தையுடனும், விழிப்புடனும் கவனித்து வருவது கண்டு இந்த ஜன ஸபை திருப்தியடைகிறது. இப்போது ஆலோசனையிலுள்ள கல்வி விசாரணைக் கூட்டத்தைச் சமைக்கையிலே

அதில் ஸபிகராக இருக்கும்படி போதிய தொகை இந்திய கனவான்களை நியமித்து, அதில் இந்தியரின் க்ஷேமங்களுக்குப் பிரதிநிதிகள் ஊராக்கும்படி இந்த ஜனஸபை வைஸ்ராயை வணக்கத்துடன் வேண்டுகிறது.

13. பதின்மூன்றாந் தீர்மானம் :—

அஸாம் தொழிலாளிகளின் விஷயம்.

அஸ்ஸாம் மாகாணத்தில் கூலித் தொழிலாளிகளின் விஷயத்தில் கவர்ன்மெண்டார் தெரிவிக்கும் உதார சிந்தனைகளின் பொருட்டு இந்த ஜனஸபை நன்றி தெரிவிக்கிறது. ஆனால் அத்தொழிலாளிகளின் சம்பளத்தை உயர்த்துவதாகச் சொல்லிய வார்த்தையை இன்னும் நிறைவேற்றுதல் பற்றி வருத்தப்படுகிறது. அங்ஙனம் செய்யும்படி ஏற்கெனவே அந்த மாகாணத்தின் ஆட்சியதிகாரியும் பலமாக வற்புறுத்தியிருக்கிறார். அதுவே கூலிக்காரருக்குச் செய்யவேண்டிய தெளிந்த நியாயம். அஸாமில் தொழிலாளிகளுக்குள்ள தண்டனைச் சட்டத்தை அறவே ஒழித்து விடுவதாக ராஜாங்கத்தார் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுதற்குரிய காலம் வந்து விட்டதென இந்த ஜனஸபை கருதுகிறது.

14. பதினான்காந் தீர்மானம் :—

ராணுவ வைத்ய இலாகாவையும் சுதி வைத்ய இலாகாவையும் பிரித்தல்.

(க) பொதுஜன க்ஷேமத்தையும், வைத்ய சாஸ்த்ரம் வைத்யத் தொழில் இவற்றின் நலங்களையும், ஆட்சிச் செலவில் சிக்கனத்தையும் உத்தேசித்து,

(i) ஒரு ராணுவ வைத்ய இலாகா ஏற்படுத்தி அதில் ஐரோப்பிய சேனைக் கொன்றும், இந்தியப் படைகளுக்கு மற்றொன்றுமாக இரண்டு கிளைகள் சமைத்து, அவ்விரண்டையும் ஒரேவித நியமங்களில் நடத்த வேண்டுமென்றும்;

(ii) காட்டுக் குடி வைத்ய இலாகாவைத் தனி, ஸ்வாதீனமுள்ள வைத்ய இலாகாவாகச் சமைத்து, அதை இப்போதுள்ள ராணுவ ஸம்பந்தத்தினின்றும், அறவே பிரித்துவிட வேண்டுமென்றும், அதற்கு இந்தியாவிலும் பிற இடங்களிலும் முள்ள வைத்தியர் கூட்டத்தினின்றும் ஆள் சேர்க்கவேண்டுமென்றும், அதில் ஸ்வதேச பண்டிதரின் திறமையை விசேஷ

மாகப் பாராட்டவேண்டுமென்றும் இந்த ஜனஸபை கருது கிறது.

குடி உதவி ரண வைத்தியர்; ஔஷதசாலை உதவிக் கார் யஸ்தர்; இவர்களின் ஸ்தானம்.

(உ) நெடுங்கால ஒழுங்குத் தவறுகளையும் அவற்றால் விளையும் குறைபாடுகளையும் நீக்கும் பொருட்டு உதவி ரண வைத்தியர், ஔஷதசாலை உதவிக் கார்யஸ்தர்களின் ஸ்தா னங்களையும் வேண்டுதல்களையும் குறித்து ஸம்பூர்ணமாகவும் வெளிப்படையாகவும் விசாரணை நடத்த வேண்டுமென்று இந்த ஜனஸபை மீட்டும் அழுத்திச் சொல்லுகிறது.

15. பதினைந்தாந் தீர்மானம்:—

பாரத விவசாய அபிவிருத்தி.

(க) பாரத தேசத்தின் வெவ்வேறு மாகாணங்களில் உள்ள பெருந்திரளான ஜனங்கள் உயிர்வேண இடக் கருவது பயிர்த்தொழில் ஒன்றேயாதல் கருதியும், ப்ரிட்டிஷ் ஆட்சியின் மிதமிஞ்சிய செலவைக் கருதியும் கவர்ன்மென்டார் விவசாய இலாகாவிலே தம்முடைய முக்யமான, பகுக்கப்படாத கவ னத்தைச் செலுத்துமாறு கருணை செய்யவேண்டுமென்றும் அந்த அம்சத்தில் அமெரிகா, ருஷியா, ஹாலந்து, பெல்ஜியம் முதலிய பல தேசங்களை மிகவும் கேஷமம் பெறச்செய்திருக் கும் அபிவிருத்தி முறைகளை இந்நாட்டிலும் தழுவவேண்டு மென்றும் இந்த ஜனஸபை கருதுகிறது.

(உ) பாரத விவசாயத்தின் நிலைமையைக் குறித்து விசாரணை நடத்தும் பொருட்டாக 1889-ல் இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட பண்டித லோயல்கரின் சிபார்சுகளில் கவர்ன் மென்டார் விசேஷ கவனம் செலுத்தி அவற்றை விரைவில் நிறைவேற்றும்படி இந்த ஜனஸபை வேண்டுகிறது.

(ங) தேசமுழுதிலும் பல சோதனை விவசாயப் பண் ணைகள் ஸ்தாபனஞ் செய்யும்படிக்கும், இந்திய மாணாக்கர் பிற தேசங்களுக்குப் போய் அந்த தேசங்களில் கடைபெறும் விவசாய மூலங்களின் அபிவிருத்தி முறைகளைப் பயிற்சி செய்துகொள்ளுமாறு அவர்களுக்கு உபகாரச் சம்பளங்கள் கொடுக்கும்படிக்கும் ராஜாங்கத்தாரை இந்த ஜனஸபை ப்ரார்த்திக்கிறது.

16. பதினாறாந் தீர்மானம் :—

இந்தியாவின் பொருள் நிலை.

அடுத்த ஜனஸபைக் கூட்டத்தில் பின் வருந் தீர்மானங்களைத் திருத்தங்கள் சேர்த்தோ சேர்க்காமலோ அங்கீகாரம் செய்தல் விரும்பத் தக்கதா என்பதைப் பற்றி அறிக்கையிடும்படி பின்வரும் கனவான்கள் ஒரு ஸமிதியாகச் சமையுமாறு இந்த ஜனஸபை நியமிக்கிறது.

[கனவான்களின் பெயர்.]

பால கங்காதர திலகர்; மதன்மோஹன் மாளவீயர்; பூபேந்த்ர நாத் வஸு; ஜே. சௌதரி; ந. பாடக்; ரானடே; கங்காப்ரஸாத் வர்மா; உமர்பக்ஷ்; ஹர்கிஷன் லால்.

[தீர்மானங்களாவன.]

(க) பிற நாடுகளின் விளைச்சல், பகுத்தல்களிலே நடைபெறும் முறைகளைப்பற்றிய ஞானமில்லாமையே நமது தேசத்தின் பொருட்சோர்வுக்குப் பெரும்பாலுங் காரண மாதலால், சரியான கல்வியும் பிழையற்ற அறிவும் நம்முடைய ஜனங்களுக்குக் கிடைப்பதற்குரிய முறைகளை நமது தேசத்தார் தழுவுதல் தகுமென்று இந்த ஜனஸபை சிபார்சு செய்கிறது.

(உ) கிராமங்களிலும் பட்டணங்களிலும் மரிகாணங்களிலும் தேசத்திலும் முதற்பணமும் வியாபார நாணயமும் சேகரிப்பது நாம் தீர்க்கவேண்டிய முக்கிய விவகாரங்களில் ஒன்றாதலால், முதல் தொகை சேகரிப்பதில் நீடித்த, விசாலமான முயற்சிகள் செய்து நமது பொருள் நிலையின் அபிவிருத்திக்குள்ள பல கஷ்டங்களில் ஒன்றை நீக்குவதிலே கவனம் செலுத்தும்படி தேசத்தாரை இந்த ஜனஸபை வேண்டுகிறது.

17. பதினேழாந் தீர்மானம் :—

செலாவணிச் சட்டம்.

1893-ஆம் வருஷத்து செலாவணிச் சட்டத்தை ஏற்கனவே தான் கண்டனம் செய்திருப்பதை இந்த ஜனஸபை மீளவும் உறுதிப் படுத்துகிறது. அச் சட்டத்தால் ரூபாயின் கிரயம் ஊற்றுக் கைம்பது க்ருத்ரிமமாக வளர்ந்துவிட்டது. அதனால் அந்த அளவுக்கு எல்லாத் தீர்வைகளும் மிகுதியாகும்படி நேர்ந்துவிட்டது. இந்த வளைவான, பாரமிகுந்த, தீர்வையினின்றும் கவர்ன்மெண்டாருக்கு அதிகப் பண மிச்சங்கள் ஏற்படுகின்றன. இதுவும் பஞ்சங்களால் நேர்ந்த அபூர்வமான

கஷ்ட சமயங்களில் கடைபெற்று வருகிறது. இதனால் விவசாயம், தோட்டப் பயிர், கைத்தொழில் என்ற பணத்தை விளைக்கும் ஸாதனங்களுக்குப் பெருந் தீங்கு விளைகிறது. தவிரவும், மேற்கூறிய சட்டத்தால் குடியானவர்களுக்குக் கஷ்ட காலங்களில் உயிர் மிஞ்சும் திறமை பயங்கரமாகக் குறைவுபட்டிருக்கிறது. இதினின்றும் நாளடைவில் மிகப் பரிதாபகரமான பயன்கள் விளையக்கூடுமென்று இந்த ஜனஸபை அபிப்ராயப் படுகிறது.

18. பதினெட்டாந் தீர்மானம்:—

பாரதச் சுரங்கச் சட்டம்.

இந்தியாவில் சுரங்கத் தொழில் விரைவில் விருத்தியடைந்து வருவது கண்டு இந்த ஜனஸபை திருப்தியடைகிறது. இந்த தேசத்தில் உலோஹ மூலதாரங்கள் ஏராளமாக இருப்பது கருதியும்; இதனால் இங்காட்டில் கனியங்தர சாஸ்த்ரப்பரமான பரிபூர்ண ஞானம் பெறுதற்குரிய ஸாதனங்கள் ஏறக்குறைய சூன்யமாக இருப்பது கருதியும்; ஸமீபத்தில் கிறைவேறிய சுரங்கச் சட்டம், அதாவது 1901-ஆம் வருஷத்து ஏழாங் கட்டளையின் கருத்துப்படி பாரதச் சுரங்கங்களெல்லாம் கனித்தொழில் நிபுணர்களின் மேற் பார்வையின் கீழே இருத்தல் வேண்டுமென்பது கருதியும்; இங்கிலாந்திலுள்ள சுரங்க ராஜ பாடசாலை போலவும் ஐப்பானிலும் ஐரோப்பாவிலுமுள்ள சுரங்கத் தொழிற் கலாசாலைகள் போலவும் இந்தியாவிலும் தக்க ஸ்தலமொன்றில் ஒரு ராஜாங்கச் சுரங்க யந்திரத் தொழிற் பாடசாலை ஸ்தாபிக்கவேண்டுமென்று இந்த ஜனஸபை அபிப்பிராயப் படுகிறது.

19. பத்தொன்பதாந் தீர்மானம்:—

பல திரட்டு.

(க) வருமான வரிச் சட்டத்தின்கீழ் வரி வசூல் செய்வதற்குரிய வரும்படியின் கிழெல்லையை 500 ரூபாயிலிருந்து 1000 ரூபாயாக உயர்த்த வேண்டும்.

(உ) ஆயுதச் சட்டத்தின் திருத்தம்:—[அமராவதி; 13-ஆங் கூட்டம்; சான்சார் தீர்மானம்; I பகுதி (2)-ஆம் தலைப்பைக் காண்க.]

(ரு) ஸ்வேச்சைக் காட்டுப்படை சமைத்தல் [டில்லி (ச)-ஆம் தலைப்பைக் காண்க.]

(ச) ஐரோப்பிய யூரேஷிய உத்யோகஸ்தருக்குக் கொடுக்கும் பரிவர்த்தன நஷ்ட ஈட்டை நிறுத்திவிடுதல் ஷை (5) ஆம் கிளை.]

(ரு) பஞ்சாபில் ஒரு ஹைகோர்ட் ஸ்தாபித்தல்;

(க) கல்வி யிலாகாத் திருத்தம் (1896-ஆம் வருஷம், கல்கத்தா, 12-ஆம் ஜனஸபைக் கூட்டத்தின் ஆறாம் தீர்மானத்தைக் காண்க.)

(உ) உப்புத் தீர்வையைக் குறைக்கும்படி [1896 கல்கத்தா 12-ஆம் கூட்டம் 8-ஆம் தீர்மானம்.]

(க) தொழிற் கல்வியைப் பரப்புதல் [1898-சென்னை 14-ஆம் கூட்டம் 15-ஆம் தீர்மானம்.]

(உ) ஜூரித் திருத்தம் [1896 கல்கத்தா 12-ஆம் கூட்டம் 7-ஆம் தீர்மானம்.]

(ங) இதுவும் ஜூரித்திருத்தம் [1898 சென்னை 14-ஆம் கூட்டம்; 20-ஆம் தீர்மானம்; iii-ஆம் பகுதி (5) ஆம் கிளை.]

(ச) காட்டிலாகாத் திருத்தம் [1898 சென்னை 14-20 iii-(எ)]

20. இருபதாந் தீர்மானம்:—

ஜனஸபையின் பொது காரியதரிசிகள்.

அடுத்த வருஷத்துக்குப் பொதுக் கார்யதர்சியாக A. O. ஹ்யூமையும் உதவி பொதுக் கார்யதர்சியாக தீ. எ. வாச்சாவையும் இந்த ஜனஸபை மறுபடி நியமிக்கிறது.

21. இருபத்தொன்றாந் தீர்மானம்:—

அடுத்த ஜனஸபைக் கூட்டம்.

பாரத ஜனஸபையின் 18-ஆம் கூட்டம் 1902-ஆம் வருஷத்துக் கிறிஸ்மஸ் பண்டிகைக்கப்பால் பம்பாய் மாகாணத்தில் பின்னிட்டு நிச்சயித்துக்கொள்ள வேண்டிய தேதிகளில் கூடுமாறு இந்த ஜனஸபை நியமிக்கிறது.

பதினேழாம் ஜன ஸபையின் தீர்மானங்கள் முற்றுப்பெற்றன.

பதினேழாம் அத்தியாயம் முற்றிற்று.

ஜனசபையின் சரித்திரம்.

பதினெட்டாம் அத்தியாயம்.

1902-ஆமதாபாத் பதினேட்டாங் கூட்டம்.

பம்பாய் மாகாணத்தில் குஜராத் என்று சொல்லப்படும் கூர்ஜர நாட்டுத் தலைநகராகிய ஆமதாபாத்தில் 18-ஆம் கூட்டம் 1902 டிசம்பர் 23-ல் கூடி அன்றும், 24, 26 தேதிகளிலும் நடைபெற்றது.

தொழிற்காட்சி மண்டபம்.

சென்ற வருஷம் கல்கத்தாவில் நடைபெற்றது போல இவ்வருஷம் ஆமதாபாத்தில் ஒரு தொழிற்காட்சிப் பந்தர் சமைக்கப்பட்டது. அதனை காயக்வாட் மஹாராஜா திறந்து வைத்தார்.

ப்ரஸங்க நிலைமை.

ஜனஸபைக்கு 471 ப்ரதிநிதிகள் வந்திருந்தார்கள். அவர்களில் பெரும்பாலோர் ஆமதாபாத் வட்டத்தினின்று வந்தோர். உபசார ஸமிதியின் ஸபாநாயகர் பெயர் அம்பாலால் தேசாய்.

அவர் ப்ரஸங்கம்.

அம்பாலால் தேசாய் உபசாரகணத் தலைவர் என்ற ஸ்தானத்தில் செய்த ப்ரஸங்கத்தின் ஸாராம்சம் பின்வருமாறு:—

குஜராத்தானது வர்த்தகத்தையும் கைத்தொழிலையும் ஜீவனாதாரமாக உடைய மாகாணம். குஜராத்தில் ஸமீப காலத்தில் நடைபெற்ற பயங்கரமான இரண்டு பஞ்சங்களால் இம் மாகாணத்தார் கன்திறந்து இந்த உத்பாதங்களின் காரணங்களை ஆராயத் தொடங்கியிருக்கிறார்கள். ஒரு கோடியிலும் குறைந்த மொத்த ஜனத்தொகையில் 25 லக்ஷம் பேருக்குச் சற்றே குறைந்த தொகை மடிந்து போய்விட்டது. இதற்கு ப்ரதான காரணம் இங்கட்டுச் செல்வத்தைப் பிற நாட்டுக்கு வற்புடித்துக்கொண்டு செல்லுதல். நம்முடைய ஜனங்களில் பலர் குடியேறிப் போயினர். நமது ராஜீகத்

தாழ் நிலையால் வர்த்தகநாசம் ஏற்படுகிறது. ஆதலால் வியாபாரிகளாகிய இம்மாகாணத்தார் ராஜரீகக் கிளர்ச்சியிலேயே கலத்தல் அவசியமாகிறது. நம்முடைய பஞ்சு யந்திரசாலைகளின் மீது அநியாயமான சுங்கத்தீர்வை விதித்துக் கொடுமை செய்கிறார்கள். ஆதலால் ராஜரீகக் கிளர்ச்சி பலமில்லாத் இடத்தில் வியாபார முயற்சிகள் அதிக நஷ்டமடையுமென்பது எங்கள் புத்தியில் புலப்பட்டது. தீர்வை விஹிதங்களின் கடுமையால் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். "நாம் ஏன் ஏழைகளாய்விட்டோம்" என்று எங்கும் ஜனங்கள் கேட்கத் தலைப்பட்டு விட்டார்கள் என்று ஸ்ரீ அம்பாலால் தேசாய் சொன்னார்.

ஜனஸபையின் ஸபாநாயகராகிய ஸ்ரீமான் ஸுரேந்த்ர நாத் பானர்ஜி செய்த ப்ரஸங்கத்தின் ஸாரம்.

அப்போது ஸ்ரீமான் பானர்ஜி ஜனஸபையின் தலைவராய்ப்பின் வருவதை விரித்துக் கூறினர் :—

ப்ரிட்டிஷ் ஆட்சியில் இந்தியாவின் பொருள் நிலை மேன்மேலும் கீழ்மையடைந்து வருகிறதென்று ஸ்ரீமான் டிக்பி சொல்லுகிறார்.

இது மெய்யா, இல்லையா? அதை முதலாவது ஆலோசனை பண்ணுவோம். பொருள் விஷயத்தின் ஆதாரத்தின் மீதேயே பாரத ராஜ்ய பரிபாலன விஷயம் முழுதும் சார்ந்து நிற்கிறது. தேசம் நாளுக்குநாள் ஏழ்மையடைந்து வருகிறதா இல்லையா என்பதை ஆராய்ச்சி செய்யும்பொருட்டு கவர்ன்மெண்டார் ஒரு விசாரணைக்கூட்டம் நியமிக்க வேண்டும்.

1880-81-ல், லார்ட் ரிப்பன் ஆட்சியின்போது ஒரு தாமும் பின்பு லார்ட் டபரின் காலத்தில் மற்றொரு தடவையும் இதைப்பற்றிய விசாரணைகள் நடைபெற்றன. ஆனால் அவ் விசாரணைகளில் செய்யப்பட்ட முடிவுகளை ராஜாங்கத்தார் வெளியிடாமல் மறைத்துவைத்து விட்டார்கள்.

அம் முடிவுகளால் ப்ரிட்டிஷ் ஆட்சியின் பயனாக நாட்டின் வறுமை நாளுக்குநாள் மிகுதிப்படுகிறதென்ற கக்ஷி மெய்யென்று ருஜுவாகக் கூடும்; அல்லது பொய்யென்று ருஜுவாகக் கூடும். பொய்யென்று ருஜுப்படுத்தத் தக்கனவாயின், ராஜாங்கத்தார் தம்மீது நெடுங்காலமாக ஓயாமல் சொல்லப்படும் பழிச் சொல்லை நீக்கும் பொருட்டாக அவற்றை அவசி

யம் வெளியிட்டிருப்பார்கள். ஆதலால், இவர்கள் மறைத்து வைப்பதினின்றும் இவர்களுடைய ஆட்சியினால் வறுமை மிகுதிப்படுகிறதென்ற கூற்றே உண்மையென்பது தெளிவாகப் புலப்படுகிறது.

பயங்கரமான பஞ்சங்கள் மீண்டு மீண்டு வருகின்றன. காலுக்கு கால் அவை அதிக பயங்கரமாக மூர்க்கி பெறுகின்றன. இவைபோன்ற பஞ்சங்கள் ஐரோப்பாவில் நடந்தால் அங்குள்ள ஜனங்கள் வாயை மூடிக்கொண்டு சும்மா பொறுத்திருப்பார்களா? பஞ்சங்களுக்கெல்லாம் வறுமையே மூலகாரணம். ஸாதாரண வருஷங்களில் ஜனங்களுக்கு உணவுபோக ஏதேனும் மிச்சங்கண்டால் விளைவதட்டின போது வெளியேயிருந்தனவு தருவிக்கப் பணமிருக்கும். ஆனல் இந்த நாட்டில் ஸாதாரண வருஷங்களிலேகூட ஏதக் குறையப் பஞ்சம்போன்ற நிலையே இயன்று வருகிறது. சாதாரண வருஷங்களில் மூலாதாரம் மிஞ்சுவது கிடையாது. இந்நாட்டார் வறுமையின் அதலவிதல பாதாளங்களில் வீழ்ந்து விட்டனர். கைக்கு வாய் ஜீவனம் பண்ணுகிறார்கள். எத்தனையோ கால் ஒரு வேளை உணவுடன் பசித்துக் கிடக்கிறார்கள். பஞ்சம் தோன்றின மாத்திரத்திலே ஆயிரக் கணக்காகவும் லக்ஷக் கணக்காகவும் மடியத் தொடங்குகிறார்கள். பஞ்சம் முற்றமுற்றப் பத்து லக்ஷக் கணக்காகவும் கோடிக் கணக்காகவும் மடிந்து போகிறார்கள். கவர்ன்மென்டார் செய்யும் பஞ்சவிர்த்தி முயற்சிகளில் அதிகப் பயனில்லை.

நாட்டிலே தரித்திர நிலை மிகுதியடைந்துகொண்டு வருகிறது. இதைக் குறைக்குமாறு பின்வரும் உபாயங்கள் ஆசரிக்கத்தக்கன.

(1) நம்முடைய பழைய கைத்தொழில்களை மீட்டும் உயர்ப்பிக்க வேண்டும். புதிய கைத்தொழில்கள் ஏற்படுத்த வேண்டும்.

(2) நிலவரித் திட்டம் இப்போது மிதமிஞ்சி யிருப்பதை மிதப்படுத்த வேண்டும்.

(3) ஏழைகளை அதிகமாகக் கஷ்டப்படுத்தும் இயல்புடைய தீர்வைகளை ஒழித்துவிட வேண்டும்.

(4) இந்தியாவிலிருந்து ஆண்டாண்டுதோறும் பணத்தை வற்றடித்துக் கொண்டு போகும் அனுஷ்டானத்தை நிறுத்தி விடுதற்குரிய ராஜீக முறைகளைக் கைக்கொள்ள வேண்டும்.

ஸ்ரீமான் சந்திர நாத் பானர்ஜி சொல்லுகிறார் :—

விடுதலை.

ஜனங்களின் இஷ்டப்படி தீர்வை வசூல் செய்து அதை ஜனங்களின் இஷ்டப்படி செலவிட வேண்டும். இல்லாவிடில் நாட்டின் வறுமை ஒழியாது.

ஒருநாட் படும் சிரமத்தால் விடுதலையின் வெற்றிகள் எய்த லாகாது. ஸ்வதந்த்ரக் கடவுள் உக்ரமானது, நெடுங் காலம் விடாத பூஜையை விரும்புவது. இவற்றையெல்லாம் பெரிய மேன்மை கொண்ட இந்நாட்டின் மக்களுக்கு நான் சொல்லவும் வேண்டுமோ? தர்மங்களுக் கெல்லாம், மதங்களுக் கெல்லாம், பாரத பூமியே ஜன்ம பூமி. இதிலே கிழக்கு திசையின் புண்ய பூமி இங்கேதான் ஞானதேவி முதல் முதல் நீபங்கொளுத்தினாள். இங்கேயே மனுஷ்ய நாகரிகத்தின் ஆரம்பக் காலத்திலே மஹரிஷிகள் வேதவிதி வேண்டி மந்திரங்கள் பாடினர். நம்முடைய தர்மத்தினின்றே சீன ஜப்பானிய நாடுகளின் மேலான தர்மங்கள் பிறந்தன. இந்த நாட்டுக்கு ஸ்வராஜ்யம் கொடுக்கும்படி ராஜாங்கத்தாரை வேண்டுகிறோம் என்றார்.

தீர்மானங்கள்.

1. முதல் தீர்மானம்:—

ஏழாவது எட்வர்ட் சக்ரவர்த்திக்கு உபசாரம்.

மஹா கருணை தங்கிய ஏழாம் எட்வர்ட் சக்ரவர்த்தியின் முடிசூட்டுக் கொண்டாட்டம் 1903-ஜனவரி 1-தேதி யன்று நடத்தப்போவதை உத்தேசித்து அவருக்கு இந்த ஜனஸபை தனது தாழ்ந்த வணக்கத்தை அறிவித்துக் கொள்ளுகிறது. சக்ரவர்த்தியின் ஆட்சிக்காலம் ஜனங்களினிடையே ஸமாதானமும், சௌக்யமும் திருப்தியும் பொருந்தியதாய், இந்த ஆட்சியில் காலஞ்சென்ற மஹாராணியின் ஸ்ரீமுகத்தில் கூறப்பட்டனவும் பாரத ஜனங்களுக்குச் சக்ரவர்த்தி விடுத்த ஸ்ரீமுகத்தில் மீட்டும் உறுதிசெய்யப் பட்டனவுமாகிய வாக்குறுதிகள் வரிசையாக, ஜூலை, ஸம்பூர்ணமாக நிறைவேற்றப்படு மென்று இந்த ஜனஸபை மரியாதையுடன் கம்புகிறது.

2. இரண்டாந் தீர்மானம் :—

ரஹிமதுல்லா ஸயானி; பி. ரங்கய்ய நாயுடு இருவரின் மரணம்.

இந்நாட்டின் நன்மைக்காகப் பல வகைகளில் அருமையான உபகாரங்கள் செய்தவர்களாகிய பழைய ஸபாநாயகர் ரஹிமதுல்லா ஸயானியும், பி. ரங்கய்யா நாயுடுவும் இறந்து போனது பற்றி இந்த ஜனஸபை தன் பெரு வருத்தத்தை அறிவிக்கிறது.

3. மூன்றாந் தீர்மானம் :—

இந்தியாவின் வறுமையும் அதற்குச் சில நிவாரணங்களும்.

பாரத ஜனங்களின் தொடர்ந்த வறுமை விஷயத்தில் கவனம் செலுத்தும்படி இந்தியா கவர்ன்மென்டாரை, இந்த ஜனஸபை ஆவலுடன் வேண்டுகிறது. இவ்வறுமைக்குப் பெரும் பகுதி காரணங்களாவன : உள் நாட்டுத் தொழில்களுக்கும் கலைகளுக்கும் அழிவு நேர்ந்ததும்; பல வருஷங்களாக இந்நாட்டின் செல்வம் வற்றடிக்கப்பட்டு வருவதும்; மிக மிஞ்சிய தீர்வையும்; மிகைத் திட்டமுமேயாம். இவற்றால் வறுமை ஏறிப் பெருந்தொகைகளாகிய ஜனங்கள் பஞ்சந் தோன்றிய மாத்திரத்திலேயே ராஜாங்க உதவியை நாடும்படி நேருகிறது. இதற்குரிய வேறு பல நிவாரணங்களினிடையே பின் வருவனவற்றையும் இந்த ஜனஸபை சிபார்சு செய்கிறது :—

(க) உள் நாட்டுக் கலைகளையும் தொழில்களையும் மீள உயிர் நீட்டி வளர்ப்பதற்கும் புதிய கைத்தொழில்கள் ஏற்படுத்துவதற்கும் ராஜாங்கத்தார் உதவி செய்து ஊக்கப் படுத்தவேண்டும்.

(உ) தேச முழுதிலும் கவர்ன்மெண்டார் தொழிற் பள்ளிக்கூடங்களும் கலாசாலைகளும் ஸ்தாபிக்க வேண்டும்.

(ங) சாசுவத நிலவரித் திட்ட முறைமையை அனுஸரிப்பதற்குப் பக்குவமான காரணங்களில், இவ்விஷயமாக இந்தியா மந்திரி தம்முடைய 1862, 1867-ஆம் வருஷங்களின் அறிக்கைகளில் கூறிய நியமங்களின்படி, அம்முறைமையை அனுஷ்டானத்துக்குக் கொண்டு வரவேண்டும். சாசுவதத் திட்டத்தை இப்போது வழங்குதல் யுக்தமில்லை யென்று ராஜாங்கத்தாரின் மனதில் தோன்றக்கூடிய இடங்களில் மிகைத் தீர்வைத் திட்டங்களைக் குறைத்து அவற்றின்மீது நீதித் தடைகள் விதிக்கவேண்டும்.

(ச) ராஜாங்க உத்யோகங்களின் மேற்கினைகளில் பாரத பூமியின் மக்களை அதிக விஸ்தாரமாக நியமித்து நாட்டின் பொருள்வற்றை ஒரு பகுதியேனும் நிறுத்தவேண்டும்.

(ஞ) கிராமங்களில் சொம்மையாக நாணயத்தைச் சமைக்கும் பொருட்டாகவும், சொத்துடைய விவசாயிகளுக்கு எளிய வட்டியில் கடன் கிடைக்கும்படி யாகவும் விவசாய உண்டிகள் (பாங்கிகள்) ஸ்தாபிக்க வேண்டும்.

4. நான்காந் தீர்மானம் :—

இங்கிலாந்தில் இந்தியப் பஞ்ச நிவர்த்திச் சங்கம்.

இந்தியாவின் நிருஷ்டாந்த ரூபமான சில கிராமங்களை எடுத்துக்கொண்டு, அவற்றின் பொருள் நிலைமை விவரமாகச் சேரதனை செய்யும்படி இங்கிலாந்திலுள்ள பஞ்ச நிவர்த்திச் சங்கத்தார் செய்து வரும் முயற்சிகளின் பொருட்டு இந்த ஜன ஸபை நன்றி பாராட்டுகிறது. சிலர் அஞ்சுகிறபடி அவ்விதம் விசாரணை ஜனங்களுக்கு நிஷ்டூர மாகாதென்றும் பாரத தேசத்துக் குடியானவனுடைய உண்மையான நிலைமையைப் பற்றிய ஞானம் ஏற்படுத்துவதில் அது மிகப் பயனுடைய தாகுமென்றும், அவ்விஷயத்தில் இப்போது நேரான நிவாரண முறைகளை வழங்கிவாட்டாமல் தடுக்கும் பல விபரீத எண்ணங்களை நீக்குமென்றும் இந்த ஜனஸபை கருதுகிறது. கொடிய பஞ்சங்களிரண்டை யடுத்து அவ்விதம் விசாரணை நடத்துதல் மிகவும் யுக்தமாகும். அதனால் ஒப்பு நோக்குவதில் மிகப்பயன் படக் கூடிய நிரவிய நிலையைக் குறித்த உண்மைகள் ராஜாங்கத்தாருக்குக் கிடைக்கும். இவ்விஷயத்தில் தமது தீர்மானத்தைப் புனராலோசனை செய்யும்படி இந்தியா மந்திரியை இந்த ஜனஸபை ப்ரார்த்திக்கிறது. மேலும், இவ்விஷயத்தில் இதற்கு முன்பு நடந்த ராஜாங்க விசாரணைகளின் ஆராய்ச்சி முடிவுகளை முக்யமாக, ஏற்கெனவே சில பகுதி மாத்திரம் ப்ரசுரம் செய்யப் பட்டிருக்கும் லார்ட் டபரின் காலத்து விசாரணை முழுதையும் வெளியிடும்படி இந்தியா கவர்ன்மென்டாரை இந்த ஜனஸபை ப்ரார்த்திக்கிறது.

5. ஐந்தாந் தீர்மானம் :—

தென் ஆப்பிரிக்காவில் இந்தியரின் குறைப்பாடுகள்.

தென் ஆபிரிகாவில் இந்தியக் குடியேற்றத்தாருக்குள்ள தாழ்ந்த குறைபாடுகளை இந்தியா கவர்ன்மென்டார் கவனித்

கும்படி இந்த ஜனஸபை மீட்டும் வற்புறுத்துகிறது. ப்ரிட்டிஷ் குடியேற்றத்தாரின் ஸாம்ராஜ்யக் கொள்கையினின்றும் இந்தியருக்கு விரோதமான சட்டத்தில் பரிஹாரம் ஏற்படவேண்டியிருக்க, அதற்கு மாறாக அங்குள்ள சக்ரவர்த்தியின் ராஜ பக்தி சான்ற இந்திய ப்ரஜைகளின்மீது புதிய உரிமைக் குறைவுகளையும் கஷ்டங்களையும் சுமத்தக் கூடியனவாக இருப்பது கண்டு இந்த ஜனஸபை வருத்தப்படுகிறது. அங்குள்ள பாரதக் குடியேற்றத்தாரின் ராஜபக்தி ஸம்சயத்துக் கிடமற்ற தாதலையும்; மூன்று சண்டை நடந்த காலத்தில் அவர்கள் செய்த உதவியையும் கருதித் தென் ஆபிரிகாவிலுள்ள இந்தியர்களை நியாயத்துடனும் உதாரத்துடனும் நடத்துவதற்குரிய உபாயங்களைத் தேடி நிறைவேற்றும்படி இந்தியா கவர்ன்மென்டாரை இந்த ஜனஸபை மிக ஆவலுடன் ப்ரார்த்திக்கிறது.

மேலும், இந்த விஷயத்தில், போயர் கவர்ன்மென்டாரிடமிருந்து சிலது காலத்து முன்பு வெல்லப்பட்ட நாடுகளில் குடியேறி இருக்கும் இந்தியர்களுக்கு விரோதமாக இப்போது ஜார்ஜிதத்திலுள்ள கட்டுப்பாடுகளின் கடினத் தன்மையை நெகிழ்த்து விடுவதற்குரிய ஏற்பாடுகள் விரைவிலே செய்யப்படுமென, இந்தியா மந்திரி, தம்மை இதைக் குறித்துப் பார்வையிடவந்த ஒரு ப்ரதிநிதிக் கூட்டத்தாரிடம், சில தினங்களின் முன்னே வாக்குறுதி செய்தது கண்டு இந்த ஜனஸபை திருப்தி படைகிறது.

6. ஆறாம் நிர்மானம் :—

செலாவணிச் சட்டம்.

[கல்கத்தா 1901 17-ஆம் கூட்டத்தின் 17-ஆம் நிர்மானத்தைக் காண்க.]

7. ஏழாம் நிர்மானம் :—

ராணுவச் செலவைக் குறைத்தல்.

கடந்த வருஷத்தினிடையே ப்ரிட்டிஷ் படைகளின் சம்பளத்தில் செய்யப்பட்ட மிகுதியால் பாரதத் நிர்வைகளின் மீது வருஷந்தோறும் சுமத்தப்படுவதாகிய 7,86,000 பவுன் ஆகிய சாசுவதச் சுமையைப் புதிதாக விதித்ததுபற்றி இந்த ஜனஸபை மிகவும் பலமாக ஆக்ஷேபிக்கிறது. தேசத்திலுள்ள ப்ரிட்டிஷ் படைகளை மிகவும் விரைவில் அதிகப்படுத்

தக்கூடுமென்று குறிப்பிட்டு இந்தியா மந்திரி சிறிது காலத்தக்கு முன் பேசியிருப்பது கண்டு இந்த ஜனஸபை திகிலடைகிறது. சென்ற மூன்று வருஷங்களில் ப்ரிட்டிஷ் படைகள் எவ்விதமான அபாயமுமில்லாமலே தென் ஆபிரிகாவிலும் சீனத்திலும் போருக்குக்கொண்டு செல்லப்பட்டிருப்பதைக் கருதுமிடத்தே இந்தியாவிலுள்ள ப்ரிட்டிஷ் ஸேனையை அதிகப்படுத்தவேண்டுமென்ற யோசனை இந்தியாவில் நீர்வை செலுத்துவோருக்கு வெளிப்படையாகவே பெரிய அசீதியாம். எனவே, அந்த யோசனையைக் கைவிட்டுவிட வேண்டும், அல்லது ப்ரிட்டிஷ் பொக்கசத்தின் செலவில் நிறை வேற்ற வேண்டும் என்று இந்த ஜனஸபை ப்ரார்த்திக்கிறது. இனி வைக்கக்கூடிய புது ப்ரிட்டிஷ் படைகளுக்கு மாத்திரமேயன்றி ஏற்கெனவேயுள்ள படையிலும் ஒரு பகுதிக்குரிய செலவை ப்ரிட்டிஷ் பொக்கசத்தார் பொறுத்தல் தகுமென்று இந்த ஸபை கருதுகிறது.

8. எட்டாந் தீர்மானம் :—

ஸர்வ கலா சங்கங்களைப்பற்றிய விசாரணைக் கூட்டத்தாரின் சிபார்சுகள்.

ஸர்வ கலா ஸங்க விசாரணைக் கூட்டத்தாரின் அபிக்கையால், இரண்டாந்தரக் கலாசாலைகளையும் சட்ட வகுப்புக்களையும் ஒழித்துவிட வேண்டும் என்று கூறப்பட்டிருப்பதனால் பத்தமாக மாகாண ராஜாங்கத்தார்களுக்கு இந்தியா கவர்ன்மென்டார் சிறிது காலத்துக்குமுன் அனுப்பிய சுற்றுத்தரவின் பொருட்டாக இந்த ஜனஸபை ஆழ்ந்த நன்றி தெரிவிக்க விரும்புகிறது. விசாரணைக் கூட்டத்தாரின் சிபார்சுகளை அனுஸரிப்பதில் பொதுஜன அபிப்பிராயத்தைத் தக்கபடி கருதாமலிருந்து விடுவார்களோ என்ற பயத்தை இது ஒரு பகுதி தணித்து விட்டது. அத்தீர்மானங்கள் உயிர்தரக் கல்வியின் பரவுதலைத் தடுத்தும், அதன் எல்லையைக் குறுக்கியும் ஸர்வ கலாஸங்கங்களால் இப்போதனுபவிக்கப்பட்டு வரும் வரையறைப்பட்ட ஸ்வாதீனத்தையும் அழித்துவிட மாதலால், அவற்றை அங்கீகாரம் செய்துகொள்வதினின்றும் சென்ற அரை நூற்றாண்டாக ப்ரிட்டிஷ் கவர்ன்மென்டார் முறையாக அனுஸரித்து வரும்வழி மாறிப்போம்.

மேலும்; அவ்விசாரணைக் கூட்டத்தாரின் பின்வரும் கருத்துடைய தீர்மானங்களை இந்த ஜனஸபை பலமாகக் கண்டிக்கிறது.

(க) முதல்தரக் கலாசாலைகளாக உயர்த்தக்கூடியன வற்றைத் தவிர மற்றப்படி இப்போதுள்ள இரண்டாந்தரக் கலாசாலைகளை யெல்லாம் அழித்துவிடுவதும் புதிய இரண்டாந் தரக் கலாசாலைகளைப் பதிவு செய்யாமல் தடுப்பதும்.

(உ) வெவ்வேறு கலாசாலைகளிலும் சம்பளக் கீழ்மொல்லை யளவை விண்டிகேட் (ஸங்க நிர்வாஹ) ஸபையார் நிர்மானிக்க வேண்டுமென்பது.

(ரு) இதுவரை வெவ்வேறு ஸர்வகலா ஸங்கத்தார் வெவ்வேறு வழிகளில் அபிவிருத்திபெற்று வந்திருப்பதைப் புறக்கணித்து நாடு முழுமையும் ஒரே மாதிரி இறுகலான கல்வி முறை ஏற்படுத்த வேண்டுமென்பது.

(ஸ) மாகாணத்துக்கொன்று விதம் மத்யச் சட்டக் கலாசாலைகள் ஏற்படுத்திச் சட்டக் கல்வியை வரம்பிடல்.

(ஞ) பொதுக் கல்வி யதிகாரியின் உத்தரவின் மீதே யன்றி ஜனப்பள்ளிக்கூடங்கள் உயிர்த்திருக்க முடியாதபடி செய்து நடத்தரக் கல்வியை யெல்லாம் ராஜாங்க அனுமதி யைப் பொறுத்து நிற்கும்படி செய்தல்.

(சு) ஸர்வகலா ஸங்கத்த "ஸெனேட்" "விண்டி கேட்" (என்ற பீயம, நிர்வாஹ,) ஸபைகளை ஸர்க்கார் உத் யோகஸ்தரின் வசமாக்கி ஸர்வகலா ஸங்கத்தையே ராஜாங் கத்தின் ஓர் இலாகாவாகச் செய்தல்.

9. ஒன்பதாந் தீர்மானம்:—

ஸ்ரீமான் டாடாவின் பரிசோதனைக் கூட்டம்.

ஸ்ரீமான் டாடா தம் உதார குணத்தால் ஸ்தாபனம் செய்ய விரும்பும் பரிசோதனைக் கூடத்துக்கு கவர்ன்மென் டார் போதிய உதவி செய்யவேண்டுமென்று இந்த ஜன ஸபை கருதுகிறது. மேலும் தேசத்தில் வெவ்வேறு முக்கிய ஸ்தலங்களில் இதுபோன்ற பாடசாலைகள் ஏற்படுத்தவேண்டு மென்று இந்த ஜனஸபை பலமாக அபிப்பிராயப் படுகிறது.

10. பத்தாந் தீர்மானம்:—

போலீஸ் திருத்தம்.

போலீஸ் விசாரணைக் கூட்டத்திலே அவ்விஷயத்தில் அனுபவமுள்ள இந்திய பிரதிநிதிகள் போதிய தொகை சேர்க் கிராமை பற்றியும் இந்தியா கவர்ன்மென்டாரின் தீர்மானத்தி லும் அக்ராஸனாதிபதியின் ஆரம்ப உபன்யாஸத்திலும் குறிப்

பிட்டபடி விசாரணைக் குரிய விஷயம் மிகவும் வரையறையப் பட்டிருப்பது பற்றியும் இந்த ஜனஸபை தன் வருத்தத்தை அறிவிக்கிறது. மேலும் வேறு பல சீர்திருத்தங்களி னிடையே பின்வருவனவற்றையும் நிறைவேற்றினா லன்றி போலீஸ் இலாகா திறமையுடைய தாகா தென்ற தன் உறுதியான நம்பிக்கையை இந்த ஜனஸபை தெரிவிக்கிறது.

(க) போலீஸ் உயர்தர உத்யோகங்களில் தக்க கல்விப் பயிற்சி யுடையோரை நியமிக்கவேண்டும்.

(உ) போலீஸ் உயர்தர உத்யோகங்களில் கல்வி கற்ற இந்தியரை அதிகமாக நியமனம் செய்யவேண்டும்.

(ங) இன்ஸ்பெக்டர், சூபரின்டுகளின் ஸ்தானம், சம்பள மிகுதி இவற்றை அதிகப்படுத்தி அந்த இலாகாவுக்குக் கல்வி கற்றவர் வரும்படி தூண்ட வேண்டும்.

(ச) ஜில்லா அதிகாரி ஒருவனே இப்போது போலீஸ் தலைவனாகவும், நீதித் தலைவனாகவும் இருப்பதை மாற்றி அவனுடைய நீதி யதிகாரங்களை நீக்கி, நீதி பரிபாலன சக்தி அவனுக் கில்லாமல் செய்துவிட வேண்டும்.

11. பதினொன்றாந் தீர்மானம் :—

நீதி, நிர்வாஹ காரியங்களைப் பிரித்தல்.

முந்திய ஜனஸபைகளின் கருத்துக் கிணங்கிக், குற்ற நீதியின் பரிபாலனத்தில் நீதி, நிர்வாஹ அதிகாரங்களைப் பிரிக்கும் பொருட்டாக விரைவில் கார்யங்கள் தொடங்குமாறு இந்தியா மந்திரியையும் இந்தியா கவர்ன்மெண்டாரையும் இந்த ஜனஸபை ப்ரார்த்தனை செய்துகொள்ளுகிறது. இது விரும்பத்தக்க தென்பதை ராஜாங்கத்துக்குச் சார்பானவர்களே பலர் பல முறை அங்கீகாரம் செய்திருக்கிறார்கள். நிர்வாஹ அதிகாரிகளின் மீது நீதி யதிகாரிகளுக்குள்ள நலத்துக்கும் சுத்தத்துக்கும் இடமான—அடக்க லதிகாரத்தை பிடுங்கி விடுதல் மட்டுமேயன்றி, நிர்வாஹ அதிகாரிகளுக்கு அதிக அதிகாரந் தருதல் ஸமீப காலச் சட்டத்தின்நோக்கமாக இருப்பது கண்டு இந்த ஜனஸபை வருத்தப்படுகிறது.

12. பன்னிரண்டாந் தீர்மானம் :—

தேர்ந்த வக்கீல்களுக்கு நீதி இலாகா உத்யோகங்கள்.

ஜில்லா நியாயாதிபதி, துணை நியாயாதிபதி, உதவி நியாயாதிபதி வேலைகளில்—எவ்வித விசேஷச் சட்டப் பயிற்சியு

மின்மி பொறுப்பான வேலைகளைத் திருப்திகரமாகச் செய்ய முடியுமென்ற நம்பிக்கை கொள்ளமுடியாமலும், இருக்கிற சிவிலியன்களோ, அதிகமாய் நியமிக்கும் தற்போதைய முறையானது, வெளி ஜில்லாக்களில் நீதி பரிபாலனம் திறமையாய் நடப்பதற்குப் பெருத்த இடையூறுமிருப்பதால், பயிற்சி பெற்ற வக்கீல்களை மேற்படி உத்தியோகங்களுக்கு நியமித்தவேண்டுமென்று காங்கிரஸ் அபிப்பிராயப்படுகிறது.

உப்பு வரி

13. உப்பின் மீது கடுமையாய் இப்போது வரி விதிக்கப்படுவதை காங்கிரஸ் பலமாய்க் கண்டிக்கின்றது. போதிய வளவு உப்பு வாங்க முடியாமல் எண்ணிறந்த வியாதிகளுக்கு ஜனங்கள் உள்ளாகி வருவதாலும், வருஷா வருஷம் இந்தியா கவர்ன்மெண்டின் உப்பு வருமானம் ஜாஸ்தியாகி வருவதை யுத்தேசித்தும், உப்பு வரியை 1888க்கு முன் இருந்த விகிதத்துக்குக் குறைத்துவிட வேண்டுமென்று காங்கிரஸ் வற்புறுத்துகின்றது.

பப்ளிக் சர்விஸ் கமிஷன்.

14. பப்ளிக் சர்விஸ் கமிஷனுடைய சிபார்சுகளினால் அனுஷ்டானத்தில் இத்தேச ஜனங்களுக்கு எள்ளளவும் நன்மையுண்டாகாமல் இருந்து வருவதைக் குறித்து காங்கிரஸ் விசனிக்கிறது: சிவில், மெடிகல், போலீஸ், இஞ்சினீரிங், தந்தி, கணக்கு, ஆகிய எல்லா இலாகா உத்தியோகங்களுக்கும் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் சம கால போட்டிப் பரீட்சை வைப்பதற்குச் சாதகமாய் 1893-ம் வருஷம் ஜூன் 2-ந்தேதி காமன்ஸ் சபையில் செய்யப்பட்ட தீர்மானத்தை உடனே அமுலுக்குக் கொண்டு வந்தாலன்றி, திருப்தி யேற்படாது. இந்தியா கவர்ன்மெண்டின் தற்போதைய முறைப்படி இருந்துவருவதை காங்கிரஸ் கண்டிக்கின்றது.

ரெயில்வேயில் இந்தியர்கள்

15. ரயில்வே நிர்வாகமானது கவர்ன்மெண்டின் மராமத்து இலாகாவில் ஒரு முக்கியமான பிரிவாயிருந்தும், டிராபிக் இன்ஸ்பெக்டர்கள். ஜில்லா டிராபிக் சூப்ரிண்டுகள், அக்கௌண்டண்டுகள், முதலிய பெரிய உத்தியோகங்கள் இந்தியருக்குக் கொடுக்கப்படுவதே யென்பதைக் கண்டு காங்கிரஸ் மிகவும் வருத்தப்படுகிறது. ரூபா 200 அதற்கு மேற்பட்ட சம்பளமும் ஐரோப்பியருக்குத் தான் கிடைக்கின்றது. இதன் பலனை அனுபவியமாக்க செலவுகள் அதிகரிக்கின்றன. வரி செலுத்துவோரின் தலையிலேயே அது வந்து விடுகிறது. இந்தியரின் பணத்தைக் கொண்டு தான் ஸ்டேட் ரயில்வேக்கள் போடப்பட்டிருக்கின்றன. இத்த ரயில்வேக்களிலும் ஜனங்களின் மீது தான் பாரம் சுமத்தப்படுகிறது. ஆகையால் ஸ்டேட் ரயில்வே நிர்வாகம் நடப்பது சாத்தியமாகும்படி இந்தியரின் குறையைத் தீர்த்து, யோக்கியதையுள்ள இந்தியருக்கு உயர்பதவிகள் ரயில்வேக்களில் அளிக்கப்பட வேண்டுமென்று காங்கிரஸ் வற்புறுத்துகின்றது.

பருத்திச் சரக்குகளின் மீது வரி.

16. விசை நூற்பாலைத் துணிகளால் இத்தேசத்திலேயே செய்யப்படும் பருத்தித் துணிகள் எவ்விதத்திலும் லங்காஷயர் சாமான்களோடு போட்டி போடவில்லையாதலால், 100-க்கு 3½ விதம் அதன்மீது வரி விதிப்பதானது தேசிகைத் தொழிலுக்குப் பெருத்த இடையூறாயிருப்பதோடு, மகத்தான அநீதமென்று காங்கிரஸ் கருதுகின்றது; கூடிய சீக்கிரத்தில் வரியை எடுத்துவிட வேண்டுமென்று காங்கிரஸ் பிரார்த்திக்கின்றது.

வைத்திய இலாகா பிரிவினை.

17. பொது ஜனங்களுடைய சௌகரியத்தையும், வைத்திய சாஸ்திர நிபுணர்களின் நன்மையையும் உத்தேசித்து ராணுவ வைத்திய சர்வீஸ் என்ற உத்தியோக வர்க்கத்தையும் ஒன்றையும் பொதுவாயும் செய்து, அதை இரண்டு இலாகாவாகப் பிரித்து, இந்தியத் துருப்புகளுக்கு இந்தியவைத்தியர்களாலே வைத்தியம்செய்யும்படிஏற்பாடாக வேண்டு மென்று காங்கிரஸ் அபிப்பிராயப்படுகிறது. மிர்லா கம்மிசட்டாயும் நிரமையாயும் நடிக்கஇதுமிகவும்அனுகூலமா யிருக்கும்சிவில் மெடிகல் சர்வீஸ்என்றஉத்தியோகஸ்தர் வித்தை ஒரு பிரத்தியேகமான உழியமாகச் செய்து, ராணுவ சம்பந்தமே பாராமற்படி செய்துவிட வேண்டிய தோடு, இந்தியர்களைக் கூடியவரையில்அதிகாமகச்சேர்த்துக்கொள்ளவும் வேண்டும். கிழ்த்தர வைத்திய உத்தியோகஸ்தர்கள் நிலைமையை அபிவிருத்தி செய்து குறைகளைத்தீர்த்து வைக்கும்படியும் காங்கிரஸ் கேட்டுக் கொள்ளுகிறது,

இந்தியருக்கு ராணுவப் பயிற்சி.

"டேட்ட் படை" என்ற உத்தியோகஸ்தர் படையொன்று சிருஷ்டித்து, பெரியவம்சத்தின் பிள்ளைகளுக்கு ராணுவப் பயற்சி கொடுக்க லார்டுகர்சன் ஏற்பாடு செய்திருப்பதற்கு காங்கிரஸ் கன்னி பாராட்டுகிறது; இதற்குமுன்னடந்த யுத்தங்களில் இந்தியத் துருப்புகள் அபூர்வமான வேலைகள் செய்திருப்பதாகக்கருதி, ராணுவத்தில்உயர்பதவிகள் இந்தியருக்கும் கொடுக்கவேண்டு மென்று காங்கிரஸ் வற்புறுத்துகிறது. ராணுவ கல்லூரிகள் ஸ்தாபித்து இந்தியருக்கு ராணுவப் பயற்சி செய்விக்க வேண்டியதும் அவசியமாகும்.

பிரிவிகவுன்ஸிலில் இந்தியரின், ஆயுதச்சட்டம் ஜூரி முறை முதலியன.

மூன்றிய காங்கிரஸ்களில் நிறைவேற்றப்பட்ட கீழ்கண்ட தீர்மானங்களையும் ஆமதாபாத் காங்கிரஸ் ஒப்புக்கொள்ளுகிறது:—(a) இந்தியாவிலிருந்து போகும் அப்பீல்களை பைசல் செய்வதில் ப்ரீவி கவுன்சிலுக்கு உபயோகமாயிருக்கும் பொருட்டு, தக்க இந்திய வக்கீல்களை அச்சபைக்கு நியமிக்க காலம் வந்துள்ளது. (b) ஜாதி வகுப்பு பேதம் பாராட்டாமல் எல்லோருக்கும் ஆயுதம் வைத்துக்கொள்ள தாராளமாய் லைசன்ஸ் கிடைப்பது சாத்தியமாகும்படி ஆயுதச் சட்டம் திருத்தியமைக்கப்படவேண்டும். (c) இங்கிலாந்தைப் போல் இந்தியாவிலும் வாலண்டியர்கள் சேர்க்க நாடெங்கும் முயற்சிக்கவேண்டும். (d) பஞ்சாப்பில் ஒரு ஐப்கோர்ட்டு ஸ்தாபிக்கப்படவேண்டும். (e) இந்தியக்கல்வி இலாகாவிலுள்ள உயர்ந்த ஸ்தானத்திற்கு போகியதை உயர்ந்த இந்தியரும் நியமிக்கப்படுவது சாத்தியமாகும் வண்ணம் வித்யா இலாகாவிற் மறு அமைப்புத் திட்டத்தில் சில ஏற்பாடுகள் செய்ய வேண்டும். (f) ஜூரி விசாரணை முறையை எல்லா ஜில்லாக்களிலும் அதஷ்டானத்திற்கு கொண்டுவந்து, ஜூரி அபிப்பிராயத்தை அவசியம் ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும் விதி செய்துவிட வேண்டும். (g) கிரிமினல் கேசுகளில் எதிரிகள் இந்தியராயிருந்தால், அக்கேஸ்களை விசாரிக்க நியமிக்கப்படும் ஜூரிகளில் பாதிப் பேராவது இந்தியராயிருக்க வேண்டும். இ. பு. கோ. சட்டபுத்தகத்தையும் அவ்வாறே திருத்திவிட வேண்டும்.

பிரிட்டிஷ் காங்கிரஸ் கமிட்டி.

காங்கிரஸ் மகா சபைக்கு லண்டனில் ஒரு கிளையும் பிரிட்டிஷ் காங்கிரஸ் கமிட்டி யொன்றும், காங்கிரஸின் கொள்கைகள் பரவச் செய்வதற்காக ஒரு பத்திரிகை

யும் அவசியமாதலால், லண்டனில் இப்போதிருக்கிற "இந்தியா" பத்திரிகையும் பிரிட்டிஷ் கமிட்டியும் இனிமேலும் நடத்திவர வேண்டுமென்று காங்கிரஸ் அபிப்பிராயப்படுகிறது. இந்தியாவுக்கு அப்பத்திரிகையில் 4 ஆயிரம் பிரதிகளாவது மொத்தத்தில் அனுப்பப்பட்டு, அதன் தொகை ஈடு செய்து கொள்ளப்பட வேண்டும், பிரிட்டிஷ் காங்கிரஸ் கமிட்டியார் இதுவரையில் செய்துள்ள வேலைக்கும் இவ்வருஷம் செய்த வேலைக்கும் காங்கிரஸ் நன்றி பாராட்டுகிறது.

பதினேட்டாம் ஜனசபையின் சரித்திரம்

முற்றுப் பெற்றன.

பதினேட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

ஜனசபையின் சரித்திரம்.

பத்தொன்பதாம் அத்தியாயம்.

1903 - சென்னை பத்தொன்பதாங் கூட்டம்.

சென்னை, தேனும் பேட்டை (தேவ நாயகன் பேட்டை) வஸந்தத் தோட்டத்தில் பாரத ஜன ஸபையின் பத்தொன்பதாவ் கூட்டம் 1903, டிஸம்பர், 28, 29, 30 தேதிகளில் நடை பெற்றது. அதனுடன் இயல் பெற்ற தொழிற் காட்சியை 26-ம் தேதி யன்று மைஸூர் மஹாராஜா திறந்தனர். இந்த ஸபைக்கு முதல் முதலாக பர்மா ஜனஸபை வட்டத்துப் பிரதிநிதி யொருவர் வந்திருந்தனர். இந்த வருஷத்துக் கூட்டத்திற்கு வந்த பிரதிநிதிகளின் மொத்தத் தொகை 538. நவாப் ஸய்யது மஹம்மது பஹதூர் உபசரணத் தலைவர். ஸபா நாயகர் லால் மோஹன் கோஷ் என்ற வயது முதிர்ந்த, கல்கத்தா "பாரிஸ்டர்" இவர் இங்கிலாந்தில் காமன்ஸ் ஸபையில் ஸ்தானம் பெற முயன்று பயனடையாமல் இந்தியாவுக்கு வந்து வக்கில் தொழிலில் பெருங் கீர்த்தி லம்பார்த்திருந்தார்.

ஸபா நாயகர் செய்த ப்ரஸங்கத்தின் ஸாரம்.

ஸ்ரீமான் லால் மோஹன் கோஷ் சொல்லுகிறார்:—

சில வருஷங்களாக நான் ராஜீகக் கிளர்ச்சியில் லம்பக் தப் படாமல் விலகு கின்றேன். இதன் பொருட்டாகவே என்னை இந்த ஸபையில் ஸபாநாயகராக இருக்கும்படி வேண்டிக்கொள்ளும் போது பிரோஸ்ஷா மேத்தா எனக்கு "ராஜீக யோகி" என்று பட்டஞ் சூட்டினர். அதாவது,

ராஜாங்க விஷயம் சம்பந்தப்பட்ட மட்டில் நான் ஒன்றும் செய்யாமல் சும்மா தூங்கிக் கொண்டிருந்தே னென்று, அவர் கருதுகிறார். எனிலும் ராஜீக விஷயங்களைப் பற்றி நான் பேசாமை செய்யாம விருக்க வில்லை. இத்தனை காலமும் நான் பேச்சிலே செலவிட் டிருந்தால் எனக்கு ஏற்பட்டிருக் கக் கூடிய அனுபவத்தைக் காட்டிலும் இப்போது நீண்ட காலத்துத் தனிமையான சிந்தனையால் மெல்ல மெல்லப் பக்குவ மடைந்திருக்கும் எனது ராஜீகக் கொள்கைகள் தேசத்தாருக்கு அதிகப் பயன் படக் கூடு மென்று நினைக் கிறேன்.

(மொழி பெயர்த்தவர் குறிப்பு:—ராஜீகக் கிளர்ச்சியில் சேர்ந்து பழகியிருந்தால் இவருடைய அனுபவம் இன்னும் அதிகப் பக்குவ மடைந்திருக்கு மென்பதில் ஆக்ஷேபமில்லை. பொது விஷயங்களில்கலக்காமல் விலகி யிருந்து ஆலோசனை செய்வோருக்கு ராஜாங்க ஞானம் அதிகமாக ஏற்படு மென்ற கொள்கை முழு உண்மையன்று.)

லால் மோஹன் கோஷ் சொல்லுகிறார்:—தெய்வ அருள்.

ப்ரிட்டிஷ் ஆட்சி பரவி வருதல் தெய்வத்தின் அரு ளென்றும், அதனால் தனக்கு நன்மை விளைந்திருப்பதாக ஒவ் வொருவனும் அங்கீகாரம் செய்ய வேண்டு மென்றும் லார்ட் கர்ஸன் அபிப்பிராயப்படுகிறார். ப்ரிட்டிஷ் ராஜ்யத்தி னிடம் நாம் உண்மையான பக்தி செலுத்துகிறோம். எனி லும், ராஜாங்கத்தாரின் செய்கைகளைக் கண்டித்துப் பேசும் உரிமை நமக்குண்டென்பதில் ஐயமில்லை யாதலால் பின் வரும் கேள்வி கேட்கிறோம்.

பலவருஷங்களுக்கு முன்னே நம்முடைய உள் நாட்டுக் கைத் தொழில்களை யெல்லாம் நாசப்படுத்திய ப்ரிட்டிஷ்ராஜ நீதி, இப்போது கூடச்சிறிது காலத்துக்கு முன் 'லிபரல்'

கக்ஷியின் அதிகாரத்தின் போது வெட்க மின்றி நம்முடைய பஞ்சுத்துணிகளின் மீதுசுங்கத் தீர்வை விதித்ததுப்ரிட்டிஷ் ராஜ நீதி. நமது தேசத்திலிருந்து சுமார் 200-லக்ஷம் பவுன் வற்றடித்துக்கொண்டு போவது ப்ரிட்டிஷ் ராஜநீதி. மேலும் நம்முடைய விவசாயிகளின் மீது அபாரமான தீர்வைகள்விதித்து, இந்நாட்டில் இதுவரை எக்காலத்திலும் இல்லாதபடி மிகக்கொடிய பஞ்சங்கள் இத்தனை அடிக்கடி தோன்றும் படிசெய்தது ப்ரிட்டிஷ் ராஜநீதி. இத்தகைய ராஜநீதியொன்றை நமக்கு வகுத்துக் கொடுத்த தெய்வம் அருளினால் அங்ஙனம் செய்த தாகச் சொல்லுதல் நம்பத் தக்க வார்த்தையன்று.

டில்லி தர்பார்.

சென்ற வருஷத்தில் லார்ட் கர்ஸன் டில்லி தர்பார் நடத்தினார். அளவிறந்த பணம் சேதமாய் விட்டது. ஸ்வதேச ராஜாக்களுக்கு இதுவரை ப்ரிட்டிஷ் ஆட்சியின் கீழே எக்காலத்திலும் செய்யப் படாத அவமானங்கள் அப்போது செய்யப் பட்டன. தர்பாருக்கு வந்த இந்தியர்கள் மீண்டும் தத்தம் ஊர்களுக்குச் செல்லும் போது தர்பாரில் தமக்கும் ஐரோப்பியருக்கு மிடையே செய்யப் பட்ட கொடிய பக்ஷபாதங்களை நினைத்து நினைத்து மனங் கொதித்துக் கொண்டு போயினர்.

ஸ்வ ராஜ்யம்

நமக்கு ஸ்வராஜ்யம் இல்லாமலிருப்பதே இந்தக் கஷ்டங்களுக் கெல்லாம் காரணம். நம் இஷ்டப் படி மந்திரிகளை மாற்றும் அதிகாரம் நமக்கில்லை. நாட்டிலே பஞ்சமும் கொள்ளை நோயும் பரவிக்கிடக்கையிலே இப்படி யொரு விண்டம்பத்தில் பொருளை அளவின்றி நாசப் படுத்தும் ஆட்சி இங்கிலாந்திலேனும், பிரான்ஸிலேனும் அமெரிக்காவிலேனும் ஸாத்யப்படு மென்று நினைக்கிறீர்களா? தேச முழுதிலும் பத்திரிகைகளிலும் ப்ரஸங்க மேடைகளிலும் ஜனத்

தலைவர்கள் அத்தனை பேரும் ஒரே முழக்கமாகத் தமக்குக் கூறிய வார்த்தைகளை யெல்லாம் புறக்கணித்து அந்த வீண் கோலம் கடத்தப் பட்டது. பிறர் பணத்தைக் கணக்குக் கேட்பார் யாருமில்லாத இடத்தில் வாரி வாரிச் செலவிடுதல் சுலபமன்றோ?

இந்த தர்பாரில் வீண் டம்பங்களில் அழிந்த தொகையில் ஒரு பகுதி யேனும் பஞ்ச நிவர்த்தி விஷயத்தில் செலவிட்டிருந்தால் கோடிக்கணக்கான ஆணும் பெண்ணும் குழந்தைகளும் பசியால் சாகாமல் உயிர்தப்பி யிருப்பார்களன்றோ?

ஆங்கிலேயே ராஜ்யத்தால் நாட்டில் அராஜகக் குழப்பங்கள் நீங்கி சமாதானம் ஏற்பட்டது மெய்தான்.

[மொழிபெயர்த்தவர் குமிப்பு:—உலகம் தொடங்கியது முதல் கேற்று ஆங்கிலேயர் இங்கே வியாபாரக் கூட்டத்தார் ஆய்த் துணியும் கண்ணுடியும் சாராபமும் விற்கவந்த காலம் வரை எப்போதுமே இந் நாட்டில் உட் கலகங்களும் போர்களும் நடந்துவந்ததாக அர்த்தமில்லை. ஆங்கிலேயர் முதலிய வெளிநாட்டார் இங்குவந்து குடியேறிய பின்புதான் பெரும் பகுதி வெளி நாட்டாரின் சூழ்ச்சிகளால் உட்குழப்பங்கள் மிகுதிப்பட்டன. அதை நீக்கும்படி தேசத்தார் ஆங்கிலேயரின் ஆட்சி யேற்பட இடங் கொடுத்தார்கள்...] எனினும், கோடிக்கணக்கான ஜனங்கள் பேரிலும் குழப்பத்திலும் மடிந்தால் நமக்கென்ன? பஞ்சத்திலும் பசியிலும் மடிந்தாலென்ன? இரண்டும் நமக்கொன்று போலவேயாம். ராணுவச்சிலவு மிதமிஞ்சி நடந்துவருகிறது. உள் நாட்டில் சௌமான நீதி நடக்கவில்லை. ஒரு இந்தியனை ஒரு ஐரோப்பியன் அடித்தால் அதற்கு நீதியில் பரிஹாரம் கிடைக்குமென்று நம்ப இடமில்லாமலிருக்கிறது. இதை பார்லிமெண்ட் ஸபையார் கவனிக்க வேண்டும்.

ரகஸ்யச் சிறை யோலைகள்.

ப்ரான்ஸ் தேசத்தில் ராஜாங்கப் புரட்சி நடக்குமுன்னே கொடுங் கோலரசு தலை தூக்கிக் கூத்தாடிக் கொண்டிருந்த காலத்தில் "லேத்தர் தே கசே" (அதாவது—மூத்திரை யோலைகள்—ஜனங்களை நீதி விசாரணை யில்லாமல் எவ்வளவு காலம் வேண்டுமானாலும் அடைத்து வைக்க அனுமதி கொடுக்கும் ராஜாங்கச் சிறை யோலைகள்) பிறப்பிக்கும் வழக்கமிருந்தது. 1789-ல் ப்ரான்ஸ் தேசத்தார் அவ்வழக்கத்தை ஒழித்து விட்டனர். இந்தியாவிலோ அவ்வழக்கம் புதிதாக 1818-ல் ஏற்படுத்தப் பட்டு இன்றுவரை அனுஷ்டானத்திலிருந்து வருகிறது.

வேறு சில கொடுமைச் சட்டங்கள்

மேலும் மிகக் கொடிதான ராஜத்துரோகச் சட்டமொன்று செய்து அதிகாரிகள் தேசாபிமானிகளைச் சிறைப் படுத்து கிறார்கள். அங்ஙனம் சிறைப்பட்ட தேசபக்தர்களில் ஒருவர் கல்கத்தா ஜனஸபைக் கூட்டத்துக்கு வந்திருந்த காலத்தில் அவருக்கு ஜனங்கள் செய்த உபசாரத்தினின்றும் அவர் குற்றவாளி யில்லையென்பதும் அநியாயமாகக் கொடுங் கோன்மைக்குட் படுத்தப்பட்ட தேசபக்த மஹாவீர னென்பதுமே ஜனங்களுடைய கருத்தாகுமென்பது தெற்றன புலப்பட்டது.

ராகரீக தேசங்களிலெல்லாம் ஒருவன் மீது குற்றம் சாற்றினால் அதை ருஜுப்படுத்த வேண்டிய கடமை சாற்றுவோரைச் சேரும். அங்ஙனமில்லாது குற்றம் சாற்றப் பட்டவனே அக்குற்றம் தன் பேரில்லை யென்பதை ருஜுப்படுத்த வேண்டுமென்றும், அவன் அதை ருஜுப்படுத்த முடியாதிட்டால் அக்குற்றத்தை நீதி நிறுத்த வேறு ராக்ஷியம் வேண்டியதில்லை யென்றும் கொள்ளுதல் நிருகத்தனம். இல்லாத ராகரீகக் கொள்கையுடைய உத்தியோ

ரகஸ்யங்களின் மதோதக என்பதொரு மதோதாவை நமக் கிடையே வெடி குண்டு விசுவத்போல் லார்ட் கர்ஸன் வீசியிருக்கிறார் கல்விஷ்தலங்களே உத்தியோகஸ்தருக்கு அடி மைப் படுத்தும் படியான லர்வ கலா லங்க மதோதாவும் நமது பலமான ஆக்ஷேபத்துக் குரியதேயாம். செண்ஸ் முனிசிபல் சட்டமும் வெறுத்தற் குரியது..

முடிவுரை

ஆரம்பக்கல்வியை நாடுமுழுதிலும் இலவசமாகவும் கட்டாய மாகவும் செய்து விட வேண்டும். ஆங்கிலேயரின் வியாபார முறையில் அழிந்துபோன சுதேசக் கைதொழில்களை மீள உயர்ப்பித்து வளர்க்க வேண்டும். ஹிந்து மகம்மதியர்களுக் கிடையே இன்னும் பலமான ஒற்றுமை ஏற்படுத்த வேண்டும். ஆங்கிலேயர் எக்காலத்திலும் நமது சொந்த நாட்டில் ஆட்சியில் விடுதலைக்குரிய வழிகளை மேன்மேலும் நாடி வந்திருக்கிறார்கள். எனினும் இந்தியாவில் அவர்களுடைய ஆட்சி விடுதலைக்குச் சார்பாக நடைபெற வில்லை யென்பதைக் காட்டி ஆங்கிலேயக் கவியொருவர் பின்வருமாறு பாடியுள்ளார்:—

"விடுதலையிற் பிறந்த ப்ரித்தானியர் தாம்
விரிகடல் கடந்துபோய்ப் பாரத நாட்டில்
விடுதலையும் அமைதியும் வெல்லுவித்தனரா?
இல்லை; யில்லை. உரோம நாட்டாரினும்
பேரவாக் கொண்டு ப்ரித்தானியர் தாம்
பாரத நாட்டிற்கு விடுதலை மறுத்தனர்
யுரோப்பாவின் கொடுஞ்செயற் கெல்லாம்
ஆங்கில நாடு வழிகாட்டிற்றே.
குற்றச் சாதியார் கூடிச்செல்கையில்
ஆங்கிலநாடு தலைமை பூண்டதுவே"

இங்ஙனம் ஆங்கிலக் கவிராயரே பாடியிருப்பினும் நாம் இங்கே ஆங்கிலேயர் அநாகரீகமாக நடந்து கொள்ளாமல் நமக்கு ஸ்வராஜ்யம் கொடுப்பாறென்றே நம்புகிறோம். என்று லால் மோஹன் கோஷ் தம் உபந்நியாசத்தை முடித்தனர்.

19ம் ஜனசபைக் கூட்டத்தில் நடந்த வேறு விசேஷங்கள்.

இந்த ஸபையின் இரண்டாந் தீர்மானம் ராஜாங்க உத்யோகங்களில் உயர்ந்த படிகளின்றும் ஸ்வதேசிகளை விலக்கி வைத்திருக்கும் அநியாயத்தைக் குறித்து இந்தத் தீர்மானத்தை தீன்ஷா எதுல்ஜீ வாச்சா ப்ரேரேபனை செய்து பேசுகையில் இந்த விஷயத்திலே ஸ்வதேசிகள் ஏறக்குறைய அடிமை நிலையிலிருப்பதை எடுத்துக் காட்டினார். அத்தீர்மானத்தை ஜீ. சுப்பிரமணிய அய்யர் ஆதரித்துப் பேசுகையில் பின்வருமாறு கூறினர்:—

"ஜாப்பானில் இத்தோ ப்ரபு ஒக்கூமா ப்ரபு, முதலியவர்கள் அடைந்திருக்கும் உந்நத நிலைமையை நமது தேசத்தில் நாம் பெற இடமில்லாமல் போய்விட்டது. இந்தியாவை ஆளுவதற்கு ஒரு குறிப்பிட்ட தொகைக்குக் குறையாமல் ஆங்கிலேயர் அவசியம் இருக்கவேண்டுமென்று அதிகாரிகள் சொல்லுகிறார்கள். இதன் பொருளென்ன? நமது நாட்டில் நாம் அடிமைகளாக வாழ்கிறோமென்பதே இதன் பொருள்." என்றார்.

"உத்தியோக ரகஸ்யங்களின் மசோதிவைப் பற்றிய ஆறாம் தீர்மானத்தை ஸ்ரீ விஷ்ணு நாராயண தரர் ப்ரேரேபனை செய்து பேசுகையில்:—இது போன்ற சட்டங்களால் ப்ரிட்டிஷ் ஆட்சி ருஷிய ஆட்சிக்கு ஸமமாகச் செய்யப்பட்டு வருகிறதென்று நாம் சொல்வதை லார்ட் கர்ஜன் ஆக்ஷேபித்துப் பேசுகிறார்.

ஆனல் ருஷியச் சட்ட புஸ்தகத்திலே, சுத்தமான சட்டம் ஸம்பந்தப் பட்ட வரையில் ஜனங்களின் குடி யுரிமை களுக்கு இத்தனை பெருங் கேடு விளைவிக்கத் தகுந்த கொடு மைச் சட்டமில்லை யென்பது தெரியாதபடி குறிய ஆட்சி விஷயத்தில் லார்ட் கர்ஜன் அத்தனை தூரம் அறியாமை கொண்டிருப்பது பற்றி ஆச்சர்யப் படுகிறேன்" என்ருர்.

ஜனசபையின் பெரிய உபகாரிகளில் ஒருவராக இருந்த ராமநாதபுரம் ராஜா இறந்து போனதைக் குறித்து ஜனசபை யில் வருத்தந் தெரிவிக்கப் பட்டதும், வ. ஓ. சிதம்பரம், தீ. வ. வரச்சா இவ் விருவருடன் துணைக் கார்ய தரிசியாக கோபலா க்ருஷ்ண கோகலே சேர்க்கப் பட்டதும் இவ் வருஷத்தில் குறிப்பிடத் தக்க வேறு விசேஷங்க ளாகும்.

தீர்மானங்கள்

1903—சென்னை—19-ம் ஜனசபைக் கூட்டத்தில் செய் யப் பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:—

1. முதல் தீர்மானம்:—

துக்கம்

ஆல் டெர்லி (யூர்) ஸ்டான்லி ப்ரபு என்பவரும் W. S. கெய்னும் இறந்து போனது நிமித்தமாக இந்தியாவுக்கு கே ரிட்ட ஆழ்ந்த தீர்க்க முடியாத நஷ்டத்தைக் குறித்து இந்த ஜனசபை வருத்தப் படுகிறது. அவர்கள் செய்த உபசாரங் களை இந் நாட்டார் எக்காலத்திலும் மறக்க மாட்டார்கள்.

மேலும் ஜனசபைக்கு எப்போதும் விசேஷ உபகாரி யாக விளக்கிய ராமநாத புரத்து ராஜா இறந்து போனது பற்றி இந்த சபை துக்கப்படுகிறது.

2. இரண்டாந் தீர்மானம்:—

ராஜாங்க உத்தியோகங்கள்

முந்திய ஜனசபைக் கூட்டங்களில் கருத்தைத் தழுவி இந்த ஜனசபையும் உத்தியோக விசாரணைக் கூட்டத்தாரின் வேலைகளால் இந்த தேசத்தாருக்கு யாதொரு நற் பயனு மில்லாமல் போனது பற்றி மிகவும் வருத்தப் படுகிறது. ஸர்க்கார் உத்தியோகங்களில் உயர்ந்த ஸ்தானங்களில் இந்த தேசத்தாரை அதிக மாகவும் விரிவாகவும் நியமிக்க வேண்டு மென்ற பிரார்த்தனைக்கு அக்கூட்டத் தாரின் சிபார்சுகள் பரி பூரண நிபாயம் செலுத்தவில்லை. அப்படி யிருக்க, அவற் றைக்கூட ராஜாங்கத்தார் முழுதும் நிறைவேற்ற வில்லை. (அந்த சிபாரிசுகள் செய்யப் பட்டபின்) இடைக்கிடையே ஸ்ருஷ்டி செய்யப்பட்ட புதிய உத்தியோகங்களிலும் உப்பு, அபினி, போலீஸ், வைத்தியம், இந்தியா கவர்ன்மெண்டாரின் சில அளவை இலாகா, கவர்மெண்ட் தந்தி இலாகா, இம்பீரி. ப்ரிட்டிஷ் தந்தி இலாகா காசு முத்திரை, தபால் இலாகா அன்ய இலாகா முதலிய விசேஷ இலாகாக்களிலும் இந்தி யாரை நியமிக்க வேண்டு மென்ற கொள்கையை நிறைவேற் றுமளிப்பது கண்டு இந்த ஸபை வருந்துகிறது.

(2) ரயில்வே பரிபாலனத்திக்குப் பொருப்பாளிகளான இலாகா அதிபதிகள் முதலிய அதிகாரிகள் பொதி உத்தி யோகங்களிலும் ரயில்வே உத்தியோகங்களிலும் இந்தியர்கள் சேராதபடி ஸமீபத்தில் தடை செய்திருக்கும் முறைமை! ராஜாங்கத்தாரால் கொடுக்கப்பட்டிருக்கும் ஒப்பந்தங்களுக் கும் வாக்குறுதிகளுக்கும் விரோத மாகுமென்று இந்த ஜன ஸபை அபிப்பிராயப் படுகிறது.

(3) ராஜாங்கத்தார் இப்போது நடத்தி வரும் உத்தியோக நியமன முறையால் இந் நாட்டுக்கு நேரும் பொருள் வற்று தல் நிறுத்தும் பொருட்டாகவும், ராஜ்ய பரிபாலனத்தில் செட்டு வழியை அனுஷ்டிக்கும் பொருட்டாகவும் எல்லா

உத்தியோக இலாகாக்களிலும் ஸ்வதேசிகளை தாராளமாக நியமிக்கும் முறையை மிகவும் அவசரமாகக் கைக்கொள்ளும் படி இந்த ஜனசபை வேண்டுகிறது.

3 மூன்றாந் தீர்மானம்:—

நிலவரித் திட்டம்.

ஒவ்வொரு முறை புதுதிட்டம் போடுகையிலும் நிலவரிவிஷயத்தை உயர்த்தும் வழக்கத்தைக் கண்டு இந்த ஜனசபை மனம் நடுங்குகிறது. இத்தனை மிகுதியாகவும் அடிக்கடித்தும் தீர்வைத் திட்டத்தை உயர்த்துவதினின்றும் தேசத்து விவசாயிகளின் வறுமை மிகுதிப்படுவது மன்றி மாசூல் குறைவுகளும் பஞ்சங்களும் நேரும்போது அவற்றைத் தாங்கும் திறமை ஜனங்களுக்கு மேன்மேலும் குறைந்து வருகிறது.

ஆகலால் தேசத்தில் சாசுவதத் திட்டம் ஏற்படுத்துவதற்குப் பக்குவமாக இருக்கும் பகுதிகளில், 1862, 1867 வருஷங்களில் இந்தியா மந்திரியின் அறிக்கைகளில் கூறிய படி, அதனை ஏற்படுத்த வேண்டுமென்றும், சாசுவதத் திட்டத்தை வழக்கப்படுத்த இன்னும் தகாதனவாக ராஜாங்கத்தாரால் கருதப்படும் ப்ரதேசங்களில் நீண்ட காலத்திட்டங்கள் ஏற்படுத்த வேண்டுமென்றும், மிசைத்திட்டங்கள் செய்யாதபடி நீதிச் சட்டதிடைகள் விதிக்க வேண்டுமென்றும் இந்த ஜனசபை ப்ரார்த்திக்கிறது.

4. நான்காந் தீர்மானம்:—

ப்ரிடிஷ் குடியேற்ற நாடுகளில் இந்தியர்களின் நிலைமை தென்ஆப்ரிகா, ஆஸ்த்ரேலியா முதலிய ப்ரிட்டிஷ் குடியேற்ற நாடுகளில் வஸிக்கும் இந்தியர்களுடைய கஷ்ட ஸ்திதியையும், குடியேற்ற ராஜாங்கத்தார்களால் அவர்களுக்குச் செய்

யப்படும் சுதந்திரங்களையும், உரிமைக் குறைவுகளையும். இவற்றுல் சக்ரவர்த்தியின் ப்ரஜைகளாகிய அவர்களுக்குள்ள பதவியிலும், ஸ்வதந்திரங்களிலும் ஏற்பட்டிருக்கும் இழிவையும் கருதி இந்த ஜனஸபை மிகவும் வருத்தப் படுகிறது. இந்தியர்களைக் கீழ் நிலையிலுள்ள அநாகரிக ஜாதியாரென்று அந்நாட்டினர் நடத்துவதை இந்த ஸபை கண்டிக்கிறது. இந்தியர்கள் அந்நாடுகளிலே சென்று வாழ்வதால் அவற்றுக்கும் இந்தியாவுக்கும் விளைந்திருக்கும் பொருளனுகூலங்களையும், அந்நாடுகளில் ஏற்பட்டிருக்கும் தொழிற் பெருக்கத்தையும் யோசித்து இந்தியா கவர்ன்மெண்டார் சக்ரவர்த்தியின் ஐரோப்பிய ப்ரஜைகளுக் குள்ளது போலவே ப்ரிட்டிஷ் குடிமையினல் நம்மவர்களுக்குள்ள எல்லா உரிமைகளையும் ஸ்வதந்திரங்களையும் காப்பாற்றிக் கொடுக்க வேண்டும். இதன் பொருட்டு அவசியமானல், கோர்மையும், நியாயமும், மதிப்புமுள்ள நிபந்தனைகளுடனே யன்றி மற்றப்படி அந்நாட்டினர் இந்தியர்களைத் தருவிக்க முடியாதபடி செய்துவிட வேண்டும். சக்ரவர்த்தியின் குடிகள் எல்லாரையும் ஸமமாக நடத்த வேண்டுமென்ற கொள்கையின் உயர்ந்த முக்யத் தன்மையைக் கருதி எல்லா ப்ரிட்டிஷ் குடியேற்ற நாடுகளிலும் இந்தியர்களுக்கு அந்த (ஸமான) பதவியை உறுதி செய்து கொடுப்பதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்யும்படி இந்த ஜனஸபை ப்ரித்தானிய ராஜாங்கத்தாரை வேண்டுகிறது.

5. ஐக்கர் தீர்மானம்;—

ஸர்வகலா ஸங்கங்களின் மஸோதா.

ராஜாங்கத்தாரின் கல்வி முறையைச் சீர்திருத்துவதற்கு ஆழ்ந்த மதியுடன் ஆலோசனை செய்யப்படும் எவ்விதமான ஏற்பாட்டையும் இந்த ஜனஸபை நல்வரவு கூறி ஏற்றுக்கொள்ளும்; ஸர்வகலா ஸங்க மஸோதா சட்டமாய்விடின்

ஸர்வகலா ஸங்க விசாரணைக் கூட்டத்தாரின் அறிக்கையிலே சிபார்சு செய்யப்பட்டபடி, கல்வியின் பரவுதலைக் குறுக்கி, ஸர்வகலா ஸங்கங்களின் திறமைக்கும் பயன்படு தன்மைக்கும் ஆதாரமாகிய ஸ்வாதீனத்தை அழித்து, அவற்றை ராஜாங்கத்தின் இலாகாக்களாகச் செய்து முடித்துவிடக் கூடுமென்று இந்த ஜனஸபை அபிப்பிராயப் படுகிறது.

உயர்தரக் கல்வியின் தற்கால முறைமையிலுள்ள குறைவுகளை இந்த மசோதாவின் நியமங்கள் நீக்கமாட்டாவென்றும் கல்விக்கு அதிகப் பணம் பகுத்துக் கொடுத்தலும், உயர்ந்த பயிற்சி யுடைய உபாத்தியாயர்களின் மூலமாகக் கல்வி யளவில் அபிவிருத்தி எற்படுத்துதலும் மிக அவஸர மென்றும் இந்த ஜனஸபை கருதுகிறது.

மேலும், பின்வரும் திருத்தங்கள் செய்யும்படி இந்த ஜனஸபை வேண்டுகிறது:—

(1) ஒவ்வொரு ஸர்வகலா ஸங்கத்துக்கும் தனித்தனியாக வெவ்வேறு சட்டம் சமைக்க வேண்டும்.

(2) புராதன ஸர்வகால ஸங்கங்களின் விஷயத்தில் ஸாமான்ய ஸபிகர்களின் தொகை 200-க்குக் குறையாமல் இருக்கவேண்டும். அவர்களில் குறைந்த பக்ஷம் 80 பேர் பதிவு செய்யப்பட்ட பட்டதாரிகளால் தெரிந்தெடுக்கப்பட வேண்டும். சாஸ்த்ர வகுப்புகளின் அங்கத்தாரால் 20 பேர் தெரிந்தெடுக்கப்பட வேண்டும். அலஹபாத்து பஞ்சாப் ஸர்வ கலா ஸங்கங்களின் விஷயத்திலும் இது போலவே ஏற்பாடு செய்யவேண்டும்.

(3) ஸாமான்ய ஸபிகர்கள் இப்போதிருப்பது போலவே ஆயுள் முழுமைக்கும் உத்யோகம் வஹிக்கவேண்டும். குறிப்பிட்ட கால அளவொன்று முழுமையும் கூட்டத்துக்கு வரத் தவறுவோர் (ஸபிக ஸ்தானத்துக்குத் தகுதியற்றவராகச் செய்துவிட வேண்டும்.)

(4) நிர்வாஹ ஸபைகளில் இத்தனையிலொரு பங்கு கலாசாலைத் தலைவர் இருக்கவேண்டு மென்ற நியமத்தை ஒழித்து விடவேண்டும்.

(5) ஒரு காஸ்த்ர இலாகாவில் பத்து வருஷ அனுபவ முடைய எல்லாப் பட்டதாரிகளும் வாக்குச்சீட்டுப் போடத் தக்கவர்களாகச் செய்யவேண்டும்.

(6) (ஸர்வ கலா ஸங்கத்தில்) பதிவுக்கு மனுக்கொடுக் கும் கலாசாலை ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டிருப்பன வும் மாணக்கர்களுக்கும் உபாத்தியாயர்களுக்கும் வாஸ ஸ்தானங்கள் ஏற்பாடு செய்யவேண்டு மென்றும் கலாசாலை களை சாச்வதமாகக் காப்பதற்கு வழிசெய்யவேண்டு மென் றும் வற்புறுத்தும் நியமத்தை அழித்துவிடவேண்டும்.

(7) பதிவு செய்தல், பதிவினின்றும் நீக்குதல் என்ற விஷயங்களில் முடிவான தீர்மானம், இம் மாதிரிப்படி ராஜாங்கத்தார், நேரே செய்வதென்ற முறையை விட்டு, இப்போதுள்ள படியே, ராஜாங்கத்தாரின் அனுமதிக் குட் பட்டு ஸர்வ கலா ஸங்கத்தாரால் செய்யப்பட வேண்டும்.

(8) ஸர்க்கார் கல்வி இலாகா வுடனேனும், ஸர்க்கார் உதவி பெற்ற அல்லது பெறுத எந்தக் கலாசாலை யுடனே னும் ஸம்பந்தப் படாதவர்களாய், (ஸர்வ கலா ஸங்கத்து நிர்வாஹ ஸபையாரால்) விசேஷமாக நியமிக்கப்பட்ட மனி தர்களாலேயே கலாசாலைகளின் பரிசோதனை செய்யப்பட வேண்டும்.

(9) உபவிதிகளும், நியதிகளும் செய்யும் அதிகாரம் இப்போதுள்ளபடியே ராஜாங்கத்தாரின் அனுமதிக் குட் பட்டு நியம ஸபையாரால் வஹிக்கப் படவேண்டும்.

(6) ஆறாந் தீர்மானம்:—

உத்யோக ரஹஸ்யங்களைக் குறித்த விசாரணை

இப்போது வைஸ்ராய் சட்ட சபையின் ஆலோசனை யிலிருக்கும் உத்யோக ரஹஸ்யங்களின் விசாரணை இந்த ஜன சபை முற்றிலும் அஸம்மதத்துடன் கணிக்கிறது. (இந்த விசாரணை) வேண்டப் படாதது; பொது நலத்துக்கு விரோதமானது; தனி மனிதனுடைய ஸ்வதந்திரத்துக்கு அபாயமானது; பிற்போக்கான முறையைத் தழுவியது. ஆதலால் இதன் செய்கை கடற்படை, தரைப் படை ரஹஸ்யங்களை வெளி யிடுவதைப் பற்றிய அளவுக்கு வரை யறுக்கப்பட வேண்டுமென்று இந்தியா கவர்ன்மெண்டாரை இந்த ஜன சபை ப்ரார்த்திக்கிறது.

7. ஏழாந் தீர்மானம்:—

ராணுவச் செலவு.

உள் நாட்டுப் பகைவரிட மிருந்தேனும், பக்கத்து நாடு களினின்று படை யெடுத்து வரக்கூடிய போர்க் கூட்டத்தாரிட மிருந்தேனும், பாரத தேசத்தைப் பத்திரமாகக் காக்க வேண்டுமென்ற கருத்தின்பேரில் (பொதுப் படையாகக்) கிழக்கு திசையில் பிரிட்டிஷ் அதிகாரத்தின் தலைமையைக் காக்கும் பொருட்டு கோட்டைகள் கட்டுவதற்கும் ஆயுதங்கள் சேகரிப்பதற்கும் இந்தியாவின் பணம் கோடிக் கணக்காகச் செலவிடப் பட்டு வருகிறது. இக்காரியங்கள் இந்தியாவின் எல்லைக்குப் புறம் பெருந் தூரம் செல்லும் நோக்கத்தை யுடையன. இவற் றைத்தாண்டும் கொள்கை ஸாம்ராஜ்யக் கொள்கையாம். ஆதலால் ஸ்வதேசப் படை மட்டுமே யன்றி, ப்ரித்தானிய ஸைன்யமுழுதிலும் மூன்றிலொரு பங்கு தொகையுள்ள ப்ரிட்டிஷ் படையும் உட்பட்டதாகிய பாரத ஸைன்யத்தின் செலவுகள்

மிதமிஞ்சின; அநியாய மாவன. இந்தியாவைப் போலவே இங்கிலாந்தின் ஸம்ரக்ஷணையின் கீழே இங்கிலாந்துக்குக் கடமை பட்டு வாழும் குடியேற்ற நாடுகள் சாம்ராஜ்யத்தின் ராணுவச் செலவுக்கு யாதோருதவியும் செய்ய வில்லை யென்ற விஷயம் இங்கு கருதத்தக்கது.

(2) ராணுவச் செலவில் ஒரு பகுதி ப்ரிட்டிஷ் பொக்கிஷத்திலிருந்து கொடுக்க வேண்டும். (1901—கல்கத்தா-17-ம் கூட்டம் 10ம்-தீர்மானம்.)

(3) ப்ரிட்டிஷ் ஸைன்யத்துக்கு ஆள் சேர்ப்பதில் நேரும் அதிகச் செலவுக்காக 786000-பவன் பாரத நாட்டுத் தீர்வைகளின் மீது சமத்கப் பட்டிருக்கிறது இதனால் பாரத அனுகூலங்களுக்குக் கேடு விளையு மென்றும், இப்போது ஆலோசனையிலுள்ள, ஆரம்ப தசையிலுள்ள பல அவஸர மான உள்நாட்டுத் திருத்தங்கள் தடைப்படு மென்றும் வைஸ்ராயும் அவருடைய ஸபையாரும் எதிர்த்துக் கூறியும் கவனியாமல் இக்காரியம் செய்யப்பட்டதை இந்த ஜனஸபை பலமாகக் கண்டிக்கிறது.

(4) இந்தியாவின் ராணுவச் செலவு அநியாய மாக மிதமிஞ்சி ஏறியிருப்பதற்குப் பெரும் பகுதி 1859-ஆம் வருஷத்து ராணுவக் கலப்பே மூல காரணமாக இருந்து வருவதால், அம்முறையை முற்றிலும் ஒழித்து விடுதற்குரிய காலம் வந்து விட்ட தென்ற தன் உறுதியான கொள்கையை இந்த ஜனஸபை மீட்டும் அறிவிக்கிறது.

8 எட்டாந் தீர்மானம்:—

உப்புத் தீர்வையும் வருமான வரியும்.

உப்புத் தீர்வையைக் குறைத்தும் வருமான வரி விதிக்கக் கூடிய வரம்படிச் சிற்றளவை உயர்த்தியும் ஏழைகளுக்

குச் செய்யப் பட்ட பரிஹாரத்தின் பொருட்டாக இந்தியா ராஜாங்கத்தாருக்கு கன்னி சேலுத்து வதுடன் உப்புத் தீர்வையை இன்னும் அதிகமாகக் குறைக்கும்படி இந்த ஜனஸபை இந்தியா ராஜாங்கத்தாரை வேண்டுகிறது.

9 ஒன்பதாந் தீர்மானம்:—

வங்காளத்தைத் உடைத்தது.

நெடுங் கால மாக உள்ளவும்; ஜன ஒருமையாலும், சட்டத்தாலும், ஸமூஹ ஒருமையாலும், ஆட்சி யாலும் ஏற்பட்ட ஸம்பந்தங்களால் நெருங்கிய ஒற்றுமை யுடையனவும் ஆகிய மாகாணப் பகுதிகளை உடைக்கும் இந்தியா ராஜாங்கத்தாரின் முறையைக் கண்டு இந்த ஜன ஸபை கலக்க மடைகிறது. வங்காளத்திலிருந்து டாக்கா, மைமென்ஸிங், சித்தகாங் ஜில்லாச்சேரியும் சோட்டா நாக்பூர் ஜில்லாவில் சில பகுதிகளையும் பிரித்த செயலையும், சென்னை மாகாணத்திலிருந்து கஞ்சம் ஜில்லாவையும் கஞ்சம், விஜாகப்பட்டணம் ஜில்லாக்களிலுள்ள காப்பும் பிரதேசங்களையும் பிரிக்க வேண்டுமென்ற யோசனையையும் இந்த ஜனஸபை கண்டிக்கிறது.

10-பத்தாந் தீர்மானம்:—

சென்னை நகரஸபை (முனிஸிபல் மசோதா.)

இப்போது சென்னை சட்ட ஸபையின் ஆலோசனையிலுள்ள சென்னை நகரஸபை மசோதாவின் கொள்கை லார்ட் ரிப்பன் காலத்தில் ஏற்படுத்தப் பட்ட ஸ்தல ஸ்வராஜ்யக் கொள்கைகளுக்குப் பொருந்தாதன என்று இந்த ஜனஸபை அபிப்ராயப்படுகிறது. 24 பிரிவுகளுக்குக் குறைந்த தொகை பிரதிநிதிகளாக இருக்கால் நகரத்தில் வரி செலுத்து வோரின் அனுகூலங்கள் தக்க படி பாதுகாக்கப் படமாட்டா என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறது. ஸங்கங்களுக்கும், ஸபைகளுக்கும் தெரிந்தெடுக்கும் உரிமை கொ

டுக்கும் பக்ஷத்தில், நகரசபைக் கார்யங்களில் சேரான ஸம் பந்த முடைய ஸங்கங்களுக்கும் ஸபைகளுக்கும் மாத்திரமே அவ்வுரிமை கொடுக்கப்பட வேண்டும். அவற்றின் தொகை மிகவும் சுருக்க மாக இருக்க வேண்டும், சென்னை ரயில்வே ஸங்கமும், தூறைமுகக் காப்புச் சங்கமும் அவ்வுரிமை பெறத் தக்கன வல்ல. அவ்வித உரிமை கொடுப்பதாயின் வர்த்தக ஸபை; வியாபார ஸங்கம் முதலியவற்றுக்கே தருதல் வேண்டும்; இவற்றுள் ஒவ் வொன்றும் ஒவ்வொரு ஸபிகரைத் தெரிந்தெடுக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டும்.

11-பதினொன்றாந் தீர்மானம்:—

பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு மெம்பர்கள்.

வடக்கு டாம்பெத் கிராமத்திக்கு தாதாபாய் நவுரோஜி வால்த்தாம் ஸ்டலவுக்கு M. C. பானர்ஜி; நாட்டின் ஹாமுக்கு ஸர் ஹென்ரி காட்டன்; ராக்ஸ்த (B)ர்க்(G) ஷைருக்கு ஸர் ஜான் ஜார்டை (D)ன்; இவர்கள் மெம்பராக திரும்பி முற்பட்டிருப்பதை இந்த ஜன ஸபை மிக ஆவலுடன் ஆதரிக்கிறது. இந்தியா ஜனங்களின் நலத்தைக் கருதி மேலே கூறப் பட்டவர்களைப் பார்லிமெண்டுக்கு அனுப்பும்படி இந்த ஜனஸபை ஷை கிராமங்களின் சிட்டாளிகளை வேண்டுகிறது. அவர்கள் ஷை கிராமத்தாருக்கு உண்மையான ஸேவை புரிவது மல்லாமல், பிரிட்டிஷ்ஸாம்ராஜ்யத்தில் ஒரு பகுதி யாக இருப்பினும், பிரிட்டிஷ் பார்லி மெண்டுக்கு நேரே ப்ரதிநிதி யனுப்பும் உரிமை பற்ற (பாரத) தேசத்து ஜனங்களுக்கும் ஒரு வாறு ப்ரதிநிதிகளாவர்.

12-பன்னிரண்டாந் தீர்மானம்:—

ஐக்ய நாணய ஸங்கங்களின் மஸோதா.

வைஸ்ராய் சட்ட ஸபையில் ஐக்ய நாணய ஸங்கங்களின் மஸோதா வொன்று கொணர்ந்திருப்பது பற்றி இந்த

ஜனஸபை இந்தியா கவர்ன் மெண்டாருக்கு நன்றி தெரிவிக்கிறது. ராஜாங்கத்தார் கருதும் நோக்கங்கள் நிறைவேறத் தக்க வண்ண மாக அச்சட்டம் சமைக்கப் படுமென இந்த ஸபை நம்புகிறது.

13-பதின் மூன்றாந் தீர்மானம்:—

பலதிரட்டு.

(1) முதல் (10) வரை: [19.2-ஆமதாபாத்-18-ஆம் கூட்டம் 19-ஆம் தீர்மானம் (1) முதல் (10) வரை காண்க.]

11. நீதி, நிர்வாஹ அதிகாரங்களைப் பிரித்து விட வேண்டும். எவ்விடத்தும் அவ்விரண்டதிகாரங்களும் ஒரே உத்தியோகஸ்தனிடம் சேர்ந்திருக்கக் கூடாது.

12. இந்தியா ராஜாங்க உத்தியோகங்களின் குடியாட்சி வகுப்புக்களனைத்திற்கு முரிய பரீக்ஷைகளெல்லாம் இப்போது இங்கிலாந்தில் மாத்திரமே நடை பெறுவதை மாற்றி இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஸம காலத்தில் நடத்தவேண்டும்.

13. இங்கிலாந்திலுள்ள பஞ்ச நிவர்த்தி ஸங்கத்தின் ஸபிகர்கள் இந்தியா மந்திரிக்குச் செய்த விண்ணப்பத்தில் வேண்டியபடி பாரதக் குடியானவரின் பொருள் நிலையைக் குறித்த விசாரணை யேற்படுத்த வேண்டும்.

14. பதினான்காந் தீர்மானம்:—

ப்ரிட்டிஷ் கமிட்டி.

* 1. ப்ரிட்டிஷ் கமிட்டிக்கும் ஸர் வில்லியம் லெடர் பர்னுக்கும் நன்றி. (1902—ஆமதாபாத்—18 ஆம் கூட்டம் 21 ஆம் தீர்மானம்)

2. ப்ரிட்டிஷ் கமிட்டியின் செலவுக்கு 10500 ரூபாய் பறுத்துச் கொடுக்க வேண்டும். இதற்காக வெவ்வேறு ஜன ஸபை வட்டத்தாரும் நத்தமக்கு விதிக்கப் பட்டிருக் கும் தொகை செலுத்தவேண்டும்.

3. தத்தம் பெயர்களுடன் காட்டப்பட்டிருக்கும் வட்டங்களுக்குப் பின்வரும் கனவான்கள் காரியதர்சிகளாய் அவ்வவ் வட்டங்கள் செலுத்தவேண்டிய தொகைக்குப் பொறுப்பு மேற்கொண்டு ஆறு மாதங்களுக் கொரு முறை இரண்டு தவணைகளில் மூன் பணமாகத் தொகை செலுத் தும்படி இந்த ஜனஸபை நியமிக்கிறது. (பெயர்கள் இங்கு குறிப்பிடவில்லை.)

15. பதினைந்தாந் தீர்மானம்.—

பொதுக் கார்ய தர்சிகள்.

(1902—ஆமதாபாத்—18 ஆம் கூட்டம்; 22 ஆம் தீர்)

16. பதினாறாந் தீர்மானம்.

அடுத்த கூட்டம்.

பாரத ஜன சபையின் இருபதாவ் கூட்டம் பம்பாயில் 1904—டிஸெம்பர் தினத்தைக் கப்பால் பின்னே நிச்சயிக்கப் படும் தேதியில் கூடுமாறு இந்த ஜனஸபை நியமிக்கிறது.

பத்தொன்பதாம் ஜன சபையின் தீர்மானங்கள் முற்றுப்பெற்றன.

பத்தொன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

ஜனசபையின் சரித்திரம்.

இருபதாம் அத்தியாயம்.

1904 பம்பாய் இருபதாங் கூட்டம்.

பம்பாய் நகரத்தில் இளம்பிறை ஸ்தலம் என்ற மைதானத்தில் அழகியதொரு பெரிய பந்தரின் கண்ணே, 1904, டிஸம்பர், 26, 27, 28 தேதிகளில் பாரத ஜன ஸபையின் இருபதாம் கூட்டம் நடைபெற்றது. லார்ட் கர்ஸனுடைய அரியாசன ஆட்சியால் நாடு முழுமையும் ஜனங்களுக்குக் கோபம் மிஞ்சிப் போயிருந்தது.

ஜன ஸபையின் உத்யோக அறிக்கை சொல்லுகிறது:--

"ஜனங்களுடைய கோபம் அதிகமாய் விட்டது..... கொடுங் கோன்மைச் சட்டங்கள் தொடர்ச்சியாகப் பொழியப்பட்டன.....ஜனங்கள் மிக உக்ரத்துடன் எதிர்த்தும் பயன்படவில்லை.....எனவே 1904—ஆம் வருஷத்துக் கூட்டம் மிகவும் முக்யமாகக் கணிக்கப்பட்டது." 1010 ப்ரதிநிதிகள் வந்திருந்தனர். இங்கிலாந்திலிருந்து ஜன ஸபைக்குத் தலைமை வஹிக்கும் பொருட்டாக ஸர் ஹென்ரி காட்டன் வந்தார். இவர் ஸர்க்கார் உத்யோகத்தில் பெரிய பதவிகள் வஹித்து உபகாரச் சம்பளம் பெற்று விலகிய பின்பு ஸ்வதேசீயக் கக்ஷிக்குச் சார்பாய்ப் பல விதங்களில் உழைத்து வந்தவர். "புதிய இந்தியா" என்றொரு புஸ்தகம் எழுதியிருக்கிறார். அதில் ஆங்கிலேய ஆட்சியின் தற்கால முறையிலுள்ள குற்றங் குறைகளை நன்றாக எடுத்துக் காட்டி ஸ்வராஜ்யம் அவசிய மென்பதற்குரிய பல காரணங்

கனாயும் தெளிவாக உணர்த்தி யிருக்கிறார். இவருடன் இங்கிலாந்திலிருந்து ப்ரிட்டிஷ் லெகியின் தலைவராகிய ஸர் வில்லியம் வெடர்பர்னும். பார்லிமென்ட் மெம்பரான ஸாமுயூல் ஸ்மித்தும் வந்திருந்தனர்.

உபசார ஸமிதியின் தலைமை பிரோல்ஷா மேத்தாலி னால் வாஹிக்கப்பட்டது. பிறகு, ஸபாநாயகராகிய ஸர் ஹென்ரி காட்டன் செய்த உபந்யாசத்தின் ஸாரம்;

பின் வருமாறு:—

ஸர் ஹென்ரி காட்டன் சொன்னர்:—

ஐர்லாந்து தேசத்தில் ராஜ்யத் திருத்தங்கள் எப்படி வதற்கு உள் காட்டுக் கிளர்ச்சியே அஸ்திவாரம். ஆனல் அது மாத்திரம் தனியாகப் பயன்பட வில்லை. இங்கிலாந்திலும் ஐரிஷ் திருத்தத்துக்கு அனுகூலமான பெரிய கக்ஷி யொன்றேற்பட்டு 'லிபரல்' கக்ஷித் தலைவர் அவ் விஷயத்தில் நடத்தை செலுத்தத் தொடங்கிய பின்னரோ, ஐர்லாந்துக்குச் சில அனுகூலங்கள் கிடைத்தன. இத்தியாவுக்கும் அப்படியே தான் நடக்க வேண்டும். இங்கிலாந்தில் உங்களுக்கனுகூலமான கக்ஷி பலப் படுவதற்குரிய காரியங்கள் செய்தில் அவசரம்.

1850-ம் வருஷத்தில் மொண்ட் ஸ்டீவர்ட் எல் பி (f) ன் ஸ்டோன் பின் வருமாறு கூறினர்:—

"நிறு தொகையுள்ள அன்னியர் தம்முடன் மதம், கொள்கை, ஆசாரம் அனைத்திலும் வேறுபட்ட ஜனங்கள் வாழும் பெரிய தேசமொன்றில் எல்லா ஆட்சி வகைகளிலும் தலைமை பூண்டிருத்தல் லாத்யப்படாது. இவ்வித ஆட்சி நீடித்து நிற்குமென் றெண்ண இடமில்லை யென்றார்"

இவ்வார்த்தைகள் உண்மை யென்பது ஒவ்வொரு விவேகிக்கும் எளிதில் விளங்கத் தக்க விஷயம். இங்கிலாந்துக்கும்

இந்தியாவுக்கும் முள்ள பந்தம் நெடுங்காலம் நீடித்திருக்க லாம். ஆனால் இப்போதுள்ள அதிகாரிகளின் ஆட்சிமுறை நிற்காது. லார்டு க்ரோமரும் இப்படியே சொல்லுகிறார்:— கல்வி கற்ற இந்தியாகளின் உள்ளத்தில் நிகழும் மாறுதல் களுக்குத் தக்கபடி நம்முடைய அரசியலை மாற்ற வேண்டும். இல்லாவிட்டால் நம்மால் படைக்கப் பட்டு நாம் ஆளத் தகுதி யில்லாது போன சக்திகளால் நம் அரசாட்சி தகறடிக்கப் படும்'' என்றார்.

ஸ்வராஜ்யம்.

பாரத வாசிகளே, மனஞ் சோர்ந்து விடாதீர். ராஜாங் கத்தார் செய்வதை யெல்லாம் எதிர்க்காமல் பொறுத்துக் கொண்டிருப்பதே தகுமென் றெண்ணிவிடாதீர். கிழக்கு திசையிலுள்ள ஸ்வாதீனஜாதியாருக்கு ஸமமான நிலை இந்திய ருக்கும் கிடைக்க வேண்டும். குடியேற்ற நாடுகளுக் கெல் லாம் ஸ்வராஜ்யத்தையே மூல பந்தமாக இங்கிலாந்து தருகி றது. இந்தியாவுக்கும் அங்ஙன்மே ஸ்வராஜ்யம் கொடுக்க வேண்டும். பரிபூரண ஸ்வாதீன முடைய நாடுகள் பல தம் முடைய பொது விருப்பங்களாலும் தன் னலத்தைக் கருதி யும் ஒரு பெரிய மத்ய தேசத்துடன் பிணைப் பட்டு அதனுல் தம் முன் உறவெய்தி நிற்பதே நமது லாம் ராஜ்யத்தின் கொள்கை விடுதலை கொண்டஐக்ய நாடுகளின் தொகுப்பே பாரத தேசத்தின் ஆதர்சம், அமெரிகா ஐக்ய நாடுகள் (யுனை டெட் ஸ்டேட்ஸ்) இருப்பது போல் பாரத ஐக்ய நாடுகள் எற்பட வேண்டும்.

வருஷந்தோறும் இந் நாட்டி னின்றும் ஆங்கிலேயர் மீளாத பெருந்தொகையை எற்றுடித்துக் கொண்டு செல்லு கிறார்கள். அதினிருந்தே இக் கொடிய வறுமை இந் நாட் டில் உண்டாயிற்று. தேசத்து நிற் கியாபாரங்களெல்லாம் ஆங்கிலேய முதலாளிகளுக்கும் மேற்பட்டுப்போயின.

முடிவரை,

ஐரோப்பிய உத்யோகஸ்தரை நீக்கி இந்திய உத்தியோகஸ்தரை நியமிக்க வேண்டும். வங்காளத்தைத் இரண்டு துண்டாக வெட்டியது பெரும் பேதைமை. பெரிய அரசு தென் ஆப்ரிகாவில் இந்தியர் நடத்தப்பட்டு வரும் மாதிரியோ கொடிய மாதிரி. எதற்கும் நீங்கள் அதைர்யப் பட வேண்டாம். மூச்சை இறுகக் கட்டி தைர்யத்துடனும் பக்தியுடனும் உழைப்பீர்களானால் ஸ்வராஜ்யம் உங்களுக்குக் கிடைப்பது நிச்சயம்,

என்று ஸர் ஹென்ரி காட்டன் சொன்னார்.

இருபதாம் ஜன ஸபைக் கூட்டத்தில்

நடந்த விசேஷச் செய்திகள்.

அமதாபாதில் ப்ரசரம் செய்யப் பட்டு வரும் "குஜராத்தி" பத்திராதிபர் தேஸாய் என்பவர் தாம் ஜன ஸபைத் தொழிலுக்கென்று சேகரித்த ரூபாய் நாலாயிரத்தை (4000) யும் அழகிய வெள்ளித் தட்டொன்றையும் ஸர் ஹென்ரி காட்டனிடம் கொடுத்தார்.

இந்த ஸபையில் முதல் நிர்மானம் இந்தியர்களுக்கு அதிகமான ராஜாங்க உத்யோகங்கள் கொடுக்க வேண்டுமென்ற விஷயத்தைக் குறித்தது; இதை ஸ்ரீமான் ஸுரேந்த்ர நாத் பானர்ஜி ப்ரேரணை செய்து பேசுமிடத்தில்:—

"ஐரோப்பியருக்கு ஆயிரக்கார் இனாம் தந்தவர்களென்று நினைக்கிறீர்களா? ஒருகாலுமில்லை. ஜாக்ரதை தருஷ்டாந்தமாக கவனியுங்கள்" என்றார்.

மேலும், அந்த நாட்களில் பெரிய அக்ஷித் தேசாபிமானியாகக் கருதப்பட்ட ஸுரேந்த்ர நாத்பானர்ஜி "உயர்ந்த உத்யோகங்களில் 100-க்கு 14 அல்லது 17 தான் நமக்குக்

டைக்கின்றன. இவ்வளவுக்கும் தேசம் நம்முடையது. பணம் நமது. ஜனங்க ளெல்லாரும் நம்மவர் என்று கூறிப் பரிதாபம் பட்டார்.

மொழி பெயர்த்தவர் குறிப்பு:— இன்று—1918 ஆம் வருஷம் ஜூலை, 8-ந்தேதி திங்கட்கிழமை பன்று, நான் இந்தச் சரித்திரத்தில் இப் பகுதியிலுள்ள இவ்வரிகளை எழுதிக் கொண்டிருக்கையிலே ஆங்கிலேய ராஜாங்கத்தார் "மாண்டேகு— செம்ஸ்போர்ட்" சீர்திருத்த பொர்சுகள் ப்ரசுரம் செய்திருக்கிறார்கள். இந்த சிபார்சுகளைத் தேசத் தார் வெறுத்துத் தள்ளுவார்க ளென்பதில் ஸந்தேஹமில்லை. எனென்றால், இன்றுவரை நாம் மாத்திரமே பன்னி ஆனிபெஸான்ட் முதலிய ஐரோப்பியப் பண்டிதரும் பெயர் கூடக் கேட்டிராத ஜெக்கோ— ஸ்லவ், யுகோஸ்லாவ் முத லிய ஜாதியார்களுக்கும் பெல்ஜியம் தேசத்தாருக்கும் ஆபிரி காவில் ஜெர்மனியரின் அன்ய ஆட்சியால் வருந்தும் பல நிகிரோப ஜாதியாருக்கும், பூமண்டல முழுமைக்குமே, ஸ்வ ராஜ்யம் ஸம்பாதித்துக் கொடுக்கும் வண்ணமாகவே இக் கொடிய கொடிய, கொடிய போர் நடை பெற்று வருகிற தென்று லாயிடு ஜ்யார்ஜ் முதலிய ப்ரிட்டிஷ் மந்திரிகளும், அமெரிக ஜனாதிபதி வில்ஸனும் திரும்பத் திரும்பத் திரும் பத் தினைசை ளெல்லாம் செலிபெடும்படி ஓலமிட்டு வருகை யிலே, பாரத தேசத்தார் இப்போரில் உயிர்களை லக்ஷக் கணக்காகச் சிந்தியும் பணத்தைக் கோடிக் கணக்காக வாரிக் கொடுத்தும் செய்து வரும் பேருபகாரங்களுக்குக் கைம்மா றாக இந்த ஸனத்தனமான சிபார்சுகள் செய்ய முற்பட்ட மந்திரி மாண்டேகுவின் சித்த வ்ருத்தியை ஜீனத்து வருத் தப் படுகிறோம். இந்த தரித்ர சிபார்சுகளை ப்ரகடனம் செய்வதற்கு முன்னாகவே ஜனங்களிடம் அவற்றைத் தூக் கிப் பேசி ஆதரிப்பதாக ஆங்கிலேயரிடம் வாக்குக் கொடு த்து விட்டதாகக் கூறப் படும் மிதவாதிகளின் கூட்டத்தில் இப்போது அக்ர கண்யராக சோபிக்கும் ஸுரேந்தர் நாத்

பானர்ஜி பண்டை நாட்களில் ஸ்வராஜ்ய விஷயத்தில் காட்டிய தாகத்தை யோசனை பண்ணும்போது தேசபக்தியை, மாணாஸமீபமான காலத்தில் தளர விடுவோருடைய பேதமையைக் கருதி என்னுள்ளம் மிக வருந்துகிறது. இதுநிற்க.

மேற்படி 1904- இருபதாம் கூட்டத்து முதல் தீர்மானத்தை ஸ்ரீ. ஜீ. சுப்பிரமணிய அய்யர் ஆதரித்துப் பேசினர்.

அப்போதவர்:— "இந்தியர்களின், நிலைமை 1833-ல் இருந்ததைக் காட்டிலும் இப்போது மிகக்கே டெய்தி விட்டது. மஹாராணி கொடுத்த வாக்குறுதிகளை லார்ட் லிட்டன் குடில தந்திரங்களால் பங்கப்படுத்தினர். லார்ட் கர்ஸனே 1888-ஆம் வருஷத்தில் மஹாராணி விளம்பரத்தில் சொல்லப்பட்ட ஆட்சி முறையும் கொள்கைகளும் ட்ரிட்டிஷ் ஆட்சி முறைக்கும் கொள்கைகளுக்கும்பொருந்தியன அல்ல வென்று வெளிப்படையாகச் சொல்லிவிட்டார். நமக்குச் சட்டத்தில் ஏற்பட்டிருக்கும் ஸ்வதந்த்ரங்கள் நாம் எவ்விதையாலும் காக்கவேண்டும், அங்ஙனம் காக்குமிடத்து இங்கிலாந்து மாத்திரமே யன்றி உலகத்திலுள்ள தேசத்தாரனைவருமே பாரத நாடு விடுதலை பெறுதல் அவசிய மென்று கூறும்படி வேலை செய்யவேண்டும் என்றார்.

ஸ்ரீ அப்தல் காலிம் என்பவர் ஜனஸபையின் விஷயத்தில் ஹிந்து மஹமதியர்களுக்குள்ளே பரிபூர்ணமான ஐக்ய உணர்ச்சியுள தென்பதை விளங்கிக் கூறினர், இரண்டாந் தீர்மானம் கல்வி ஸம்பந்தமானதும் இந்தியாவில் கைத்தொழிற் சாலைகள் எற்படுத்த வேண்டுமென்ற கொள்கையுடையது. இந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுமிடத்தே காந்திகர் என்பவர் பின்வருமாறு கூறினர்:—

காந்திகர் சொன்னர்:—

"ஜப்பான் காட்டிய வழியை நாம் பின் தொடர்ந்து செல்ல வேண்டும். ஜனங்களுக்குவிவசாயசாஸ்த்ரபயிற்சிதரு தல்மிகவும் அவசியம். அயர்லாந்தின் க்ஷத்தொழில்களை ஆங்கில வியாபாரிகளின் நலத்தைக் கருதிக் கொலை செய்து விட்டது போலவே இந்தியாவின் கைத்தொழில்களையும் ஆங்கிலேயர் கொன்று விட்டார்கள்." என்றார்.

முன்காலத்து ஸ்வதேசி ராஜாக்கள் இனம் கல்வி கொடுத்து ஜனங்களைக் காப்பாற்றினார்க ளென்ற விஷயத்தை டாக்டர் H. S. கௌர் என்பவர் எடுத்துக் காட்டி இக்காலத்தில் ஆங்கிலேயே அதிகாரிகள் ஜனங்களுக்குள்ளே உயர்) தரகக் கல்வி பரவாமல் தடுப்பதற் குரிய வழிகள் செய்து வருவதைக் கண்டனம் புரிந்தார்.

ஜனங்களின் பரிதாபகரமான வறுமையையே பற்றிய மூன்றாந் தீர்மானத்தைப் பிரேரணை செய்து பேசுகையிலே R. N. முதோல்கர்:— "ப்ரிட்டிஷார் வரும்போது இந் நாட்டில் அராஜகமும் துஷ்ட ஆட்சியும் இருந்தன வென் பது மெய்தான். எனினும் இப்போதிருப்பது போன்ற வறுமை கிடையாது. ஈஸ்ட் இந்தியா கம்பெனியாரும் பின் எற்பட்ட கவர்ன்மெண்டாரும் ஒருங்கே தடைத்தீர்வைக ளால் நாட்டுக் கைத்தொழில்களை நாசம் பண்ணி விட்டார் கள். எனவே ஜனங்களுக்கு விவசாயமே முக்யத் தொழி லாயிற்று. கைத்தொழில் செய்து வந்த கூட்டத்தா ரெல் லாரும் நிலத்தின் மீதுபோய் விழ்தல் அவசியமாய் விட்டது என்றார்.

தென் ஆப்ரிகாவில் நம்மவருக்குச் செய்யப்படும் அவ மானங்களையும் கொடுமைகளையும் சுமித்து அங்கிருந்து வந்த மதன்ஜித் என்பவரும் பருச்சா என்பவரும் தமது சொந்த அநுபவங்களைக் காட்டிப் பேசினர். (ஐதராந் தீர் மானத்தைக் காண்க.) போயர் யுத்தத்தின்போது அங்கு

குடி ரணவைத்யராகச் சென்றிருந்த பண்டித—மூன்ஜேயுக் அவ்விஷயத்தை ஆதரித்துப் பேசினர்.

பத்தாம் நிர்மானம் எல்லை புறத்தே படை யெடுத்துச் செய்வதையும்; விசேஷமாகத் திபெத்து விவகாரங்களையும் குறித்தது.

அதை ஸ்ரீமான் N. A. வாடியா ஆதரித்துப் பேசினர் அப்போதவர்:—"(1) ஆங்கிலேயரின் கால்படாதபடி திபெத்து காட்டின் சுவாதீனத்தைக் காக்கும் பொருட்டாக அக்கர்ட்டி விவசாயிகள் மகா தீர்த்துடன் போர்புரிந்தனர். அவர்களுடைய பரிசுத்தமான ஸ்வதேச பக்தியும் ஸ்வதந்த்ராபிமானமும், அபாயத்தில் இகழ்ச்சியும்; மரணத்தில் நிர்பயமும்; புராதன; நவீன சரித்திரங்களில் புகழ்ச்சி செய்யப்பட்ட வேறெந்த வீர ஜாதியாருக்கும் பிற்பட்டதன்று என்றார்.

தீர்மானங்கள்.

1—முதல் நிர்மானம்:—

ராஜாங்க உத்தியோகங்களில் இந்தியரை நியமித்தல்

ராஜாங்க உத்தியோகங்களில் உயர்தரப் பதவிகளின் இந்தியர்களை நியமிக்கும் விஷயத்தைக் குறித்து 1904 மே 24-தேதி நிர்மானத்தில் இந்தியா கவர்ன்மெண்டார் கூறியிருக்கும் கொள்கைகளும் ராஜ்ய நீதியும் 1833-ஆம் வருஷத்து பார்லிமெண்ட் சட்டத்திலும், 1858 ஆம் வருஷத்து மஹாராணி ஸ்ரீ முகத்திலும் சொல்லப்பட்ட வழிகள் முறண் பட்டவை என்று இந்த ஜனசபை அபிப்ராயப் படுகிறது.

இந்த தேசத்து ஜனங்களுக்கு மஹாராணி ப்ரமாண பூர்வமாகச் செய்த வாக்குறுதிகளை வ்யாக்யாநத்தால் அழித்துப் பேசி, ராஜீக விசாரணைக் கூட்டத்தாரால் விஷய முழு

தையும் ஜாக்கிரதையுடன் ஆராய்ச்சி செய்த பின்பு நிச்சயிக்கப் பட்ட ஏற்பாடுகளினின்று நழுவிவிட (லார்ட் கர்ஜன்) செய்த யத்தனத்தை இந்த ஜனசபை மரியாதையுடன், ஆனால் அழுத்தத்துடன்; கண்டிக்கிறது.

(2) ராஜாங்க உத்தியோகத்தின் மேற் கிளைகளில் இந்தியரை அதிக விஸ்தாரமாக நியமிப்பதே இப்போது பொருள் நிலையிலும் ஆட்சி முறையிலு முள்ள தீங்குக்கெல்லாம் உண்மையான மருந்தென்று இந்த ஜனசபை அபிப்ராயப்படுகிறது. இந்தியாவில் உத்தியோகங்கள் வஹிப்பதற்குறிய போட்டிப் பரிட்சைகளை இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஸமகாலத்தில் நடத்துவதற்கனு கூலமாக 1893 ஜூன் 2 தேதி காமன்ஸ் (பார்லி மென்ட்) ஸபையில் செய்யப் பட்ட தீர்மானத்தை உடனே நிறை வேற்ற வேண்டுமென்ற முந்தியகூட்டங்களின் கருத்தை இந்த ஸபை மீட்டும் வற்புறுத்துகிறது. பாரதக் குடியாட்சி உத்தியோக மண்டலத்தை புதிதாகச் சமைப்பதே இந்த விவகாரத்துக்கு ஒரே திருப்திகரமான தீர்ப்பென்றும், அம்மண்டலத்தை அதிகார விபாக முறைப்படி மாற்றிச் சமைக்க வேண்டுமென்றும், இதனிடையே அதன் நீதியதிகாரங்களை ஒரு பகுதி சட்டப்பயிற்சி யுடையோருக்குக் கொடுக்க வேண்டுமென்றும் தனக்குள்ள உறுதியான கொள்கையை இந்த ஜனஸபை மீட்டும் பதிவு செய்கிறது.

(3) இந்தியாவில் பெரும்பான்மையான மாகாணங்களில் மாகாண உத்தியோகங்களுக்குரிய போட்டிப் பரிட்சையை ஒழித்து விட்டதுபற்றி இந்த ஜனஸபை வருத்தப்படுகிறது. கவர்ன் மெண்டார் தாமே நியமிப்பதென்ற முறைமை இந்நாட்டின் விசேஷ நிலைமைகளால் அதிகாரிகளின் தயவையனுசரித்து மாத்திரமே நடைபெறும் நியமனமுறையாக இழந்து விடுமென்ற விஷயம் பூர்வானுபவத்தால் நன்கு ஸ்தாபனம் செய்யப் பட்டிருக்கிறது. இதனால் தகுதியற்ற மனிதர் உத்தியோகம் பெற நேர்ந்து ஆட்சி யொழுங்குகெடு

கிறது. மேலும்; இதனின்றும் இந்தியர்களுக்கு உயர்ந்த உத்தியோகம் வழிக்கும் திறமையில்லையென்ற அபிப்பிராயமான பழிச்சொல்லுக்கிடமுண்டாகிறது. ஆதலால் மாகாண உத்தியோகங்களுக்குக்குரிய போட்டிப் பரிசைகளை ஒழித்து விட்ட இடங்களெல்லாம் அவற்றைத் திரும்ப உயிர்ப்பிக்கும்படி இந்த ஜனஸபை இந்தியா கவர்ன்மெண்டாரை பரியாதையுடன் வற்புறுத்துகிறது.

2. இரண்டாந் தீர்மானம்:—

கல்வி—தொழிற்கல்வியும், பொதுக்கல்வியும்

இந்தியா கவர்ன்மெண்டாரின் சென்ற மார்ச்சு மாதத் தீர்மானத்தில் ஆரம்பக் கல்விக்கு அதிகப்பணம் செலவிடுவதாக வாக்களித்திருப்பது கொண்டும் அன்ய தேசங்களில் போய்த் தொழிற் கலைகளும் கைத்தொழில்களும் பயின்று வரும்படி பத்துப்பேருக்கு, உபகாரச் சம்பளங்கள் ஏற்பாடு செய்திருப்பது கருதியும் அவர்களுக்கு இந்த ஜனஸபை நன்றி தெரிவிக்கிறது. ஆயினும் உயர்தரக்கல்வி விஷயத்தில் கவர்ன்மெண்டார் அனுசரித்து வரும் பிற்போக்கான வழியைப் பற்றிச் சென்ற வருஷத்தில் செய்யப்பட்ட கண்டனையை இந்த ஜனஸபை மீண்டும் வற்புறுத்துகிறது இம்முறையால் ஸர்வகலாசங்கங்களின் பரிபாலன கணங்கள் உத்தியோகஸ்தரின் வசமாய் விடும் ஸர்வகலாலங்கக் கல்வியின் எல்லை பொதுவாக வரையறைப்படும். இப்போது ஆண்டு தோறும் ராஜாங்கத்தாருக்குப் பெருந்தொகைகள் மிச்சப்படுவதைக் கருதிப் பொதுப் பணத்தினின்றும் கல்விச் செலவுக்கு எப்போதைக் காட்டிலும் அதிகத் தொகை பகுத்துக் கொடுத்தல் ராஜாங்கத்தாரின் தெளிந்த கடமையென்ற தன் அழுத்தமான கொள்கையை இந்த ஜனஸபை மீண்டும் தெரிவிக்கிறது. எங்ஙனமெனில்,

பொது ஜனங்களினிடையே ஆரம்பக் கல்வியை அதிக விஸ்தாரமாகப் பரப்பவேண்டும். கல்வியை இனாமாகவும் கட்டாயமாகவும் செய்ய வழி தொடங்கவேண்டும்.

(2) கைத்தொழிற் பயிற்சியிலும் சாஸ்த்ரோக்தமான விவசாயத்திலும் பயிற்சி செய்வித்தற் குரிய தக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

(3) ஸர்க்கார் கலாசாலைகளையும் உயர்தரப் பாடசாலைகளையும் உண்மையாக திருஷ்டாந்த ஸ்தாபனங்களாக்கும் பொருட்டாக அவற்றில் தக்க ஆட்களை நியமித்து நல்ல தயாரிப்புகள் செய்ய ஏற்பாடு செய்யவேண்டும்.

(4) ஸம்பூர்ணமான தயாரிப்புடன் நாட்டில் மத்ய (ஸ்தல மொன்றில்) ஸர்வ கர்ம வித்யாசாலை குறைந்த பக்ஷம் ஒன்றேனும் ஸ்தாபிக்க வேண்டும். வெவ்வேறு மாகாணங்களிலும் சிறிய கைத்தொழிற் பள்ளிக்கூடங்களும் கலாசாலைகளும் ஏற்படுத்த வேண்டும் என்று இந்த ஸபை கருதுகிறது.

3. மூன்றாந் தீர்மானம்:—

பொருள் நிலைமை.

இந்த நாட்டு ஜனங்களின் பரிதாபகரமான வறுமைக்குப் பெரும் பான்மை காரணங்களாவன:— பல வருஷங்களாக இந்த நாட்டிலிருந்து செல்வத்தை வற்றடித்துக் கொண்டு போவதும்; உள்நாட்டுக் கலைகளும் கைத்தொழில்களும் அழிவுற்றதும் மிக மிஞ்சிய நிலத்தீர்வைத் திட்டமும் ஆட்சி முறையின் அளவு கடந்த செலவுமே யாகுமென்று இந்த ஜனஸபை கருதுகிறது. அதற்குரிய பிற நிவாரணங்களினிடையே பின் வருவனவற்றையும் இந்த ஜனஸபை சிபார்சு செய்கிறது:—

(1) முன் தீர்மானத்தில் குறிப்பிட்டபடி கவர்ன்மெண்டார் கல்விக்கு அதிக ஸஹாயம் செய்ய வேண்டும்.

(2) சாசுவதத் திட்டம் ஏற்படுத்த வேண்டும். (1902 அமதாபாத்— 18-ம் கூட்டம் 3 தீர்; (3) நிலை.

(3) ராஜாங்க உத்யோகங்களின் உயர்தரக் நிலைகளில் அதிகத் தொகையுள்ள இந்தியர்களை நியமிக்க வேண்டும்.

4. காங்கிரஸ் தீர்மானம்:—

விவசாயிகளின் கடன்பட்ட நிலை.

இந்த நாட்டு விவசாயிகள் பயங்கர மாகக் கடனில் முழுகி யிருப்பதையும் பஞ்சம் தோன்றிய மாத்திரத்திலே அவர்களில் பெரும்பாலோர் ராஜாங்க உதவியை நாடுதல் அவசிய மாதலையும் கருதி இந்தியாவின் வெவ்வேறு பாகங்களிலுள்ள சில கிராமங்களை த்ருஷ்டாந்தமாக எடுத்துக் கொண்டு, அவற்றின் ஸ்திதியைக் குறித்து ராஜாங்கத்தார் ஜாக்ரதையான விசாரணை நடத்தவேண்டு மென்று ஸண்டனிலுள்ள பஞ்சச் சங்கத்தார் சொல்லிய யோசனையை இந்த ஜனஸபை மீண்டும் ஆதரிக்கிறது.

5. ஐக்கிய தீர்மானம்:—

குடியேற்ற நாடுகளில் இந்தியர்.

(1) ஆஸ்த்ரேலியாவுக்குப் போகும் இந்தியரின் விஷயத்தில் ஆஸ்த்ரேலிய கவர்ன்மெண்டார் (முன்னிய) நிபந்தனைகளில் (சிலவற்றை) கெடுபிடி (செய்து) கட்டளை பிறப்பித்திருப்பதை கண்டு இந்த ஜனஸபை த்ருப்தி யடைகிறது. எனினும் சக்ரவர்த்தியின் குடியேற்ற நாடுகளில் சக்ரவர்த்தியின் ப்ரஜைகளாகிய இந்தியர் கஷ்டமான நிபந்தனைகளுக்குட்படுத்தப் படுவதையும் ப்ரிட்டிஷ் குடிமைக் குரிய ஸாமான்ய உரிமைகள் அவர்களுக்கு மறுக்கப் படுவதையுங் கண்டு இந்த ஸபை ஆழ்ந்த வருத்த மடைகிறது.

(2) விசேஷமாக, த்ரான்ஸ்வாலில் முன்னிருந்த போயர் கவர்ன்மெண்டார் இந்தியர்களுக்கு விரோத மாகச் செய்த சட்டங்கள் ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டாரால் அதிகக் கொடிய ரூபத்தில் வற்புறுத்தப்படு மென்று பயமுறுத்துவதை இந்த ஜனசபை மிகவும் அழுத்தமாகக் கண்டனம் செய்கிறது. சக்ரவர்த்தியின் இந்தியக் குடிகளை போயர்க் குடியரசு ராஜாங்கத்தார் அநியாயமாக நடத்திய செய்கை ஸமீபத்தில் நடந்த போயர் சண்டைக்கு ஓர் காரணமென்று

முரசடிக்கப் பட்டதையும், தென் ஆப்ரிகாவிலுள்ள இந்தியக் குடியேற்றத்தாரின் (ஸ்வ) ஸம்மதமான ராஜபக்தியையும், சண்டையின் போது அவர்கள் செய்த உதவியையும் கருதி அந்த "மகுட"க் குடியேற்ற நாட்டில் குடியேறி வாழும் இந்தியர்களை நியாயமாகவும் ஸமமாகவும் நடத்தும் படி ப்ரிட்டிஷ் பார்லிமெண்டார் வற்புறுத்த வேண்டுமென்று இந்த ஜனஸபை ஆவலுடன் ப்ரார்த்திக்கிறது.

(3) இந்த ஸம்பந்தத்தில், பாரதக் குடியேற்றத்தாரின் அனுகூலங்களுக்குச் சரிபாக இந்தியா கவர்ன்மெண்டாரும் இந்தியா மந்திரியும் உறுதி கொண்டு நிற்பது பற்றி அவர்களுக்கு மனப் பூர்வமான நன்றி செலுத்துவதுடன், த்ருப்திகரமான தீர்ப்புக் கிடைக்கும் வரை அவர்கள் தம்முடைய யத்தனங்களை நெகிழ விட மாட்டார்களென்று இந்த ஜனஸபை உண்மை யுடன் நம்புகிறது.

6. அழுத் தீர்மானம்:—

ஜே. என். தாத்தா: வில்லியம் (Digby) இவ்விருவரின் மரணம்.

ஜே. என். தாத்தா இறந்து போனது பற்றி இந்த ஜனஸபை தன் ஆழ்ந்த துயரத்தைப் பதிவு செய்கிறது. பாரத நாட்டின் தொழிலபிவிருத்திக்காக அவர் செய்த பெரிய உதவிகளையும், அவருடைய நாகரிக மிகுந்த லோகோபகார சிந்தனையையும் தேசாபிமானத்தையும் இந் நாட்டினர் எக்காலத்திலும் நன்றியறிவுடன் நினைத் திருப்பார்கள். வில்லியம் டிக்பி (Digby) இறந்து விட்டது பற்றியும் இந்த ஜனஸ்பை தன் ஆழ்ந்த துயரத்தைப் பதிவு செய்கிறது. இவர் மரணத்தால் பாரத ஜனங்கள் தமது சுகியில் உண்மையான பக்தி கொண்ட வக்கீலொருவரை இழந்து விட்டனர்.

7. வழாந் தீர்மானம்:—

இந்தியா மந்திரியின் சம்பளம்.

லண்டனிலுள்ள இந்தியா மந்திரியின் கார்யஸ்தலச் செலவை இந்நாட்டுத் தீர்வையின் மீது சுமத்தும் அநீதியை இந்த ஜன ஸபை கண்டிக்கிறது. குடியேற்ற மந்திரியின் கார்யஸ்தலச் செலவில் ஒரு பகுதியேனும் குடியேற்ற நாடு களைச் சார விலை. இந்தியா மந்திரியின் சம்பள முழுதை யும் இங்கிலாந்தின் வரவு செலவுத் திட்டத்தில் சேர்க்க வேண்டு மென்று இந்த ஜன ஸபை அபிப்பிராயப்படுகிறது.

8. எட்டாந் தீர்மானம்:—

ஸர்க்கார்த் தீர்வைப் பணத்தில் மிச்சத் தொகைகள்.

(1) சென்ற ஆறு வருஷங்களில் சர்க்காருக்கு மீட்டுமீட் டும் பெருந் தொகைகள் மிச்சப்பட்டு வருகின்றன. இவை மொத்தம் ரூபாய் 200-கோடிக்கும் பலன் ஆகின்றன. ஜனங்களின் செல்வ மிருதியால் இவை உண்டாயின அல்ல. அதற்கு மாறாக நாட்டின் தீர்வைமட்டம் அவசியத்துக்கு மேலே மிகவும் உயர்ந்திருப்பதைக் குறிப்பிடுகின்றன. எங்ஙன மெனில் ரூபாயின் க்ருத்ரிம மதிப்பாலும், அதினின்றும் இந்தி யா ராஜாங்கத்தார் இங்கிலாந்துக் கனுப்பும் தொகைகளில் வருஷத்துக்கு முன்னூறு அல்லது நானூறு லக்ஷம் பலன் மிச்சப் படுவதனாலும் முழுதும் அல்லது பெரும்பாலும் இந்த மிச்சத் தொகைகள் ஸத்ய மாகின்றன.

(2) ராஜாங்கத்தாரின் செலவணி முறைமையால் அதி கக்ஷ்ட மனுபவித்திருக்கும் வகுப்பினருக்கு உதவி செய்யும் பொருட்டாகவும், வருஷந் தோறும் பெரிய மிச்சங்கள் ஏற்படுவதினின்றும் கவர்ன்மென்டாருக்குச் செலவை அதி கப் படுத்த வேண்டு மென்ற இச்சையுண்டாகக் கூடியதைத் தடுக்கும் பொருட்டாகவும், இந்த ஜனஸபை பின் வரும் உபாயங்களை பலமாக வற்புறுத்துகிறது:—

(1) உப்புத் தீர்வையை இன்னும் குறைக்க வேண்டும்

(2) விவசாயிகள் தொடர்ச்சியாகப் பல வருஷங்கள் பஞ்சத்தில் வருந்தும் மாகாணங்களில் ராஜாங்கத்தார் விதிக்கும் நிலத் தீர்வையைக் குறைத்து விட வேண்டும்.

(3) பஞ்சுச் சரக்குகளின் மீதுள்ள சுங்கத் தீர்வைகளை ஒழித்து விட வேண்டும்.

(4) அவ்வித மாகக் குறைக்கும் வரை மிச்சத் தொகைகளில் ஒரு பகுதியை சாஸ்த்ர, விவசாயக், கைத்தொழிற் கல்விகளை அபிவிருத்தி செய்தல் வைத்ய ஸௌகர்யங்களை மிகுதிப் படுத்தல் முதலிய ஜனங்களுக்கு நேரு நன்மை தரக் கூடிய வழிகளில் உபயோகப்படுத்த வேண்டு மென்றும்; மீதியைப் பஞ்சத்தாலும் வருஷந் தோறும் மீண்டு வரும் 'ப்ளேக்' நோயாலும் மிகுந்த பண முடைப் பட்டுப் போயிருக்கும் ஸ்தல ஸங்கத்தாரும் நகர ஸபையாரும் அவஸரமான சுகாதாரத் நிருத்த முறைகளைக் கைக் கொள்ளும்படியாகவும் உள் நாட்டு யாத்திரைக் குரிய ஸௌகர்யங்களை அபிவிருத்தி செய்யும்படியாகவும் உதவி செய்வதில் விநியோகப் படுத்த வேண்டு மென்றும் இந்த ஜனஸபை வற்புறுத்துகிறது.

9. ஒன்பதாந் தீர்மானம்:—

இந்தியர்களுக்குப் பார்லிமெண்டிலும் இந்தியச் சட்ட ஸபைகளிலும் ப்ரதிநிதிகள்.

இந்நாட்டினர் தந் தேச ஆட்சியிலும் விவகாரங்களை மேல் நடத்துவதிலும் அதிக வாக்குரிமை பெறும்படி செய்வதற்குரிய காலம் வந்து விட்டதென்று இந்த ஜனஸபை கருதுகிறது. எங்ஙனமெனில்;

(1) இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மாகாணத்தினின்றும் குறைந்த பக்ஷம் ப்ரிட்டிஷ் "காமன்ஸ்" ஸபைக்கு இரண்டு ப்ரதிநிதிகள் அனுப்பும் ஸ்வதந்த்ரம் கொடுக்க வேண்டும்.

(2) வைஸ்ராய் சட்ட சபையையும் மாகாணச்சட்ட ஸபைகளையும் விசாலமாக்கி அவற்றிலுள்ள உத்தியோகஸ்தரல்லாத அங்கத்தாரின் தொகையை அதிகப்படுத்தி அவற்றின் விசாரணைக்கு வரும் பண விவகாரங்களைத் திலும் ஸபையை வகுக்கும் அதிகாரம் அவர்களுக்குத் தரவேண்டும். அந்தந்த ராஜாங்கத் தலைவருக்குத் "திரஸ்கார சக்தி" கொடுக்கலாம்.

(3) லண்டனிலுள்ள இந்தியா மந்திரி ஸபையிலும் இந்தியா கவர்ன்மெண்டார், பம்பாய், மதராஸ் கவர்ன்மெண்டாரின் நிர்வாஹ ஸபைகளிலும் அங்கத்தாராக இந்திய ப்ரதிநிதிகளை நியமிக்கவேண்டும். இவர்கள் சட்ட ஸபைகளின் தெரிந் தெடுக்கப்பட்ட ப்ரதிநிதிகளால் குறிக்கப்படவேண்டும்.

10. பத்தாந் தீர்மானம்:—

திபெத் விவகாரங்களும்
வெளி நாடுகளின் மீது படை யெடுத்தலும்.

வெளி நாட்டார் படை கொண்டு வருவதை எதிர்த்தடிக்க நேர்ந்தாலன்றி மற்றப்படி பார்லிமெண்டாரின் பூர்வானுமதியின்றி இந்தியாவின் தீர்வைப்பணத்தை இந்தியாவின் சட்ட எல்லைகளுக்குப் புறம்பே செலவிடக் கூடாதென்ற 1858-ம்வருஷச் சட்டத்தின் கருத்தை, ஸமீப காலத்தில் நடைபெற்ற திபெத் படையெழுச்சி விஷயத்திலே, அதிகாரிகள் பங்கப்படுத்தி விட்டனர். கேட்கும் செலவுக்கு அனுமதி கொடாதிருத்தல் பார்லிமெண்ட் ஸபையாருக்கு ஸாத்யப்படாமற் போகுந்தருணம் வரை கவர்ன்மெண்டார் அதனை ராஜரீகத் தூதுக் கூட்டம்; என்று சொல்லிக் கொண்டு வந்தார்கள். இதனால் சட்டப்படி இந்தியாவின் தீர்வைப் பணத்துக்குள்ள காவலை அநியாயமாக பேதித்து விட்டனர். ஸாம்ராஜ்யக் கொள்கையை ஓங்கச் செய்யுமாறு நடைபெற்ற

இபபடை யெழுச்சிச் செலவில் ஒரு பகுதிகூட ஸாம்ராஜ்யப் பொக்க சத்தினின்றும் கொடுக்க முடியாதென்று "காமன்ஸ்" ஸபையார் மறுத்துவிட்டது பற்றி இந்த ஜன ஸபை வருத்தப்படுகிறது.

மேலும் இந்த அரீதியை ஜன ஸபை பலமாகக் கண்டனஞ் செய்வதற்கு விசேஷக் காரணம் யாதெனில் திபெத் படை யெழுச்சியானது பொதுவாகப் பிற நாடுகளின் மீது படை யெடுத்துச் செல்வதாகிய கொள்கையில் ஓரம்சமத்தாகிய யென்ற பயமேயாம். இதனுடன் ஆப்கனிஸ்தானத்துக்கும், பாரஸீகத்துக்கும் செல்லும் தூதுகளை சேர்த்துக் கணிக்கும் போது இந்தியா அன்னிய தேசசிக்கல்களில் அகப்பட்டு விடுமென்ற பயம் விளைகிறது. இதனால் பாரதத் தீர்வையின் மீது சமக்கமுடியாத பார மேற்படும். கடைசியாக இது தேசத்தின் சிறந்த நலங்களுக்குப் பெருங்கேடாக முடியுமென்று இந்த ஜன ஸபை கருதுகிறது.

11. பதினென்றாந் தீர்மானம்:—

போலீஸ் திருத்தம்.

போலீஸ் விசாரணைக் கூட்டத்தின் அறிக்கை ப்ரசுரமாய் இப்போது இரண்டு வருஷங்களாயின. அதன் சில பகுதிகள் உத்யோக ரஹஸ்யச் சட்டத்தின் அதிகார வரம்புக்குட்படாத பத்திரிகைகளில் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கின்றன. அப்படி யிருந்தும் அந்த அறிக்கையை ராஜாங்கத்தார் பொதி ஜனங்களுக்குத் தெரியாமல் மூடிவைத்திருப்பது கண்டு இந்த ஜன ஸபை ஆழ்ந்த வருத்தப்படுகிறது. இந்த தேசத்துப் போலீஸ் படையை முற்றிலும் சீர்திருத்துதல் மிகுந்த அவஸரமாதல் கருதியும்; இவ்விவகாரத்தை நிருப்திகரமாக முடிவு செய்வதில் பொது

ஜனங்கள் பெரிதும் சம்பந்தப் பட்டிருப்பது கருதியும், அதிகாரிகள் சீர்திருத்த யோசனை தயார் செய்யத் தொடங்கு முன்னதாகவே பொது ஜனங்கள் தம்முடைய கருத்துக்களை வெளியிடும்படி ஏராளமான ஸமய மேற்படுத்திக் கொடுத்தல் வெளிப்படையாக அவசிய மாதல் கருதியும்;—(கடைசியாக) இந்தியா கவர்ன்மெண்டாரும் இந்தியா மந்திரியும் அவ் விஷயத்தைப் பற்றி ஆலோசனை செய்து முடிந்த பிறகு ஜனங்கள் சொல்லும் ஆக்ஷேபமெல்லாம் விழலாகு மென்பது கருதியும், இன்னும் அதிகத் தாமஸ மில்லாமல் விசாரணைக் கூட்டத்தின் அறிக்கையை பிரசுரம் செய்ய வேண்டுமென்று இந்த ஜனஸபை ஆவலுடன் ப்ரார்த்திக்கிறது.

12 பன்னிரெண்டாம் தீர்மானம்:—

ராணுவச்சிலவு

(1) தேசத்தின் ராணுவச்செலவில் தொடர்ச்சியாக ஆண்டுதோறும் கனத்த மிகுதிகள் ஏற்பட்டுவருவது கண்டு இந்த ஜனஸபை மிகுந்த திகிலடைகிறது. இப்போதுள்ள ராணுவச்சிலவு இந்தியாவினுல் பொறுக்கும் நிறமன்று.

(2) ராணுவச்செலவு ஸம்பந்தமாக இந்தியாவின் தீர்வைப் பணத்தின் மீது இன்னும் அதிகச் சுமைகள் ஏற்ற வேண்டுமென்ற புதிய யோசனைகளனைத்தும் இந்த ஜனஸபைக்கு மனக்கலக்கந் தருகின்றன. லார்ட் கிச்சனர் யோசனை செய்யும் படைத் திருத்தச் செலவை இந்தியாவின் பொக்கசத்தின் மீது சார்த்துதலை இந்தஸபை பலமாகக் கண்டிக்கிறது.

(3) பாரதராணுவச் செலவில் ஒரு பகுதியை (ப்ரிட்டிஷ் பொக்கசத்திலிருந்து) கொடுக்கும்படி பார்லிமெண்டார் ஏற்பாடு செய்ய வேண்டுமென்பது? 1903—சென்னை—19-ஆம் கூட்டம்; 7 ஆம் தீர்மானம்.

13 பதிமூன்றாந் தீர்மானம்:—

நீதி, நிர்வாஹ அதிகாரங்களைப் பிரித்தல்

1902—ஆமதாபாத்—18 ஆம் கூட்டம்—12 ஆம் தீர்மானம்

14 பதினான்காந் தீர்மானம்.

வங்காள விபாகம்

வங்காளத்தைப் பிளப்பது ஸம்பந்தமான எவ்விதமான ஆலோசனைகளையும் இந்த ஜனஸபை அழுத்தமாகக் கண்டிக்கிறது. வங்காளி ஜாதியைத் துண்டுகளாக பிளப்பதினின்றும் அதன் ஸமாஜிக, ஞான, திரவிய அபிவிருத்திக்கும் பலமான தீங்கு நேருமாதலாலும், அம்மாகாணத்தார் நெடுங்காலமாக அனுபவித்து வரும் பலவிதமான சட்ட ஸ்வதந்திரங்கள், உரிமைகள் முதலியன நஷ்டப் படுமாதலாலும் இந்தியாவில் தீர்வை செலுத்தி வேறால் தாங்க முடியாத, பெருஞ் செலவை இந்நாட்டின் மீது சுமத்துமாதலாலும் அந்த யோசனையைக் கண்டு ஜனங்கள் பேரச்சங் கொள்ளுகின்றனர்.

வங்காள விபாகம் அவசிய மென்பதற்கு எவ்விதமான காரணமும் காட்டப்பட்ட வில்லை. எனினும் அம்மாகாணத்தைச் செம்மையாக ஆள்வதற்கு இப்போது சமைப் புற்றிருக்கும் ஆட்சி முறை போதாதென்று கருதப்படுமாயின் அதற்கு நிவாரணம் ஜில்லாக்களை வகுப்பதினின்றும் ஏற்படாது. ஆட்சி வடிவத்தில் ஆழ்ந்த மாறுதல்கள் செய்ய வேண்டும். திருஷ்டாந்தமாக பம்பாய், சென்னை மாகாணங்களைப் போலே வங்காளத்துச் சின்ன கவர்னர் ஸ்தானத்தை நிர்வாஹ ஸபை சஹிதமான கவர்னர் ஸ்தானமாக மாற்றத் தகும்

15. பதினைந்தாம் தீர்மானம்:—

இங்கிலாந்துக்குத் தூதுவிடுதல்.

இங்கிலாந்தில் "பெருஞ் சீட்டு" (நாடு முழுமையிலும் பொது வாகப் பார்லிமெண்ட் ஸபைக்கு ப்ரதிநிதிகள் தெரிந்தெடுத்தல்—பொது எலெக்ஷன்—) மிகவும் நெருங்கி வருவது கருதியும், இத்தருணத்தில் இந்தியாவின் வேண்டுதல்களை அங்குள்ளசீட்டாளிகள், அபேக்ஷகர், ஜனத்தலைவர்களுக்குக் கூறுதல் மிகவும் முக்கிய மாதலாலும், இந்நோக்கம் நிறைவேறுமாறு பெருஞ் சீட்டு நடை பெருவதற்குமுன்னேயும், நடை பெறுங் காலத்திலும் இங்கிலாந்தில் இருக்கும்படி வெவ்வேறு மாகாணத்தாரால் நியமிக்கப் பட்ட நம்புதற்குரிய அனுபவஸ்தரான ப்ரதிநிதிகளை ஜனஸபை அனுப்பவேண்டுமென்றும், இத்தத் தூதுக்கு வேண்டிய செலவுகளுக்காக ரூ 30000க்குக் குறையாத நிதி சேகரிக்க வேண்டுமென்றும் இத்தஜனசபை தீர்மானிக்கிறது.

16. பதினாறாந் தீர்மானம்:—

பார்லிமெண்ட் தெரிந்தெடுப்பின் இந்தியாவுக் கனுகூலமான மெம்பர்கள்.

[1903—சென்னை—19ஆம் கூட்டம்—11ஆம் தீர்மானத்தில் டீமேச சந்திர பானர்ஜியின் பெயரைக் கழித்துவிட்டுப் படிக்க]

17. பதினேழாந் தீர்மானம்.

ப்ரிட்டிஷ் ஸமிதிக்கு நன்றி.

(1) (1903—சென்னை—19 ஆம் கூட்டம்—14 ஆம்தீர்மானம்)

2 ப்ரிட்டிஷ் கமிட்டிச் செலவுக்காக 700பவுன்கொடுக்க வேண்டுமென்றும் அதன் பொருட்டாக ஜனசபையின் வெவ் வேறு வட்டத்தாரும் தந்தமக்குப் படுத்துக் காட்டி தொகை செலுத்த வேண்டு மென்றும் இந்த ஜனசபை தீர் மானிக்கிறது.

18. பதினெட்டாந் தீர்மானம்:—

ஜனஸபையின் போதுக் கார்யதர்சிகள்.

வரும் வருஷத்துக்கு ஜனசபையின் பொதுக் கார்ய தரிசியாக எ. ஒ. ஹ்யூமையும், துணைக் கார்யதர்சிக ளாக தி. எ. வாச்சாவையும், கோ. இ. கோகலேயும் இந்த ஜனசபை மீட்டும் நியமிக்கிக்கிறது.

19. பத்தொன்பதாந் தீர்மானம்:—

ஜனஸபையின் நிர்மாணம்.

ஜனசபையின் நிர்மாண விஷயத்தைக் குறித்துப் பின் வரும் கனவான்கள் சேர்ந்த ஸமிதியார் அறிக்கை தயார் செய்யும் படி. இந்த ஜனசபை நியமிக்கிறது (பெயர்கள் இங்கு குறிப்பிடவில்லை.)

20 இருபதாந் தீர்மானம்.

அடுத்த கூட்டம்.

பாரத ஜனசனபயின் இருபத் தொன்றும் கூட்டம் 1905 கிறிஸ்மஸ் நாளுக்கப்பால் பின்னே நிச்சயிக்கப் படும்

தேதியில் காசிநகரத்தில் கூட வேண்டுமென்று இந்தஜன ஸபை தீர்மானிக்கிறது.

21. உபசார ஸமிதிக்கும் அதற்கும் பல வகைகளில் உதவி புரிந்தோருக்கும் நன்றி.

22. அக்ராஸன பதிக்கு நன்றி

அப்பால் அக்ராஸனபதியின் முடிவுரை;

இருபதாம் ஜனசபையின் சரித்திரம் முற்றிற்று.

இருபதாம் அத்தியாயம் முற்றிற்று.

சுதேசமித்திரன் பிராஞ்சு பிரஸ், மதராஸ்.